ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி

பத்தாம் பத்து.

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக் குருகைப்பிரான் பிள்ளான்

அருளிச்செய்த ஆறாயிரப்படியும்

* அன்போடழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்த

பன்னீராயிரப்படி உரையும்

* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை

வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளை அருளிச்செய்த

ஈடு முப்பத்தாறாயிரமும்

ஸபா பண்டிதரான

ஸ்ரீமான். புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷரசாலையில்

அச்சிட்டு பிரசுரம் செய்யப்பட்டது.

பவ௵

1934.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருவாய்மொழி.

பத்தாம்பத்து

முதல்திருவாய்மொழி—தாளதாமரை ப்ரவேசங்கள்.

ஆறு;—(தாளதாமரை) திருக்கண்ணபுரத்தி லெம்பெருமானை யநுபவித்து, இப்போது திருமோகூரி லெம்பெருமானை யநுபவிக்கிறார். *

ப:—பத்தாம்பத்தில், கீழ்ப்பத்திலே, ஸர்வேச்வரனுடைய பலப்ரதத்வத்தை நிரூபித்தருளி, ததநுபவரூபமான பலத்தினுடைய அவாப்தி ப்ரகாரத்தை யிப்பத்திலே நிரூபித்தருளுவதாகக் கொண்டு ஆப்தனானவனுடைய கதிஸாரஸ்யத்தையும், முன்புண்டான தூரத்வ க்லேசசாந்தியைப் பண்ணும் போக்யதாமாதி யோகத்தையும். ஸம்ச்லிஷ்டனா யிருக்கச்செய்தே விச்லேஷசங்கைபண்ணி க்லேசிக்கும்படியான ஸாரஸ்யாதிசயத்தையும், அநந்யஸாதநரோபாதி உபாஸகர்களுக்கும் ப்ராப்யருசிகாரத்தையும், ஸப்ரகாரோபாஸகபரர்க்கும் அநிஷ்டநிவ்ருத்தீஷ்ட ப்ராப்திகளுக்குத் தானே நிர்வாஹகனென்னுமிடத்தையும், ததீயச்சேஷத்வபர்யந்தமாகத் தன்னை யாச்ரயித்தாருடைய சித்தாநுவிதானம் பண்ணிக்கொண்டு பல ப்ரதாநத்திலே உத்யுக்தனாம்படியையும், தன்பக்கல் ப்ரவணரானாருடைய சரீரத்தினையும் தான் விரும்பாநின்றுகொண்டு அவர்கள் அபேக்ஷைக்காக அவற்றை விடுவிக்கும்படியையும், யாத்ருச்சிகமான ஆநுகூல்யமே பற்றாசாக யதாவத் போகப்ரதத்வத்தையும். போகவிச்சேதமாற்றாமையான அர்ச்சிராதிமார்க்கத்தில் ஆதிவாஹிக ஸத்கார ப்ரகர்ஷத்தையும், அதிபரிசுத்தமான பரமஸ்வரூபமான அபிநிவேசத்தையுடைய தமக்கு ப்ரியப்ரதியான தன்னுடைய ஸ்திரஸாயுஜ்ய ப்ரகாசத்தைப் பண்ணினபடியையும் அபரோக்ஷித்து அநுபவிக்கப்பெற்றவராய், அவாப்த பலராய் முடித்தருளுகிறார்.

முதற்றிருவாய்மொழியில், கீழ் ப்ரஸ்துதமான கைங்கர்யப்ராப்தி ஸம்பந்தித்வம் முகுந்தச விசேஷத்திலே பூர்ணனாயிருக்கையால், இந்த

தேசத்தில்நின்று மங்கேறப்போகைக்கு பாதகமான நம்முடைய விரோதியைக்கழித்து உகப்போடே வழிநடத்திக்கொண்டு போவா னொருவ ஸஹாயபூதன் வேணுமென் றறுதியிட்டு; திருமோகூரிலே ஸந்நிஹிதனான ஸர்வேஸ்வரனுடைய நிரப்பாதகபோக்யமான வ்யூஹ ரூபதையையும், நித்யாநுபாவ்யத்வயுக்தமான காமபூர்த்தியையும், நிகிலஜகத் ரக்ஷகத்வத்தையும், ரக்ஷார்த்தமான வஸந்தஸாயித்வத்தை யும், அபேக்ஷஜநஸம்ஸ்லேஷத்தையும் அநுபவப்ரீதிகரமான வாப்தத் வத்தையும், அகிலலோக ஸ்ரஷ்ட்ருத்வத்தையும், அவதாரப்ரயுக்த ஸீல ஸீதளத்வத்தையும், அவயவவைலக்ஷண்யத்தையும், ஆஸ்ரிதரக்ஷ ணத்தில் அபீஷ்டவிக்ரஹ பரிக்ரஹத்தையு மநுஸந்தித்து, "ஏவம்வித னான ஸர்வேஸ்வரனே நமக்கு வழித்துணையாவான்" என்று காளமேகத் தின் திருவடிகளையே தஞ்சமாகப்பற்றி யருளுகிறார். *

ஈடு ;—"நாளேலறியேனெனக்குள்ளன" என்றார் ; "மரணமானால்" என்றறுதியிட்டுக் கொடுத்தா னீஸ்வரன். அவன் "செய் கிறோம்" என்று தலைதுலுக்கினால், அதுபெற்றதாய் மேல் நடக்க லாம்படியா யிருக்குமிறே காரியம் ; ஆகையாலே, காலவதி பெற்றாராய் போக்கிலே யொருப்பட்டார் ; போமிடத்தில், முகம் பழகின தேஹத்தையும்விட்டு நெடுநாள் வாஸனைபண்ணின பந்துக் களையும் விட்டுத் தனியேயாய், போகிறவிடந்தான் கண்டறியாத நிலமாய், நெடுங்கை நீட்டாய், வழியிலே ப்ரதிபந்தகங்களுமாகுவதாய், அதிதயாகர்மவாஸநாருசிகளென்றாப் போலே சொல்லு கிறவற்றுக்கு மோரவதியில்லையிறே ;

இவற்றையடையப்போக்கி வழித்துணையாய்க் கொண்டு போம் போது ஸர்வேஸ்வரன்றன்னையே பற்றவேணும்; அதுவென், இவன்தானே தனக்குத் துணையானாலோ வென்னில்; இன்றாயும் வர ஸம்ஸாரிக்கைக்குக் காரியம் பார்த்துப் போந்தவனிறே யிவன் ; இச்சரீரத்தோடே யிருக்கிறநாளிலே ஹிதஸிக்ஷை பண்ணினானே யாகிலும் இவனுடைய பூர்வவ்ருத்தத்தைப் பார்த்தால் இவன்தான தனக்குத் துணையாக மாட்டானே. வழிநடத்திப்போமிடத்தில் இவர்க்கு வரும் விரோதிகளை யறிகைக்கு ஸர்வஜ்ஞனாகவேணும், அறிந்தால் அவற்றைப் போக்கிக் கொடுபோகைக்கு ஸர்வஶக்தியாக வேணும். (௧) "யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்—யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்"

(௧) முண்டக-௧-௧-௯.

இத்யாதி ப்ரமாணங்களாலே-ஸர்வேச்வரனை "ஸர்வஜ்ஞன், ஸர்வ சக்தி" என்று நின்றதே.

சக்தி யுண்டானாலும் ப்ரயோஜநமில்லையே, ப்ராப்தனாக வேணும். (௧) "ஸ்தாவிதா ஹ்ராதா—மாதாபிதாப்ராதா" இத்யாதியாலே-அவனை ஸர்வவித பந்துவுமாகச் சொல்லாநின்றதே; (௨) [எம்பாருமிமானனையுபிக்யாதி] ராகாந்தராய் ப்ரஜையைப் பெற்று "யௌவநவிரோதி" என்று பொகட்டுப் போவர்கள்; இவன்றான் வாஸனைபண்ணின முகத்தாலே "அம்மே!" என்ற போதாக, பெண்குரலாலே "ஏன்" என்றும், "அப்பா" என்ற போதாக, ஆண்குரலாலே "ஏன்" என்றும், இப்படி முகங்கொடுத்துக்கொண்டு போகக்கடவனாயிருக்குமிறே அவன்.

சரீரமானது கட்டுக்குலைந்து ப்ராப்யபூமியிலே போய்ப் புகுமளவும் செல்ல நடுவுண்டான விரோதிகளைப் போக்கிக் கொடு போகைக் கீடான சக்தியுமனாக வேணும், விரோதிகளை யிருந்தண்டமாக விட்டுக்கொடுபோகவல்ல சக்தனாகவேணும், தான் தனக்குத் தஞ்சமல்லாதவன்று இவன்றனக்குத் தஞ்சமென்று தன்னை யிவன் கையிலே காட்டிக்கொடுக்கும்படி ப்ராப்தனாக வேணும். "ஸர்வஜ்ஞன்-ஸர்வசக்தி" என்று தானே ப்ரமாண ப்ரஸித்தன்; "தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமாய்" என்று இவர்தாமே "தஞ்சம்" என்றாரே. "மயர்வறமதிநலமருளினன்" என்று-தயாவானென்னுமிடம் தாமே சொன்னார். இனி சேஷியா யிருக்கையாலே தானே ப்ராப்தனாயிருக்குமிறே.

ஆக, "நம்விரோதிகளைப் போக்கி ப்ராப்ய பூமியளவும் கொண்டுபோய் வழிநடத்துவான் காளமேகம்" என்றதாயிற்று; அநிலக்கணிலே வழிபோவார் "ஆதப்பமை" என்று பிரிக்கமாட்டாமைப் பாதேயக் கட்டிக்கொண்டு தம் கையிலே யிராநின்றால் அவர்கள் கையிலே கொடுத்து அவர்க்கு இளைத்த இடத்திலே சென்றவாறே வாங்கிக்கொள்ளுமாபோலே, சரீரபாதாநவஸரத்திலே காளமேகத்தின் பக்கலிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணி, "ப்ராப்யபூமியிலேபுக்கால் என்னை யென்கையிலே தந்துகொள்ளக்கடவாய்" என்று வழித்துணையாகப் பற்றுகிறார்.

(௧) ஸபால ௯-　　(௨) தி-மொ-எ-உ-௩-

இஸ்ஸ்வபாவங்க ளொன்றுமில்லையே யாகிலும், அவன் முன்னே போகப் பின்னே போகாநின்றால் அவ்வடிவழகு தன்னை யநுபவித்துக்கொண்டு போமதுவே ப்ரயோஜநமாகப் போருமபடி யாய்த்திருப்பது. (௧) "வள்ளலேயுன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல்" என்கிறபடியே, எதிரிகள் கூசிப்போம்படி மதிப்பனா யிருப்பா னொருவனைப் பற்றவேணுமிறே (௨) "வபிஹஸ்தேய ஸஹ்ருநந்த வஹநாந-பரிஹரமதுஸூதந ப்ரபந்நாந்" என்று அவ னும் சொல்லிவைத்தானிறே. *

முதற்பாட்டு.

தாளதாமரைத்தடமணி வயல்திருமோகூர் * நாளுமேவிநன் கமர்ந்து நின்றசுரரைத்தகர்க்கும் * தோளுநான்குடைச்சுரிகுழற் கமலக்கட்கனிவாய் * காளமேகத்தையன்றி மற்றொன்றிலங் கதியே. (௧)

ப:—அநந்தரம் முதற்பாட்டில், ப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனாய் நிரதிஶய போக்யபூதனான காளமேகத்தையொழிய நமக்கு ஸஹாயதயா கர்த்தவ்ய மில்லையென்கிறார். (௧)

(இ-ள்.) தாள-தாளுரத்தையுடைய, தாமரை-தாமரைகளானவை, தடம்-தடாகங்களை, அணி-அலங்கரியாநிற்கிற, வயல்-வயலையுடைய, திருமோகூர்-திருமோகூரிலே, நாளும்மேவி-நித்யவாஸம்பண்ணி நன்கு மிகவும், அமர்ந்துநின்று-ஸ்வயம் ப்ரயோஜநமாம்படி யுகப்போடே பொருந்திநிற்குமவனாய், அசுரரை-விரோதிகளான அஸுரர்களை, தகர்க்கும் புடைத்துப்பொகடும்படி பரிகோபமாய் வழிபோக்கில் நிழலைச் செய்யும்படி கற்பகப்பணைபோலே யிருக்கிற, நான்குதாளுடை - நாலுதிருத்தோளையுமுடையனாய், சுரிகுழல் - அத்வக்லேஶம்போமதாய் துணையாகைக்கு போக்யமான சுரிந்து துன்றுகுழலையுடையனாய் பின்பேவருகிற வென்னைப்புரிந்து கடாக்ஷிக்கைக்கீடான, கமலக்கண் - கமலம்போன்ற கண்ணையுடையனாய், இளைப்பாறும்படி ஸம்பாஷணம்பண்ணும், கனிவாய்-ஸ்நிக்தமான திருப்பவளத்தையுடையனாய். காளமேகத்தையன்றி - காளமேகம்போலே உதாரரூபத்தையுடைய

---

(௧) தி-மொ-௮-௧௦-௭- (௨) வி-பு-௩-௭-௧௩-

வனையொழிய மற்றொன்றுகதி-வேறு நமக்குத் துணையாக கர்தவ்யமா யிருப்பதொரு வஸ்துவை, இலம்-உடையோமல்லோம்.

தாமரையைத் தடமணிந்ததாகவுமாம். (௧)

ஆறு ;—பண்டுசெய்த வாஸ்ரிதவிரோதி நிரஸநரூபமான பராக்ரமங்களைத் தோற்றுவிக்கிற திருத்தோள்களையும், அழகாலே நிரவதிகபோக்யமாயிருக்க திருக்குழல்களையும், திருக்கண்களையும், திருப்பவளத்தையும், காளமேகம்போலே யிருந்த திருமேனியையு முடையனாய், திருநாட்டிற்காட்டிலும் திருமோகூரிலே அதிமாத்ரமாக ஸ்நேஹத்தைப் பண்ணி யெழுந்தருளியிருந்த வெம்பெருமானல்லது நமக்கு மற்றொரு ப்ராப்யமில்லை யென்கிறார். (௩)

ஈடு - அவ :—மரணமான மஹாபயத்துக்கு விரோதிநிரஸநசீலனான காளமேகமல்லது துணையில்லையென்று அவனைப்பற்றுகிறார்.

(தாளதாமரை) மலையைச் சுமந்தாற்போலே பூவின்பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரையென்கை. (௧) "உரம்பெற்றமலர்க்கமலமுளைகளந்தசேவடிபோ லுயர்ந்துகாட்ட" என்னக்கடவதிறே. சேற்றின்நன்மையாலே புரந்த தாளையுடைய தாமரையென்கை. (தடமணி) இப்படிப்பட்ட பூக்களாலே யலங்கரித்தாற்போலே யிருக்குமாய்த்துத் தடம். [உரம்பெற்றமலர்க்கமலமுலைகளந்தசேவடிபோ லுயர்ந்துகாட்ட] சேற்றுவாய்ப்பாலே உரம்பெற்றிருக்கிற கமலமானது ஓங்கியலர்ந்தபோது, திருவுலகளந்தபோ தெறித்த திருவடிகளுக்குப் போலியாயிருந்தது. [வரம்புற்றகதி யாதி] அப்போது (௨) "ஸஜலஜலதாநாம் பூ-ஸங்கைஸ்ஸமாநாம்" என்கிறபடியே தேவர்கள் இரண்டு காலையிட்டுத் தலையை வணங்கித் தெண்டனிட்டாற்போலே யிராநின்றதாய்த்து, செந்நெல்களானவை விளைந்து தலைசாய்ந்து கிடக்கிறபோது; இப்படிப்பட்ட தடங்களையும் வயல்களையுமுடைத்தான திருமோகூர்.

ஊரில் போக்யதையடைய வயலிலே காணுமித்தனை. (நாளுமேவி) நாள்தோறு மத்யாதரத்தைப் பண்ணி; அவ்வூரில் விரும்பி விடுவதொறும், அவனுக்கு (௩) "ஸ-வ்யூஹமா [illegible] நிஸா-

(௧) பெரிய-தி-௪ ௯ அ. (௨) விஷ்ணுதர்ம - மாங்கல்யஸ்தவ-
(௩) வி-பு-௫-௧௭-௩

க திருவாய்மொழி, ச-ய, ச-ஆ, உ-ய, இவற்றின் வியாக்யானம்.

ஸாராபாதாசகேசிய" என்னும் படியாத்தி த்ருப்பதம், (கன்றுயர்ந்தின்று) இவ்வூரில் வாஸமொழிய வேறொரு ப்ரயோஜநத்தைக் கணி யாதே இதுதானே ப்ரயோஜனமாக நின்று, (அசாரீத்யாதி) அனைவர்க்கும் அணிர்ந்திருக்கி விஷயத்தைப் போகவிட்டுப் போகவல்லனென்று தோற்றும்படியான திருக்கோலங்களையுடைய; "இவரிப்போகறிக்கபடி யெங்ஙனே" என்று கேட் "விடுகொதாலும் தோடிட்டுவளர்ந்த காதென்று தெரியுங்காண் என்றருளிச்செய்தருளினவார்த்தை,

(சுரிகுழல்) கெடுகொட்பட ஸம்ஸாரத்தில்பட்ட ஸகலதாபங்களும் ஆறும்படி யிருக்குமாய்த்து, பின்னே போகிறவனுக்கு முன்னே போகிறவன் ஒருக்கால் திருக்குழலைக் குலைத்து முடிக்க; ("கமலவிமலநாஸ நக்ஷ்கேசவக்லேசநாஸ." (கமலமித்யாதி) சுதந்த்ர விஷயங்களினுடைய பொய்யான நோக்கிலும் பொய்யான முறுவலிலும் அகப்பட்ட நெஞ்சாறலில்லாத நிறம்பட மெய்யான நோக்கும் மெய்யான முறுவலுமிருக்கும்படி சொல்லுகிறது

(காளமேகத்தை) ராஜாக்கள் போம்போது முன்னே போகாநின்றாலே, முன்னுப் காளமேகம் வெளாக்காபருவத்தில் ஷிக்கக் கொண்டுபோக பின்னே அத்துணிர்வாசகத்தை யரும்பிப் போகலா யிருக்குமாய்த்து, (அன்றிமற்றொன்றிலம் கதியே) காளமேகத்தையொழிய வேறு வழித்துணையுடையோமல்லோம் என்கை)

இரண்டாம்பாட்டு.

இலங்கதிமற்றொன்றெண்ணைக்க மின்னார் மிரும்பின் ✻ அலங் கலங்கண்ணியாயிரம் பேருடையம்மானை ✻ [illegible] வானவர்கள் வாழ்திருமோகூர் ✻ [illegible] யாமே.

(உ)

ப:—அநந்தரம், நிரதிசயபோக்யதையும் [illegible] பூர்த்தியையுடைய ஸர்வேச்வரன் [illegible] தையிலும் வேறொருத்தியுமுடையோமல்லோம் [illegible]

(இ - ள்.) என்-பூத்தாமரை [illegible] திருத்துழாயையுடைத்தாய். அலங்கல் [illegible]

(க) பாரது

கண்ணி - மாலையையுடையனாய், ஆயிரம்பேருடை - அநுபாவ்யமாய் அஸங்க்யாதமான திருநாமங்களையுடைய, அம்மான்-நிருபாதிகசேஷி யாய், நலங்கொள்-ஆந்ருஶம்ஸ்யாதி விலக்ஷணகுணங்களையுடையராய், நான்மறை - நாலுவேதங்களுக்கு, வாணர்கள் - நிர்வாஹகரானவர்கள், வாழ்-ரக்ஷகத்வாதி குணாநுபவத்தாலேவாழுகிற, திருமோகூர்-திருமோகூரிலேவர்த்திக்கிறவனாய், நலங்கழலவன்-ஆஶ்ரிததாரதம்யம்பாராதே தன்மைக்கிட்ட வழங்கிய வீரக்கழலையுடையவனுடைய, அடிநிழல்-பாதச் சாயையாகிற, தடமன்றி-தடாகமொழிய, யாம் - நாம், எம்மைக்கும்-எல்லாஜந்மத்திலும், கதி - கந்தவ்யமாக, மற்றொன்று - வேறொன்றை, இலம்-உடையோமல்லோம்.

இனியதுழாயென்றுமாம், அலங்கல்-மாலையாய், கண்ணி-தாராய், தொடையாகவுமாம், அலங்கல்-அலங்காரமாகவுமாம். (உ)

ஆறு:— (இலங்கதி) நமக்கெத்தைக்கும் ஸமஸ்தகல்யாண குணோத்தியான வவன்திருவடிகளின் நிழலாகிற குளிர்ந்த தடாக மல்லது மற்றொரு ப்ராப்யமில்லையென்கிறார். (உ)

ஈடு - அவ:—போகஹேதுவான வொப்பனையையும் உஜ்ஜீவந ஹேதுவான திருநாமங்களையு முடையவனுடைய திருவடிகளல்லது வேறு, காலதத்வமுள்ளதனையும் புகலுடையோமல்லோமென்கிறார்.

(இலங்கதிமற்றொன் றெம்மைக்கும்) (எம்மைக்கும் - மற்றொன்று-இலங்கதி) இவ்வார்த்தை ஒருஜந்மத்துக்கன்றியே, எல்லா ஜந்மத்துக்குமிதுவேவார்த்தை; எல்லாக்காலத்துக்கு மிதொழிய வேறு துணையுடையோமல்லோம். (கனிந்யாதி) காயையும் குளிர்த் தியையு முடைய திருத்துழாயினொளியையுடைத்தான வழங்கிய மாலை. (அலங்கல்) ஒளியென்றுதல், அசைவென்றுதல்; பின்னே போகாநின்றால் அடிமாறியிடும்போது வளையமசைந்துவருகிறபடி யென்றுதல், திருமேனியிலே சேருகையாலே வந்த புகரைச் சொல் லுதல்.

(ஆயிரம்பேருடை) தோளும் தோள்மாலையுமான வழகைக் கண்டு இவனைத்தப் புக்கால், இழிந்தவிடமெல்லாம் துறையாம்படி அஸங்க்யாதமான திருநாமங்களையுடையவன். (அம்மான்) வடி வழகுக்கன்றி அப்ராப்த ஸ்தலத்திலே பேசநிற்கவேண்டாதே, (க) "ஆழியங்கையப்பனையே யேத்தாதயர்த்து - வானாவிருந்தொழிந்

(க) பெரிய திருவ-அஉ-

அ திருவய்மொழி, கர-ப, கஅ-தி, நட-பா, அன்றியாம் வ்யாக்யானம்.

தேன் கீழ்காள்கமௌல்லாம்" என்று ஏத்தாத நாளைக்கும் வயிறு பிடிக்கவேண்டும்படியான விஷயம்.

(நலங்கொளித்யாதி) "ஆர்ருஸம்ஸ்யமேவ வேதார்த்தம்" என்று வேததாத்பர்யம் கைவந்திருக்குமவர்களாய், வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லரானவர்கள் நித்யவாஸம் பண்ணுகிற தேசம். அவ்வூரில் வர்த்தகந்தானேயன்றோ வாழ்ச்சி அந்தே வாஸத்தாலே "ஆச்ரிதவாத்ஸல்ய ப்ரதர்ம" என்று ஈச்வரனுக்கு மதிலே நிஷ்டனாகவேண்டும் தேசமாய்; அவ்வூரில் யாஸ்ரயிக்கச் சென்றார் (௧) "[illegible] ஓமிதிவதாப்யுதயம் [illegible] மாபிஸ்துல்யோபவத்து" என்னுமவர்கள்.

(நலங்கழலவன்) ஆச்ரிதருடைய குணதோஷ நிரூபணம் பண்ணாததிருவடிகள். அவர்கள் தாங்கள் [illegible] (௨) "வயவ்ருத்தாதி-வத்யதாம்" என்றும், (௩) "[illegible] ஜயம்" என்னுமவன். (அவனடிநிழற்றடமன்றியாமே) அவனிறை கிற பதம் இரண்டிடத்திலுமன்வயிக்கிறது. அவனை பா[illegible] கிற பொய்கையை யொழிய நாம வேறொரு கதியுடையோமல்லோம்.

மூன்றாம்பாட்டு.

அன்றியாமொருபுகலிடமிலமென்றென்றலற்றி[illegible]* நின்றுநின் பூ[illegible]
னரொடுதேவர்கள்நாட* வென்றிமூவுலகளித்து [illegible]
[illegible]மோகூர்* நன்றுநாமினிநணுகுதும் நமதிடர் கெடவே. ௩

ப:—அநந்தரம், அகிலஜகத்ரக்ஷண [illegible] மோகூரை. நமக்குத் துக்கம் தேட்டமாயவையான [illegible] இடுவோமென்கிறார்.

(இ - ள்.) அன்றி-உன்னையொழிய. யாம்-நாங்கள் [illegible] வேறொருபுகலிடம். இலம்-உடையோமல்லோம். [illegible] என்றுதளர்த்திதோன்றும்படி பலகாலும் கூப்பிட்டு, [illegible] ஜநலாபத்தளவும்நின்று, நான்முகனாரொடு - ப்ரஹ்மருத்ராதிகளோ கூட, தேவர்கள்-தேவஜாதிகள், நாட-தேடியாச்ரயிக்க, வென்று விரோதிகளைவென்று. இம்மூவுலகு - இந்த லோகத்ரயத்தையும். [illegible]

(௧) பா-யு-கஅ-உஅ- (௨) பா-யு-௧௭-௨௭- (௩) பா-யு-கஅ-[illegible]

தூழல்வான்-ரக்ஷிக்கையே யாத்ரையாயிருக்கு மவனுடைய, திருமோகூர்-திருமோகூரை, நாம்-நாம், நமது-நம்முடைய, இடர்கெட-வழித்துணை தேட்டமான மனோதுக்கம் தீரும்படி, இனி-ரக்ஷகனானவன் ஸந்நிதிகளை அன்பு, நன்று-அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு, நணுகுதும்-கிட்டக்கடவோம். (௩)

ஆறு :— (அன்றியாம்) ஆதலால், அர்த்திகல்பகமாயிருந்தவனைத் திருமோகூரிலே சென்று நம்முடைய க்லேசமெல்லாம் போம்படி புஜிப்போமென்கிறார். (௩)

ஈடு-அவ:—ஸர்வரக்ஷகனானவன் வர்த்திக்கிற திருமோகூரை, நம்முடைய ஸகலதுக்கமும் கெடச்சென்று ப்ராபிப்போமென்கிறார்.

(அன்றியித்யாதி) ப்ரயோஜநாந்தரபரரும் அநந்யப்ரயோஜநருடைய பாசுரத்தைச் சொல்லுவர்களாய்த்து அவன் முகங்காட்டுகைக்காக. “தேவரையொழிய நாங்களொரு புகலுடையோமல்லோம்” என்று நிரக்ஷரமாக அடைவுகெடச் சொல்லிக் கூப்பிட்டு, (நின்று) அநந்யப்ரயோஜநரைப்போலே தங்கள் ப்ரயோஜநம் கைபுகுருமளவும் நின்று, (நான்முகனித்யாதி) சதுர்முகன், ருத்ரன், இவர்களோடேகூட தேவஜாதியடைய வாஸ்ரயிக்க.

(வென்றீர்யாதி) அவர்கள் ப்ரதிபக்ஷத்தை வென்று, அவர்களுக்கு அபிமதமான த்ரைலோக்யத்தையும் ரக்ஷித்து, அதுவே யாத்ரையாயிருக்குமவன் வர்த்திக்கிற தேசமாய்த்து. (நன்று நாமினிநணுகுதும்) (இனி-நாம்-நன்று-நணுகுதும்) அவன் ஸர்வரக்ஷகனென்பு, ரக்ஷ்யபூதராயிருக்கிற நாம் நன்றாகக்கிட்டுவோம். புதுக்கொமையிலே க்ஷுதாபிபாஸங்களாதிகள் கிட்டுமாப்போலே யன்றிக்கே. (௧) “நீணகர் நீளிலைகளிற்றுடை” என்று ப்ரயோஜநங்கள் கழியாநிற்கையாய் கிட்டுமதுபோலன்றிக்கே, அநந்ய ப்ரயோஜநராய்க் கிட்டுவோம். (நாமிடர்கெடவே) “ஆரார் துயர்” என்றிருக்கிற நம்முடைய க்லேசங்கெட. (௩)

நான்காம் பாட்டு.

இடர்கெட வெம்மைப் போந்தளியா யென்றென்றேத்தி* சுடர்கொள்சோதியைத் தேவரும் முனிவரும் தொடர* படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான் திருமோகூர்* இடர்கெடவடிபரவுதும் தொண்டீர் வம்மினே. (௪)

(௧) ஈருவிரு-௩௨

ப:—அநந்தரம், ஜகத்ரக்ஷணார்த்தமாக அநந்தசாயியானவனுடைய திருவடிகளை யாச்ரயிப்போம் வாருங்கோளென்று, ருசியையுடையரான பாகவதரை யழைத்தருளுகிறார்.

(இ-ள்) இடர்கெட - விரோதிகளால் வந்த துக்கம் தீரும்படி, போந்து - எழுந்தருளிப்போந்து. எம்மை - எங்களை. அளியாய் - ரக்ஷிக்கவேணும், என்றென்று - என்று பலகாலும் [illegible] ஏத்த - ஸ்துதித்து. அத்தாலே சுடர்கொள் - பேரொளியையுடைத்தான. சோதியை - தேஜோமயமாயுள்ள திருமேனியை, தேவரும் - ஈச்வராபிமாநிகளான தேவர்களும், முனிவரும் - ஐச்வர்யார்த்திகளாய் தபஸ்ஸை பண்ணுகிற ருஷிகளும். தொடர - அநுவர்த்தித்து ஸமாச்ரயிக்கைக்காக. படர்கொள் - ஸ்வஸ்பர்சத்தாலே விரிவையுடைத்தாய், பாம்பணை - ஜாதிப்ரயுக்தமான மென்மைகுளிர்த்தி நாற்றங்களையுடைய திருவரவணையிலே, பள்ளிகொள்வான் - பள்ளிகொண்டருளுகிறவனுடைய, திருமோகூர் - திருமோகூரிலே. இடர் - நம்முடைய [illegible] கெட - போம்படியாக, தொண்டீர் - ஆச்ரயணருசியையுடையீர்களான நீங்கள், அடி - அவன் திருவடிகளை, பரவுதும் - ஸ்துதிப்போம், வம்மின் - வாருங்கோள். (௧)

ஆறு;—(இடர்கெட) ப்ரஹ்மாதிகள் [illegible] ப்ரார்த்திக்கைக் கெளியனாகைக்காகத் [illegible] அப்படியே [illegible] கெளியனாய்க்கொண்டு திருமோகூரிலே [illegible] அவன் திருவடிகளையே [illegible] வாருங்கோளென்கிறார் (௧)

ஈடு-அவ;—நம்முடைய [illegible]

(இடர்கெடவித்யாதி) "எங்கள் - இடர்கெட - [illegible] பாய்" என்றிருக்கை ஈச்வராபிமாநிகளுக்கும், [illegible] த்தார்க்கும் வார்த்தை. * [illegible] (பெருமை) முன்பு (௧) "[illegible]" [illegible] வர்கள் [illegible], (௨) "[illegible] பர்வ பர்வணி" என்று [illegible]

---

(௧) [illegible]-௧௩-௧௭.

(௨) ரா-[illegible]

டுமேத்தனை. (போந்தனியாய்) "அவதரித்து ரக்ஷிக்கவேணும்" என்பர்கள். முன்பெல்லா முபேக்ஷித்திருந்தவர்கள், ஒன்றுகெட்டவாறே பாடிகாப்பாரைப் பிடிக்குமாபோலே, "நாங்களாபந்நராய்வர நீ கிடக்கிறதென்" என்பர்கள்,

(என்றென்றேத்தி-துடர) தங்களாபத்தாலே இடைவிடாதே புகழ்ந்து வடிம்பிட் டாஸ்ரயிக்கைக்காக. (சுடர்கொள்சோதியை) "ஆபத்காலத்திலேயாகிலும் நம்பாடே வரப்பெற்றோமே!" என்று உஜ்ஜ்வலனாயிருக்குமவனை யென்னுதல், விலக்ஷணமான வழகையுடையனாகையாலே ஸ்வயம் ப்ரயோஜநமானவனைக்கிடீர் துஃகநிவர்த்தகனாக நினைத்ததென்னுதல். (தேவரும் முனிவருந்துடர) தேவர்களும், ருஷிகளும் (க) "ஸம்ஸ்ரொஹம்-ஈஸ்வரோஹம்" என்றிருப்பாரும், ஐஸ்வர்யார்த்தமாக யத்நம்பண்ணுவாரும். (படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான்) அநந்யப்ரயோஜநரை யடிமைகொள்ளுகிறவன்கிடீர், ப்ரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுக்கைக்காக க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுகிறான்.

(படர்கொள்பாம்பு) ஸ்வஸ்பர்ஸத்தாலே வளரா நின்றுள்ள திருவனந்தாழ்வான். (பள்ளிகொள்வான்) தன்னுடைய ஸ்பர்ஸத்தாலே ஸர்வஜ்ஞனானவனை அஜ்ஞனாக்கி நித்ரைக்கிடங்கொடுக்கும்படி பண்ணவல்லனாய்த்து திருவனந்தாழ்வான். (திருமோகூர்) தேவாதிகளுக்கு ஸுலபனானாற்போலே ஸர்வர்க்கும் ஸுலபனாகைக்காகத் திருமோகூரிலே நின்றருளினான். (இடர்கெடவடிபரவுதும்) அவனுடைய திருவடிகளை நம்முடைய ஸகல துஃகங்களும் கெடும்படியாஸ்ரயிப்போம். (தொண்டர்வம்மினே) நம்மோடு ஸஜாதீயரா யிருப்பாரடங்கத் திரளுங்கோள். (ச)

ஐந்தாம்பாட்டு.

தொண்டர்வம்மின் நம் சுடரொளி யொருதனிமுதல்வன் * அண்டமூவுலகளந்தவனணி திருமோகூர் * எண்டிசையுமீன்கரும்பொடு பெருஞ்செந்நெல்விளைய * கொண்டகோயிலைவலஞ் செய்திங் காடுதுங்கூத்தே. (ரு)

(க) கீதை-கசு-

ப:—அநந்தரம். அபேக்ஷிஜந ஸம்ச்லேஷ ஸ்வபாவனான த்ரிவிக்ரமன் வர்த்திக்கிற திருமோகூரில கோயிலை யநுபவித்து ப்ரீதராவோம், வாருங்கோளென்கிறார். (௫)

(இ - ள்.) நம் - நமக்கநுபாவ்யமாய் சுடர்-நிரவதிகௌஜ்ஜ்வல்யத்தை யுடைத்தான, ஒளி - தேஜோமய திவ்யவிக்ரஹத்தை யுடையனாய், ஒருதனிமுதல்வன் - ஜகத்துக்கு நிமித்தோபாதாந ஸஹகாரிரூபமான த்ரிவிதகாரணமும் தானேயாய், அண்டம்-ஸ்ருஷ்டமான அண்டத்துக்கு அகவாயிலுண்டான. மூவுலகு-ஜகத்த்ரயத்தையும். அளந்தவன் அளந்துகொண்டவன், அணி - அழகிய, திருமோகூர் - திருமோகூரிலே எண்டிசையும் - பார்த்ததிக்குக்கள்தோறும், ஈன் - இனிய கரும்பொடு - கரும்போடேகூட, பெருஞ் செந்நெல் - பெரிய செந்நெலானது, விளைய - விளையும்படியாக, கொண்ட - பரிக்ரஹித்த. கோயிலை-கோயிலை. இங்கு - இந்தபூமியிலே. வலஞ்செய்து - ப்ரதக்ஷிணம்பண்ணி, கூத்தாடுதும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுவோம் தொண்டீர் - ஆசையுடைய நீங்கள், வம்மின் - வாருங்கோள். (௫)

ஆறு;—(தொண்டீர்) ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் தானேயாய், அப்ராக்ருதமான வடிவையுடையனாய், மஹாபலியாலே யபஹ்ருதமான த்ரைலோக்யத்தையு மளந்துகொண்ட பெருமான் எழுந்தருளியிருக்கையாலே அதிஸ்லாக்யமான திருமோகூரை யாச்ரயிக்க வாருங்கோளென்கிறார். (௫)

ஈடு- அவ;—அவனெழுந்தருளிநின்ற திருமோகூரை யாச்ரயித்து நடுபவிக்க வாருங்கோளென்கிறார்.

(தொண்டீர்வம்மின்) பகவத்விஷயத்தில் [illegible] வாருங்கோள். (நஞ்சுடரொளியொருதனிமுதல்வன்) [illegible] ஜோரூபியாய் த்ரிவிதகாரணமும் தானேயானவன் (நம்) [illegible] மான ப்ரஸித்தியைச்சொல்லுதல், தன்வடிவழகையும் ஜகத்துக்குத் தன்னோட்டை ப்ராப்தியையும் நமக்கறிவித்தவனென்னுதல்.

(அண்ட மூவுலகளந்தவன்) அண்டத்துக்குள் [illegible] திறவன். மஹாபலியாலே யபஹ்ருதமான அண்டத்துக்குள் மூன்றுவகைப்பட்ட லோகங்களையுமளந்துகொண்டவன். [illegible] விடுகையன்றிக்கே, ஸ்ருஷ்டமானஜகத்தை ப்ரபல ஸமாஹரித்தால் எல்லைநடந்துகொண்டு ரக்ஷிக்குமவனென்னை.

(அணிதிருமோகூர்) அவன்றனக்காபரணமான தேசமென்னுதல், ஸம்ஸாரத்துக்காபரணமான தேசமென்னுதல். (எண்டிசையுமித்யாதி) எட்டுத்திக்கிலுமீன்ற கரும்போடே பெருஞ்செந்நெல் விளையும்படி (கொண்டகோயில்) திருவுள்ளத்தாலே பரிக்ரஹித்த கோயில், கரும்புக்கு நிழல்செய்தாப்போலே யிருக்குஞ்செந்நெல்.

அவன் ஸந்நிதியாலே ஊரும் (௧) "அகாலபலிநோ வ்ருக்ஷா:" என்கிறபடியேயாய்த்து. (வலஞ்செய்து) ப்ரதக்ஷிணம் பண்ணி. (இங்காடுதுங்கூத்தே) அங்குப்போனால் (௨) "ஹாவு ஹாவு ஹாவு - அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமத்தை யிங்கேகளிப்போம். (௫)

ஆறும்பாட்டு.

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள்கூற்றம் * ஏத்துநங்கட்கும்மமரர்க்கு முனிவர்க்குமின்பன்* வாய்த்ததண்பணைவளவயல் சூழ்திருமோகூராத்தன் * தாமரையடியன்றி மற்றிலமரணே, (௬)

ப:—அநந்தரம், போக்தாக்களுக் கநுபவப்ரீதிகரனாய் ஆப்தனானவன் திருவடிகளொழிய வேறொன்றை ரக்ஷகமாக வுடையோமல்லோமென்கிறார்

(இ - ள்) கூத்தன் - வல்லாராடினாப்போலே தர்ஶநீயகதியாய், கோவலன் - ரக்ஷ்யவர்க்கத்தைப் பின்சென்று ரக்ஷிக்குமவனாய், குதற்று - வீடகரான குதற்றுதலையுடையராய், வல் - ப்ரபலரான, அசுரர்கள் - தேவப்ரதிகூலப்ரக்ருதிகளாயுள்ள வாஸுர ப்ரக்ருதிகளுக்கு, கூற்றம் - ம்ருத்யுவாய், ஏத்தும் அநந்யப்ரயோஜநராயேத்துகிற நங்கட்கும் அநபிமாநரானநமக்கும், அமரர்க்கும் - நித்யாநுபவம்பண்ணுகிற அமரர்க்கும், முனிவர்க்கும் - முனிவர்க்கும், இன்பன் - ஆநந்தகனாய், வாய்த்த - ஸம்ருத்தமாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலங்களாலும், வளவயல் - தர்ஶநீயமான வயலாலும், சூழ் - சூழப்பட்ட, திருமோகூர் - திருமோகூரிலே ஆத்தன் - ஆஸ்ரிதர்க்கு விஸ்வஸிக்கப்பற்றலாம்படி நிற்கிற ஆப்தனுடைய தாமரையடியன்றி - நிரதிஶயபோக்யமான தாமரைபோன்ற திருவடிகளையொழிய, மற்றரணிலம் - வேறொருரக்ஷகமுடையோமல்லோம் (௬)

---

(௧) ரா-யு-௧௨௭-௧௩-

(௨) தை-ப்ருகு-௧௦-

ஆறு;—(கூத்தன்) கோபாலனாய், மநோஹாரி சேஷ்டிதங்களை யுடையனாய், மிறுக்குச்செய்யும் வலியரான ஸுரர்க்கு ம்ருத்யுவாய், நித்யஸித்தர்க்கும் இன்றாஸ்ரயிக்கிற நமக்குமொக்க வினியனாய், மிகவுமழகிதான நீர்நிலங்களையுடைய வளவிதானவயல்சூழ்ந்த திருமோகூரிலே பரமாப்தனாயெழுந்தருளியிருக்கிற பெருமானுடைய திருவடிகளல்லது வேறுநமக்குக்காணில்லையென்கிறார். (கூ)

ஈடு; அவ;—திருமோகூரிலே நின்றருளினபரமாப்ததமன் திருவடிகளல்லது வேறுநமக்கு ரக்ஷையில்லையென்கிறார்.

(கூத்தன்) நடக்கப்புக்கால் வல்லாராடினாற்போலே யிருக்கை. (க) "ஸமுத்ஃ ஷயளாவசிஃ - அக்ரதஃப்ரயயௌராம:" என்கிற படியே நடைச்சக்ரவத்துப் பிடிக்கலாயிருக்குமாய்த்து. அவன்முன்னேபோகப் பின்னேபோகையாவது-கூத்துக்கண்டுபோகையாய்த்து. (உ) [ஆடல்பாடலவைமாறினர்தாமே] என்னக்கடவதிறே - அவன் திருக்குழலை வாய்வைத்தபோது அப்ஸரஸ்ஸுக்கள் குழலோசையைக்கேட்டுப் பாடத்தவிர்ந்தார்கள், அவன் நடையழகைக்கண்டு ஆடத்தவிர்ந்தார்கள்:

(கோவலன்) தன்னைத் தாழவிட்டு ஆஸ்ரிதரை ரக்ஷிக்குமவன். பிசாசத்துக்கு மோக்ஷப்ரதனாய் வழிநடத்தினவனிறே. (குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்) மிறுக்குக்களைப் பண்ணுகிறவராய், பெருமிடுக்கரான ஸுரர்களுக்கு ம்ருத்யுவாயுள்ளவன். (ஏத்துமித்யாதி) இன்றாஸ்ரயிக்கிற நமக்கும், "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்கிற நித்யாஸ்ரிதர்க்குமொக்க வினியனானவன்.

(வாய்த்தவித்யாதி) அழகிதான நீர்நிலங்களையும் வளவிதான வயலையுமுடைய திருமோகூரிலே நின்றருளின பரமாப்தன். தான் தனக்கில்லாத மரணஸமயத்தில் (ங) "[illegible] - அஹம்ஸ்மராமிமத்பக்தம்நயாமி" என்னும் பரமாப்ததமன், தன்னை யஞ்சினபோது அவன் பக்கலிலே ந்யஸ்தபரனாய் நிர்ப்பரனாம்படி யான ஆப்ததமன். (தாமரையடியன்றி) அவரைப்போலே விட வொண்ணாதாய்த்துத் திருவடிகளின் போக்யதை. (மற்றிலோமரணே) வேறுசிலரை ரக்ஷகராகவுடையோமல்லோம். போக்யதைக்காகிலும் விடவொண்ணாதபடி புறம்புபுகலில்லையென்கை. ✻

(க) ரா-ஆர-கக-க- (உ) பெரியா-தி-ங-கூ-ச- (ங) வாராஹசரமம்.

ஏழாம்பாட்டு.

மற்றிலமரண்வான்பேரும்பாழ்தனிமுதலா* சுற்றுநீர்படைத்த
தன்வழித்தொன் முனிமுதலா * முற்றுந்தேவரோ டுலகுசெய்வான்
திருமோகூர்* சுற்றிநாம்வலஞ்செய்யநந்துயர்கெடுங்கடிதே. (எ)

ப:—அநந்தரம் அகிலஜகத்ஸ்ரஷ்டாவான ஸர்வேஶ்வரன்வர்த்திக்கிற திருமோகூரைப்பற்றி அநுகூலவ்ருத்திகளைப்பண்ண, நம்முடைய து:கம் சடக்கெனப்போமென்கிறார்.

(இ-ள்.) தனி-(க) "ஏகாகீநாஸீத்-அஜாமேகாம்" என்கிற படியே உபக்யாதிகளில்லாத வைலக்ஷண்யத்தை யுடைத்தாய் நாநாவித கைங்கர்யங்களுக்குத் தானே காரணமாய், வான்-ஸமஸ்தகார்யங்களும் ஸவைசேஷத்திலேயாம்படி நிரதிஶயமஹத்தையையுடைத்தாய், பெரு-அபேக்ஷகார்யத்தையு முண்டாக்குகைக்கு யோக்யபூதையான பாழ்முதலா-ப்ரக்ருதிமுதலாகக்கொண்டு சுற்றும்-எங்குமொக்க வ்யாப்தமான. நீர் காரணஜலத்தை. படைத்து-ஸ்ருஷ்டித்து, அதன்வழி-அந்தவழியாலே. தொல்-அண்டத்தின் வாயிலே ஸ்ருஜ்யஜாதத்துக்கு முற்பாடனனாயாலே பழையனாய். முனிமுதலா-ஸ்ருஷ்டிப்ரகார மநநஶீலனான ப்ரஹ்மா முதலாக. முற்றுந்தேவரொடு ஸமஸ்ததேவர்களோடு கூடின, முற்றுலகு-ஸகலலோகங்களையும். செய்வான் பண்ணுமவனுடைய. திருமோகூர் திருமோகூரை, சுற்றிவலம் நாம்செய்ய-ப்ரதக்ஷிணம்முதலான அநுகூலவ்ருத்திகளை போகரூபமாக நாம்பண்ண, நம் நம்முடைய, துயர்-[illegible] கடிது-சடக்கென, கெடும்-போம், ஆகையால், [illegible] - [illegible] வேணும். (எ)

ஆறு:—(மற்றிலமரண்) பெரியதாயொப்பின்றிக்கேயிருக்கிற [illegible] மோக்ஷத்தையு முண்டாக்குகைக்காயாலே, [illegible] நம்முடைய [illegible] (ஏ)

(க) ப்ரவோ[illegible]

ஈடு - அவ: நம்முடைய ரக்ஷணார்த்தமாக உத்பாதகனவர்த்திக்கிற திருமோகூரை பரர்ப்ரமிக்கிறார். நம்முடைய துக்கங்க ளப்போதேபோமென்கிறார்.

(மற்றிலமரண்) வேறோரரணையுடையோமல்லோம். அவன் தான் ரக்ஷகனாகானொழிவனில்; இதுவன்றோ வவன்படியென் கிறதுமேல் (வானித்பாழ்) இவ்வாறு தன்டான காரியவர்க்கமடங்க லுமழிந்தவன்றும் காரணமாயிருக்கும் விகாரி, அபரிச்சின்னமாய், போகமோக்ஷங்களை விளைப்பதான அசித்தியமான மூலப்ரக்ருதி தொடக்கமாக. (சுற்றுநீர்படைத்து) (க) "அப ஏவ ஸஸர்ஜாதௌ-தாஸு வீர்யமவாஸ்ருஜத்" என்கிறபடியே ஆவரணஜலத்தை ஸ்ருஷ்டித்து. (அதன்வழித்தொன்முனிமுதலா) அவ்வழியாலே, தேவாதிகளைப்பற்றப் பழையனாய் மநநசீலனான சதுர்முகன் தொடக்கமாக. (முற்றுந்தேவரோடுலகுசெய்வான்திருமோகூர்) எல்லா தேவஜாதியோடுங்கூட எல்லாலோகங்களையு முண்டாக்குமவன் வர்த்திக்கிற திருமோகூர்.

(சுற்றிநாம்வலஞ்செய்ய) நாம் சென்று விடாதே ப்ரதக்ஷிணங்களைப்பண்ண. (நந்துயர்கெடுங்கடிதே) "வழித்தக்கவல்வினை" என்று நாம் படுகிற துக்கம் சடக்கெனப்போம். (உ) "ஜபந்தமாமஹதாஸவத்தி - அதனோபயாந்தாபவதி" என்கைக்கடவதிறே; ஆனபின்பு, மற்றிலமரண். (எ)

எட்டாம்பாட்டு.

துயர்கெடுங்கடிதடைந்துவந்தடியவர்தொழுமின் * உயர்கொள் சோலையொண்டடமணியொளிதிருமோகூர் * பெயர்களாயிரமுடைய வல்லரக்கர்புக்கழுந்த * தயரதன்பெற்றமரதகமணித்தடத்தினையே.

ப:— அநந்தரம், உங்களுடைய ஸகல க்லேசமும் நிவ்ருத்தமாம்படி விலக்ஷணமான தசரதாத்மஜனானவனைக் கிட்டி பணியுமென்கின்றார்.

(இ-ள்.) உயர்கொள்-உயர்த்தியையுடைய, சோலை - சோலைகளையும், ஒண்-விலக்ஷணமான; தடம்-தடாகங்களையும், அணி - அழகையு

(க) மநுஸ்ம் க-அ. (உ) தை-ஞ-எ.

மாக வுடைத்தாய், ஒளி-அத்யுஜ் ஜ்வலமான, திருமோகூர்-திருமோகூரிலே ஜகத் பாதகத்வத்தால்வந்த, ஆயிரம்-அஸங்க்யாதமான, பெயர்களுடைய - விருதுபேரையுடையராய், வல் - ப்ரபலரான, அரக்கர்-ராக்ஷஸர், விபீஷணப்ரப்ருதிகளைப்போலே துறையறிந் திழியாமையாலே, புக்கழுந்த - புக்கழுந்தும்படியாக, தஶரதன்பெற்ற - தஸரதன் பெற்ற, விஷஹாரமுமா யாபரணமுமான, மரகதமணி - மரகதமணி போலே ஶ்யாமளமான நிறத்தையுடைய, தடத்தினை-தடாகத்தை, அடியவர் - * குணைர்த்தாஸ்யமுபாகதரான நீங்கள், வந்து - வந்து, அடைந்து-கிட்டி, தொழுமின்-தொழுங்கோள், துயர்-உங்கள்ஸஹாயத்தாலே க்லேஶமானது, கடிது-சடக்கென, கெடும்-நசிக்கும்.

விஷஹாரமுமாய் ஆபரணமுமான மரதகத்ருஷ்டாந்தத்தாலே ப்ரதிகூலநிரஸநமும் அநுகூலர்க் காஶ்ரயமுமாமென்று கருத்து (அ)

ஆறு :—(துயர்கெடும்) பரமப்ராப்ய பூதனான வவனுக்குங்கூட போக்யமான திருமோகூரே நமக்கு ப்ராப்யம்; ஆகலால், ப்ரதிகூலரெல்லாரும் துக்கஸாகரநிமக்நராம்படி தயரதன்பெற்ற ஸமஸ்தகல்யாணகுண விஶிஷ்டமான மரதகமணித்தடத்தினைத் திருமோகூரிலே யீண்டச்சென்று புஜியுங்கோளென்கிறார். (அ)

ஈடு - அவ ;—திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை யாஶ்ரயிக்க நம்முடைய துக்கமெல்லாம் போமென்கிறார்.

(துயர்கேடுங்கடிது) நாமபேக்ஷியாதிருக்கத் தன்னடையே சடக்கெனப்போம் நம்முடைய துக்கங்கள். (அடைந்துவந்து) வந்தடைந்து-வந்துகிட்டி. (அடியவர்தொழுமின்) "வழிக்குத்துணையில்லை" என்று க்லேஶப்படுகிற நீங்களாஶ்ரயியுங்கோள். (உயர்த்யாதி) உயர்ந்தசோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் மலங்க்ருதமான வெளிமையுடைய திருமோகூர். (ஒளி-ஸமுதாயசோலை) சோலையைக்கண்டா லவன் வடிவுக்கு ஸ்மாரகமாயிருக்கும்; தடாகங்களைக் கண்டால் அவன் வடிவில் ஶ்ரமஹாரதைக்கு ஸ்மாரகமாயிருக்கும். * வாசத்தடம்போல் வருவானின்ற அவன்றான்.

(பெயர்களாயிரமுடைய) ஈஶ்வரன் ரக்ஷித்துப் படைத்த பெயர்களோபாதி போருமாய்த்து இவர்கள் பரஹிம்ஸைபண்ணிப்

படைத்த பெயர். "யஜ்ஞஸத்ரு," "ப்ரஹ்மஸத்ரு," என்றுப் போலேயிறே யிவர்கள்பெயர் (வல்லரக்கர்புக்கழுந்த) பெருமிடுக்கரான ஸாரர்கள் புக்கழுந்தும்படி. (தயரதனித்யாதி) சக்ரவர்த்தி பெற்ற நீலமணிபோலே யிருக்கிற தடத்தை - அடைந்துவந்தடியவர் தொழுமின்.

(க) "பயிதா வாரிவ ஸர்வ போக்யம்" - பதி தருமருவாழி வாரிவத்ஸர்வபோக்யம்" என்கிறபடியே அநுகூலர்க்கு ரக்ஷகமாய், (உ) "காகுத்ஸ்தபாதாளமுகே பதந்ஸ:" - காகுத்ஸ்தபாதாளமுகேபதந்ஸ:" என்கிறபடியே உகவாதார்க்கு நாஸகமாயிறேயிருப்பது. (ங) "யோகஸ்வம்ஸநஜ்ஞாதோ ... - மயாத்வம்ஸநுஜ்ஞாதோ கச்சலோகாநநுத்தமாந்" என்று பக்ஷியையும் வழிநடத்துமவனிறே. (அ)

ஒன்பதாம்பாட்டு.

மணித்தடத்தடிமலர்க்கண்கள் பவளச்செவ்வாய் * அணிக்கோள்நால்சடங்கோள்தெய்வ மசுரரையென்றும் * துணிக்கும்வல்லரட்டனுறை பொழில்திருமோகூர் * நணித்துநம்முடை நல்லரண்நாமடைந்தனமே. (கூ)

ப:—அநந்தரம், விலக்ஷணமான விசிஷ்டன் வர்த்திக்கிற திருமோகூரை நமக்குரக்ஷகமாகக் கிட்டப்பெற்றோமென்று ப்ரீதராகிறார்

(இ-ள்.) மணித்தடத்து - தெளிந்த தடாகம்போலே குளிர்ந்த, அடி-திருவடிகளையும், மலர்-விகஸிதமான தாமரைபோலே யிருக்கிற, கண்கள் - திருக்கண்களையும், பவளச்செவ்வாய்-பவளம்போலே சிவந்த திருவதரத்தையு முடையனாய், அணிக்கொள் - ஸர்வபூஷணபூஷணார்ஹமாய், நால் - நாலுவகைப்பட்ட, தடம் - பெரிய, தோள் - திருத்தோள்களையுடைய, தெய்வம் - திவ்யவிக்ரஹத்தையுடையனாய், இவ்வழகுக்குப் புறம்பு ரக்ஷைதேடவேண்டாதபடி. அசுரரை-ஆஸுரப்ரக்ருதிகளை, என்றும் - ஸர்வகாலமும், துணிக்கும் - சேதிக்கும், வல்லரட்டன் - பெருமிடுக்கனானவன், ஆஸ்ரிதர்க்கு அச்சமறும்படி அநுபாவ்ய

(க) (உ) ரா-யு-கக-உ0- (ங) ரா-ஆர-கூஅ-ங0-

மாலைக்காக; உறை-நித்யவாஸம் பண்ணுமிடமாய், பொழில்-போக்யமான பொழிலையுடைய, திருமோகூர்-திருமோகூராகிற. நம்முடை-நம்முடைய, நல்லரண்-விலக்ஷணரக்ஷகமான தேசமானது. நணித்து-அத்யாஸந்நமாய்த்து; நாம்-துணைதேடித் தனிமைப்படுகிறநாம், அடைந்தனம்-அணுகப்பெற்றோம்.

அரட்டன்-மிடுக்கன். (௬)

ஆறு:—(மணித்தடத்தடி) நிரவதிக ஸௌந்தர்யத்தையும் ப்ரதிகூலநிரஸந ஸாமர்த்யத்தையுமுடையனாயிருக்கிறவெம்பெருமானெழுந்தருளியிருக்க, ஸர்வஸுலபமாய் பரமப்ராப்யமான திருமோகூரை நாமும் புஜிக்கப்பெற்றோமேயென்று, தம்முடைய லாபத்தைப் பேசுகிறார். (௬)

ஈடு - அவ:—நமக்கானான திருமோகூரை நாம் ப்ராபிக்கப்பெற்றோமென்று, ஸ்வலாபத்தைப் பேசுகிறார்.

(மணித்தடத்தடி) தெளிந்த தடாகம்போலேயாய்த்துத் திருவடிகளிருப்பது ஸ்ரமஹரமான திருவடிகளென்கை. (மலர்க் கண்கள்) அத்தடாகம் பூத்தாப்போலேயாய்த்துத் திருக்கண்களிருப்பது. (பவளச்செவ்வாய்) ப்ரவாளம்போலே சிவந்த திருவதரத்தையுடையனாய், தனக்குத் தானே யாபரணமாயிருக்கும் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தெய்வம்.

அவன் வழித்துணையாகப் போம்போது, ஸ்ரமஹரமான வடிவும் தன்னைப்புத்தோற்றின ஸம்ருத்தியையுடையனாய், ஒருகல்மதிளுக்குள்ளே போமாபோலே அச்சங்கெட்டுப் போம்படியாய்த்துத் தோள்நிழலிலே யொதுங்கினாலிருக்கும்படி. விஜிகீஷை போலேயாய்த்துப் போவது - "வழியிலே யெங்கே யென்ன ப்ரதிபந்தகம் வருகிறதோ" என்று அதிலேயைத்த சையுத்தானுமாயாய்த்துப் போவது.

(அசுரரைப்பென்றும் துணிக்கும்வல்லரட்டன்) அஸுரவர்க்கத்தை யென்றும் துணிக்கும்பெருமிடுக்கன். (உறைபொழில் திருமோகூர்) நித்யவாஸம்பண்ணுகிற பொழிலையுடைய திருமோகூர், "விம்மப்வர்த்திக்கும் முறைந்த" என்னுமாப்போலே. (நணித்து) கிட்டிற்று - ப்ரத்யாஸந்நம். (நம்முடைநல்லரண்) நமக்கு ரக்ஷகமான

தேசத்தைத. (நாமடைந்தனமே) ரக்ஷகாபேக்ஷையுடைய நாம் இட்டப் பெற்றோம். (௯)

பத்தாம்பாட்டு.

நாமடைந்தநல்லரண் நமக்கென்றுநல்லமரர் * தீமைசெய்யும் வல்லசுரரையஞ்சிச் சென்றடைந்தால் * காமரூபங்கொண்டெழுந் தளிப்பான் திருமோகூர்* நாமமேநவின்றெண்ணுமினேத்துமினமர்காள். (௧0)

ப:—அநந்தரம். ஆஶ்ரிதவிஷயத்தில் அபீஷ்டவிக்ரஹ பரிக்ரஹம் பண்ணி ரக்ஷிக்குமவனுடைய திருமோகூரினுடைய திருநாமத்தை, நம்மோடந்வயமுடையார் அநுஸந்தித்து ஏத்துங்கோளென்கிறார். ௧0)

(இ - ள்.) நமக்கு-நமக்கு அஸாதாரணமாக, நாமடைந்த-நாம்பற்றின, நல்லரண் - விலக்ஷணமானவரண், என்று-என்றுகொண்டு நல்லமரர்-நல்லதறியும் தேவர்களானவர்கள், தீமைசெய்யும்-பொல்லாங்கை ப்ரவர்த்திக்கக்கடவ, வல்-ப்ரபலரான, அசுரரை-அஸுரர்களைக்குறித்து அஞ்சிச்சென்றடைந்தால் - அஞ்சிச்சென்றாஶ்ரயித்தால். காமரூபங்கொண்டு-அநுரூபமாய் அபீஷ்டமான வடிவைக்கொண்டு, எழுந்து - கிளர்ந்து, அளிப்பான் - ரக்ஷிக்குமவன், திருமோகூர் - திருமோகூரினுடைய, நாமமே - பேர்பட்டபுகழையே, நமர்காள்-நம்மோடந்வயத்துடைய நீங்கள். நவின்று-பயின்று, எண்ணுமின்-நினையுங்கோள்; அவ்வளவில் பர்யவஸியாதே, ஏத்துமின் - ப்ரீதிப்ரேரிதராயேத்துங்கோள்.

காமரூபமென்று - அம்ருதப்ரதாந தசையில் பெண்ணுருவாயமுதூட்டினபடியைச் சொல்லிற்றாக்வுமாம். (௧0)

ஆறு;—(நாமடைந்த) திருமோகூரே நமக்கெத்தைக்கும் ப்ராப்யமாக நாமடையப் பெறுவதே! என்று, பின்னையும் ஸௌலப்யத்தைச் சொல்லி யநுபவித்து, ஆஶ்ரிதருடைய விருப்பத்துக்கு அணுகுணமான வடிவைக்கொண்டு அவர்களுடைய விரோதிகளை நிரஸித்து ரக்ஷித்தருளுமவனெழுந்தருளியிருந்த திருமோகூரினுடைய திருநாமத்தையே சொல்லி அவ்வூரை யேத்துங்கோளென்கிறார். (௧0)

ஈடு-அவ;—ஸர்வரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நமக்கு பந்துக்களானார், ஆதரித்து நினைத்தேத்துங்கோளென்கிறார்.

(நாமடைந்தவித்யாதி) நமக்கு ரக்ஷையாக நாம்கிட்டின நல்லரணென்று. அவர்கள் பாசுரமிருக்கும்படி. (நல்லமரர்) தங்களாபத்துக்கிவனே யுபாயமென்றறிகையாலே-நல்லமரரென்கிறார்; அசுரர்களிற் காட்டில் வ்யாவ்ருத்தியித்தனையுமிறே.

(தீமைசெய்யுமித்யாதி) பரஹிம்ஸையே யாத்ரையாயிருக்கிற வஸுரர்களுக்கஞ்சி வந்து சரணம் புக்கால். (காமமித்யாதி) ரக்ஷணாநுரூபமான வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்கிறவன் வர்த்திக்கிற திருமோகூர். (நாமமேநவின்று) ஊரின்பேரை வாயாலே சொல்லி யநுஸந்தித்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யேத்துங்கோள் நம்முடையவர்கள். (௧0)

பதிணொன்றும்பாட்டு.

எத்துமினமர்காளென்றுதான் குடமாடகூத்தனை * குருகூர்ச்
சடகோபன்குற்றேவல்கள் * வாய்த்தவாயிரத்துள்ளிவைவண்திரு
மோகூர்க்கு * ஈத்தபத்திவையேத்தவல்லார்க்கிடர்கெடுமே. (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, பகவத்ப்ராப்திவிரோதிநிவ்ருத்தியை யருளிச்செய்கிறார். (௧௧)

(இ - ள்.) நமர்காள்-நமமுடையவர்களெல்லாரும், எத்துமினென்று-உங்களுகப்புத்தோற்றும்படி யேத்துங்கோளென்று, தான்-தான், குடமாடுகூத்தனை-குடங்கொண்டாடின கூத்தனானவனைப்பற்ற, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன்-ஆழ்வாருடைய, குற்றேவல்கள்-அந்தரங்கவ்ருத்திகளாய், இவை-ஈர்வாஹக்குத் தகுதியாம்படியாக, வாய்த்த-வாய்த்த, ஆயிரத்துள்-ஆயிரத்துக்குள்ளே, வண்திருமோகூர்க்கு-விலக்ஷணமான திருமோகூர்க்கு, ஈத்தபத்திவை-ஸமர்ப்பிக்கப்பட்ட பத்து இவற்றை, எத்தவல்லார்க்கு, ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு சொல்லவல்லவர்களுக்கு, இடர்கெடும்-ஸம்ஸாரத்திலே வழித்துணையில்லாத துக்கம் தீரும்.

இது கலித்துறை. (௧௧)

ஆறு;—(ஏத்துமின்) என்னுடைய திவ்யமான சேஷ்டிதங்களை யுகந்திருப்பாரெல்லாரும் வந்தேத்தி வாழுங்கோளென்று தான் குடமாடுகூத்தனைக் குருகூர்ச்சடகோபன் சொன்னவாயிரத்தில், திருமோகூரைச்சொன்ன இத்திருவாய்மொழியைக்கொண்டு அவ்வூரை யேத்துங்கோ ளென்கிறார். (கக)

ஈடு-அவ;—நிகமத்தில், பரமோதாரமான திருமோகூருக்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்க்கு து:கநிவ்ருத்தியுண்டாமென்கிறார்.

(ஏத்துமின்) நம்சேஷ்டிதங்களை யுகப்பாரெல்லாருங்கண்டு வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி யேத்துங்கோளென்று, தான்சொல்லி, அதுக்கு விஷயமாகத் தான் குடக்கூத்தாடினவனை (குருகூர்ச்சடகோபன் தற்றேவல்கள்) ஆழ்வாருடைய அநந்யார்ஹ வ்ருத்திகள். அவன் குடக்கூத்தை யநுஸந்தித்து இவர் வாசிகமான வடிமையிலே யதிகரித்தார்.

(வாய்த்தவாயிரத்துள்ளிவை) ஸர்வேஶ்வரனுக்கு நேர்பட்ட வாயிரத்துக்குள்ளே வாய்த்தவையாய்த்து இவை. (வண்திருமோகூர்க்கீத்தபத்து) பரமோதாரமான திருமோகூர்க்குக் கொடுத்தபத்து (க) “ந்ருதஹாரஶ்ரீவாயிலேவ:—ரத்நஹாரீசபார்த்திவ:” என்னுமாப்போலே, இத்திருவாய்மொழியி லினிமையாலே திருமோகூர்க்கா யிருந்ததென்று கொடுத்தார்.

(இவையேத்தவல்லார்க்கிடர்கெடும்) இப்பத்தை யப்யஸிக்க வல்லார்க்கு, ஸம்ஸாரத்தில் “வழித்துணையில்லை” என்று கிலேஶப்பட வேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம். (கக)

பத்தாம்பத்து முதல்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இரண்டாந்திருவாய்மொழி—கெடுமிடர் ப்ரவேசங்கள்.

ஆறு;—(கெடுமிடர்) இப்படி ஸ்ரீவைஷ்ணவர்களோடேகூடத் திருமோகூரி லெம்பெருமானை யநுபவித்து, திருவனந்தபுரத்திலேயும் அவனை யிவர்களோடேகூட வநுபவிக்கைக்காக; *

ப:— இரண்டாந்திருவாய்மொழியில், கீழே வழித்துணையாகக் காளமேகத்தை யாஸ்ரயித்த விவ்வாழ்வாரை ப்ராப்யதேசத்தேறக் கொண்டுபோக வுத்யோகித்த ஸர்வேஸ்வரன், "தேசத்தினுடைய ப்ராப்யத்வத்தையும் தன்னுடைய கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதையையு மிந்தவிபூதியிலே ப்ரகாஸிப்பித்து இவருகப்பை விளைப்பித்துக்கொண்டு போவோம்" என்று திருவுள்ளம்பற்றி, நிரதிஸயபோக்யமான திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிறபடியைக்காட்டக் கண்டு ஸந்துஷ்டராய்; அவனுடைய வாஸ்ரித ஸம்ஸ்லேஷஸ்வபாவத்தையும், ஆஸ்சர்யாவஹமான அந்வயத்தையும், அசேஷஜகத்ரக்ஷகத்வத்தையும், அநவதிகவாத்ஸல்யத்தையும். அநுபஹிதசேஷித்வத்தையும், ஸர்வதேவநிர்வாஹகத்வத்தையும், ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதியோகத்தையும், பரமப்ராப்யத்வத்தையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும், ஆராதநஸௌலக்ஷண்யா பாதகத்வத்தையு மநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருவனந்தபுரந்தன்னையே ப்ராப்யமாக வறுதியிட்டு, இங்கே தம்முடைய ஸகலக்லேஸமும் தீரும்படி அவனுடைய போக்யமான திருநாமங்களைக் கீர்த்தித்தும், பஹுமுகமான கைங்கர்யங்களைப்பண்ணியும், அநுகூலஜநங்களோடே யநுபவிக்கப் பார்க்கிறார். *

ஈடு-அவ;—(க) "'ஒருநற்சுற்றம்' என்கிற திருமொழியிலே பலதிருப்பதிகளையு மருளிச்செய்தவிதுக்குக் கருத்தென்" என்று ஜீயர் பட்டரைக் கேட்க, "பிறந்தகத்தில்நின்றும் புக்ககத்துக்குப் போம் பெண்பிள்ளைகள் பந்துக்களிருந்தவிடமெங்கும் கண்டு வினவப்போமாபோலே, ப்ராப்யபூமி யணித்தானவாறே திருப்பதிகள் தோறும் புகுகிறார்" என்றருளிச்செய்தார். இவருமப்படியே திருப்புளிங்குடியிலேபுகுவது, திருக்காட்கரையிலே புகுவது, திருமூழிக்களத்திலேபுகுவது, திருநாவாயிலேபுகுவது, திருக்கண்ணபுரத்திலே

புகுவது, திருமோகூரிலே புகுவது, திருவனந்தபுரத்திலே புகுவதாகிறார்.

ப்ராப்யபூமியேறப்போவதாக வொருப்பட்டு, நடுவுண்டான ப்ரதிபந்தகங்களைப்போக்கி வழிகொடுபோம்படிக்குக் காளமேகத்தைத் துணையாகப்பற்றினாராய் நின்றவிடத்து; “அவ்வளவுதான் நடக்கப்போகவேணுமோ, இங்கே நமக்குத் திருவனந்தபுரம் ப்ராப்யமாக வுண்டாயிருக்க” என்று, திருவனந்தபுரத்தை ப்ராப்யமாக வத்யவஸித்து; அத்தேசமாகிற விதுதான், * வாசமேகமழுஞ் சோலை வயலணியனந்தபுரமாகையாலே, அவன்றனக்கு விரும்பி வர்த்திக்கவேண்டும்படி நிரதிஶய போக்யமுமாய், அவன்வந்து வர்த்திக்கையாலே ஸம்ஸாரதுரிதமும் தட்டாதவிடமுமாய், இச்சரீரஸம்பந்தமற்று அவ்வருகேபோனால் செய்யுமடிமையை ருசிபிறந்தபோதே யிங்கே செய்யலாம்படியுமாய், இனித்தான் “அமரர்கோனர்ச்சிக்கின்றங் ககப்பணிசெய்வர்விண்ணோர்” என்கிறபடியே நித்யஸூரிகளும் வந்தடிமைசெய்கிற தேசமாகையாலே, “அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ” என்று ஆசைப்பட்டபடியே அவர்களோடே கூடவுமாய், அவ்வருகுபோக வேண்டிற்றாகிலும் (௧) “பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்” என்கிறபடியே அவர்களோடே போகவுமாயிருக்குமிறே.

உகந்தருளின நிலங்களில் நிலைதான்; முதலிலே பகவத்விஷயத்தில் ருசியைப்பிறப்பிக்கைக்குடலுமாய், ருசிபிறந்தால் (௨) “யே யதா மாம் ப்ரபத்யந்தே” என்கிறபடியே ஸௌலப்யத்துக்கெல்லைநிலமாகையாலே உபாயபாவமும் பூர்ணமாய், ப்ராப்யபூமியில் கொடுபோமிடத்தில், ஆதிவாஹிகரைத்தில் ப்ரதாநனானவனே (௩) “[illegible] ஹார்த்தாநுக்ருஹீத:” என்கிறபடியே வழியில் ப்ரதிபந்தகங்களைப் போக்கிக்கொடுபோகைக்கும் முற்பாடனாகைக்கு முடலாய், ஸம்ஸாரபந்தமற்று அவ்வருகேபோனால் செய்யுமடிமையைவிரோதி கிடக்கச்செய்தே காதாசித்கமாகச் செய்கைக்கு முடலாயிருக்குமிறே

(௧) தி-மொ-௭-௪-௪. (௨) கீதை-௪ ௧௧.
(௩) ப்ரஹ்மஸூத்ரம்-௪.௨-௧௬.

ஆக, "ருசியைப்பிறப்பிக்கைக்கு முடலாய், ருசிபிறந்தபோதே யுபாயமாகைக்கு முடலாய், ஜ்ஞாநபக்திவர்த்தகங்களுமாய், விரோதியும் கிடக்கச்செய்தே யடிமை செய்கைக்கு முடலாயிருக்கையாலே, திருவனந்தபுரமே பரமப்ராப்யம்" என்றறுதியிட்டு, நம்மோடு ஸம்பந்தமுடைய அநுகூலஜநங்களடங்க அங்கேபோய்த் திருவோங்கோ ளென்கிறார்.

இதுதான் அல்லாத திருப்பதிகளுக்கு மொவ்வாதோ, "யாவரும் வந்துவணங்கும்பொழில் திருவாறன்விளையதனை மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னு மென்சிந்தனையே" என்றித்யாதிகளுமுண்டேயென்னில்; எல்லாவற்றுக்கு மெல்லாமுண்டாயிருந்தாலும் ஓரோவிடங்களிலே யோரநுஸந்தாநவிசேஷங்களைாடினால் அதுக்குச்சேர வார்த்தைசொல்லு மத்தனையிறே. *

முதற்பாட்டு.

கெடுமிடராயவெல்லாங்கேசவாவென்ன * நாளுங்கொடுவினை செய்யுங் கூற்றின்தமர்களுங்குறுககில்லார் * விடமுடையரவிற் பள்ளிவிரும்பினான்சுரும்பலற்றும் * தடமுடைவயலனந்தபுரநகர்ப் புகுதுமின்றே, (க)

ப :— அநந்தரம், முதற்பாட்டில், அத்வக்லேஶம் தீரும்படி பாதேயமான அவனுடைய போக்யநாமங்களைக் கீர்த்தித்துக்கொண்டு ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனானவனுடைய திருவனந்தபுரத்தைக் கிட்டுங்கோளென்று, ஸ்வஜநமான பாகவதர்களைக்குறித் தருளிச் செய்கிறார்.

(இ - ள்.) (க) " [illegible] வைகுண்டநாமக்ரஹணமசேஷாகவிநாஶநம்" என்கிறபடியே, ப்ரஶஸ்தகேசனான க்ருஷ்ணனுடைய கேசவாவென்ன - கேசவநாமத்தைச் சொல்லவே, போக்யயான பாலைக்குடிக்கவே பித்தம் தன்னடையே நசிக்குமோபாதி, இடராயவெல்லாம் - ஸகலதுஃகங்களும், கெடும்-புக்கவிடம் தெரியாதபடி கெட்டுப்போம், நாளும்-நிரந்தரமாக, பாபாநுரூபமாக, கொடுவினை-க்ரூரயாதனைகளை, செய்யும் - செய்யா

(க) வி-பு உ-அ-ரு-அ-

சிறகிற, கூற்றின்தமர்களும்-யமபடரானவர்கள், "இதீரயந்தி" என்று * கமலநயநகாமோச் சாரணத்தாலே (க) "த(?)ஜ்ஜைடுஷ—ஞா கமொணை த்யஜபடஞாரதரேண" என்கிறபடியே * கோலாடுகுறுகப்பெறுதே. (உ) "கள்ளர்போல்" என்னும்படியே, குறுககில்லார்-ஓடிப்போவார்கள்; ஆனபின்பு, விரோதிவர்க்கமணுகாதபடி விடமுடை - விஷெநள்ல் பண்யத்தையுடைய, அரவில்-திருவரவணையிலே பள்ளிவிரும்பிஞன்-ஆஸ்ரிதஸம்ஸ்லேஷ ப்ரீதிதோன்றும்படி விரும்பிக் கண்வளர்ந்தருளுகிறவனுடையதாய், குணநுபவப்ரீதரான முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே, சுரும்பு-மதுபாநமத்தமான வண்டுகள், அலற்றும் அக்ரமமாக வலற்றும்படியான, தடம்-பூந்தடங்களை, உடை-உடைத்தான, வயல்-வயல்களையுடைய, அனந்தபுரநகர்-திருவனந்தபுரத்தை, இன்றே காலவிளம்பம்பிறவாதபடி இன்றே, புகுதும்-கிட்டுகோள். (க)

ஆறு: திருவனந்தபுரத்திலேபோய்ப் புகுகைக்கு கேசவாவென்று திருநாமத்தைச் சொல்லிக்கொண்டுபோய்ப் புகுவோம், வாருங்கோளென்கிறார். (க)

ஈடு-அவ;—ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்ல, திருவனந்தபுரத்துக்குப் போகைக்கு விரோதியானவையெல்லாம்போம், அங்கே புகவாருங்கோளென்று அநுகூலரை யழைக்கிறார்.

(கெடுமிடராயவெல்லாம்) இடரென்று பேர்பெற்றவையெல்லாங்கெடும். ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயஸ்சித்தமாக த்வாதசவார்ஷிகம் சரித்தால் மற்றொருபாபத்துக்கு மற்றொருப்ராயஸ்சித்தம் பண்ணவேண்டியிருக்குமிறே; இங்கதுவேண்டா; (ங) "ஸர்வே நாஸம்-யாந்தி" என்கிறபடியே, ப்ராயஸ்சித்தமும் வேணுமாயிருக்குமோவென்னில் (கேசவாவென்ன) அவனுடைய நிருத்திமைய் போக்கினபடிசொல்ல, விரோதியென்று பேர்பெற்றவையெல்லாம் நசிக்கும்; ராவணனொருவனும் ப்ராதிகூல்யம்பண்ண ராக்ஷஸஜாதியாக நசித்தாப்போலே.

(எல்லாம்) அநுபவிக்கக்கடவவையும் முன்பேபெற்றுக்கிட அநுபவிக்கிறவையும் நசிக்கும்; (ச) போயபிழையும் புகுதருவா

(க) வி-பு-ங-எ-கங-
(ங) விஷ்ணுதர்ம-
(உ) தி-மொ-அ-க-எ-
(ச) திருப்பாவை-ரு-

நின்றனவும்." (என்ன) உக்திமாத்ரமே யிதுக்குவேண்டுவது, கார்யத்தில்வந்தால் அர்த்தக்ரியாகாரியாயே தலைக்கட்டும்; அன்றிக்கே, ப்ரஶஸ்தகேஶனாயிருக்கு மிருப்பைச்சொல்ல ஸம்ஸாரதுரிதங்களடங்கலும் போமென்னுதல். (௧) "கேஶவ: க்லேஶநாஶந:-கேஶவ: க்லேஶநாஶந:" என்கிறபடியே; அன்றியே, ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ஆனாலும் சொல்லிப்போருமது முதற்பொருளே.

(நாளுமித்யாதி) நாள்தோறும் கொடியசெயலைச் செய்யக்கடவ ம்ருத்யுவுக்கந்தரங்கராயிருப்பாரும் வந்துகிட்டப்பெறார்கள். யமனுக்கந்தரங்கரென்று ஸர்வேஶ்வரனுடையார் பக்கலிலே வந்துகிட்டவோ. (உ) "ஸ்வபுருஷம்-ஸ்வபுருஷம்" இத்யாதி, (௩) "தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய - தஸ்யயஜ்ஞவராஹஸ்ய" இத்யாதி, "ப்ரணாமம் யேபிகுர்வந்தி-ப்ரணாமம்யேபிகுர்வந்தி" என்றிறே அவன்வார்த்தையும். (௪) [இறைஞ்சியும்சாதுவராய்ப்போதுமின்களென்றான்] அவர்களைக்கண்டால் "நாம் கடவோமல்லோம்" என்று போராதே. கிட்டியநுவர்த்தித்துப் போரும்கிடிகோள்.

"ஸ்வபுருஷம்-ஸ்வபுருஷம்" யமன், தன்பரிகரம் கையும் பாசமும் சூலமும் நாயுமாய்ப்போகிறபடியைப் பார்த்து. பாகவதர்களல்லாதாரும் கலந்திருப்பார்கள், பாகவதர்கள்முன்னே யிவன் கிட்டில்செய்வதென்" என்று தனக்கென்று சொல்லுகிறான் [ஸ்வபுருஷம் - ஸ்வபுருஷம்] தனக்கந்தரங்கனாயிருக்கையாலே, தன்மேன்மை சொல்லவேண்டுமிடத்திலே தாழ்வுசொல்லுகிறானத்தைத் தவிரவொண்ணாமையாலே [அபிவீக்ஷ்ய - அபிவீக்ஷ்ய] இவன்றான் நாலிரண்டோலைமறுக்கத் தாமுடையனாயிருக்குமாய்த்து; சொற்செல்லுகைக்காக விப்படியிருக்கிறவனைப் பார்க்கிறபார்வையிலே கார்யகௌரவமெல்லாம் தோற்றும்படி பார்த்தானாய்த்து. [பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் - மதுஸூதநப்ரபந்நாந்] "இவர்களை நம்ந்தாலையுறுக்கென்" என்ன; இவர்களவன் பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பார்கள்; இவர்களுக்கு வந்ததென்றுக்கு அவன் பார்வு தட்டிக்கொண்டுவரும்; உன்னுடையோமாய்ப்போகிற வெங்களுக்கு

---

(௧) பாரதம்-
(உ) வி-பு-௩-௭-௧௩-
(௩) விஷ்ணுதர்ம-
(௪) ௪-திருவ-௬-௮-

வேறுசிலர்க்கஞ்சவேண்டும்படியிருந்ததாகில் நீ பின்னையாராய் இவ் விருப்பிருந்தேவுகிறதென்ன [ஷூஹ்ராஹ் ந ந்ரூணாம் - ப்ரபுர ஹங்யங்ருணும்] "எனக்கடைத்த விஷயத்தில் சொற்செல்லாதாகி லென்னேறு வெனக்குக் குறையாவது" நாம் கடவோமல்லாத விஷயத் திலே நாமாராயாநிற்கவோ.

இதுதன்னைத் திருமழிசைப்பிரானு மருளிச்செய்தாரிறே, (௧) "திறம்பேன்மின்" இத்யாதி (௨) [அவன்றமரெவ்வினையரித்யாதி] அவர்கள் தங்களிலே சொல்லியிருக்கும் வார்த்தையிறே யிது, (௩) [மாறுசெய்தவித்யாதி] சக்ரவர்த்தித்திருமகனார் பேணை யிவனாரா யவோ. ஒருதிருவோலக்கத்திலே, பட்டர் திருவூற்றங் கரையிலே பேரோலக்கமாகவிருக்க, "ஸந்த்யையானது" என்று சிலர் விண் ணப்பஞ் செய்ய; "நாம் பெருமாளழகிலே துவக்குண்டு இன்றொரு நாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழ்தினேறென்றால் இது குற்றமாக யமன்கேட்கவோ, ராஜாவிருந்து நாட்டுக்கணக்குக் கேட் டுக் கொடுவாரா நின்றால் ராஜாவுக் கந்தரங்கனாயிருப்பா னொருவன் பேரை வாசித்தால் 'ஓங்காண், அதுகிடக்கமேற் சொல்' என்றால் பின்னை யொருகாலமும் அப்பேரெடுத்து வாசிக்கப் பெறுவானோ" என்றாராம். இக்கப்ரஸங்கத்திலே, (௪) "உனக்காகித்தொண்டு பட்டநல்லேனை வினைகள் நலியாமை நம்புநம்பீ" என்றருளிச் செய் தார்.

(௫) [வள்ளலேயுன்தமர்க்கென்றும் நமன்றமர்கள்ளர்போல்] இருவர் ஒருவழிபோகப்பெறார்கள். (௬) [கொடுமை செய்யுமித்யாதி] விழுக்காடறியாதே வந்துகிட்டில் செய்வதென்னென்னில் [கட வரையித்யாதி] திருவாழியையிட்டுத் தோளைக் கழித்தல், அப்பா லே தலையை யறுத்தல் செய்யுமத்தனை. வாணன்பட்டது படுதல், ராவணன்பட்டதுபடுதல் செய்யுமத்தனை. (௭) [வேண்டாமை நமன் றமரென்தமரை வினவப்பெறுவா ரலரென்றுலகேழாண்டாய்] யமபடர் நம்முடையாரை வினவப்பெறார்கள். அதுக்கடியென் [வேளா

(௧) ௪-திருவ-௬௮-
(௨) ௧-திருவ ௬௯-
(௩) தி-ச வி-௧௧௬-
(௪) தி-மொ-௬-௩-௯-
(௫) தி-மொ ௮-௧௦-௭-
(௬) பெரியா-தி-௫-௪-௮-
(௭) தி-மொ-௧௦ ௬-௫-

டாமை] ஊர்க்கணக்கன்றோ கோயிற்கட்டணத்திலேபுக்குப் படுகைகப் பற்றாராய்வான்; (௧) "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்கிறவன் இவர்கள் கையில் காட்டிக்கொடானே. (௨) "நின்னுடம்கற்றவா வலிப்புடைமை, நமன்றமர் தலைகள்மீதே நாவலிட்டுழி தருகின்றோம்" (௩) [ப்ரபவதி ஸம்யமநே - ப்ரபவதி ஸம்யமநே] உங்களை நியமிக் கப்போந்த வென்னைப்போலல்லகாண் என்னை நியமிக்குமவன். இவ் வோலக்கத்திலே வந்தாலன்றே யிவனாராய்வது, அவன் * எங்குமுள னிறே.

(நாளும்கோடுவினைசெய்யுங்கூற்றின் தமர்களும்குறுககில்லார்) பழையதாகவிருந்துபோந்த வாஸனைகொண்டு பகவத் விஷயத்திலே முதலடியிட்டவின்றும்கிட்டவோ. (குறுககில்லார்) (௪) "நிர்தோஷம் வித்தி - நிர்த்தோஷம்வித்தி" சாவதுபிறப்பதாய்ப் போந்தவனு வது, பரிஹாரமில்லாத தோஷங்களையுடையனுவது, ஆனாலும் அவனை நிர்த்தோஷனுகவே புத்திபண்ணுவது. தோஷங்களுண்டா யிருக்க விப்படி நினைக்கவேண்டுவானென்னென்ன. [ப்ரபாவாத் - ப்ரபாவாத்] இவனையோ பார்ப்பது, இவன்பற்றினவனைப் பார்க்க வேண்டாவோ, இவனை யாராய்கையாவது - பகவத் ப்ரபாவத்தைப் பரிச்சேதிக்கையாமிறே (கில்லார்) எரிகிறநெருப்பிலே கிட்டுவா ருண்டோ, நியாமகனுடைய நியமநவாக்யங்கொண்டு கிட்டாமை யல்லவிறே; தந்தாமை வேண்டாதாருண்டோ.

(விடமுடையித்யாதி) இனிமேல் ப்ராப்யத்தைச் சொல்லுகி றது. (விடமுடை) செந்நெற்குக்கு முட்கட்டினாப்போலே யொரு வர்க்கும் முகங்கொள்ளவொண்ணுதிருக்கை, (௫) "வாய்ந்தமது கைடபரும்வயிறுருகிமாண்டார்" விரோதிகளாய்க்கிட்டினார் முடிந் துபோம்படியா யிருக்கும். (அரவு) ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றங்களையுடைத்தா யிருக்குமிறே. (பள்ளிவிரும்பி னான்) பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேயாய்த்து அங்குக்கண் வளர்ந்தருளுகிறது. (௬) "பாதேநாத்யாரோஹதி - பாதேநாத் யாரோஹதி" என்று அதைத்தேறலாயாய்த் திருப்பது.

---

(௧) பெரியா-தி-௪ ௯-௨-
(௨) திருமாலை-௧
(௩) வி பு ௩-எ-௧௪-
(௪) ஸாத்வதம்-
(௫) ௩-திருவ-௬௬
(௬) கௌஷீதகி-

(கரும்பலற்றும்) (௪) "வஸந்த்தூ ஐமாயஹ்ராஜேஷு-ஏதத்ஸாமகாயந் நாஸ்தே" என்று முக்தர் செய்பவற்றை வண்டுகள் செய்யாநிற்கும். (தடமுடைவயல்) விரஜை, மற்றையவற்றுக்குப் போலியாயிருக்கு மாய்த்துத் தடாகங்கள். (அனந்தபுரநகர்) * கலங்காப்பெருநகரத் துக்குப் போலியாயிருக்கும். (புகுதுமின்றே) "க்ராமத்திலே புகு கிறோம்" என்றுறியிருக்குமதன்று, இச்சைபிறந்தவின்றே போய்ப் புகுவோம். (௩)

இரண்டாம்பாட்டு.

இன்றுபோய்ப்புகுதிராகிலேழுமையுமேதஞ்சாரா* குன்றுநேர் மாடமாடேகுருந்துசேர்செருந்திபுன்னை * மன்றலர்பொழிலனந்தபுர நகர்மாயன்நாமம் * ஒன்றுமோராயிரமாமுள்ளுவார்க்கும்பருரே. ( )

ப:— அநந்தரம், ஆஶ்சர்யபூதனானவனுடைய திருநாமங்கள் ஸஹஸ்ர முகமாக போக்யமாமென்கிறார். (௨)

(இ-ள்.) இன்று-காலவிளம்பம் பிறவாதபடி ருசிபிறந்தவின்றே. போய்-சென்று, புகுதிராகில்-ப்ராபிப்புதிகோளாகில், (௨) "ஏ நாவ நம்ஸஹ்ரந்ரு-னோபஜநம்ஸ்மரந்" என்கிறபடியே, எழுமையும்-யாவதாத்ம பாவி, ஏதம்-ஸம்ஸாரதோஷம், சாரா-தட்டாது; ப்ராபிக்கிறப்ராப்ய தேசந்தான், குன்றுநேர் - மலைபோலேயிருக்கிற, மாடம் - மாடங்களி னுடைய, மாடே-பரிஸரத்திலே. குருந்துசேர்-குருந்தோடு சேர்ந்த, செருந்தி-செருந்தியும், புன்னை-புன்னையும், மன்று மன்றிலே, அலர்-அலரும்படியான, பொழில்-பொழிலையுடைத் தாகையாலே மிகவும் போக்யமான, அனந்தபுரநகர் - திருவனந்தபுரமாகிற நகரத்திலே, மாயன்-ஆஶ்ரிதர்க்கநுபாவ்யமான ஸௌந்தர்ய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணவிஶிஷ்டனான ஆஶ்சர்யபூதனுடைய, நாமம்-தத்குணவாசக நாமம், ஒன்றும்-ஏதேனுமொன்றாகிலும், ஓர் அத்விதீயமாய்க்கொண்டு; ஆயிரமா-ஸஹஸ்ரமுகமாக, உள்ளுவார்க்கு-நினைப்பார்க்கு, அத்தேசத் தில் குணாநுபவமே, உம்பருர்-பரமபதம்.

பரமபதம் அவர்ஜநீயமென்றுமாம், மன்றென்று-மன்றலாய், பரிம ளத்தை விகஸிக்கிற பொழிலென்றுமாம். (௨)

---

(௧) தை-ப்ருகு-௧௦- (௨) சாந்தோ-

ஆறு ;—(இன்றுபோய்) ப்ரதிபந்தகம் போகைக்குக் கேசவா வென்னும் திருநாமம் சொல்லவேணுமென்று நியமமுண்டோவென்னில், அதில்லை ;

அவனுடைய வாயிரம் திருநாமத்திலே வேண்டிற்றொரு திருநாமத்தை நினைக்கவமையும் ; நினைக்கவே, நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகராயின்றேபோய்த் திருவனந்தபுரத்திலே புகலாம்; போய்ப் புகுதிராகில் ஒருநாளுமொருதுஃகமில்லை யென்கிறார். (உ)

ஈடு - அவ :—ப்ரதிபந்தகங்கள் போகைக்குச் சொன்ன திருநாமந்தானே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமாமென்கிறார்.

(இன்றுபோய்ப்புகுதிராகில்) போவோமென் றிச்சைபிறந்த வின்றேபோய்ப் புகுவுதிகோளாகில், இதரவிஷய விரக்தி தொடக்கமான அதிகாரிஸம்பத்திவேண்டாவோ, இச்சாமாத்ரமே யமையுமோ வென்னில் ; (௧) "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்-யதஹரேவவிரஜேத்ததஹரேவப்ரவ்ரஜேத்" என்கிறபடியே அவை வேண்டுவது அதிக்ருதாதிகாரமான விஷயங்களுக்கு, ஸர்வாதிகாரமுமாய் ப்ராப்தமுமாய் முன்பே யிவனை யிச்சித்து இச்சைபார்த்திருக்கும் விஷயத்துக்கு இச்சாமாத்ரமே வேண்டுவது ; விஷயானுரூபமாக வதிகாரி ஸம்பத்தி இவனால் ஸம்பாதிக்க முடியாமையாலும் * ஆட்பார்த்துழிதருமவனாகையாலும் வேண்டா ;

(உ) "யதிவா ராவணஸ் ஸ்வயம்-யதிவாராவணஸ்ஸ்வயம்" என்னுமவனிறே - விபீஷணனென்று போராய் ; ராவணனுயிருந்தானென்று மீளாதே கிடீர். அதாவது, அங்கு நின்றும் வந்தானொருவனைக் கைக்கொண்டதாக வமையாதோ வென்னவேண்டா, குறைவாளர்க்கிறே நம்மா லபேக்ஷையுள்ளது, அதுள்ளது ராவணனுக்கிறே. (௩) "விபீஷணஸ்து தர்மாத்மா—விபீஷணஸ்துதர்மாத்மா" என்று தனக்கென்ன வொரு கைம்முதலுமுண்டாகையாலே நாளைவரவுமாம், அரைக்ஷணம் கிட்டாவிடில் நாசமாயிருக்கிறது அவனுக்கேயன்றோ ; ஆனபின்பு, அவனையன்றோ முற்படக் கைக்கொள்ள வேண்டுவது. இனித்தானிவனைக் கைக்கொண்டால், இவனுமிவன் தன்னோடே நால்வருமாய்ப் போம் ; ராவணனைக் கைக்கொண்டால்,

(௧) ஜாபாலிஸ்ம்ருதி- (உ) ரா-யு-௧௮- (௩) ரா-ஆர-௧௭-௨௪-

மூன்றாம்பாட்டு.

ஊரும்புட்கொடியுமஃதே யுலகெல்லாமுண்டுமிழ்ந்தான் *
சேருந்தண்ணனந்தபுரஞ் சிக்கெனப்புகுதிராகில்* தீருநோய்வினைக
ளெல்லாந்திண்ண நாமறியச்சொன்னோம் * பேருமோராயிரத்து
ளொன்றுநீர்பேசுமினே. (௩)

ப:—அநந்தரம், அத்தேசத்தை ப்ராபித்தவளவிலே ஸமஸ்தவிரோதிகளும் கழியும், ஸர்வரக்ஷகனான வந்தேசிகனுடைய திருநாமங்களாயிரத்திலு மேதேனுமொன்றையும் சொல்லி அநுபவியுங்கோ ளென்கிறார்.

(இ-ள்.) ரக்ஷணார்த்தமாக, புள்-பெரிய திருவடியை ஊரும்-நடத்தாநிற்கும்; கொடியும்-ரக்ஷணத்துக்குக் கட்டினகொடியும், அஃதே-அதுவே; சென்று-ரக்ஷிக்கவொண்ணாத ப்ரளயத்தளவில், உலகெல்லாம்-லோகத்தையெல்லாம், உண்டு-அமுதுசெய்து வயிற்றிலேவைத்து நோக்கி, உமிழ்ந்தான்-ப்ரளயாநந்தரமுமிழ்ந்தவன், சேரும்-பிற்பாடர்க்கு முகங்கொடுக்கைக்காகக் கண்வளர்ந்தருளுகிற, தண்-ஸ்ரமஹரமான, அனந்தபுரம்-திருவனந்தபுரத்தை, சிக்கென-அநந்யப்ரயோஜநத்வ வ்யவஸாயத்தை யுடையீர்களாய்க்கொண்டு, புகுதிராகில்-ப்ராபிப்புதிகோளாகில், நோய்-ப்ரயோஜநாந்தரருசியான நோயும், வினைகளெல்லாந்தீரும்-அதுக்கடியான கர்மங்களும் நிரவசேஷமாக நசிக்கும், நாம்-இவ்வர்த்தத்தில் நிலவரானநாங்கள், உங்களுக்கு, அறிய-அறியும்படி, திண்ணம்-த்ருடமாக, சொன்னோம்-சொன்னோம்; அங்குச்சென்றால் பேருமோராயிரத்துள்-அவனுடைய வாசகமான நாமமாயிரத்திலும் வைத்துக்கொண்டு, ஒன்று-ஏதேனுமொன்றை, நீர், பேசுமின்-சொல்லுங்கோள்.

போக்யமாமிடத்தில் ப்ரதாநாப்ரதாந விபாகமில்லையென்று கருத்து. (௩.)

ஆறு:—(ஊரும்புள்) போகோபகரணங்களினுடையும் ஸர்வோபகரணங்களினுடையும் பரிபூர்ணனாயிருக்கிற ஸர்வேச்வரனுக்கு வாஸஸ்தாநமான திருவனந்தபுரத்திலே அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு புகுகிறாகில் உங்களுடைய ஸமஸ்தது:கங்களும் போம்; இது ஸித்தம், இப்ப்ராப்யத்தைப் பெறுகைக்கும் ப்ரதிபந்தகம் போகைக்

கும் ஆயிரந்திருநாமத்திலே யொரு திருநாமத்தைச் சொல்லவேணு மென்னும் நியமமில்லை, அவனுடைய வஸங்க்யேயமான திருநாமத் திலே வேண்டிற்றொரு திருநாமத்தைச் சொல்லுங்கோளென்கிறார்.

ஈடு - அவ ;—ப்ரதிபந்தகங்கள்போகைக்கு தேசப்ராப்தியே யமையும்; ஆயிரந்திருநாமத்திலு மேதேனுமொன்றைச் சொல்லி யநுபவியுங்கோ ளென்கிறார்.

(ஊரும்புள்) பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு நடத் தும். (கொடியுமஃதே) இது நித்யஸூரிகளுக்கு முபலக்ஷணம். அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்க்கு (௧) "சென்றாற்குடையாம்" என் கிறபடியே உண்டாகச் சொல்லுகிற நாநாபாவம், இன்றுபோய்க்கிட் டினவனுக்கும் வாசியறக்கொடுக்குமென்கைக்காகச் சொல்லுகிறது. இவன் (௨) "ஸஹ வைதேஹ்யா ரம்ஸ்யதே-அஹம்ஸர்வங்கரிஷ்யாமி" என்றிருந்தாலும் பலமில்லையிறே; (௩) "குருஷ்வ" என்று அவனப்படிகொள்ளாதவன்று. இவனுக்கு கிஞ்சித்கரியாத வன்று ஸ்வரூபலாபமில்லை. நிரபேக்ஷனானதான் குறையநின்று இவனுடையகுறையைத்தீர்க்குமாய்த்து, தான்ஸாபேக்ஷனாய் நின்று இவனை நிரபேக்ஷனாக்கும். இவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாம்படி பண்ணிக்கொண்டு நிரபேக்ஷனாகவேணுமிறே அவனுக்கு; இவனு டைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாக அவன்தன்னைத் தாழவிட்டானென் றால் அதுதானே கைங்கர்யபக்ஷத்தைக் கூடவாயிருக்குமிறே அவ னுக்கு. (௪) "இன்னார் தூதனென நின்றான்" என்றபின்பிறே அவ னுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாய்த்து.

(உலகித்யாதி) ஸம்ஸாரஸ்பர்ஶமில்லாதாரை யெல்லாவடிமை களும் கொள்ளுமையன்றிக்கே, ப்ரளயாபத்தில் லோகத்தையெடுத் து வயிற்றிலேவைத்து நோக்கி, பின்னை புறப்படக்கிடந்து தளர வொண்ணாதென்று வெளிநாடுகாண வுமிழ்ந்தவன். (சேரும்தண்ண னந்தபுரம்) ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு அவன்வயிற்றில் புகாதபோ துண்டான செல்லாமையையோபாதியும் போருமாய்த்து, அவனுக்கித் தேசத்தில் புகுராதபோதுண்டான தரிப்பாறுதி; ப்ரளயாபத்தினின்

(௧) ௧-திருவ ௫௩-
(௨) ரா-அயோ ௩௧-௨௫-
(௩) ரா-அயோ-௩௧-௨௨-
(௪) தி மொ ௨-௨-௩-

றும் ஜகத்தையடைய ரக்ஷித்தவன். ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாக வந்துசேருகிற விடமென்னுதல், அவன் ஸ்ப்ராணைப்க்கொண்டு சாய்ந்தருளுகிற விடமென்னுதல்.

(தண்ணனந்தபுரம்) ப்ராப்யமாலே அணிப்படி விரும்புகிறீரல்லன், போக்யதையாலே விடமாட்டாமையாய்த்து, உகந்தருளின நிலமாகி விப்படியிருக்கவேண்டாவோ; (க) "தானுகந்தவூர்" என்னக் கடவதிறே - தானுகந்த திக்பலவிகளுகக் கமிடமிறே ப்ராப்யதம்; இங்குதன்னுகப்பேயிறே-இவர்கள் வையக்யம்பண்ணு நிற்கச்செய்தேயும் தான்விடமாட்டாதே அவஸரப்ரதீக்ஷனாய்க்கிடக்கிறவிடமிறே. (சிக்கென) (உ) "நவபாநராவஷ்ட தனசபுநராவர்த்ததே" என்கிறபடியே மீளாத ருசியையுடையீர்களாய்க் கொண்டு கிட்டுவிகோளாகில். (தீருமித்யாதி) கர்மங்களும் அம்ஹெறுதுக்களு மெல்லாம் நசிக்கும். (திண்ணம்) (௩) "ஸத்யம்ஸத்யம் புநஸ்ஸத்யம்-ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம்" என்னுமாபோலே. (நாமறியச்சோன்னோம்) சாதமாக அநுபவத்தாலே கைகண்டோம், இதில் வாசியறியாத நீங்களும் பிழைக்கவொண்ணுமென்று உங்கள் நெஞ்சிலே படும்படி சொன்னோம். (நாம்) நெடுநாள் க்லேசப்பட்டுக் கரைகண்டவரிறே. (சோன்னோம்) இனிகர்மவஸ்யராய்ப்புகிலவர்கள், சொன்னவார்த்தை ப்ரதிபத்திபண்ணாமையாலே படுகிறார்களத்தனை; நம்மேல் குறையற நாம் சொன்னோம்.

செயலுக்கு நேசப்ராப்தியமையுமென்றீர், இனிச் சொல்லியிருக்க வேண்டுமென்னவென்ன (பேரோராயிரத்து) அதிருதநாம தானே ஆயிரப்படி ரக்ஷகமான வாசிரந்திருநாமத்தையுடையவனென்று சொன்னேறேறோ நமக்கு; அதில் வாய்க்குதேவாநாந்தொரு திருநாமத்தைச் சொல்லுங்கோள். (பேசுமினோ) மற்றொரு ப்ரகாரமும் வேண்டா. (௩)

(க) திருநெ-௬௩. (உ) சாந்தோ-அ-௧௫-

(௩) பாரதம்-

நான்காம்பாட்டு.

பேசுமின்கூசமின்றிப் பெரியநீர்வேலைசூழ்ந்து * வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரம் * நேசஞ்செய்துறைகின்றானை நெறிமையால்மலர்கள்தூவி * பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ்செய்தவாறே. (௪)

ப:—அநந்தரம், ஆஸ்ரித ரக்ஷணார்த்தமான நிரவதிக வாத்ஸல்யத்தையுடையனாய்க்கொண்டு திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிறவனை ஆராதிக்கிறவர்களுடைய பாக்யாதிஸயத்தை ஸ்லாகிக்கப்பாருங்கோளென்கிறார். (௪)

(இ-ள்) பெரிய-ஸம்ருத்தமான, நீர்-ஜலத்தையுடைத்தான, வேலை-கடலாலே, சூழ்ந்து-சூழப்பட்டு, வாசமேகமழும்-பரிமளத்தைப் பரப்பாநிற்கிற, சோலை-சோலைகளையும், வயல்-வயல்களையும், அணி-அலங்காரமாகவுடைய, அனந்தபுரம்-திருவனந்தபுரத்திலே, நேசம்செய்து-ஆஸ்ரிதரக்ஷண ப்ரதாநார்த்தமாக நிரதிஸய வாத்ஸல்யத்தைப்பண்ணி, உறைகின்றானை-நித்யவாஸம்பண்ணுகிறவனை, நெறிமையால்-அவன் சேஷித்வாநுரூபமான மார்க்கத்தாலே, மலர்கள் - புஷ்பாத்யுபகரணங்களை, தூவி-ப்ரேமபரவசராய்க்கொண்டு விநியோகித்து, பூசனைசெய்கின்றார்கள்-ஆராதிக்கிறவர்கள், புண்ணியம்-பாக்யத்தை, செய்தவாறு - பண்ணினப்ரகாரத்தை, கூசமின்றி - உங்களுடைய அயோக்யதையைப்பாராதே வத்ஸலனானவனை ஆராதிக்கிறவர்களுடைய வாத்ஸல்யாதிசயத்தைப்பார்த்துக்கூசாதே, பேசுமின்-ஸ்லாகிக்கப்பாருங்கோள். (௪)

ஆறு :—(பேசுமின்) நாமநூற்றென்று கூசாதே அவன் திருநாமத்தைச் சொல்லுங்கோளென்று சொல்லி, அடிமைசெய்கையிலே அவர்களுக்கு ஸ்ரீ ருசியுண்டாகைக்காகத் திருவனந்தபுரத்திலெம்பெருமானுக்கு அந்தரங்கராய்க்கொண்டடிமைசெய்கிறவர்கள் என்னபுண்ணியஞ்செய்தாரோவென்று, அவர்களுடைய ப்ராப்யைகதேசத்திலே ப்ராப்யமான அடிமையினுடைய வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறார். (௪)

ஈடு-அறு,—ஆஸ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காகத் திருவனந்தபுரத்திலே புக்கடிமை செய்கிறவர்கள் என்னபாக்யவான்களென்கிறார்; அவர்கள் பாக்யம்பண்ணினபடியைப் பேசுங்கோளென்றுமாம்.

(பேசுமின்கூசமின்றி) உங்களயோக்யதையைப் பார்த்துக் கூசாதே பேசுங்கோள். தாய் *மயர்வறமதிநல மருளப்பெறச் செய்தேயும், அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த வாஸனையாலே "அருவினையேன்" என்று பேசுகைக்குக் கூசினவித்து, இவர்களுக்கு முண்டென்றிருக்கிறார். பகவத் விஷயத்தைப் பேசும்போது கூசத்தான் வேண்டாவிறே; அப்ராப்தியாலேயிறே பேசாதிருந்தது; ப்ராப்த விஷயமென்றறியவே கூசாதேபேசலாமிறே.

(பெரியநீர்த்யாதி) மிக்கஜலத்தையுடைத்தான கடலாலேசூழப்பட்டு, வாசமேகமழாநிற்குமாய்த்துச்சோலை; சூழப்போந்த சோலையில் பரிமளம் புறம்புபோகாதபடி \ மதிளிட்டாப்போலேயாய்த்திருப்பது கடல். (வாசமேகமழும்) கடலில் நாற்றம் மேலிடாதபடி சோலையில் பரிமளமே விஞ்சியிருக்குமாய்த்து; இப்படிப்பட்ட சோலையையுடைத்தான வயலாலே யலங்க்ருதமான திருவனந்தபுரத்தை. "நேசஞ்செய்துறைகின்றானை - பேசுமின் கூசமின்றி" என்று கீழோடே கூட்டவுமாம்; அப்போது, "நேசஞ்செய்துறைகின்றானை-பூசனை செய்கின்றார்கள் புண்ணியம்செய்தவாறே" என்றது ஆஸ்சர்யத்திலே யாகிறது.

அன்றிக்கே, (பெரியநீர்தொடங்கி) "பூசனை செய்கின்றார்கள் புண்ணியஞ் செய்தவாற்றை - பேசுமின்கூசமின்றி" என்னவுமாம்: அப்போது, கூசமின்றிப் பேசுகையாவதென் னென்னில்; பகவத் விஷயம்போலே வாய்வந்தபடி சொல்லவொண்ணாதிறே பாகவத விஷயம்.

(நேசஞ்செய்துறைகின்றானை) பரமபதத்தில் தவிர வொன்றையாலே யிருக்குமத்தனை; அவ்விடத்தை வாசிகாலியாய்த்து இங்குவர்த்திப்பது; "ஆர்த்தரக்ஷணத்துக் குடலில்லாதவிடமுமொரு வாஸஸ்தாநமாயற்றதோ!" என்று, ஆர்த்தரக்ஷணத்துக்குப் பாங்கானதேசமென்று விரும்பிவர்த்திப்பது இங்கேயாய்த்து; (க) "அயிகம்வை-பாவாவஸா௩-அதிகம்புரவாஸாச்ச" (நெறிமையால் மலர்கள்தூவி) "ஸர்வேஸ்வரன்சேஷி, இவ்வாத்மவஸ்து அவனுக்கு சேஷம்" என்கிற முறைமையாலே, புஷ்பாத்யுபகரணங்களை அவன் திருவடிகளிலே பணிமாறி;

(க) ரா-அயோ-௬௫-௧௨-

அன்றிக்கே, அவன்றான் இத்தேசத்தை ஸ்நேஹித்து வர்த்திக்கிறாப்போலே தாங்களும் ஸ்நேஹத்தையுடையராய் மலர்கள் தூவியென்னுதல்; இவர்கள் வர்த்திக்கிறவிடமென்று அவன் விரும்பிவர்த்தவோபாதி தாங்களுமொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே யாச்ரயித்தென்னவுமாம். (புண்ணியஞ் செய்தவாறே!) *சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி யடிமைசெய்கிறவர்களது மோரடிமையாயற்றதோ! ஸ்ரீபரதாழ்வானைப்போலேயாய்த்து அவர்கள், இளைய பெருமாளைப்போலே யாய்த்திவர்கள். அவன்விட்டுப் போரச்செய்தேயும், பாரதந்த்ர்யத்தாலே விடமாட்டாதே கிடக்கிறார்களித்தனையிறே. (௪)

ஐந்தாம்பாட்டு.

புண்ணியஞ்செய்துநல்ல புனலொடுமலர்கள்தூவி* எண்ணுமினெந்தைநாமமிப் பிறப்பறுக்குமப்பால்* திண்ணமாமதிள்சூழ்ந்த சோலைச் செறிபொழிலனந்தபுரத்து* அண்ணலார்கமலபாத மணுகுவாரமரராவார். (ரு)

ப:—அநந்தரம், திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற நிருபாதிக சேஷியானவன் திருவடியைக் கிட்டினவர்கள் ஸூரிகளாகையறுதி, ஆதலால். ப்ரேமயுக்தராய்க்கொண்டு ஆராதித்து அவன்திருநாமங்களை யநுஸந்தியுங்கோளென்கிறார். (ரு)

(இ - ள்.) புண்ணியம்செய்து - போக்யரூபையான பக்தியைப் பண்ணி, நல்ல-பக்த்யுபஹ்ருதமாகையாலே அவனுக்காதரணீயமான, புனலொடுமலர்கள் - ஜலபுஷ்பாதிகளை, தூவி - ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு ப்ரயோகித்து, எந்தை - உத்பாதகனானவனுடைய, நாமம் - திருநாமங்களை, எண்ணுமின் - நிரந்தராநுஸந்தாநம்பண்ணி யநுபவியுங்கோள், இவ்வநுபவந்தானே, இப்பிறப்பு - த்ருஷ்டதோஷமான விஜ்ஜந்மத்தை, அறுக்கும் - அறும்படிபண்ணும், அப்பால் - மேலும், செறிபொழில் - செறிந்த பொழிலையுடைத்தான, அனந்தபுரத்து - திருவனந்தபுரத்திலே, அண்ணலார்கமலபாதம் - நிருபாதிகஸ்வாமியானவன் திருவடிகளை, அணுகுவார் - உக்தப்ரகாரத்திலே ஸ்நேஹமாகக்கிட்டுமவர்கள், அமரராவார் - *அயர்வறுமமரர்களில் அந்யதமராவர்கள். இவர்த்தத்

தை, நாம்-அபிஜ்ஞரான நாங்கள், திண்ணம்-த்ருடமாக, அறியச்சொன்னோம் - சொன்னோம். (ரு)

ஆறு :—(புண்ணியஞ்செய்து) நீங்களும் மங்களமான புண்ணிய ரூபமான திருநாமத்தைச் சொல்லி நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகராய்த் திருவனந்தபுரத்திலேபோய்ப்புக்கு பாஹ்யாந்தர ஸர்வகரணங்களாலும் எம்பெருமானுக்கு அடிமைசெய்யுங்கோள்; அவனுங்களுடைய விந்த ஸம்ஸாரத்தைப் போக்கும், இப்போது தன் திருவடிகளை ஆஸ்ரயிக்கிற வுங்களைப் பின்னை யமரராக்கும், இது நிஸ்சிதம், உமக்குத் தெரியச்சொன்னோ மென்கிறார். (ரு)

ஈடு - அவ ;—திருவனந்தபுரத்தி லாஸ்ரயிக்குமவர்கள் நித்ய ஸூரிகளானவர்கள்; ஆகையாலே, அங்கே நீங்களும் ஆஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

(புண்ணியஞ்செய்து) ஸ்நேஹத்தைப்பண்ணி, த்யாகம் வர்ணாஸ்ரமதர்மங்களை இதிகர்த்தவ்யதையாக வுடைத்தாயிருக்குமிறே; ஆக, ஸத்கர்மபலமான பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. (க) "மந்மநா பவ மத்பக்தோ" என்னக்கடவதிறே. (நல்லபுனலோடு மலர்கள்தூவி) நல்ல புனலோடே நல்ல மலர்களை, ப்ரேமபரவசராய்க்கொண்டு பணிமாறி. இத்தால் - அர்ச்சநாதிகளைச் சொல்லுகிறது. (க) "மத்யாஜீ மாம் நமஸ்குரு" என்னக்கடவதிறே.

(எண்ணுமின்) (உ) "ஸததம் கீர்த்தயந்தோ [illegible] யந்த:" என்கின்றதிறே (எந்தைநாமம்) இடறினவன் 'அம்மே' என்னுமாபோலே, திருநாமம் சொல்லும்போது ஒரு அதிகாரிஸம்பத்தி தேடவேண்டா. ஜீயர் பட்டரை "திருநாமம் சொல்லும்போது ப்ரயதனாய்க்கொண்டு சொல்லவேணுமோ" என்றுகேட்க, "கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொரு உவட்டுக்குழியிலே முழுகிப்போகவேணுமோ" மேலுண்டான நன்மையைத் தருகிறவிது அதிகாரிஸம்பத்தியைப் பாராதே" என்று அருளிச்செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியேயாய்த்து வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்.

(க) கீதை-கூ-ஙச- (உ) கீதை-கூ-கச-

(இப்பிறப்பறுக்கும்) கண்டதிறே இதினுடைய விழைவீடு. கவிழ்ந்துபார்க்கவமையுமே இதினுடைய வகவானை; தன்னையே விரக்கிபிறக்குமே. இப்படி ப்ரத்யக்ஷிக்கச்செய்தேயும் கார்யகரமாகா திருக்கிறதிறே வாஸனையின்கனம்.

ஒருசெட்டியை "இவன் தமிழுக்குதேசிகனாயிருக்கும்" என்று பட்டருக்குக் காட்டினார்களாய்; "உனக்கேதேனும் ஸம்சயமுண்டாகில் கேட்கலாகாதோ" என்ன; "சிலர் 'காண்கிறதேஹத்துக்கவ்வருகு ஆத்மாவுமில்லை, தர்மாதர்மங்களுமில்லை, ஈச்வரனுமில்லை;' என்றிராநின்றார்கள், சிலர் 'இத்தேஹந்தான் அஸ்திரம்' என்று இதின்தோஷத்தை தர்சித்து 'அவ்வருகே ஸ்திரமாயிருப்பதொன்றைப் பற்றவேணும்' என்றிராநின்றார்கள், விஷயமொன்றாயிருக்க இவ்விரண்டு படியாற்றமும் நடக்கிறபடியெங்ஙனே?", என்ன; (க) 'தைவீஹ்யேஷா குணமயீ-மமமாயாதுரத்யயா" என்றும் "மாமேவ யே ப்ரபத்யந்தே-மாயாமேதாந்தரந்திதே" என்றும் சொல்லுகிறபடியே, பாக்யவான்களுக்கு இதினுடைய தோஷதர்சனத்தைப் பண்ணிக் கழித்துக்கொள்ளுகைக்கும், பாக்யஹீனர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கு முடலாம்படி கர்மாநுகுணமாக இத்தை இடையெடுத்துக்காணும் ஈச்வரன்பண்ணிற்று" என்றருளிச்செய்தார்.

(உ) [இதுகண்டாய்] என்னும்படியாயிருக்குமிறே-நாம் நன்றாக நினைத்திருக்கும் நல்ல விசித்ராகாரம், ஈச்வரன், வெளிச்சிறப்பைப் பிறப்பிக்க "இது அல்பம், அஸ்திரம்" என்றறிந்தவிதுவே கிடாயிதுக்கு நிலைநின்ற ஸ்வபாவம். (இப்பிறப்பறுக்கும்) இப்படி ஹேயதயா ஜ்ஞாதவ்யமான விசித்ரதேஹ ஸம்பந்தத்தை யறுக்கும்.

(செறிபொழிலித்யாதி) செறிந்த சோலையையுடைத்தான திருவனந்தபுரத்திலேவந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளைக் கிட்டுமவர்கள். (அப்பால் = அமரராவார்) "இப்பிறப்பறுக்கும்" என்ன வேண்டாத தேஹத்தைப் பரிஹரிக்கத் தேடுகைசெய்கிறவர்களும், திருவனந்தபுரத்துக் கண்வளர்ந்தருளுகிறவன் திருவடிகளை யாச்ரயித்தவர்கள். ஆக, இத்தால்-விரோதியைப் போக்குமளவே யன்றியே உத்தேஸ்யத்

(க) கீதை ௭-௧௪. (உ) உ-திருவ-௯௯.

தைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே ஆஸ்ரயணீயஸ்தலமென்கிறது. (திண்ணம்) நிஸ்சிதம். (நாமுமியச்சொன்னோம்) அவனாலே * மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாபிமாநிகளான நீங்களுமறியும்படி உங்களர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம். (ரு)

ஆறும்பாட்டு.

அமரராய்த்திரிகின்றார்கட் காதிசேரனந்தபுரத்து * அமரர்கோனர்ச்சிக்கின்றங் ககப்பணிசெய்வர்விண்ணோர் * நமர்களோசொல்லக்கேண்மின நாமும்போய்நணுகவேண்டும்* குமரனார்தாதைதுன் பந் துடைத்தகோவிந்தனாரே. (சு)

ப:— அநந்தரம், ஸர்வதேவநிர்வாஹகன் வர்த்திக்கிற திருவனந்தபுரத்திலே ஸூரிகளாராதியாநிற்பர்கள்; நாமும்போய்க் கிட்டவேணுமென்கிறார். (சு)

(இ-ள்) குமரனார்தாதை-ஸுப்ரஹ்மண்யனுக்குத்தாதகனான ருத்ரனுடைய, துன்பம்துடைத்த-பாதகதுக்கத்தைப்போக்கின, கோவிந்தனார்-க்ருஷ்ணனாய், அமரராய்-மற்றும் தேவர்களாய், திரிகின்றார்கட்கு-திரிகிறவர்களுக்கும், ஆதி-உத்பாதகனானவன்; சேர்-கண்வளர்ந்தருளுகிற, அனந்தபுரத்து-திருவனந்தபுரத்திலே, அமரர்கோன்-ஸேனைமுதலியார் அர்ச்சிக்கின்று-ஆராதிக்கிறவிடத்துக்கு, அங்கு-அத்தேசத்திலேவந்து, அகப்பணிசெய்வர்-அந்தரங்கவ்ருத்திபண்ணி எடுத்துக்கைகொட்டுவார். விண்ணோர்-பரமபதவாஸிகளாயிருக்கும், நமர்களோ-நம்முடையவர்களானவர்களே, சொல்லக்கேண்மின்-சொல்லக்கேளுங்கோள். நாமும்-நாமும், போய்-அவர்களோடேபோய், நணுகவேண்டும்-கிட்டவேணும்.

ஆறு:-(அமரராய்) திருநாட்டிலேபோய் பரிமாறுமத்தடிமைசெய்கையன்றோ ப்ராப்யமென்னில்; அங்குள்ளாரும் திருவனந்தபுரத்திலே வந்தன்றோ வடிமைசெய்கிறது. ஆதலால், இங்கேயடிமைசெய்யுமதுவே ப்ராப்யம், ஆனபின்பு, நாமும்போய் அடிமை செய்யவேணுமென்கிறார். (சு)

ஈடு - அவ;—நித்யஸூரிகளும் வந்தடிமைசெய்கிறது இங்கேயாகையாலே திருவனந்தபுரமே பரமப்ராப்யம், அங்கே நாமுமடிமை செய்யவேணுமென்கிறார்.

(அமரராய்த்திரிகின்றார்கட்கு) பாம்பழத்தோடொரு ஸம்பந்தமில்லாத தொன்றுக்கு மாம்பழவுண்ணியென்று பேராயிருக்குமா போலே; இக்கரையராய், இவ்வருகுள்ளாரிற்காட்டில் நாலுநாளேழ ஜீவித்திருந்து சாகிற இவ்வளவையேகொண்டு, தங்களுடையவாயுஸ்ஸாக்கோரவஸாந முண்டாயிருக்கச்செய்தே அதில்லாதாரைப் போலே அபிமாநம் பண்ணிக்கொண்டு திரிவர்களாய்த்து. (திரிகின்றார்) பந்தகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரிவார்களாய்த்து. இவனளவல்லவிறே அவர்களுக்கு; விடுபோதொரு தேஹமாத்ரமாகல், ஒருஸ்த்ரீயாதலாயிருக்குமிவனுக்கு; ப்ரஹ்மாவுக்கு அண்டமித்தனையும் விட்டுவேண்டி வருமிறே.

(ஆதிசேரனந்தபுரத்து) இவர்களுக்குமவர்களுக்குமவன்பக்கல் ஸாம்யம் காரணத்வத்திலேயாய்த்து. அவர்களுக்கு, ஸத்தையை நிர்வஹித்துக் கொடுக்கும்; இவர்களுக்கு, தேஹத்தையு மாத்மாவையும் சேர்த்து இத்தேஹம் க்ஷணந்தோறும் நசிக்க உண்டாக்கி நடத்திக்கொடுக்கும்; ஜகத்காரணபூதனானவன் வந்து நித்யவாஸம் பண்ணுகிற திருவனந்தபுரத்து. (அமரர்கோனித்யாதி) ஸ்ரீஸேநாபதியாழ்வான் நித்யகைங்கர்யம் பண்ணுகிறான், நித்யஸூரிகளெடுத்துக் கைநீட்டுவார்.

(நமர்களோ சொல்லக்கேண்மின்) (௧) "வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்" என்று சொன்னதுக்குள்ளே யடங்கும்படியென்னோடே நிருபாதிக ஸம்பந்தமுடையாரடங்க நான் சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள். பந்துக்களாயிருப்பார்க்கு நல்வார்த்தை சொல்லவேணுமிறே (நாமும்) அடிமையிலே ருசியுடைய நாமும், நித்யஸூரிகளோடொரு கோவையாய்ச் சென்றுகிட்டி யடிமைசெய்யவேணும். (போய்நணுகவேண்டும்) இங்கேயிருந்து மநோரதிக்குமளவுபோராது, போய்ப்புகவேணும்.

அவர்கள் கீழே ஸம்ஸாரிகளான நமக்குக் கிட்டவொண்ணுமோவென்னில் (தமரனுரீத்யாதி) தேவஸேநாபதியாய் ப்ரபலனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்கு பாதகத்தால் வந்த துக்கத்தைப் போக்கின க்ருஷ்ணனை; தேவர்களு மஸுரர்களும் கூட்டிப்பாடையா யெதிரிட்டு வருமன்றும், அவர்களாபந்நானால்

(௧) ௩-௩-௧-

அவர்களாபத்தைப்போக்கி ரக்ஷிக்குமவனாய்த்தவன்; ஆனபின்பு, நமக்கத்தேசத்தை ப்ராபிக்கைக்கோ ரருமைப்படவேணுமோ. தார்மாதிகளுக்கும் து:கநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்குமவன், அபிமாநஶூந்யரான நமக்குத் தன்னைக் கிட்டுகையி லருமைப்படுத்துமோ. ருத்ராதிகளுக்கு து:கநிவர்த்தகனாயிருக்கும்; பசுக்களுக்கு மிடையர்க்கும் கையாளாயிருக்கும். [கோவிந்தனாரை-நாமும்போய் நணுகவேண்டும்.] (௬)

ஏழாம்பாட்டு.

துடைத்தகோவிந்தனாரே யுலகுயிர்தேவுமற்றும் * படைத்த வெம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளிகொண்டான் * மடைத்தலை வாளைபாயும் வயலணியனந்தபுரம் * கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாமே. (௭)

ப:— அநந்தரம் ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதி யுக்தனான ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற திருவனந்தபுரத்திலே யடிமைசெய்யப்பெற்றால், ப்ராப்யாலாப நிபந்தநமான க்லேஶத்தைப் போக்கலாமென்கிறார். (௭)

(இ-ள்.) உலகு-லோகங்களையும். உயிர்-மநுஷ்யாதிகளான ப்ராணிகளையும், தேவும்-தேவதைகளையும், மற்றும்-மற்றும் மஹதாதிபதார்த்தங்களையும், துடைத்த-ஒன்றொழியாமல் படைத்துஸம்ஹரித்தவனாய கோவிந்தனாரே (க) "தஃஸோஹோ தேவவணகீஶக்தி - தம:பரே தேவ ஏகீபவதி" என்கிறபடியே அவ்வவஸ்தையில் த்யோதமான விக்ரஹயுக்தனாகையாலே கோவிந்தஶப்த வாச்யனானவன்தானே. ஸம்ஹ்ருதமான வந்த ஸகலபதார்த்தங்களையும், படைத்த-உத்பாதித்தவனாய், எம்-இக்காரணத்வத்தை நமக்குப்ரகாசிப்பித்த, பரமமூர்த்தி-ஸர்வாதிக சேஷியாய், ஸ்ருஷ்டஜகத்ரக்ஷணார்த்தமாக, பாம்பணை-திருவரவணையிலே, பள்ளிகொண்டான்-கண்வளர்ந்தருளுகிறவனுடையதாய், ஜலஸம்ருத்தியாலே, மடைத்தலை-மடைத்தலைகளிலே. வாளை-வாளைபாயும்-களித்துப்பாயும், வயல்-வயலை, அணி-அலங்காரமாகவுடைய, அனந்தபுரம்-திருவனந்தபுரத்திலே, கடைத்தலை-திருவாசலிலே, சீய்க்கப்பெற்றால்-ஸம்மார்ஜநப்ரமுகசேவாவ்ருத்திகளைப் பண்ணப்பெற்றால்,

(க) ஸுபால ௯-௨-

கடுவினை - கைங்கர்யாலாபநிபந்தநமான அதிசயிததுஃகத்தை, களையலாம்-போக்கலாம்.

கோவிந்தனென்றது - (௧) ''க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: - க்ருஷ்ணஏவஹிலோகாநா முத்பத்திரபிசாப்யய:'' என்று க்ருஷ்ணனைச் சொல்லிற்றாகவுமாம். (௭)

ஆறு: (துடைத்த) ஆஸ்ரிததுஃகாபநோதந ஸ்வபாவனுய், ஸர்வகாரணமாகையாலே ஸர்வேஸ்வரனுன வெம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென் றடிமைசெய்யப்பெறில், நம்முடைய துஃகமெல்லாம்போம், அடிமைசெய்யப்போருங்கோளென்கிருர். (௭)

ஈடு - அவ :— ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலேசென் றடிமைசெய்யப்பெறில், ஒருதேசவிசேஷத்தே சென் றடிமைசெய்யப்பெற்றிலோமென்னும் துஃகம்போமென்கிருர்.

(துடைத்தகோவிந்தனுரேயித்யாதி) துடைக்கை-ஸம்ஹரிக்கை, அப்யயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டி யிருப்பது (௧) "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம்-க்ருஷ்ணஏவஹிலோகாநாம்" (௨) "வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே" (உலகுயிரித்யாதி) லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான வாத்மாக்களையு முண்டாக்கின. இவை யதிப்ரவ்ருத்தமான வன்று ஸம்ஹரித்து, பின்னை புருஷார்த்தோப யோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. (எம் பரமமூர்த்தி) ஆஸ்ரிதபவ்யனுன ஸர்வேஸ்வரன்.

(பாம்பணைப் பள்ளிகோண்டான்) ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனுடைய, (மடைத்தலையித்யாதி) ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலேகளித்து வாளைகள்பாயாநின்றுள்ள வயலாலே யலங்க்ருதமான தேசத்திலே, முக்தர் ஸாமகாநம்பண்ணிக் களித்து வர்த்திக்குமாபோலே யாய்த்து அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திப்பது.

(கடைத்தலை சீய்க்கப்பெற்ருல்) திருவாசலிலே திருவலகு திருப்பணிசெய்யப்பெற்ருல், (கடுவினைகளையலாமே) அடிமைசெய்

---

(௧) பார-ஸபா-நஅ ௨௫- (௨) பெரியா-தி-௧-௨-௬

யப்பெருமையாலுண்டான க்லேசமெல்லாம் போம். மேஹஷத்வ ஜ்ஞா நம் பிறந்தால், ஸ்வாபாவிகமான வ்ருத்தி பெருமையால் வரும் க்லேசம் ப்ராயஸ்சித்தத்தால் போக்குமதன்றே. (எ)

எட்டாம்பாட்டு.

கடுவினைகளையலாகுங் காமனைப்பயந்தகாளை * இடவகை கொண்டதென்ப ரெழிலணியனந்தபுரம் * படமுடையரவிற்பள்ளி பயின்றவன்பாதங்காண * நடமினோநமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம். (அ)

ப:—அநந்தரம், நிரதிசயபோக்யமான திருவனந்தபுரத்திலே கண் வளர்ந்தருளுகிற பரமப்ராப்யபூதன் திருவடிகளை யநுபவிக்கைக்கு நம் முடையாராயுள்ளாரெல்லாரும் நடக்கும்படி பாருங்கோளென்கிறார்.

(இ-ள்) கடுவினை - ப்ராப்திவிளம்ப ஹேதுக்களாயுள்ள க்ரூர மான பாபங்களை, களையலாகும் - போக்கலாம், காமனை - அழகுக்கு ப்ரவித்தனான காமனை, பயந்த - உத்பாதித்தவனாய், காளை - ஆவ்வள விலும் யௌவநங்குலையாத க்ருஷ்ணனானவன், இடவகை - இடமாக, கொண்டது - கொண்டது, எழில் - அழகை, அணி - அணிந்த, அனந்த புரம் - திருவனந்தபுரம், என்பர் - என்று சொல்லாநிற்பர் அங்கே, படமுடை - ஸ்வஸ்பர்ஶத்தாலே விரிகிறபணங்களையுடைய, அரவில் - திருவரவணையிலே, பள்ளி - கண்வளர்ந்தருளுகையிலே, பயின்றவன் - மிகவும் செறிந்தவனுடைய, பாதம் - திருவடிகளை, காண - கண்டநுப விக்கைக்கு, நமர்களுள்ளீர் - நம்முடையராயுள்ளார், நடமினோ - நடவுங்கோள், அறிவிப்பார்குறையாயிராதே, நாம் - விஷயவைலக்ஷண்யமறிந் தநாங்கள், உமக்கு - உங்களுக்கு, அறிய - அறியும்படி, சொன்னோம் - சொன்னோம். (அ)

ஆறு:—(கடுவினை) ஸௌந்தர்ய லாவண்ய யௌவநாதி கல் யாணகுணநிதியான எம்பெருமான் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷமாய்க் காட்சி கொண்டிருக்கிற திருநகரி - திருவனந்தபுரம் என்று சொல்லா நின்றார்கள், நாமும் அங்கே கண்வளர்ந்தருளுகிற எம்பெருமான் திருவடி களைக் காணப்போவோம், இவ்வர்த்தத்தை கேசவ நாமத்தை யாலே விழுக்கலாகாதென்று உங்களுக்கறிவித்தோமென்கிறார். (அ)

ஈடு - அவ;—திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோளென்று, அநுகூலரை யழைக்கிறார்.

(கடுவினைகளையலாகும்) நம்மால்போக்கவரிதான பாபங்களையும் போக்கலாம். (காமனைப்பயந்தகாளை) உங்களுக்கு நானுபதேசிக்க வேண்டுவது அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்குமளவுமே! நாட்டைத் தன்னழகாலே வெருட்டித் திரிகிற காமனுக்கு முத்பாதகனாயிருக்கும். இருவரையும் கூடக்கண்டால் "முறைகெடச் சொன்னார்கள்" என்றிருக்கும். (௧) "யுவ ஈஜெஷயௌவநஶ்ரீ-ப்ரஸமாநந்தஞ்சயௌவநம்" என்கிறதும், இவ்விஷயத்திலே மற்றைப்படியாயிருக்கிறதுகாணும்.

(இடவகைகொண்டதென்பர்) இவ்விடத்தை வாஸஸ்தாநமாகக்கொண்டதென்று, அறிவுடையாரடங்கச் செவிசீப்பாய்ந்து கிடப்பர்கள்; (௨) 'ஷநாஶம்விக்ஷ-வல்-யா:-பத்மநாபம் விதுர்புதா:" (எழிலணியனந்தபுரம்) பரமபதத்திலொருபுதுமைசெய்யவொண்ணுகிறே! அங்குத்தையிற்காட்டில் இங்குத்தைக்குத் தன்னேற்றமிருக்கிறபடி.

(படமுடையரவில்) ஸர்வேஶ்வரன்சாய்ந்தருளினால் அவனுக்குப் பிறக்கும் விகாஸம்சொல்லுகிறது - படமுடையரவென்று, (பள்ளிபயின்றவன்) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞமானவஸ்துவும் உணர்த்தியறும்படியாய்த் துய்ப்படுக்கைவாய்ப்பு. (பாதமித்யாதி) திருவடிகளைக் காணும்படியாக "வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற கரியான் கழல்காணக் கருதுங்கருத்து" என்றிருக்குமென்னோடொருகுடற்றுடக்குடையாரடங்கலும் போகப்பாருங்கோள்.

திருவத்யயநம் பாடாநிற்க, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார் "நமக்காழ்வாரோடே யொருஸம்பந்த முண்டாகவேணும்" என்று, அப்போதே ஶ்ரீபாதத்தையுடையாரைக் கூட்டிக்கொண்டெழுந்தருளினார் (நாம்) கண்வளர்ந்தருளுகிறவழகில் சுவடறிந்து. "யமேவைஷ வ்ருணுதே-ஏபவையாளுபபரப:" என்னக்கடவதாம். (உமக்கு) அவ்வழகைக் காணவேணுமென்கிற அபேக்ஷையுடைய வுங்களுக் கறியும்படி சொன்னோம். (அ)

(௧) (௨)

ஒன்பதாம்பாட்டு.

நாமுமக்கறியச்சொன்ன நாள்களு நணியவான * சேமநன் குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம் * தூமநல்விரைமலர்கள் ¶ துவளற வாய்ந்துகொண்டு* வாமனனடிக்கென்றேத்த மாய்ந் தறும் வினைகள்தாமே. (கூ)

ப:—அநந்தரம், ப்ராப்தனானவன் திருவடிகளிலே கைங்கர்யத்தைப் பண்ண, கைங்கர்ய ப்ரதிபந்தகங்கள் தாமே போமென்கிறார் (கூ)

(இ-ள்) "வைத்தநாள்வரை" என்று, நாம்-நாம். முன்பு, உமக்கு-உங்களுக்கு அறிய, சொன்ன-சொன்ன, நாள்களும்-ஶரீராவஸாந திவஸங்களும், நணியவான-நண்ணியவாய்த்தின; செறிபொழில்-செறிந்தபொழிலையுடைத்தான, அனந்தபுரம்-திருவனந்தபுரமானது, நன்கு-நன்றான, சேமம்-ரக்ஷையை, உடைத்துக்கண்டீர்-உடைத்துக்கிடிகோள், ஆனபின்பு, அங்கே, தூமம்-ஆராதநோபகரணமான தூபத்தையும், நல்-நன்றான, விரை-பரிமளத்தையுடைத்தான, மலர்கள்-புஷ்பங்களையும், துகளற-குற்றமற, ஆய்ந்துகொண்டு-ஆய்ந்துகொண்டு, வாமனனடிக்கென்று-ஆஶ்ரிதஸம்ரக்ஷணஸ்வபாவனான ஸ்ரீவாமனன் திருவடிகளுக்கென்று ஸங்கல்பித்து, ஏத்த-தத்கைங்கர்யார்த்தமாக அவனுடைய ஶீலாதிகுணங்களை ஸ்துதிக்க, வினைகள்-கைங்கர்யப்ரதிபந்தககர்மங்கள், தாமே-ஸ்வயமேவ, மாய்ந்தறும்-நசித்துப்போம்.

தூபமென்றும் பாடம் சொல்லுவர்கள். (கூ)

ஆறு:—(நாமுமக்கு) சேமநன்குடைத்தான திருவனந்தபுரத்திலேசென்று பெருமானுக் கடிமைசெய்ய உங்களுடைய துக்கங்களெல்லாம் தாமே போம்; ஆனபின்பு, அடிமைக்கு [illegible] மான விப்ராக்ருதி [illegible] செய்யுங்கோள், நாமுமக்கறியச் சொன்னோமென்கிறார், (கூ)

ஈடு-அவ;—ஶரீராவஸாநமணித்தாய்த்து, சென்றடைந்த திருவனந்தபுரத்திலேபுக அடிமைசெய்ய தாஸ்யவிரோதிகளானவைகள் தாமே நசிக்குமென்கிறார்.

(நாமுமக்கித்யாதி) "நாமோலறிவோம்" என்றும் "[illegible]றல்" என்றும் சொல்லிப்போந்த நாள்களும் [illegible].

¶ "துகளற" என்று பாடாந்தரம்.

பிறர்க்கப்படி தாம் சொன்னாரோவென்னில்; * மாலைநண்ணியிலே "மரணமானால்" என்று ஈஶ்வராபிப்ராயத்தைத்தாமறிந்து, அத்தைப் பிறர்க்குபதேசித்தாரிறே. இதுவும் பரோபதேசமிறே.

(க) [தஸ்மிந்நஸ்தமிதே-தஸ்மிந்நஸ்தமிதே] இத்யாதி; "பீஷ்மன் முடியாநின்றான், பின்னை இவ்வர்த்தம் கேட்கலாவாரில்லை" என்று அவனருளிச்செய்த வார்த்தையை, இப்போதிவர்தாமருளிச்செய்கிறார். [அஸ்தமிதே-அஸ்தமிதே] கண்ணுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணுவாரும், நெஞ்சுக்கு வெளிச்சிறப்பை பண்ணுவாருமாக, ஆதித்யர்களிருவராய்த்து; (௨) "ஞானமாகிநாயிறுகி" [ஜ்ஞாநாந்யுஹ்ஷிஷ்யந்தி-ஜ்ஞாநாந்யபலீபவிஷ்யந்தி] ஸ்வரூபத்தோபாதி நித்யமாயிருக்குமிறே தர்மபூதஜ்ஞானமும்; இனி இதுக்கு உதயாஸ்தமய வ்யவஹாரம் ஜ்ஞாநப்ரஸரத்வாரத்தை யபேக்ஷித்ததாயிருக்குமிறே. அவன் போனால் பின்னைக்கொள்வாரும் கொடுப்பாருமின்றிக்கே பரிமாற்றமறும். இதுக்குபட்டரருளிச் செய்ததாக, பிள்ளைப்பர் - "ஒருமதிப்பன் தலையில்கிடவாதவன்று கொள்வார் கொடுப்பாரின்றியே வெளியிலேபறைப்போம்." [தஸ்மாத்தாம வோடியா ஹ்ய- தஸ்மாத்த்வாம்சோதயாம்யஹம்] ஆகையாலே காணுமவனை த்வரிப்பித்து "அவன்பக்கலிலேபோய்க்கேள்" என்று சொல்லுகிறது.

(சேமநன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம்) நிரதிஶயபோக்யமான தேசந்தானே மரணதசைக்கு ரக்ஷகமாம். (தூமநல்விரைமலர்கள்) நன்றான தூபம், பரிமளத்தையுடைத்தான நல்ல புஷ்பங்கள். இவற்றை, (துகளறவித்யாதி) தனக்கு மனனுக்கும் ஸங்கோசமாய். விலக்ஷணமாக்கிக்கொண்டு, (வாமனனித்யாதி) தன்னுடைமை பெறுகைக்குத் தானிரப்பாளனாயிருக்குமவன் திருவடிகளுக்கென்றிறக்க, (மாய்ந்தறும்வினைகள்தாமே) இவன் தன் ஸ்வரூபத்துக்கநுரூபமான பரிமாற்றத்திலே யந்வயிக்க விரோதிகளடையநசித்துப்போம். (௬)

(க) பாரத-ஆநு- (௨) தி-ச-வி ௧௧௨-

பத்தாம்பாட்டு.

மாய்ந்தறும்வினைகள்தாமே மாதவாவென்ன* நாளு மேய்ந்த பொன்மதிளனந்தபுரநகரெந்தைக்கென்று * சாந்தொடுவிளக்கம் தூபம் தாமரைமலர்கள்நல்ல * ஆய்ந்துகொண்டேத்தவல்லா ரந்தமில் புகழினாரே. (௧௦)

ப:—அநந்தரம், திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற ஸ்வாமி திருவடிகளிலே ஆராதநரூப கைங்கர்யம்பண்ணுமவர்கள், அநவதிகமாஹாத்ம்ய யுக்தராவாரென்கிறார். (௧௦)

(இ-ள்.) மாதவாவென்ன-ஸ்ரியப்பதியென்று சொன்னபோதே, வினைகள் - விரோதிகள். தாமே - ஸ்வயமேவ, மாய்ந்தறும் - நசிக்கும்; நாளும் - நிரந்தரமாக. ஏய்ந்த - செறிந்த. பொன்மதிள் பொன்மதிளை யுடைத்தாயிருக்கிற. அனந்தபுரநகர் - திருவனந்தபுரமாகிற நகரத்தில், எந்தைக்கு - ஸ்வாமியானவனுக்கு என்று-என்றுஸங்கல்பித்து நல்ல-நன்றான, சாந்தொடு - அங்கராகத்தோடே. விளக்கம் - தீபத்தையும், தூபம் - தூபத்தையும். தாமரைமலர்கள் - தாமரைப்பூக்களையும். ஆய்ந்துகொண்டு - பலஸங்ககர்த்ருத்வங்களாகிற தூசும் மயிரும் புழுவும் படாதபடி ஆராய்ந்துகொண்டு. ஏத்தவல்லார் - அங்கீகாரஸந்துஷ்டரா யேத்தவல்லவர்கள், அந்தமில் - நிரவதிகமான, புகழினார் - சேஷத்வப்ரதையை யுடையராவர். (௧௦)

ஆறு;-(மாய்ந்தறும்) அவன் திருநாமங்களிலே யேதேனுமொரு திருநாமத்தைச்சொல்ல, அடிமைசெய்கைக்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் தானே போமென்று சொல்லி முடித்து, திருவனந்தபுரத்திலேபோய் எம்பெருமானுக்கு அடிமைசெய்யும் மஹாத்மாக்களாவீர் தாம்; என்றுகொண்டு, அவர்களைக் கொண்டாடுகிறார். (௧௦)

ஈடு-அவ ;—திருவனந்தபுரத்திலே புக்கு அடிமைசெய்கிறவர்கள் பெருமை பேச நிலமன்றென்கிறார்.

(மாய்ந்தறும்வினைகள்தாமே மாதவாவென்ன) மாதாபிதாக்கள் பேரைச்சொல்ல அநாதிகாலார்ஜிதமான து:க்கங்கள் தானே போம். (மாதவாவென்ன - மாய்ந்தறும்வினைகள்) அப்பாவென்ன உச்சி குளிருங்காணும்.

(ஏய்ந்தவித்யாதி) அங்குத்தைக் கீடான பொன்மதிளையுடைய திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிறவென் ஸ்வாமிக்கென்று புஷ்பாத்யுபகரணங்களைக்கொண் டாச்ரயிக்கவல்லார். (அந்தமில்புகழினரே) "அமரராவார்" என்கிறவளவன்றிக்கே * விண்ணுளாரிலும் சீரியராவார். (௧0)

பதினொன்றாம்பாட்டு.

அந்தமில்புகழனந்தபுரநகராதிதன்னை * கோந்தலர்பொழில் குருகூர்மாறன்சொல்லாயிரத்துள் * ஐந்தினோடைந்தும்வல்லாரணைவர்போயமருலகில் * பைந்தொடிமடந்தையர்தம் வேய்மருதோளிணையே. (௧௧)

ப :—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, பரமபதத்தில் * மதிமுகமடந்தையராலுண்டான ப்ரஹ்மாலங்கார ப்ராப்தியை யருளிச் செய்கிறார். (௧௧)

(இ - ள்) அந்தமில்புகழ் - நிரவதிக குணனாய்க்கொண்டு, அனந்தபுரநகர் - திருவனந்தபுரத்திலேவர்த்திக்கிற, ஆதிதன்னை - ஸர்வகாரணபூதனை, கொந்து - பூங்கொத்துக்கள், அலர் - அலருகிற, பொழில் - பொழில்சூழ்ந்த குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, மாறன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளும் ஐந்தினொடு - கேவலம் பரோபதேசமான ஐந்தினோடேகூட, ஐந்தும் - தம்மையும் கூட்டிக்கொண் டுபதேசித்த ஐந்தையும், வல்லார் அப்யஸிக்கவல்லவர்கள், போய் - அர்ச்சிராதி மார்க்கத்தாலேபோய், அமருலகில் - * அயர்வறுமமரர்களினுடைய லோகமான பரமபதத்திலே, பைந்தொடி - அழகியஹஸ்தாபரணங்களையுடையரான, மடந்தையர்தம் - திவ்யாப்ஸரஸ்ஸுக்களினுடைய, வேய்மரு-வேய்போலே விலக்ஷணமான, தோளிணை - தோள்களாலே செய்யப்படுமதான ப்ரஹ்மாலங்காரத்தை, அணைவர் - அணையப்பெறுவர். (௧௧)

தொடி - வளை. இது கலிவிருத்தம்.

ஆறு;—(அந்தமில்) ப்ரியதமர்களுக்கு ப்ரியதமைகள் போக்யமானாற்போலே, திருநாட்டிலுள்ளார்க்கும் இத்திருவாய்மொழி வல்லார் போக்யமாவா ரென்கிறார். (௧௧)

ஈடு-அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக்யராவரென்கிறார்.

(அந்தமிலித்யாதி) திருவனந்தபுரத்திலே நிரவதிக குணனாய் ஜகத்காரணபூதனானவனை, ஆஶ்ரயிக்கிறவர்களும் அந்தமில் புகழினார்; ஆஶ்ரயணீயனும் அந்தமில்புகழினன்காணும். பரமபதத்தை விட்டுத் திருவனந்தபுரத்திலேவந்து ஆஶ்ரிதர்க்காகக் கண்வளர்ந்தருளுகையாலே புகழுக் கொருமுடிவில்லையாய்த்து அவனுக்கு; ஸம்ஸாரத்தைவிட்டு உகந்தருளின நிலத்திலே அடிமைசெய்கையாலே புகழுக்கந்தமில்லையாய்த்திவர்களுக்கு, இவனை யடிமைகொள்ளுகையாலே புகழுக்கெல்லையில்லையாய்த்தவனுக்கு; அவனுக்கடிமைசெய்கையாலே புகழுக் கந்தமில்லையாய்த்திவர்களுக்கு. ஸம்ஸாரத்திலேயிருந்தா லிவர்களுக்குப் புகழுண்டாகிலாய்த்துப் பரமபதத்திலிருந்தாலவனுக்குப் புகழுண்டாவது - இந்நிலத்தை விடவிட இவனுக்குப் புகழுண்டாமாபோலே அந்நிலத்தை விடவிட அவனுக்குப் புகழுண்டாம். இருவர்க்கு மிரண்டும் அலப்யலாபமிறே.

(கொந்தலர்பொழில்குருகூரித்யாதி) திவ்யவஸந்தமான திருநகரியையுடைய வாழ்வாராருளிச்செய்த, (ஐந்திறைந்தும்வல்லார்) ரத்நங்களை முகமறிந்து கோத்துச் சேர்த்திகைக் கொண்டாடுமாபோலே, ஐயைந்தாகவாய்த் தநுபவிக்கிறது. (அணைவரித்யாதி) ஸ்ரீவைகுண்டத்தேறப்போய், (௧) "ஶதஞ் சூர்ணஹஸ்தா: ஶதம்மாலாஹஸ்தா:" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, அலகுத்தை யப்ஸரஸ்ஸுக்களுடைய வாதரத்துக்கு விஷயபூதராவரென்றபடி. "முடியுடைவானவர் முறைமுறை யெதிர்கொள்ள" என்றக்கதாமே "வெய்யந்தேர்களினை யமரர்" என்கிறவிதிற்றாதி வாசியில்லை. "மதிமுகமடந்தைய ரேந்தினர்வந்தே" என்னக்கடவதிறே. (௰௧)

பத்தாம்பத்து இரண்டாந் திருவாய்மொழி முற்றிற்று

---

(௧) கௌஷீதகி-

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

மூன்றாந்திருவாய்மொழி—வேய்மருதோள் - ப்ரவேஸங்கள்.

ஆறு;—(வேய்மருதோள்) இப்படியெம்பெருமானோடு கலந்து பரிமாறிச் செல்லாநிற்கச்செய்தே, இப்ப்ரக்ருதியிலே தாமிருந்த விருப்பைக்கண்டு, "இப்ப்ரக்ருதிஸம்பந்தம் காரணமாக வெம்பெருமான்விடிலோ" என்றுள்ள வதிஸங்கையாலே யவஸந்நராகிறார். வண்டுவரைப் பெருமானோடே கலந்து பரிமாறச்செய்தே பசுமேய்க்கப்போங்காலம் ப்ராப்தமானவாறே "இவனினிப் பசுமேய்க்கப் போகிலோ" என்றுள்ள வதிஸங்கையினாலே அக்கோபிமாரவஸந்நைகளானாப்போலே யவஸந்நராய், அவர்களுடைய பாசுரத்தாலே யலற்றுகிறார்.

திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள், வண்டுவரைப்பெருமானோடேகூட வொழுங்கநுபவித்திருக்கச் செய்தே அவன்பசு மேய்க்கப் போங்காலம் வருமளவில் அவன்போனானாகக் கொண்டு, பிரிந்தார் படும் வ்யஸநமெல்லாம்பட்டு, வ்யஸநத்தையும் பிரிந்தவவன் கொடுமையையும் தோழிமாருக்குச் சொல்லுமாபோலே அவன்றன்னைக் குறித்துச் சொல்லுகிறார்கள். *

ப:—மூன்றாந் திருவாய்மொழியில், கீழே திருவனந்தபுரத்திலே யடிமைசெய்யப்பாரித்தவர், அவிளம்பேந கிட்டப்பெறாமையாலே, அவனுடைய போக்யதையும் ப்ராப்யபாவமும் அடிமைகொள்ளப்பாரித்திருக்கிறபடியும் புதநிஸத்தகாம்படி ஏற்றுதய ஸந்நிஹிதனாயிருக்கச் செய்தேயும். சீக்ரப்ராப்தியில் விச்சையாலே த்வரிக்கும்படியான ஸௌபாக்யாதிஸயத்தை யுடையனாகையாலே, அவனுடைய புண்டரீகாக்ஷத்வத்தையும். ஆஸ்ரிதபவ்யத்வத்தையும், அபிரூபத்வத்தையும், ஆஸ்ரிதரக்ஷகத்வத்தையும், அர்த்தநீய ஸம்ஸ்லேஷைகத்வத்தையும், அசாதஸ்வபாவத்தையும் ரமணீய ஸௌலப்யத்வத்தையும், ஆகர்ஷகாவயவத்வத்தையும். அஸாதாரணநாயகத்வத்தையும், ஆஸ்ரிதஜநபோக்யத்வத்தையுமநுபவித்து, விளம்பம் பொறாமையாலே விஸ்லேஷத்தை அதிசங்கித்து, என்னுடைய நீ பெண்ணை யகலாதொழியவேணுமென்று அபேக்ஷித்து, தமக்குப்பிறந்தவார்த்தியை அவன் ஸந்நிதியிலே விண்ணப்பஞ் செய்தப்ரகாரத்தை; க்ருஷ்ணனோடே ஸம்ஸ்லேஷித்து ப்ரபாதஸமயத்

திலே யவனுடைய பிரிவை ஶங்கித்து அஞ்சினளொருகோபிகை; "ஸந்நிதியில் பாதகங்கள் நலிவுசெய்யாதிருக்கும், என்னை நீ ஆஶ்வஸிப்பித்துக்கொண்டிருக்கவும்வேணும், போனவிடத்திலே ஆஸுரப்ரக்ருதிகள் வரில் என்னுமோ என்றஞ்சாநின்றேன்" என்று, திருவாய்ப்பாடியில் பெண்களெல்லார்க்குமாகச் சமைந்தவனுடைய போக்கை விலக்கின பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு - அவ ;— திருவனந்தபுரத்திலேபுக்குப் பாரித்தபடியே அடிமைசெய்யப் பெறாமையாலே, அதிஶங்கைபண்ணவேண்டும்படியாய்வந்து விழுந்தது.

ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமா யடிமைசெய்யவேணுமென்று பாரித்தார்; பாரித்தபடியே அத்தேசத்திலேபோய்ப் புக்கடிமைசெய்யப்பெற்றிலர். அத்தேசத்திலே அப்போதேபோய்ப் புகப்பெறாமையாலும், பாரித்தபடி யடிமைசெய்யப் பெறாமையாலும், கெஷ்கர் பிரிந்துபோந்த வாஸனையாலும் - அநாதியாய்வருகிற அசித்ஸம்ஸர்க்கத்தை யநுஸந்தித்து அஞ்சினவச்சத்தாலும், ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தை யநுஸந்தித் தஞ்சினபடியாலும், அதாவது சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்து ஸ்ரீபரதாழ்வானுக்கு மறுத்துப்போன ஸ்வாதந்த்ர்யமிறே, இனி ஸர்வேஶ்வரன் தானேவந்து விஷயீகரிக்கைக்கீடான பக்தி தமக்கில்லையென்றிருக்கையாலும், "இன்னும் ப்ரக்ருதியிலேவைத்தில் செய்வதென்" என்னும் பயத்தாலே அவஸந்நராய் தமக்குப் பிறந்த தசாவிசேஷத்தை பொருபிராட்டி பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

பயநிவ்ருத்திக்குடலான விருகாரணங்களிறே [illegible] இவர்க்கு பயஹேதுவாகிறது; இப்போதே அந்தேசத்திலே [illegible] றிலோமென்றிருக்கவேண்டா, அவனை யநுஸந்தித்தால (க) "[illegible] ழும்நெஞ்சழியும்" என்று பக்திபாரவஶ்யத்தாலே இப்போது [illegible] மாட்டாதொழிகிறாரகையாலே; அடிமைசெய்யப்பெற்றிலேனென்றஞ்சவேண்டா, * புகழுநல்லொருவனிறே [illegible] யிருந்து வந்தேறுமாகச் செய்கின்றவற்றையே [illegible] கொள்ளும் ஸ்வபாவத்தாலே, இன்று நினைக்கவல்லமை [illegible] வற்றையுமெல்லாம் தனக்கடிமையாக நினைத்திருப்பா [illegible] அவன் ;

(க) பெரியதிருவ-

இனி தமப்பன்பக்கையாக அவனிலும் மிவனண்ணியனென்று வரநின்ற ப்ரஹ்லாதனிலே முடியிலேவந் தெதிரிட்டான்; ஆசப்ராந்தனுக்குப்பிறந்த தெளிவுபோலே அஸித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறக்கும் ஜ்ஞாநத்தை விஸ்வஸிக்கவொண்ணாதென்றிறே இவர்தாம் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நினைத்து "தேறேலென்னை" என்றஞ்சிற்றும்; அங்ஙனஞ்சவேண்டா, *முடியானேயில் கரணங்களையுடையவராகையாலே; அவன் ஸ்வாதந்த்ர்யத்தை நினைத்தஞ்சவேண்டா, (௧) "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று விரோதியைத் தூண்டித்துக்கொண்டு போகைக்கு முதலாயிருக்கையாலே; பக்தி தமக்கில்லையென்றிருக்க வேண்டா, ப்ரபத்தியை யுபாயமாகப்பற்றினவராகையாலே; இனி (௨) "நோபஜநம் ஸ்மரந் - நோபஜநம்ஸ்மரந்" என்கிறபடியே இத்தை ஸ்மரியாதபடியான ஸாக்ஷாத்காரமில்லாமல் படுத்துகிறபடியிறே யிது.

ப்ரத்யக்ஷமும் அகிஞ்சித்கரமாய், கூடவிருக்கச் செய்தே "பிரிந்தான்" என்று ப்ரமிக்கும்படி பிரிவால்வந்த வாஸனை மேற்கொள்ளுகிறதிறே - யோக்யதைகிடந்து படுத்துகிறபடியிறே. "மயர்வற மதிநலமருளினன்" என்று - பகவத் ப்ரஸாதலப்தமாய், பரபக்திரூபமாய், ருசிகார்யமாயிருக்கிற விருத்தியிருக்கிறபடியிறேயிது. இனி, ஈஶ்வரனுக்குக்கால் நடையாடாததொரு தேசத்திலே யிவரை வைத்துப் பரிஹரிக்கலாமத்தனை.

கலந்து நெடுநாள்பிரிந்துபோந்தா ளொருபிராட்டியாய், அவ்வாஸனையாலே, க்ருஷ்ணன் கூடவிருக்கச் செய்தேயும், "இவன் பண்டுபிரிந்துபோந்த ப்ராபாதகாலமும்வந்து அக்காலத்துக்கடைத்த காற்றுக்களடிக்கையாலும், குயில்கள் கூவுகையாலும், மயில்களாலிக்கையாலும், கானெங்கு மொக்கக் கன்றுகளும் பசுக்களும் பரக்கையாலும், இக்காலத்திலவன் போகைதவிரான்; பசுக்களினுடைய ரக்ஷணமொருதலைபானால் அவற்றைவிட்டு நம்மோடிருப்பானொருவனல்லன்; ஆனபின்பு, அவன்போனான்" என்று, கூடவிருக்கச்செய்தேயும் அவன்பிரிவை நிஶ்சயித்து, ஒரு * இன்னுயிர்ச்சேவல் * மல்லிகை கமழ்தென்றல் தொடக்கமானவற்றில் அவன் அஸந்நிதி

---

(௧) கீதை ௧௮-௬௬- (௨) சாந்தோ-அ ௧௨-

யில்பட்ட க்லேசத்தையடைய அவன்கண்முகப்பேபட்டு, ஸர்வஶக்தியான வவன்றனக்கும் பரிஹரிக்கவொண்ணாதபடியாய்த்து இவ்வாபத்து.

அதாவது—போனானைப் வருகிறானல்லன், போகினைத்தானைத் தவிருகிறானல்லனே. இப்படி நோவுபட்டு, "நீ ஸர்வதா பசுமேய்க்கப்போகை தவிராய், உன்போக்கு எனக்கஸஹ்யம், ஆகையாலே உன்னுடைய போக்கை விலக்கவேணுமென்று நினையாநின்றேன், இதுக்கு நாநீர் வருகிறதில்லை, அதுக்குப்பரிஹாரமாக உன்கையை யென்தலையிலே வைக்கவேணும், நீ பசுமேய்க்கப்போகாதொழியவேணும், 'ஸப்ரமாதமான காட்டில் நீ பசுமேய்க்கப்போனால் அங்குள்ள அஸுரராக்ஷஸாதிகளாலே யென்புகுருகிறதோ' என்றஞ்சாநின்றேன்."

இனி (க) "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர்நாராயண: — மாதாபிதாப்ராதா நிவாஸஸ்ஸரணம் ஸுஹ்ருத் கதிர்நாராயண:" என்று அவன் ஸர்வவிதபந்துவுமாயிருக்குமாபோலே, இத்தலைக்கும் ஸம்பந்தஜ்ஞாநம்பிறந்தால் எல்லாப்பரிவுகளுமுண்டாயிருக்குமிறே; (உ) "யதாயதா ஹி - யதாயதாஹி" என்கிறபடியே; ஆனபின்பு நீ போகில் நானுளளாகமாட்டேனென்று இப்படி நோவுபட, அவனுமித்தைக்கடைய வநுஸந்தித்து, "நான் போகிறேனல்லேன்" என்று, தான் போகாமையை யிவள் நெஞ்சிலேபடுத்தி தரிப்பிக்க தரித்ததாய்த் தலைக்கட்டுகிறது இத்திருவாய்மொழியில்; இத்தால்-தாதர்த்யத்தினுடைய வெல்லையிருக்கிறபடியிறே.

* எம்மாவீட்டிலே "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்று நிஷ்கர்ஷித்தொன்றுண்டிறே; அத்தை யநுஸந்திக்கிறதாய்த் திங்கு. என்னைக்கொள்ளவேணுமென்கிறது அங்குச் சொல்லிற்று; என்னோடு கலக்கவுமாம், வேறே சிலரோடே கலக்கவுமாம், அத்தைக்குறைத்து நடத்தினை வேண்டுவதென்கிறது; அதுகளில் "எனக்கு" என்றவிடம், புருஷார்த்தமாகைக்காகச் சொன்ன விஶேஷணையிறே. அது அஸித்தவ்யாவ்ருத்திக்குடலாயிருக்கை. இவன் றனக்கென்றதவன்று புருஷார்த்தமாகாது, அவன்றான் விரும்பிப் ப்ரவர்த்திப்பதும் செய்யான்.

(க) ஸபால-கூ. (உ) ரா-அயோ-க௨-கூஅ-

முதற்பாட்டு.

வேய்மருதோளிணை மெலியுமாலோ மெலிவுமென்தனிமையும் யாதும்நோக்கா * காமருகுயில்களும் கூவுமாலோ கணமயிலவைகலந்தாலுமாலோ* ஆமருவினநிரைமேய்க்க நீபோக்கொருபகலாயிரமூழியாலோ * தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ தகவிலைதகவிலையே நீகண்ணா. (க)

ப:—அநந்தரம், முதற்பாட்டில், நீ பிரியப்புகுகிறாயென்கிற நினைவாலே குயில்தொடக்கமானவற்றாலே யீடுபடுகிற வென்னை, உன் கண்ணழகைக்கொண்டு நலியாநின்றாயென்கிறாள். (க)

(இ-ள்.) விரஹம் பொறாமையாலே, வேய்மரு - வேய்போலே குழைவோடின, தோள் - தோள்கள், இணை - இரண்டும், மெலியும் - புறவாயும் காணலாம்படி மெலியாநின்றன, அவ்வளவன்றியே, என்மெலிவும் - ஆஶ்ரயமான வென்ஶரீரத்தின் மெலிவும், என்தனிமையும் - பிரிவாற்றாத வென் தனிமையும், யாதும் - ஒன்றையும், நோக்கா-பாராதே காமரு - தர்ஶநீயமான. குயில்களும் - குயில்களானவை, "தனிமைப்பட்டாரை நலியக்கடவோமல்லோம்" என்றிராதே, கூவும் - தம்மில் தாம் சேர்த்திக்காகக் கூவாநின்றன! கணமயிலவை-திரளான மயில்களானவை, கலந்து - தம்மில் தாம்கலந்து, ஆலும் - நடியாநின்றன. ஆ-பசுக்களானவை, மருவு - செறிந்து, இனம் - இனமொத்திருக்கிற, நிரை - திரள்களை, மேய்க்க - மேய்க்கைக்காக, நீ - நீ, போக்கு - லீலாபரனாய்க் கொண்டுபோகிற ஒருபகல் - ஒருபகல், ஆயிரமூழி (க) "த்ருடியுகாயதே" என்கிறபடியே ஸஹஸ்ரயுகமாகாநின்றது, அதுக்குமேலே குயில்கள் மயில்கள் உன்போக்குத்தான் நன்றாம்படி, தாமரை - தாமரைபோலே தர்ஶநீயமான, கண்கள்கொண்டு-கண்களைக்கொண்டு, ஈர்தி - ஈராநின்றாய்; கண்ணா - பெண்பிறந்தாரை நெருக்குகைக்குச் செய்யப்போந்த க்ருஷ்ணனே, நீ தகவிலை - நீ ஸ்த்ரீகளை நலியத்தகாதென்கிற ஸாமாந்யக்ருபையுமுடையையல்லை; நோவுபட்டாரை நலியலாகாதென்கிற விஶேஷக்ருபையுமுடையையல்லை.

இந்த நைர்க்ருண்யம் ஸ்வபாவமாயே விட்டதிறே யென்றுகருத்து; வேய்மருதோளிணை என்று - அவன்கொண்டாடும்படி அழகைக்

(க) பாத-

சொல்லவுமாம். காமருகுயிலென்று - அழகிய குயில்; காவிலேமருவின வென்னவுமாம் "ஆலோ!" என்னுமசைகள்-விஷாதஸூசகங்கள். (௧)

ஆறு;—உன்னைப் பிரிகையாலே தோள்கள் மெலியா நின்றன; இவற்றின்மெலிவும் என் தனிமையு மொன்றும் பாராதே இக்குயில்களானவை உன் திருநாமங்களைக் கூவாநின்றன, அதின்மேலே மயில்களும் கலந்தாலாநின்றன, ஒரு பகல் பிரியுமளவில் இங்ஙனே படவேண்டுமோவென்னில்; நீ பசுமேய்க்கப் போனவாறே அவ்வொருபகல் தானாயிரமூழியாகாநிற்கும், அதின்மேலே நீயுமுன்னுடைய கண்களாலே யென்னை யீராநின்றாய், உன்னைப் பிரிந்து நானிங்ஙனே படாநிற்கச்செய்தே எங்களைப்பிரிந்து நீயிருக்கவல்லையாவதே!, நீயிருந்த லோகத்திலு மில்லையாகாதே க்ருபை!, லோகத்திலே சிறிது க்ருபையுண்டாகிலு முன்பக்கலொரு க்ருபையில்லையென்கிறாள். (௧)

ஈடு-அவ;—அவன்பிரிகிறானென்கிற வ்யஸநம் செல்லாநிற்க, அதுக்குமேலே, குயில்தொடக்கமான பாதகபதார்த்தங்களின் த்வநியாலும் அவன் நோக்காலும் தனக்குப் பிறந்த அவஸாதத்தை, தோழிமார்க்குச் சொல்லுமாபோலே அவன்றனக்குச் சொல்லுகிறாள்.

(வேயித்யாதி) சுற்றுடைமையாலும் பசுமையாலும் வேயை யொருவகைக்குப் போலியாகச் சொல்லலாயிருக்கிற தோள்களிரண்டும் மெலியாநின்றனவென்கிறாள்; செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரனுக்கு "உன்பூந்தோட்டமழிகிறது" என்பாரைப்போலே தன் பிரிவில் இவளாற்றாமைகேட்டார்வாய்க்கேட்கையன்றிக்கே கைமேலே காணலாயிருக்கிறது காணு மிவள்மெலிவு. இவனுடைய ப்ராப்தியை யநுவர்த்தித்து, கிண்ணகத்திலே யடிச்சுவரைப்போலே அவன் கூடவிருக்கச்செய்தேயும் மெலியாநின்றனவாய்த்துத் தோள்கள். கூடவிருந்தாலும ப்ரயோஜநமில்லையிறே அநவாப்தியிலே பிரிவுண்டானால்; அதின் கார்யமான மெலிவு பிறந்தன்றி நில்லாதிறே.

தன்தோள்கள் மெலிகிறவித்தை "உன்னுடைய தோள்கள் மெலியாநின்றன" என்பாரைப்போலே சொல்லுகிறாள் காணும்; தேவதத்தனென்றத்தோடு வாஸுதேவனென்றத்தோடு வாசியறும்படி அவனுக்கு ப்ரகாரமாயிறேயிவளாத்மவஸ்து விருப்பது; நீ கலக்கப் புக்கால் விடாயாறுவதெங்கே.(க) "மெல்லியல்தோள்தோய்ந்

(க) திருநெ-௧௩-

திறே விடாயாறுவது (இணை) நீ சோத்தியழகு சொல்லி வாய்வெருவும்தோள்கள் படுகிறபாடுபோராய்! தன்னழகைத் தான்கொண்டாடுமவளல்லளே, அவன் சொல்லக்கேட்ட செவியேற்றாலே சொல்லுகிறாளிறே. இனி நீவந்தாலும் அஸத்ஸமமிங்கிடாய். (ஆலோ!) விஷாதாதிசய ஸூசகமிருக்கிறபடி.

(மெலிவுமென்தனிமையும்) நாட்டார் மெலிவும் தனிமையும் போலல்லவிறே என்மெலிவும் என்தனிமையும்; உன்மெலிவும் உன்தனிமையும்போலல்ல. கூடவிருக்கச் செய்தே வருகிறதனிமையும், பிரியாதிருக்கச் செய்தேவருகிற மெலிவுமிறேயிது. "பொன்செய் பூண் மென்முலைக்கென்று மெலியுமே" என்றும், "மிகவேணிமெலிவெய்தி" என்றும், "தமியமாலோ" என்றும் சொன்னவற்றினளவல்லவிறே, அவனஸந்நிதியில் பட்டவையிறேயவை; கூடவிருக்கச் செய்தே வருகிறதிறேயிது. "தாந்தம்மைக்கொண்டகல்தல் தகவன்று" என்று தாம்போவார் தம்மைவைத்தன்றே போகக்கடவது என்னைக்கடவவளுக்கு, கூடவிருக்கச்செய்தே போனானென்று நினைக்கவுமாமிறே ப்ரேமஸ்வபாவத்தாலே.

அவன்றான் போனானாய் வருகிறானல்லன், போகநினைத்தானாய்த் தவிருகிறானல்லன்; அவனாலும் அப்ரதிக்ரியமிறேயிது. அவன்றானும், இவள்மெலிவில் மெய்ப்பாட்டைக்கண்டு "நாம்பிரிந்தோமோ" என்று ப்ரமிக்கும்படியிறே யிருக்கிறது. இருவரும் இருவர்க்கு முகந்தங்காயானால் தெளியவிரகில்லை. இதுதானவனுடைய ஸௌபாக்யபல மிருந்தபடியிறே. முன்பு இவள் பிரிவாற்றாமையால் பட்டவையெல்லாம் தான் கண்டறியானே; தோழிமார் மற்றையார் சொல்லக்கேட்டார்வாய்க்கேட்கு மித்தனையிறே; (௧) "வாஹிவாத- வாஹிவாத" இத்யாதிவத்; இப்போது, தன்கண்ணாலே காணப்பெற்றானே. இவள்தான், தோழிமாரோடு சொல்லுமத்தை இப்போது அவன்றன்னோடே சொல்லுகிறாளிறே. (யாதும்நோக்கா) ஒன்றையும் பார்க்கிறதில்லை. தோளின் மெலிவும் தனிமையும் இவையொன்றும் பார்க்கிறானில்லை.

(காமருகுயில்களும்) காமருதலாவது விருப்பம். இவற்றினுடைய கலவி பிரிவுக்குடலாயிராமையாலே பெண்பேலென்ன விருப்

(௧) ரா-யு-௫-௬-

பத்தை யுடைத்தாயிருக்குமிறே கலவிப்பிரிவோடே வ்யாப்தமொன்றும் பயமில்லை இவற்றுக்கு. (துயில்களும்) நீயேயன்றிக்கே, இவையும் பாதகமாகாநின்றன. நீ பாதிக்க வபவிட்ட பரிகரத்திற்காட்டில் இன்னமும் நீதானேநல்லை. (கூவுமாலோ) என் தசையைக்கண்டால் இவற்றுக்கு வாயைப் புதைக்கவேண்டாவோ! பிரிந்து நோவுபடுகிற வென்படியைக் கண்டால் "நஞ்சுபோலே நம்முடைய த்வநியிவளுக்கு பாதகமாம்" என்று தவிர வேண்டாவோ! (௧) [கௌஸல்யா நாராயணம் தேவம் - கல்யாணாரத்யநேத்ரா] உருவினவாளுறையிலே யிடவேண்டும்படிகாணு மிவளுடைய தசை.

(கணமயில்) எதிர்த்தலையையும் தனியேவைத்து நோவுபடுத்தித் தானும் தனியேயிருந்து நோவுபடுவாரைப்போலே யன்றிக்கே, சேர்த்தியையுடையவா யிராநின்றதாய்த்திவை. (அவை) த்ருஷ்டிவிஷம்போலே யிருக்கையாலே முகத்தை மாறவைத்து (அவை) என்கிறாள்; கண்கொண்டு காணப்போகாமையாலே, ஒருநிர்வாக பாதகமாகாநின்ற தாய்த்து. (கலந்து) "இவ்வளவில் நாம கலக்கை ஸ்த்ரீவதம்" என்றறிந்து மீளுகிறதில்லை. (ஆலுமாலோ) கலந்த கலவியால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸம்ப்ரயந்த்தம் பண்ணாநின்றனவென்று ப்ரத்யக்ஷித்துவைத்து.

(அவை) என்னும்போது முகத்தைமாறிச் சொல்லுகிறளாயிருந்ததிறே. (௨) [ஜநஸ்தாநே-மயூரஸ்ய] இருவராயிருப்பாரெல்லாரையும் பிரித்தானென்றே யிருக்கிறார். மயிலினுடைய பெண்டாட்டியை ராவணன்கொண்டுபோய்த்திலனே! [வனே] திருவயோத்யையிலேவந்து பிரித்தானல்லனே! போகத்துக்கேகாந்தமானகாட்டிலேயிறே. [ராக்ஷஸாநாம் ... ப்ரியா] நீர்மைகேட்டனை வப்படிருக்காரணால் பிரிகைப்படாக தொன்றுமேயாகாதே.

(ஆமருவித்யாதி) இவ்வளவில் (௩) "க்ஷணே ... ததமேஷாபவிஷ்யதி" என்னவேண்டியிருக்க, அதுசெய்யாதே, அவன் தன்னுடைய ரக்ஷகத்வத்துடைய ரக்ஷணத்திலே யொருப்படாகின்றான் உன்னோடே மருவித்திரியாநிற்கிற

(௧) ரா- ௩-௩௩-
(௨) ரா யுத்-௧-௪௰-
(௩) ரா- ௩௦-௫௦

ஆநிரையுண்டு-பசுநிரை, அத்தைமேய்க்க. *மேய்ந்தபுல்லும் கடைவாய்வழி சோராநிற்கிறே நிற்பது-வேறொன்றின்றிக்கே இவனோட்டைச் சேர்த்தியேயிறே இவற்றுக்கு தாரகம். (இனம்) அவனுடைய ரக்ஷ்யகோடியிலே யந்வயித்தாலும் தனியரா யிருப்பாரை ரக்ஷிக்க நினையான்; திரளாயிருப்பாரையாய்த்து அவன் ரக்ஷிக்க நினைப்பது.

(நீபோக்கொருபகல்) நீபோகிறவொருபகலென்னுதல், உன்னுடையபோக்கான வொருபகலென்னுதல்; அன்றிக்கே, பசுக்களை மேய்க்கைக்காக நீபோகவிடுகிற பகலென்னவுமாம்; "இதெல்லாமொரு பகலேயன்றோ" என்றான் (ஆயிரமித்யாதி) உன்னைப்போலேயன்றிராகொள்ளா பொங்களையும் இரவொன்றும் பகலொன்றும் உத்தேஸ்யமாயிருப்பார் படியாயிராதுகாண் எல்லாக் காலத்திலுமொன்றே போதுபோக்காக விருப்பார்க்கு. (௧) "யயாஹு கொடிவு திஸ: க்ஷணஹெஷு நவிநாஹவஸ் — யதாப்தகோடிப்ரதிம: க்ஷணஸ்தேநவிநாபவத்"

"போனோமல்லோம், போகநினைத்தோமல்லோம், நாம்கூட விருக்கச்செய்தே பிரிந்தோமாகக்கொண்டு நோவுபட்டுப் பதார்த்தங்களுமுடைய பாதகமாயிருக்கைக்கு, இதொரு ப்ரேமஸ்பாவ மிருக்கும்படியென்?" என்று கண்ணாலே குளிரநோக்கினான் (தாமரைக்கண் கள்கொண்டீர்தியாலோ) நீநோக்காலே நலிவதில் இன்னம் பசு மேய்க்கப்போகை நன்று. "முன்புக்கதை நெஞ்சு ஸ்ம்ருதிவிஷயமாய்ச் சொல்லுகிறாள்" என்பாருமுண்டு; (ஈர்தி) என்கையாலே - இப்போது நலியாநின்றாய் யென்றே சொல்ல வமையுமிறே.

இப்படி சொல்லச் செய்தேயும் நோக்கை மாறவைத்திலன்; (தகவிலை) ஜகத்தில் க்ருபையில்லை திடீர் என்கிறாள்; அவனை விலக்குகிறாரில்லையாகாதே. நம்மோடு விரோதித்தாரை யின்றுதாகிற தென்னை, இவன் நம்மை நலியாநிற்க; ஒன்றுக்கு அந்தோஷமுண்டு, ஒன்றுக்கு ஸம்ஸர்க்கதோஷமுண்டு; ஆனபின்பு, இவை நம்மோடே விரோதிக்கை ப்ராப்தமன்றோ. மயில், ஸௌந்தர்யமுடையனுடைய வாறைப்போனாகையாலே ஸம்ஸர்க்கதோஷமுண்டு; குயில், பசிபுக்கிறுடைய அந்தத்தைப் புஜிக்கையாலே அந்நதோஷமுண்டு. (நீ-தகவிலை) உனக்குத்தகவில்லை.

(௧) வி-பு-௫-௩௩-௪௨-

"தகவுடையவனே" என்று கூப்பிடுமவள்கிடீர், அவன் ஸந்நிதியிலே இப்போது "தகவிலை" என்கிறாள். நீ தகவுடையையல்லை. மேலில் "தகவிலை" என்கிறதுபோலன்றிக்கே, முற்பட்டதுக்குத் தகவிலையென்று பொருளாய், நாட்டில் க்ருபையில்லையென்னவுமாய்; அன்றியே, இரண்டும் தகவிலை என்றேயாய், அப்போது இரட்டிப்புக்குக்கருத்து—நீதகவுடையை யல்லையென்னுமிடத்துக்குக் கொடியெடுக்கிறேனென்கிறாள். (௧ "வாவ்ா த—ாஸ—யோஷித நகுஜாகஸ) நஜாயதே—வமா ர்த்தாஸ—யோஷி நஸ—க்ருபாகஸ்ய நஜாயதே" என்கிறபடியே. (௧)

இரண்டாம்பாட்டு.

தகவிலைதகவிலையேநீகண்ணா தடமுலைபுணர்தோறும்புணர்ச்சிக்காரா * சுகவெள்ளம்விசும்பிறந்தறிவைமுழ்க்கச் சூழ்ந்ததுகனவெனநீங்கியாங்கே * அகவுயிரகமகந்தோறுமுள் புக்காவியின்பரமல்லவேட்கையந்தோ* மிகமிகவினியுன்னைப்பிரிவையாமால்வீவ நின்பசுநிரைமேய்க்கப்போக்கே. (௨)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதபவ்யனான நீ யொரு க்ருபையின்றியிலே நின்றாய், உன்னுடைய ஸம்ஸ்லேஷரஸந்தானே பரிதாபஹேதுவாகா நின்றது, விஸ்லேஷஹேதுவான பசுமேய்க்கப்போக்குத் தவிரவேணுமென்கிறாள். (உ)

(இ - ள்) கண்ணா - பெண்பிறந்தார்க்கு பவ்யனென்று ப்ரஸித்தனான கண்ணா; நீ - நீ, தகவிலைதகவிலையே - அத்தபவ்யதைக்கேற்ற க்ருபையை யொருபடியாலுமுடையையல்லையாயிருக்கின்றாய். நினைத்திருந்து ஸம்ஸ்லேஷிக்கிறவளவிலும். தடம் - விஸ்லேஷிக்கும்படி பெரிதான, முலை - முலைகளை, புணர்தொறும் - பரிஷ்வங்கம் பண்ணுந்தோறும், புணர்ச்சிக்கு - அந்தஸம்ஸ்லேஷத்துக்கு, ஆரா - உள்ளடங்காதே அதிசயிதமான, சுகவெள்ளம் - ஸுகஸாகரமானது, விசும்பிறந்து - அபர்யந்தமான ஆகாசத்துக்கு மவ்வருகேபோய், அறிவை - அறிவும், மூழ்க்க - அழுந்தும்படியாக, சூழ்ந்து - சூழ்ந்து அப்போதே, அது - அது, கனவென - ஸ்வப்நகல்பமாக, நீங்கி - நீங்கி.

---

(௧) வி பு-நி-௪௮ ௯௦-

ஆங்கே - அவ்வவஸ்த்தையிலே; அகவுயிர் - அந்தர்க்கதமான ப்ராணன், அகமகந்தோறும்-நின்ற புடைகள்தோறும், உள்புக்கு - உள்ளேப்ரவேசித்து, ஆவியின்-ஆஸ்ரயமான ஆத்மாவுக்கு, பரமல்ல-பொறுக்கவொண்ணுதபடி; வேட்கை - அபிநிவேசம்போந்து வாராநின்றது அந்தோ! - ஐயோ!, கூடவிருக்கிற வுனக்கு இத்தசைசொல்லிக் காட்டவேண்டுவதே!, இனி-இனி, இவ்வளவில் நீ செய்யவேண்டுவது, மிகமிக - மேன்மேலும், உன்னை - உன்னை, பிரிவையாமால் - பிரிவானத்தை நாங்களுடையோமாம்படியாக, நின்-உன்னுடைய, பசுநிரைமேய்க்கப்போக்கு-பசுநிரைமேய்க்கப் போக்குக்களானவை, வீவ-தவிர்வனவாகவேணும்.

வீதல் - ஒழிதல், (உ)

ஆறு:—(தகவிலை) ஸம்ஶ்லேஷஜநிதமான நிரவதிக நிர்வ்ருதி செல்லாநிற்கச்செய்தே யிப்படிபடுகிறதென்னென்ன ;

அந்த நிரதிஶய ஸம்ஶ்லேஷமெல்லாம் ஸ்வப்நகல்பமாய், உன் பக்கலுள்ள நிரதிஶயஸ் நேஹத்தாலே பசுமேய்க்கப்போக்குக்காரணமாக நீபிரிகிறுயென்று நான்முடியக்கிடாய் புகுகிறதென்கிறாள்.

ஈடு-அவ; —இவள்தரிக்கைக்காகப் பலகாலணைத்தருள, இஸ் ஸம்ஶ்லேஷ ஸுகமெல்லாம் நீ போகக்கடவையென்று மதியாலே ஸ்வப்நம்கண்டு விழித்தாப்போலேயாய் நோவுபடாநின்றேனென்கிறாள். பூர்வவ்ருத்தமான ஸம்ஶ்லேஷத்தையே சொல்லிற்றாகவுமாம்.

(தகவிலையித்யாதி) (நீகண்ணு - தகவிலையே) க்ருஷ்ணனென்றால் பெண்களுக்கு ஸ்வம்மாயிருக்குமென்று ப்ரஸித்தமிறே. பெண்களுக்கு ஸ்வமான நீ நிரத்தயனையாகாநின்றாய். "நம்மை நிர்த்தயனென்பதே; பிரியநினைத்தோமல்லோம், பிரிந்தோமல்லோம்" என்று இவள் தரிக்கைக்காக நெருக்கி யணைத்தான் (தடமுலையித்யாதி) முற்றாயிரந்தரம் அணையாநிற்கச்செய்தேயும் "அணைக்கிறது பிரிகைக்கிறே" என்று அணைத்த கை நெகிழ்த்தவிடமெங்கும் இவளுடம்பு வெளுக்கப்புக்கவாறே, அத்தைக்கண்டு இதினுடைய ஸமாதாநார்த்தமாக அணைக்க, இங்ஙனே அதிஶங்கையும் ஸமாதாநமுமாய்ச் செல்லுமத்தனை, இதுதான் பூர்வஸம்ஶ்லேஷத்தைச் சொல்லிற்றாகவுமாம். இப்போதை ஸம்ஶ்லேஷந்தன்னையே சொல்லுகிறது.

(தடமுலை) தன்னையறியப்புக்கார் படுவதத்தைப்பாய்த்து இவற்றையநுபவிக்கப்புக்க காலும்படுவது - தலைப வநுபவித்து முடிக்கப்போகாதாய்த்து. போக்தாவாலுமூன் டறுக்கவொண்ணாத போக்யதாதிசயத்தைச் சொன்னபடி. (புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்) ஸம்ஶ்லேஷத்துக் கடங்காத ஸுகஸாகரம். கலக்கிற விருவர்க்கு மீடாயிறே ஸுகமிருப்பது. அவன் ஸ்வரூபம் இயத்தாரஹிதமாயிருக்குமாபோலேயாய்த்து போக்யதாப்ரகர்ஷமும், * அதனிற் பெரியவென்னவாவிறேயிவளது; அன்றியே (புணர்தொறும்புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்) அதாவது - ஸம்ஶ்லேஷம் காதாசித்கமாய், ஸுகம் நிரதிசயமாயிருக்கை. (௧) "நிலத்தினும் பெரிதேவானினு முயர்ந்தன்று, நீரினுமாரளவன்றே சாரல்கருங்கோற்குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேனிழைக்குநாடனொடுநட்பே" என்னக்கடவதிறே. குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கை.

இஸ்ஸுகந்தா னெவ்வளவுபோருமென்னில் (விசும்பிறந்து) ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே வைத்துக்கொண்டிருக்கும் திறே ஆகாசமாகிறது; அதுதன்னைக் குளப்படியாக்கி, * மயர்வற மதிநலமருளப்பெற்ற அறிவையும் விளாக்குலைகொள்ளாநின்றதாய்த்து அன்றிக்கே, விசும்பென்று - பரமாகாசம், (௨) "பரமாகாசே" என்னக்கடவதிறே [illegible]. ஆக, [illegible] பாத்விபூதியையும் விஞ்சி, [illegible] விபூதியையும் தன்னுள்ளே [illegible] யிருக்கிற அறிவையும் [illegible] பப்பாய்த் திருக்கிறது (அதுகன வெனநீங்கி) அது ஸ்வப்நகல்பமென்னலாம்படி [illegible], அதின்பரப்பைக் கண்டவாறே அது [illegible] [illegible] யாய்த்திருக்கது; அதுவும் [illegible] கண்டவாறே, இது பெருக்காறுவற்றியடிச்சுட்டாப்போலேயாய்த்து. [illegible] ணிறே பிரிந்தாளுமிவள். கனவென்றும் இந்த்ரஜாலமென்றும் - [illegible] யாப்தமான கலவியைச் சொல்லக்கடவது; இதுவும் [illegible] வொண்ணாதபடியாயிருக்குமிறே.

(ஆங்கே) அத்தசையிலே. (அகவுயிர்) [illegible] ஹ்ருதயம். (அகமகந்தோறும்) ஹ்ருதயத்தில் [illegible] தோறும். முன்புள்ள ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களை [illegible]

(௧) குறள்- (௨) [illegible]

புடைபட்டிறே யிருப்பது. ஸம்ஶ்லேஷவிஶ்லேஷ மவகாஶத்தை யுண்டாக்கும், அந்தவவகாசமுள்ள விடமெங்கும் ஆற்றாமை புகுந்தது. (ஆவியின்பரமல்லவேட்கை) அணுபரிமாணமான வாத்மவஸ்துவினளவல்லவபிநிவேசம்; (௧) [என்றனளவன்றால் யானுடைய வன்பு] என்றாரே அவரும்; ஆஶ்ரயத்தினளவல்லவாய்த்து அபிநிவேசம். ஸுகது:கங்களும், அவையொழிந்த ஸ்வரூபேணவஸ்த்திதியும் என்றுமூன்றுண்டிறே; அதில் ஸ்வரூபேணவஸ்த்திதியிலேதான நிற்கப்பெற்றதோ!

(அந்தோ) இதுதனக் குபதேசங்கொண்டறியவேண்டுவதே! கலக்கிறபோது இருவரும்வேண்டி, பிரிவில்வந்த வாற்றாமைக்கு நான் சொல்லவேண்டும்படியாவதே! கலவிக்கிருவராய் ஆற்றாமை யொருதலையிலேயாவதே! ஆனால் செய்யவேண்டுவ தென்னென்னில் (நின்பசுநிரைமேய்க்கப்போக்கு - வீவ) அதுதான் தவிரவேண்டுகிற தென்னென்னில் (மிகமிகவினியுன்னைப் பிரிவையாமால்) மேன்மேலென உன்னைப் பிரிவாம். (பிரிவை) என்கிறவிது-செய்யுட்பாடாய், பிரிவுண்டாம்படி வருகிற பசுநிரைமேய்க்கப்போக்கு வீவ. "பசுவந்தன" என்னுமாபோலே போக்குக்கள் தவிரப்படுவனவாக. (இனி - வீவ) இதுக்குமுன்புள்ளகாலமெல்லாம பிரிந்துபோந்தாமேயாகிலும், இனிமேலுள்ள காலமாகிலும் தவிரவேணும்.

மூன்றாம்பாட்டு.

வீவன்நின்பசு நிரைமேய்க்கப்போக்கு வெவ்வுயிர்க்கொண்
டெனதாவிவேமால் * யாவருந்துணையில்லை யானிருந்துன்னஞ்சன
மேனியையாட்டங்காணேன் * போவதன்றொருபகல் நீயகன்றால்
பொருகயற்கண்ணிணைநீரும்நில்லா * சாவதிவ்வாய்க்குலத் தாய்ச்சி
யோமாய்ப் பிறந்தவித்தொழுத்தையோந்தனிமைதானே. (௩)

ப:— அநந்தரம். தர்ஶநீயமான வடிவழகையுடைய வுன்னைக்காணாதே க்லேஶிக்கிறவெங்களுடைய தனிமையானது முடிவாகவேணுமென்கிறான்.

(இ - ள்.) நின்பசு நிரைமேய்க்கப்போக்கு - நீ ஸ்வதர்மாநுஷ்டாநமாக நினைத்துப்போகிற வுன்பசுநிரைமேய்க்கப்போக்கிலே, வீவன் -

---

(௧) உ-திருவ-௧௦ப-

நான்முடிந்துவிடுவன்; வெவ்வுயிர்க் கொண்டு - விரஹவ்யதையாலே வெவ்விதாகமூச்சுவிட்டு, எனதாவி-என்னுடைய ஆத்மாவானது, வேம் அத்தாலேபரிதபியாநின்றது. அவ்வவஸ்த்தையில், துணை - துணையாவார். யாவருமில்லை-ஒருவருமில்லை. அவ்வளவிலும், ஆசாபந்தத்தாலே. யான் - நான், இருந்து - முடியாதிருந்து, உன் அஞ்சனமேனியை - அஞ்சநம்போலே தர்ஶநீயமானவுன்வடிவை; ஆட்டம் - நடையாட்டம் காணேன் - காணேன், நீ அகன்றால் - நீபோனால், ஒருபகல் - அந்த வொருபகல்தான், போவதன்று - போகாதேநில்லாநிற்கும், ஆற்றாமையாலே அலமந்து, பொரு - தன்னில்தான்பொருகிற, கயல் - கயல் போன்ற. கண்ணிணை - நீகொண்டாடும்கண்ணிரண்டும், நீரும்நில்லா - நீர்தணித்தாலும் நிற்கிறனவில்லை, இவ்வாய்குலத்து - நீபிறந்தவிடைக் குலத்திலே, ஆய்ச்சியோமாய்ப்பிறந்த இடையராய்ப்பிறவாதே இடைச் சிகளாய்ப்பிறந்த தொழுத்தையோம்-தண்ணியோமானவெங்களுடைய, இத்தனிமைதானே - இத்தனியிருப்புசெய்தது. சாவது - போவதாக வேணும்

தனிமை ஸ்வபாவமாகையாலே. அதன்முடிவு தங்கள் முடிவென்று கருத்து. தனிமைதானே யெங்களுக்குச் சாவாவதென்றுமாம். (௩)

ஆறு:—(வீவனின்) உன் பசுமேய்க்கப் போக்குக் காரணமாக நான் முடிவன், விரஹாக்நியாலே யென்னுத்மா தஹ்யமாநமாகாநின்றது, பின்னை யொருதுணையுமில்லை, உன்வரவு பார்த்துக்கொண்டு நான் தனியேயிருப்பன், என்னுடையான வுன்னை வரவுங்காணேன், நீ யகன்றால் இப்பகலெங்கும் போவதாய்ச்செய்யாது, இக்கண்ணை நீரு மில்லாது, இந்த வொருதலையாந்ரமான ஸ்நேஹமானது சாலப் பொல்லாதாகாதே யென்கிறாள். (௩)

ஈடு-அவ;—நீ யுபேக்ஷித்திருக்க நாங்கள் ஸ்நேஹித்திருக்கிற வொருதலைக்காமம் நசிக்கவேணுமென்கிறாள்.

(வீவனித்யாதி) உன் பசுநிரைமேய்க்கப்போக்கு நிமித்தமாக, நான்வீவன்-நான்முடிவன். "அதினைக்கு தாமமன்றோ" என்றி ராதே, உனக்கு ஸ்த்ரீவதமாய்ப் பலிக்கக்கிடாய் புகுகிறது. இப் போது முடியும்படி வந்ததென்னென்னில் (வெவ்வுயிர்த்யாதி) என் னைப் பார்க்கமாட்டாயோ; உன்னுடைய போக்கு நிமித்தமாக நெடு மூச்செறிந்து அதுவே ஹேதுவாக வுலர்ந்த வென்னுடைய ஹ்ரு

தயமானது, விரஹாக்நிகொளுந்தி யெரியாநின்றது; இதிலே நீரைச் சொரியவல்லையே யென்கிறாள் (எனதாவி) உன்னைப்போலேயென்றிராதே கொள்ளாய் அல்லாதாரையும்.

(யாவரும்துணையில்லை) துணையான நீதானேபோனாய், நீபோனால் துணையான தோழிமார் தானேயில்லை, குயில் மயில் தொடக்கமானவை தானே ஊர்ப்பகையாய்த்து. (யானிருந்து) நீபோனால் படுவுற்றைத்தான் படப்பெற்றேனே, எல்லாம் பட்டும் நூறேபிராயமாயிருந்தது; இன்னமொருக்கால் காணலாமென்னும் நசை முடியவொட்டாதிறே. பிரிந்த விஷயந்தான் முடியவுமொட்டாது, தரித்திருக்கவுமொட்டாது; அர்ஜுநன் பின்பிருந்து எதிரிவரவுபட்டாப் போலே. (உன்னஞ்சனமேனியை யாட்டங்காணேன்) இருந்தார் ஜீவிக்கும் ஜீவநத்தைத் தான் ஜீவிக்கப்பெற்றேனே. * ஏழைபராவி தேட்டமாயிருக்கிறதாகாணு மிவளுக் கிப்போது.

(உன்) உன்னை நீதான் கண்ணாடிப்புறத்திலே கண்டறிதியே. கண்டாயாகில் "நம்மைப் பிரிந்தவர்கள் பிழையார்கள்" என்றிருக்க வேண்டாவோ. (மேனியை) ஸ்வரூபத்திலாதல் குணத்திலாதல் இழியுமவளன்றே, காமிநி உடம்பை யாசைப்படுமவளிறே! (ஆட்டங்காணேன்) அவ்வடிவோடே யென்முன்னே ஸஞ்சரிக்கக் காணப் பெறுகிறிலேன். "இதுகல்லா தொருபகலைக்கே" என்றான் (போவதன்றித்யாதி) உனக்குப்போலேயென்றிராதே கொள்ளா யெங்களுக்கும். நீபோயினால், நாழிகைமுப்பது சென்றாலும் மலையாளர் வளைப்புப்போலே யொருபடிபோராதாய்த்து. அது பகலின் ஸ்வபாவமல்ல (நீயகன்றால்) உன் ஸ்வபாவத்தாலே. பகலின் ஸ்வபாவமாகில் கூட விருந்தபோதும் போகாதொழியவேணுமிறே. கூடவிருந்தார் இரவு காணவொண்ணாதாப்போலேயாய்த்து, நீயகன்றால் பகல்போகாதபடி. அவன் கூடவிருந்தால் இரவு காணவொண்ணாதே; (க) நாரணனைக் கண்டேன் பகற்கண்டேனிறே.

(போவதன்றொருபகல்) என்று இதுதானும் சொல்லமாட்டாதேதாணு மவளிருக்கிறது; "கலவி செல்லாநிற்கச் செய்தே பிரிவை நினைக்கையாவதென்" என்றிறே அவளிருப்பது; "பிரியேன்" என்னவல்லன் என்றிறே பண்டே.

(*) உ-திருவ அ௩-

(பொருகயலித்யாதி) உன்போக்கை நினைத்துப் பாய்கிற கண்ணநீர் என்றால் தகையப்போகிறதில்லை. (நீரும்நில்லா) உன்னைத் தகையிலும் நீரைத் தகையப்போகிறதில்லை. பொருகிற கயல்போலே பாய்த்துப் பிரிவை நினைத்துத் தடுமாறுகிறபடி. அதுக்குச் செய்ய வேண்டுவதென்னென்ன.

(சாவதித்யாதி) இவ்விடைக்குலத்தில் இடைச்சிகளாய்ப் பிறந்த தண்ணியோமான வெங்களுடைய தனிமை சாவது. நீ போகிலும் போகிறாய், இருக்கிலுமிருக்கிறாய். இத்தனிமை நசிப்பது. " வனுக்கு நான் நூறுபிள்ளை பெறவேணும்" என்ற ஸாவித்திரியைப் போலே சொல்லுகிறாள். அன்றிக்கே, (தனிமைதானே - சாவது) எங்களுக்குத் தனிமையென்றும் விநாசமென்று மிரண்டில்லைகாண்; தனிமைதானே விநாசமென்னவுமாம். "நின்னலால் இலேன்" என்னுமவரிறே; (௧) "இறப்பதற்கேயெண்ணாது" என்றாரே அவரும். அன்றிக்கே, (தனிமை - சாவது) இத்தனிமை சாலப்பொல்லாதென்னவுமாம். இவ்வொருதலைக்காமம் போவது. கைக்கிளைத்தலைவி பொறையழிந்தாலெல்லாம் சொல்லப்பெறுமிறே. (௩)

நான்காம்பாட்டு.

தொழுத்தையோந் தனிமையும் துணைபிரிந்தார் துயரமு நினை
கிலைகோவிந்தாநின் * தொழுத்தனிற்பசுக்களையே விரும்பித் துறந்
தெம்மையிட்டவைமேய்க்கப்போதி * பழுத்தநல்லமுதின் சாற்று
வெள்ளம் பாவியேன் மனமகந்தோறு முள்புக் கழுத்த * நின்செங்
கனிவாயின்கள்வப் பணிமொழிநினைதொறு மாவி வேவால், (௪)

ப:— அநந்தரம், ஆஶ்ரிதரக்ஷண வ்யாபாரங்களை நீ [illegible] வெங்களைப் பொகட்டுப்போகாநின்றாய், நாங்களுன்னுடைய க்ருத்ரிமோக்திகளை நினைத்து க்லேஶியாநின்றோமென்கிறாள்.

(இ-ள்.) கோவிந்தா - கோபீஜநரக்ஷணத்தாலே கோவிந்தாபிஷேகம் பண்ணினவனே, தொழுத்தையோம் - உனக்கு [illegible] மைப்பட்ட வெங்களுடைய, தனிமையும் - தனிமையையும். துணை - துணையானவுன்னை, பிரிந்தார் - பிரிந்தவர்கள். துயரமும் - [illegible]

(௧) திருநெ-௧-

யையும், நினைகிலை - நினைக்கிறிலை, பிரிந்து தனிமைக்காற்றமைப்பட்ட வார்த்திபாராதே உன் - உன்னபிமாநமான, தொழுத்தனில் - தொழுவில் பசுக்களையே - பசுக்களையே விரும்பி - ஆதரித்து, எம்மை - ரக்ஷையகபேக்ஷமானவெங்களை, துறந்து - அநாதரித்து, இட்டு - பொகட்டு, அவை - அவற்றை, மேய்க்க - ரக்ஷிக்கைக்காகவே, போதி - போகாநிற்புதி. அதுக்குமேலே, பழுத்த - பரிபக்வமாய், நல்லமுதின் - தெளிந்த அம்ருதத்தினுடைய, இன்-இனிய, சாற்றுவெள்ளம் - ரஸத்தினுடைய வெள்ளமானது பாவியேன் பிரிவுக்கடியான பாபத்தையுடையவென், மனமந்தோறும் - நெஞ்சுபுடைதோறும், உள்புக்கு - புக்கு, அழுத்த - அழுந்தும்படியாக, நின் - உன்னுடைய, செ - சிவந்த கனிவாயில் - கனிபோலே போக்யமாயிருக்கிற திருப்பவளத்தில், கள்வம் - க்ருத்ரிமமான, பணி - தாழ்ந்த, மொழி - மொழிகளானவற்றை, நினைதொறும் - நினைக்குந்தோறும் ஆவி - என்ப்ராணன், வேம் - பரிதபியாநின்றது.

பணிமொழி-தாழ்வையுடைத்தானமொழி, சொன்னமொழியென்னவுமாம். (௪

ஆறு:—(தொழுத்தையோம்) அடியோங்கள் தனிமையையும் உன்னைப் பிரிந்து நாங்கள்படுகிற வ்யஸநத்தையு மொன்றும்பாராதே, உன்னுடைய பசுக்களையேயுகந்து எங்களைத்துறந்து பொகட்டு அவைமேய்க்கப் போதி என்ன; "உன்னுடைய கடாக்ஷமே தாரகமாயிருக்கிற நான் உன்னைப்பிரிந்து போகையாவதென்" என்றாப்போலே ஸாந்த்வரூபமாய் ப்ரேமகர்ப்பமாய் அதிமதுரமாயிருப்பன சிலபணிமொழிகளை யருளிச்செய்தருள; இவையிறே நினைக்க நினைக்க வென்னைமாய்க்கிறன வென்கிறாள். (௪)

ஈடு-அவ:—இவன்போக்கை நினைத்து நோவுபடப்புக்கவாறே, "உன்னைப் பிரிகைக்கு ஸம்பாவனையுண்டோ" என்று இப்புடையிலே ஸவிநயமாகச் சிலவார்த்தைசொல்ல, இவையிறே பென்னையழிக்கிறதென்கிறாள்.

(தொழுத்தையோம்தனிமையும்) பஞ்சலக்ஷம்குடியிற் பெண்களோம் கூடிப்படுகிற தனிமையிறே. தொழுத்தைமோதென்றும் அடிச்சியோமென்றும் - தாங்கள் தோற்றதோல்வி தோற்றச்சொல்லுகிறார்கள். (துணைபிரிந்தார்துயரமும்) துணைபிரிந்தாரென்று - உன்னைப் பிரிந்தாரென்றபடி. "துணையென்றால் த்விஷ்டமாயன்றுகா

ணிருப்பது" என்று தாச்சான்—இவர்களு மனனுக்குத் துணையாய், அவனு மிவர்களுக்குத் துணையாயன்றிருப்பது; துணையாகை ஒரு தலையிலே வ்யவஸ்திதமாய்த்து. துணையாவான் அவனெனுமதுவே யாய்த்து, அல்லாதாரடங்கலும் கழுத்துக்கட்டியாயாய்த்திருப்பது, (க) * வன்துணையிறே. தொழுக்கையோம் தனிமையும் தீர்க்கிறிலை, துணைபிரிந்தார் துயரும் தீர்க்கிறிலை, பிரிந்திருக்கும் காலங்களொன்றும் பிரிகிறதன்னையென்றும் பார்க்கிறிலை.

(கோவிந்தா) பசுக்களையு மிடையரையும் ரக்ஷிக்கைக்காகவேறே கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று. பிறவிப்பாதிப் பின்தொடர்ந்திறே. அதாவது - தன்க்ரீ ஆர்த்தையாயிருக்காலும், பசுக்களை விரும்பி அவற்றுக்குப்புல்லும் நீருமுள்ள விடத்தேத்தேடிக்கொடுக்கிறே. (நின்னித்யாதி) உனக்கு ராஜ்யம் [illegible] வேண்டுகிறதென். இரண்டு [illegible] (நின்தொழுத்தனில்) [illegible] ரக்ஷிக்கலாவது. உன்னைக் [illegible] இவர்களை [illegible] (பசுக்களையே) [illegible] யோகியாதிப்பது (விருத்தி) இவர்களை [illegible] கிடந்தாலும், கண்ணிலொப்பது. [illegible] நின்றவிதனப்பதாய் வாய்விலே [illegible]யாய்த்து.

இக்கிருக்குமோ [illegible] யாமிழப்பமையே. [illegible] "[illegible]" என்பராம். [illegible] வீடு. (நற்றி [illegible]) [illegible] நமவிக்கவிதன் [illegible]. ([illegible]) [illegible] தங்களைப் பொகவிடா [illegible] வீர்க்கும்போது [illegible], [illegible] இவர்களை நீயாயான்.

(அறவே [illegible]) [illegible] போகக்கடவை [illegible]

(க) தி வெ.

திருவாய்மொழி, ௧௦-ப, ௩-தி, ௪-பா, தொழுதை வ்யாக்யாநம். எங்க

களுடைய ரக்ஷணத்துக்கு ஸக்தியையும், (௧) "இடறவென் பிள்ளையைப்போக்கினேன்" (௨) "எற்றுக்கென்பிள்ளையைப் போக்கி னேன்" என்று வயிறுபிடிக்கவேண்டும்படியாயிருக்குமது ; எங்களுடைய ரக்ஷணத்தி லாயாஸப்படவேண்டா, கூடவிருக்கவமையும்.

(பழுத்தவித்யாதி) "நான்போகையாவதென், போனாற்றானுங் களைமறப்பதுண்டோ, என்னாற்றாமையுங்களுக்குண்டோ, நான்மாதா பிதாக்களுக்குப் பாரதந்த்ரனானால் அவர்கள் சொல்லிற்றுச் செய்ய வேண்டுகையாலே போகிறேனித்தனையன்றோ, போனாலும் நெஞ் சிங்கேயன்றோ" என்றாப்போலே சிலநீசபாஷணங்களைப் பண்ணி னான் ; இவைகிடா யெங்களைமறக்கவொண்ணாதபடி பண்ணுகிறது. பக்வமாய் அதிவிலக்ஷணமான வம்ருதத்தினுடைய வினிய சாற்று வெள்ளம்போலே போக்யமாம்படி சொல்லுகிற வார்த்தை யென்னு தல்; அன்றிக்கே, கலவியிலே யொருவகையைச் சொல்லிற்றாகவு மாம். அதாவது - வாகம்ருதமென்றபடி. (௩) "வாயமுதம் தந் தென்னைத் தளிர்ப்பிக்கின்றான்" என்னக்கடவதிறே.

(பாவியேன்) அம்ருதமே நஞ்சாம்படியான பாபத்தைப்பண்ணி னேன். பிரிவை நினைத்து "பாவியேன்" என்னுமிது விஷமமிறே. (மனமகந்தோறும்) ஹ்ருதயாவகாசந்தோறும் மறக்கவொண்ணாத படி யழுத்த, உன்னுடைய சிவந்தகனிபோலே யிருக்கிற வாயினு டைய (சள்வப்பணிமொழி) இச்சாற்றுவெள்ளத்துக் கூற்றுவாய் காணும். எழுதிக்கொள்ளுகிற தாழ்ந்த பேச்சுக்கள். பிரிவை நினைத்துச் சொல்லுகிற வார்த்தையாகையாலே, நெஞ்சையழிக்கக் கடவதாயிறே யிருப்பது; நினைவொன்றும் சொலவொன்றுமா யிருக்கை. (நினைதோறும்) "இவைதாரகமாமோ" என்னும் நினை வாலே நினைக்கப்புகுமே, அதுபாதகமாமே, பின்னையும் விடமாட் டாளே, இங்ஙனே யுருவச்செல்லுமித்தனை. (ஆவிவேமால்) தனக் காஸ்ரயமான ப்ராணனானது வேவாநின்றது. அக்நி ஆஸ்ரயாஸியா யிறே யிருப்பது.

[பழுத்தநல்லமுதின் சாற்றுவெள்ளமான - நின்செங்கனி வாயின் கள்வப்பணிமொழி - பாவியேன் மனமகந்தோறும், உள்புக் கழுத்த - நீ மறக்கவொண்ணாதபடி யழுந்தப்பண்ண, அவற்றை நினைக்கநினைக்க ஆவிவேவாநின்றது.] (௪)

---

(௧) பெரியாழ்-௩-௨-௯- (௨) பெரியாழ்-௩-௨-௨- (௩) பெரியாழ்-௧-௮-

ஐந்தாம்பாட்டு.

பணிமொழிநினைதொறு மாவிவேமால் பகல்நிரைமேய்க்கிய போயகண்ணு* பிணியவிழ்மல்லிகைவாடைதூவப் பெருமதமாலையும்வந்தின்றாலோ * மணிமிகுமார்பினின்முல்லைப்போதென் வனமுலைகமழ்வித்துன் வாயமுதந்தந்து * அணிமிகுதாமரைக்கையையந்தோவடிச்சியோந்தலைமிசைநீயணியாய். (ரு)

ப:—அநந்தரம். உன்னுடைய விஶ்லேஷத்தாலே யென்னை வாடைதொடக்கமானவை நலியாநின்றன, என்னார்த்தி தீரும்படி ஸம்ஶ்லேஷித்து ஆஶ்வஸிப்பிக்கவேணுமென்கிறாள்.

(இ - ள்.) பணிமொழி - நீ ஆஶ்வாஸகரமாகச் சொல்லுகிற வார்த்தைகள்தானே, பிரிவுக்குறுப்பாகையாலே. நினைதொறும்-நினைக்குந்தோறெல்லாம் ஆவி - நெஞ்சு, வேம் - வேவாநின்றது, பகல் பகலெல்லாம். நிரைமேய்க்கிய - நிரைமேய்க்கைக்காக, போய - போய்விட்ட, கண்ணு - க்ருஷ்ணனே, பிணி - கட்டிலேயகப்பட்டு, அவிழ் - விகஸிதமான, மல்லிகை-மதுவையுடைத்தான மல்லிகையை, வாடை-வாடையானது, தூவ - தூவாநிற்க, பெரும் - பெரிய, மதம் - செருக்கோடே, மத்தகஜம்போலே, மாலையும் - மாலை, வந்தின்று-வந்தநித்தலை, இநின்கையிலே யகப்படாதபடி, மணி - கௌஸ்துபாக்கமானது, மிகும்-மேலொளிவிஞ்சிவருகிற, மார்பினில் - திருமார்பில். முல்லைப்போது-முல்லைப்பூவானது, என் - என், வனமுலை-அழகியமுலையிலே, கமழ்வித்து - கமழும்படியாகப் பரிஷ்வங்கித்து, உன்வாயமுதம் - நிரதிசயரஸமான வுன்னுடையவாகம்ருதத்தை. தந்து - தந்து. அணிமிகு-அலங்காரோத்தரமாய் தர்ஶநீயமான, தாமரை - தாமரைபோன்ற, கையை-கையை, அடிச்சியோந்தலைமிசை - அடிச்சியோமான வென்தன் தலையிலே, நீயணியாய் - அலங்காரரூபமாக வைக்கவேணுமென்று அக்ராம்யமாக ஸம்ஶ்லேஷப்ரகார ஸூசகமாயிருக்கிறது, அந்தோ!-அந்தோ!. என்று மையை யுனக்கறிவிக்கவேண்டுவதே! என்று கருத்து. (ரு)

ஆறு:- (பணிமொழி) "பசுமேய்க்கப்போகாநிற்கச்செய்தே இப்படி படுகிறதென்" என்ன;

பசுமேய்க்கப்போனுயல்லையோ, பசுமேய்க்கப்போய் பகலு மெல்லாம் முடிந்து பிணியவிழ்மல்லிகைவாடைதூவப் பெருமத

மாலையும் வந்தணுகிடாய், ஈண்டைப்பகலெல்லா முன்னைப்பிரிந்தா லுள்ள வ்யஸநமெல்லாம் தீரும்படி யென்னை யொருக்கால் புல்கி, ம்ருதஸஞ்ஜீவநமாய் அம்ருதகல்பமான திருவார்த்தைகளாலே யென்னை யுஜ்ஜீவிப்பித்து, என்னுடைய வார்த்தியெல்லாம் போம் படி யுன்னுடைய வழகிய திருக்கைகளை யென்தலையிலே யொரு கால் வைத்தருளாயென்கிறாள்.

ஈடு-அவ,—“நான் ஸந்நிஹிதனாயிருக்க நீ யிப்படி படுகிற தென்” என்ன; நீ பசுமேய்க்கக்கடவையான பின்பு நீயும்போனாய்; நீ போனால் நலியக்கடவ ஸாந்த்யாதிபதார்த்தங்களால் நலிவுபடுகிற வென்னையாச்வஸிப்பித்தருள வேணுமென்கிறாள்.

(பணிமொழிநினைதொறுமாவிவேமால்) பிரிவை நினைத்து, “பிரியேன்” என்றுசொல்லுகிற வுன்வார்த்தைபோலே உன்னைப் பிரியாமைக்காகச் சொல்லுகிற வார்த்தையல்ல; உன்னது * கள்வப் பணிமொழி யாகையாலே யாய். இது அநுபவத்துக்குப் பாசுர மிட்டுச் சொல்லுகிறதாகையாலேயாய்,

நான்போனேனோவென்ன (பகலித்யாதி) பகலெல்லாம் பசு மேய்க்கப்போனாய். (கண்ணா) என்று ஸம்போதித்து, அவன்ற னக்கே “நீ போனாய்” என்கிறாளிறே! (மேய்க்கிய) மேய்க்க. (பிணி யித்யாதி) நீ போனால் பாதகமாகக்கடவ * மல்லிகைகமழ்தென்றல் தொடக்கமானவை மறுவலிடுகையாலே, நீ போனமை நிஸ்சிதமென் கிறாள். கட்டவிழ்கிற மல்லிகையினுடைய மணத்தை வாடையா னது தூவாநின்றது. ராவணன் ஸந்ந்யாஸி வேஷத்தைக்கொண்டு வந்தாப்போலே, வாடையானது குளிர்காற்றாய்வந்து நலியாநின்றது (தூவ) வெக்காயம் தட்டாமே கடக்கநின்று வீசா நின்றது;

(க) “ஸௌகந்திகாஸவலவஸ்ருஷ்ட: - பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட:” மந்தஜனானது முன்னே தலைப்பறை கொட்டவருமாபோலே, வாடையை முன்னடக்கவிட்டுக் கொண்டாய்த்து மாலைவருகிறது. இவ்வளவு மந்த்யாஸ்யமாலை கட்டிப்பவாடையாய் வாராநின்றதாய்த்து. (வந்தின்றுநோவா) வந்தணுகிடாய் - உடம்பிலே பட்டொழிந்தது கிடாய். பக்தருக்கு விட்ட அஞ்சாத்துக்கு அர்ஜுநனைப் பின்னை

(க) ரா கிஷ்-௧-

யிட்டு உன்மார்வையேற்றாப்போலே, நடுவேபுகுந்து கட்டிக்கொள்கிடாய். பெரிய கீர்த்தியையுடைய மாலையானதுவாகும் என்றதுசுகிறதல்ல, வந்தது. ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன.

(மணிமிகுமார்வினில்) ஸ்ரீகௌஸ்துபம் [illegible] உடையனான மார்வென்னுதல்; திருமார்வடங்க ஸ்ரீகௌஸ்துபத்தில் புகரேயாம்படியிருக்குமென்னுதல். கலவியிலும் கழற்றவேண்டாதபடியிறே ஸ்ரீகௌஸ்துபமிருப்பது; (க) "நிரதிசய [illegible] ஸ்பர்ஸ" என்கடவதிறே; இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு ஸ்தனம்போலேயாய்த்து அவனுடைய பும்ஸ்த்வத்துக்கு ஸ்ரீகௌஸ்துபம். புருஷோத்தமத்வ லக்ஷணமிறே. அம்மார்வில் முல்லைமாலையாலே யென்னுடையவழகிய முலையைப்பரிமளிதமாக்கி ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில் மாலையோடு வாசியின்றிக்கே போகோபகரணமா யிருக்கிறதாய்த்து.

தோளில்முல்லைமாலையின் பரிமளத்தை யென்முலைக் காக்கவேணுமென்கையாலே, அக்ராம்யமாகக் கலவியைச் சொன்னபடி; குளித்துப் பூச்சூட இருப்பாரைப்போலேயாய்த்து இம்முலைகள். இவை ப்ரஹ்மசாரிமுலையாகாமே, இம்மாலையில் பரிமளத்தாலே இவற்றை வாஸிதமாக்காய்; அம்மாலையில் பரிமளமித்தும் [illegible] மாகப் பண்ணவேணும். அம்மாலையில் பரிமளம் முலையிலேயாம்போது கலவியையொழியக்கூடாதிறே; (உ) "[illegible] ஸஞ்ஜ்ஞம்-இம்முகம்வநமாலாஸங்க்ராந்தஸ்ய" என்றாப்போலே. (வாயமுதம்தந்து) ஸம்ஶ்லேஷண [illegible] தமாகச் [illegible] வாகம் [illegible] சொல்லும் [illegible] போருவது.

(அணிமிக்காரி) உன்னுடைய [illegible] அதுக்குப் பரிஹாரமாக உன்னுடைய [illegible] லியே. தரீர்வாருகைக்கு இவர்களுடைய [illegible] கிறபடி. (அணிமிக்கதாமரைக்கை) [illegible] யிகையாம்படி. (ங) "[illegible]"

(க) கத்யம்- (உ) (ங) [illegible]

திருவாய்மொழி; ௧௦-ப, ௩-தி, ௬-பா, அடிச்சியோம் வ்யாக்யாநம். ஏறு

பூஷார்ஹா:" என்கிறபடியே தனக்குத்தானே ஆபரணமென்கிற கையை பசுமேய்க்கப்போனால் வருமளவு மெனக்கு தாரகமாகவுன் கையிலாபரணத்தைத்தா; "உன்கையிலாபரணத்தைத்தா" என்று அவர்களுக்கு அற்றுக்காட்டிவாங்கியிட்டு வைக்குமே; பசுமேய்க்கப் போகைக்குத் தானனுப்பித்தபடியைச் சொன்னானாகவுமாம், அத்தைச்செய்து அவன் போகப்புக்கவாறே சித்திலையாகிறாளிறே.

(தாமரைக்கையை) ஆபரணங்கள் மிகையாம்படியான கையை. (அந்தோ!) சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு வாரா யென்று சொல்லவேண்டுவதே யுனக்கு. (அடிச்சியோம்) அழகுக் குத் தோற்ற தோல்வி சொல்லுகிறாள். (தலைமிசைநீயணியாய்) ஆபரணத்துக்கு அக்கைபோலேயாய்த்து அக்கைக்கு இவள் தலை. "பாதபங்கயமேதலைக்கணியாய்" என்பது, "அடிச்சியோம் தலைமிசை நீயணியாய்" என்பதாய், காலைக் கையைப்பிடித்துக் காரியம் முற்று விக்கப் பார்க்கிறார்கள். (௧) "ஜீயத்ருதாநத்ஜஜுஷிஷ்யதி-மதீய மூர்த்தாநமலங்கரிஷ்யதி" என்றிறே இவர்களிருப்பது.

"இந்நிர்ப்பந்தங்களெல்லா மறிவாரார், வேணுமாகில் எடுத்து வைத்துக் கொள்ளாய்" என்றான்; சாலங்கொண்டு மோதிரமிடுவாரைப்போலே என்பேற்றுக்கு நான் யத்நம்பண்ணுமவளோ, நீயே மேல்விழுந்து தாக்கொள்ளுமவளன்றோ நான் என்றும் அத்தலையாலே பெறவிருக்குமவர்களிறே யிவர்கள்தாம். (அணியாய்) ஆற்றாமைபரிக்கநின்று அல்வழக்குச் செய்யோங்காண்; நீ செய்வுற்றை நாங்கள் செய்யவோ. (௫)

ஆறும்பாட்டு.

அடிச்சியோந்தலைமிசைநீயணியாயாழியங் கண்ணாவுன்கோலப்
பாதம்* பிடித்தது நடுவுனக்கரிவையரும்பலரது நிற்கவெம்பெண்மை
யாற்றோம்* வடித்தடங்கண்ணிணைநீரும் நில்லா மனமுநில்லாவெ
மக்கதுதன்னாலே * வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப் போக்குவே
மெமதுயிரழல்மெழுகிலுக்கே. (௬)

ப:—அநந்தரம், உன்னுடைய விஶ்லேஷமெங்களுக்கு க்லேஶமா யிருக்கும், எங்களார்த்தி தீரும்படி அகாதஸ்வபாவனான வுன்னுடைய திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணுமென்கிறாள். (௬)

(௧) ஸ்தோ-ரத்ந-

(இ - ள்) ஆழி-கடல்போலே அளவிடவொண்ணாத ஸ்வபாவத்தை யுடையையாய், அம்-தர்ஶநீயனான, கண்ணா-க்ருஷ்ணனே. உன்-உன்னுடைய, கோலப்பாதம்-அலங்காரோத்தரமான திருவடிகளை, அடிச்சியோம் தலைமிசை-அநந்யார்ஹைகளான எங்கள்தலைமேலே, நீயணியாய்-வைத்தருளவேணும்; வந்தால் செய்கிறதென்னவொண்ணாது, நடுவு-நீ போகிறகாரியத்துக்கு நடுவே, காற்கட்டாம்படி, அதுபிடித்து-அத்திருவடிகளைப் பிடித்து, அரிவையரும்-தங்கள் மேன்மை தலைபெற்றிருப்பாரும், உனக்கு-உனக்கு பஞ்சலக்ஷம்குடியும் சேஷமாகையாலே, பலர்-பலருமுண்டாயிருக்கும், உன்பரப்பைச் சுருக்கப்புகுகிறோமோ, அதுநிற்க-அதுநிற்க, எம்பெண்மை-எங்கள் ஸ்த்ரீத்வத்தை, ஆற்றோம்-ஆற்றி அடக்கமாட்டுகிறிலோம், உன்னைப்போலே வன்மையின்றியே அபலைகளான எங்களுக்கு ஆற்றாமையாலே, வடி - மாவடுவிற்பிளவுபோலே தர்ஶநீயமாய், தடம்-பெருத்து, கண்ணிணை-நீ ப்லாகிக்கும் கண்களிரண்டில், நீரும்நில்லா-நீரும் தகைவுபட்டு நிற்கிறதில்லை, மனமும்-நெஞ்சும், நில்லா - ஒருநிலையில் நிற்கிறதில்லை, அதுதன்னாலே-ஆசையாலே, எமக்கு, நின்-உன்னுடைய, பசுநிரை மேய்க்கப்போக்கு-பசுமேய்க்கப்போக்கு, வெடிப்பு-உத்வேககரமாயிராநின்றது. எமதுயிர்-எங்களாத்மாவானது அழல்-நெருப்பில், மெழுகில்-மெழுகுபோலே, உக்கு-உருகி, வேம்-வேவாநின்றது.

அபரிச்சேத்யமான கடல்போன்ற கண்ணையுடையவனென்றுமாம். (சு)

ஆறு:—(அடிச்சியோம்) உன்னுடைய அழகிய திருக்கைகளை அடியோங்களுடைய தலையிலேவைத்தருளிக் கிருபையாலே குளிரப் பார்த்தருளாயென்று பின்னையு மிங்ஙனே சொல்லுமளவில்;

“ஒருபகல்மாத்திரமேயன்றோ பசுமேய்க்கப்போய் நான் பிரிந்திருப்பது, இதுக்கிங்ஙனே படவேணுமோ” என்று அவன் சொல்ல;

பசுமேய்க்கப் போகையாவது உனக்கபிமதைகளா யிருப்பாரோடே நீ கலந்து பரிமாறுகையிறே; ஆனபின்பு, இங்ஙனே படவேணுமோ என்று சொல்லலாமிறே யுனக்கு, அதுநிற்க, நாங்களுன்னைப்பற்றியல்லது தரிக்கமாட்டாத பிறவி பிறக்கையாலே உன்னைப் பிரியில் நாங்கள் தரிக்கமாட்டோம், இக்கண்ணநீரும் நில்லாது,

நெஞ்சு தளராநின்றது, ஆதலால், நீ பசுநிரைமேய்க்கப்போகிற தெங்களுக்கொன்றும் பொறுக்கவொண்ணாது, எங்களுயிரானது விரஹாக்நியாலே வேவக்கிடாய்ப் புகுகிறதென்கிறாள். (௬)

ஈடு-அவ;—உனக்குப்போன விடமெங்கு மபிமதைகள் பலருளர். உனக்கொரு குறையில்லை, நாங்களுன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம், உன்போக்கான தெங்களுக்கு அஸஹ்யமென்கிறாள்.

(அடிச்சியோந் தலைமிசை நீயணியா யாழியங்கண்ணா) தோற்றாரை யிரக்கையாலே தடவவேண்டாவோ! (ஆழியங்கண்ணா) கடல்போலே ஸ்ரமஹரமாய் தர்ஸநீயமான கண். (நீயணியாய்) என்கிறவதினருகே, (ஆழியங்கண்ணா) என்கையாலே - திருக்கண்களாலே குளிரநோக்கவேணும்.

உங்கள்கையாலே ஸ்பர்ஸிக்கவேணுமென்றன்றோ நானிருப்பது. எனக்குப் போக்குண்டோ, போனால் உங்களை யொழியப்புறம்பு விஷயந்தானெனக்குண்டோ வென்ன; ஓங்காண் அதுகிடக்கிடாய், (உன்கோலமித்யாதி) உன்திருவடிகளைப் பற்றியிருப்பாரநேகர், உனக்குப் போனபோன விடமெங்கும் பெரியதிருநாளன்றோ (நடுவே) போகிறகார்யமொழிய நடுவே (அரிவையர்) தங்கள் பருவத்தாலே துவக்கவல்லவர். (பலர்) ஒருவரிருவரோ. (௧) "ஷோடஸஸ்த்ரீஸஹஸ்ராணி- ஷோடஸஸ்த்ரீஸஹஸ்ராணி" (௨) "பதினாறுமாயிரவர்தேவிமார்."

(அதுநிற்க) அதுகிடக்க. ஆனைக்கூட்டத்துக்குக் கதவிடப்புகுகின்றோமோ. (எம் பெண்மையாற்றோம்) எங்கள் ஸ்த்ரீத்வங்கொண்டாற்றமாட்டுகிறிலோம். நீ போனால் நாங்கள் ஜீவிக்கமாட்டோம்.

ஸ்த்ரீத்வம் ஸ்வரூபமானால் வருமளவும் வருந்தி தரிக்கவேண்டாவோவென்ன (வடித்தடங்கண்ணிணை நீரும்நில்லா) எங்களைப் பார்க்கமாட்டாயோ, ஜீவிப்பாருடைய லக்ஷணமுண்டோ எங்களுடம்பில். கூர்த்துப் பெருத்திருந்துள்ள கண்கள்நீர் மாறுகிறதில்லை. ஓராளுமொருநோக்கும் நேராம்படி இதொருகூர்மையே!,போக்யதையில் பரப்பு போக்தாக்க ளளவன்றியே யிருக்கும்படியே! என்று நீ வாய்வெருவும் கண்கள்படுகிறபாடுபாராய். (நீரும்நில்லா) நீநிற்கிலும்

(௧) வி-பு-ரு-௩௧- (௨) நாய்ச்சி-

எ அ திருவாய்மொழி, ௧௦-ப, ௩-தி, ௭-பா, வேமெமதுவ்யாக்யானம்

நீர்நிற்கிறதில்லை. உன்னைத் தகையிலும் நீரைத் தகையப்போகிற தில்லை.

நில்லாவாவதென், வருந்தித் தகையவேண்டாவோ வென்ன; ஊற்றைத் தகையவேணுமே இது நிற்கும்போதென்கிறாள் ஆனால் ஊற்றானநெஞ்சைத் தகையுமித்தனையன்றோ வென்ன (மனமுமில்லா) தைர்யபங்கம் பிறந்து நாங்கள் படுகிறபாடு பாராயோ. வருந்தி நெஞ்சைப்பிடித்து தரிக்கவேண்டாவோவென்ன (எமக்கு) நீயாக வேணுமே யதுக்கு - பிரிகைக்கும் பிரிவில் நெஞ்சிளையாமைக்கும். * யாமுடையாயன்றன் மனங்கல்லிறே.

(அது தன்னாலே) இப்படி மநஸ்ஸு ஶிதிலமாகையாலே. (வெடிப்பு நின்பசுநிரைமேய்க்கப்போக்கு) நீ பசுமேய்க்கப் போகிறவிது வெடிப்பு. வெடிப்பாவதென்னென்ன (வேமித்யாதி) எங்களுடைய ப்ராணனானது அக்நிஸகாஶத்தில் மெழுகிலுங்காட்டி உருகிவெந்து போகாநின்றது, உன் பசுநிரைமேய்க்கப் போக்கானது, வெடிப்பு - விநாசம், (௬)

ஏழாம்பாட்டு.

வேமெமதுயிரழல் மெழுகிலுக்க வெள்வளை மேகலை கழன்று வீழ * தூமலர்கண்ணிணை முத்தஞ்சோரத்துணை முலைபயந்தென தோள்கள்வாட * மாமணிவண்ணாவுன் செங்கமலவண்ண மென்மலரடி நோவநீபோய் * ஆமழ்ந்துகந்தவை மேய்க்கின்றன்றோடு அசுரர்கள்தலைப் பெய்யில்யவன்கொலாங்கே. (௭)

ப:—அநந்தரம், தர்ஶநீயமான ஸௌரத்தம்போலே ... படி ... பசுமேய்க்கப்போனால் அங்கே அஸுரர்கள் வரில் ... என்றென்று எங்களாத்மா பரிதபியாநின்றதென்கிறாள். (௮)

(இ - ள்.) வெள்வளை - வெளுத்தசங்குவளையும், மேகலை - அரையின்மேகலையும், கழன்றுவீழ - பொருந்தாமல் கழன்று விழும்படியாகவும், தூ - அழுக்கற்ற, மலர் - செவ்வித்தாமரைப்பூப்போலே, கண்ணிணை - நீவிரும்பின கண்களிரண்டும், முத்தம் - ஶோகாஶ்ரு பிந்துக்களானவை, சோர - அவிஶ்ரமாக ப்ரவஹிக்கவும், துணைமுலை - சேர்ந்தெழுந்து கொண்டாடும் முலைகளிரண்டும், பயந்து - விவர்ணமாய், என தோள்கள் -

என்தோள்கள், வாட - உபக்ரமொழிந்தகொடிபோலே வாடும்படியாக வும், மாமணி - ஶ்லாக்யமான நீலரத்நம்போலே முடிந்தாளலாம்படிபவ் யமான, வண்ணா - வடிவையுடையவனே, செங்கமலம் - சிவந்தகமலம் போலே, வண்ணம்-தர்ஶநீய மாய், மென்மலர் - புஷ்பஹாஸஸுகுமார மான, உன் - உன், அடிநோவ - திருவடிகள் நோவும்படி, நீபோய - பிரியில்தரிப்பதானநீபோய் எங்களைப்போலன்றியிலே, ஆ - பசுக்களை விலே, மகிழ்ந்துகந்து - அத்யந்தம்ஹ்ருஷ்டனாயாதரித்து, அவைமேய்க் கின்று - அவற்றைமேயாநிற்கிறவிடத்திலே, உன்னோடு-கலஹமிடுமவ ரோடே, அசுரர்கள்-அரிஷ்டதேநுகாதிகளாகிற அஸுரர்கள், தலைப்பெ ய்யில் - தலைப்படில், யவன்கொல் - என்வருகிறதோ, என்று, எமதுயிர் எங்களாத்மாவானது, அழல் - நெருப்பில், மெழுகில்-மெழுகுபோலே, உக்கு - உருகி, வேம் - வேவாநின்றது. (௭)

ஆறு :—(வேமெமதுயிர்) விரஹாக்நியாலே எங்களுயிர்வேவ, ஆஶ்ரயம் முடிகையாலே வளைகளும் மேகலையும் கழன்றுவிழ, உன் னைக்காணாமையாலே புதுக்கணித்த வெங்கண்கள் அருவிசோர்ந்து துணைமுலையயர்ந்து என் தோள்கள்வாட; அதின்மேலே, உன்திருமே னியும் அதிகோமளமான வுன் திருவடிகளும்நோவ, நீபோய், ஆமகி ழ்ந்துகந்தவைமேய்க்கின்று உன்னோடசுரர்கள் தலைப்பெய்யி லென் றாய்விளையக்கடவதென்கிறாள். (௭)

ஈடு-அவ: —நாங்கள் நோவுபட, உன்ஸுகுமாரமான திருவடிகள் நோவப்பசுமேய்க்கப்போனால், அங்கே அஸுரர்கள் கிட்டினாலென் றாய் விளையுமென்கிறாள்.

(வேமித்யாதி) உனக்கு பாவபந்தமில்லாமையாலே தெரியா விட்டால் எங்களுடைய தேசங் கொண்டறிந்தாலாகாதோ. (எமதுயிர் - வேம்) என்கையாலே உனக்கு அதில்லை என்றதாயிற்று. (வெள்வளை) சங்குவளை. விரஹாக்நிஸம்பந்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும். பிறரறியாதபடி பலகாலும் எடுத்திடுவது மேறுவதாலும், அவை நிராஶ்ரயமாக நில்லாதிறே-ஆகாரத்தில் தொங்காதிறே. அப்படிகாணுமுடம்பு க்ருஶமானபடி.

(துமலரித்யாதி) நாயகனைமாகியாலே சொன்னபடி. என், தன் கண்ணைத்தாரே ! நாயகனிப்படி சொன்னானேவென்னின்;(௧)"கண்க

---

(௧) திருவி ௬௭-

ளாயதுணைமலர்-காவியும் நீலமும் வேலும் கயலும் பலபலவென்றிருக்கும் என்றானிறே. (தூமலர்க்கண்ணிணை முத்தஞ்சோர) உனக்கோ ரபூர்வங்காணலாம், போகாதேகிடாயென்கிறாள். தாமரைப்பூவிலே முத்துப்பட்டது. நேத்ரபூதமான முத்திறே. அவனுக்குத் தோழிசொல்லச் செவிபேறு கேட்டுச் சொல்லுகிறாள். (௧) "ஞாலமெய்தற்குரியன வொண்முத்தும் பைம்பொனுமேந்திழையின" என்று கருத்தறிந்தபடியைத்தான் சொன்னானே.

(துணைமுலைபயந்து) நீசேர்த்தியழகு சொல்லிக்கொண்டாடும் முலைகளானவை வைவர்ண்யத்தை பஜியாநின்றன. அவனுடைய கோயிற்கட்டணமழிகிறதென்கிறாள். (எனதோள்கள்வாட) அவயவிபோனால் தோளிணை பின்னைவாடுமித்தனையிறே.

அப்ரயோஜநத்திலேநின்று பார்க்கிறதென், இதுக்கு முன்பு அவனிழவு சொன்னாள், மேல் தன்னிழவு சொல்லுகிறாள் (மாமணிவண்ணா) நீலரத்நம்போன்ற வடிவையுடையவனே. மா என்று கறுப்பு, இவ்வடிவைக்கொண்டே நீ போகிறது? வெய்யில் கானல் பொறுக்குமோ இவ்வடிவு. உன்னைப்பிரிந்தறியாமே. (உன்னித்யாதி) விகாஸாதிகளால் தாமரையை பொருபோலியாகச் சொல்லலாயிருக்கும், மார்த்தவத்துக் கொப்பில்லை

(நீபோய்) தன்காலாலே போகவேணுமென்னென்றிருக்கிறாள் காணும். (௨) "[illegible] அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்டகாந்" என்னுமவளிறே. போக்குத்தவிராவிட்டால் பின்னை வழிக்குக் கூடவாவது வழித்திருந்தால் போகவேண்டாவோ. (நீபோய்) குறைகொண்டு [illegible] திருமகனை வழிபோய் வழிவருகைக்கு; [illegible] பூசல்விளைக்குமவனிறே (ஆமகிழ்ந்து) [illegible] இருக்கிறயல்லையே பசுக்களை. (உகந்தவை மேய்க்கின்று) அவற்றின்பக்கலுண்டான விருப்பத்தாலே அவற்றையுகந்து போகிற்பது. (மேய்க்கின்று) மேயாநின்றவிடத்தில். அப்படியானால் அந்த (அஸுர) சித்ரத்திலே.

(உன்னுடைசுரர்கள்தலைப்பெய்யில்) கருபுகைபாரும் காலாக்நியும் கூடினாற்போலேயிறே. (யவன்கொலாங்கே) "ஜந்து- யமன்

(௧) திருவி-௧௧- (௨) ரா-அயோ-௨௭-௬-

திருவாய்மொழி, ௧௦-ப, ௩-தி, ௮-பா. அசுரர்கள் வ்யாக்யானம். அங்கொல்" எவன்கொலென்றபடி. அங்கென்னாய்விளையுமோ. நாமெங்கேனும்போகிலும் ஆரேனும்கிட்டிலும் வெற்றிநம்மதன்றோவென்னுமே அவன். (௧) "ஸர்வஸௌஹ்ருதெ ஸம்ருதெ யுத்தெ ஜயபராஜயௌ-அவ்யவஸ்தௌஹி த்ருஸ்யேதே யுத்தேஜயபராஜயௌ" என்கிறபடியே-யுத்தத்திலே ஜயாபஜயங்கள் அவ்யவஸ்திதமன்றோ; அதுமற்றைப்படியாகில் செய்வதென்னென்றஞ்சாநின்றேன். அவர்கள்கிட்டி லங்கென்னாய் விளையுமோ. அதுதன்வாயால் சொல்லமாட்டாமையாலே என்னாய் விளையுமென்கிறாள். (௭)

எட்டாம்பாட்டு.

அசுரர்கள் தலைப்பெய்யில்யவன்கொலாங் கென்றாழுமென்னா
ருயிரான்பின்போகேல் * கசிகையும்வேட்கையுமுள்கலந்து கல
வியுநலியுமென்கைகழியேல் * வசிசெயுன்தாமரைக்கண்ணும் வா
யும் கைகளும்பீதகவுடையுங்காட்டி* ஒசிசெய்நுண்ணிடையிளவா
ய்ச்சியர் நீயுகக்குநல்லவரோடுழிதராயே. (௮)

ப:— அநந்தரம், ஆகர்ஷகமான வுன்னுடைய அவயவங்களைக்காட்டி நீயுமுன்னபிமதைகளுமாக வென் ஸந்நிதியிலே ஸஞ்சரிக்கவமையும்; ப்ரமாதஸ்தலத்தில் போகாதே கொள்ளென்கிறான். (௮)

(இ-ள்.) அசுரர்கள் - ஆஸுரப்ரக்ருதிகள், தலைப்பெய்யில் - தலைப்பெய்வர்களாகில், யவன்கொலாங்கு - என்ன ப்ரமாதங்களுண்டாகிறனவோ. என்று - என்று, என்னாருயிர் - என்னாத்மாவானது, ஆழும் - கடலிலேபுக்காப்போலே ஆழங்காற்பட்டுக்லேசியாநிற்கும், ஆகையாலே, ஆன்பினபோகேல்-பசுக்களின்பின்பு போகாதேகொள், அதுக்குமேலே, கசிகையும் - ப்ராவண்யத்தால்வந்த வீடுபாடும், வேட்கையும்-அதுக்குமேலான அபிநிவேசமும், கலவியும்-அதுக்கநுரூபமாகக் கலந்த கலவியும், உள்கலந்து-என்னெஞ்சுக்குள்ளேகலந்து நலியும் - நலியாநிற்கும், என்-என்னுடைய, கைகழியேல் - கைகழியாதேகொள், நானுன்னை வளைத்துவைக்கிறேனல்லேன், வசிசெய் - வசீகரங்களாயிருக்கிற, உன் - உன்னுடைய, தாமரை - தாமரைப்போலேயிருக்கிற, கண்ணும் - திருக்கண்களையும், வாயும்-திருப்பவளத்தையும், கைகளும் - திருக்கை

(௧) ரா ஸு-௩௭-௫௩-

யையும், பீதகவுடையும் - திருப்பீதாம்பரத்தினுடைய வழகையும், காட்டி - காட்டி, ஒசிசெய் - ஸ்வபாவத்தாலும் ஸம்ச்லேஷத்தாலும் தளர்த்தியை விளைவிப்பதாய், நுண்ணிடை - நுண்ணிதானவிடையை யுடையராய், இளம்-முக்தமானபருவத்தையுடையராய், ஆய்ச்சியர்-ஸத்ருஶமான குலத்திலேபிறந்த இடைச்சியராய். இதெல்லாமுண்டானாலு மெங்களைப்போலன்றியே, நீயுகக்கும் நீயுகக்கும்படி, நல்லவரொடும்-விலக்ஷணர்களானவர்களோடுங்கூட, உழிதராய்-ஸஞ்சரிக்க வமையும்.

ஆற :—(அசுரர்கள்) அங்கே அஸுரர்கள் தலைப்பெய்யிலென் விளைகிறதென்று நடுங்காநின்றேன், பிரானே; ஆன்பின்போகேல், நீபோனால், உன்பக்கலுள்ள ஸ்நேஹமும், அந்தஸ்நேஹவிபாகரூபமா யுன்னைக்கண்டல்லது தரிக்கவொண்ணாத வபிநிவேஶமும், இப்போது கலக்கிறகலவியும் நலியும், என்னைக்கழியேலென்ன, பேசாதிருந்தவாறே பின்னையும், உன்னுடைய ஸௌந்தர்யாதிகளிலே யீடுபட்டு உனக்கபிமதைகளாயிருப்பார் யாவர் சிலர் அவர்களும் நீயும் கூட என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்க வமையுமென்கிறாள். (அ)

ஈடு - அவ;—நீபோனால் ஸப்ரமாதமென்றஞ்சாநின்றேன், உன்னைப்பிரியவும்மாட்டேன், பசுமேய்க்கை வ்யாஜமாக அபிமதவிஷயங்களை நினைத்துப்போகிறாயாகில் என்கண்வட்டத்திலே உனக்கபிமதைகளோடே ஸஞ்சரிக்கவேணுமென்கிறாள்.

(அசுரரித்யாதி) வெற்றியோடே மீண்டாலும் அதுக்குமுன்னே நான் தரைப்படுவன், நானுனக்குவேண்டாவோ வென்கிறாள். (ஆழும்) அழுந்தும்; அதுக்கு நம்மால் செய்யலாவதென்னென்ன (ஆன்பின்போகேல்) பசுக்களின்பின்பு போகாதேகொள். என் வழியேபோகப் பார்ப்பது காலிமேயாதேயிருந்து ஸந்த்யாவந்தநம் பண்ணப்போக என்னைக்கடவதோ ஸ்வதர்மாநுஷ்டாநம் பண்ணுவது ஸ்வஜநத்தைவிட்டோ.

ஜாத்யுசிததர்மத்தைத் தவிரப்போமோ, வருந்தி தரிக்கவேண்டாவோவென்ன; பிரிவில் தரிக்கலாம்படியோ நீ கலவியில் பரிமாறிற்றென்கிறாள் (கசிகையும்) ஸ்நேஹமும், (வேட்கையும்) மேன்மே லுண்டோட்டைக் கலவியிலுண்டான வபிநிவேஶமும், (கலவியும்) ஸம்ச்லேஷமும், (கசிகையித்யாதி) நீபண்ணுஸ்நேஹம், அதுகே யிருக்கச்செய்தே அகலவிருந்தாரைப்போலே மேன்மேலெனப்பண்ணுற

திருவாய்மொழி, ௧௦-ப, ௩-தி, ௮-பா, அசுரர்கள் வ்யாக்யாநம். அந மபிநிவேசமும், தலைதடுமாறாகக் கலப்பதான விளைவும், நீபோர நின்றவாறே ஹ்ருதயத்திலே புகுந்தநவியும்.

ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன (என்கைகழியேல்) நானுணத்தைக்குள்ளில் நின்றகலாதொழியவேணும். ஜாத்யுசித தர்மமநுஷ்டிப்பதென்னைமுடித்தோ; "போகாதொழியப்போமோ, புறம்பேயும் நமக்கபிமத விஷயங்களுண்டாயிராதோ, அவர்களுடனும் பரிமாறவேண்டி யிராதோ" என்றுண்டேலிவள் சொல்லுகிறது கேட்கைக்காக; எங்களுக்கு அந்நிர்ப்பந்தமுண்டோ, நீகைகழியப் போகாதொழியு மத்தனையன்றோ வேண்டுவது, நீ விரும்பியிருக்கு மவர்களோடே யென்கண்வட்டத்தே பரிமாறப்பாரென்ன.

ஆனாலவர்களை யழைத்துத் தருவாரார் என்ன (வசிசெயுன் தாமரைக்கண்ணும்) உனக்கு * தூதுசெய்கண்களுண்டாயிருக்க புறம்பேபரிகரந்தேடி அழைக்கவேண்டி யிருந்ததோ. இனிப் பொருந்தோமென்றிருப்பார் நெஞ்சுகளில் மறத்தைமாற்றி அவர்களை வசீகரித்துத்தரும் கண்களும், அந்நோக்கில் கருத்தை யாவிஷ்கரிக்கும்வாயும், அந்நோக்கிலும் முறுவலிலும் நேர்விழிக்கமாட்டாதே வ்ரீளையாலே கவிழ்ந்தவர்களை யெடுத்துக்கொள்ளுங்கைகளும், ஸ்பர்சத்துக்குத் தோற்றவர்களைக் கீழ்போகாதபடியாகத் தன்செல்லாமையாலே மேலே யெறட்டுக்கொள்ளுகிற திருப்பீதாம்பரமும். (௧) "வீதாம்பராயாஸஸ்ரீ - பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ" என்னக்கடவதிறே. (காட்டி) உனக்குப் புறம்பே யழைத்துத்தருவார் வேண்டியிருந்ததோ, பிடாத்தை விழவிட்டு வடிவைக்காட்டவமையாதோ.

(ஒசிசெயித்யாதி) பண்டே தொட்டாரோடே தோஷமான விடை. அதுக்குமேலே கலவியாலே துவண்டவிடையையுடையவர்கள். (இளவாய்ச்சியர்) உன்னோடொத்த பருவத்தையுடையவர்கள். வடிவழகாலும் பருவத்தாலு முன்னைத்துவக்கவல்லாரெத்தனைவர் கிடக்கிறது. நீ போகாநிற்க, இடையிலே தங்கள் பருவத்தாலே துவக்கவல்லாரநேகர். (நீயுகக்கும் நல்லவர்) வடிவழகுண்டானாலும் ப்ரயோஜநமில்லையே எங்களைப்போலே யிருக்கவொண்ணாதே, நீயுகக்குமவர்களாகவும் வேணுமே. நீ யுகக்குப்படி வில

(௧) பாகவ-௧௦ ௩௨-௨-

ஸ்த்ரீகளான வவர்களோடே பென்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்க வமையும். (௮)

ஒன்பதாம்பாட்டு.

உகந்தநல்லவரொடுமுழிதந்துன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோ
றும்* நாங்கள்வியக்கவின்புறுதுமெம்பெண்மையாற்றோம் எம்பெரு
மான்பசுமேய்க்கப்போகேல் * மிகப்பலவசுரர்கள்வேண்டுருவங்
கொண்டுநின்றுழிதருவர்கஞ்சனேவ* அகப்படிலவரொடும் நின்னோ
டாங்கேயவத் தங்கள்விளையுமென்சொற்கொள்ளந்தோ. (௯)

ப:—அநந்தரம், எங்களுக்குநாதனான நீ உன்னபிமதைகளோடே யெங்கள் ஸந்நிதியிலே வர்த்திக்கிறது எங்களுக்கு மிகவுமுகப்பு, போவதியாகில் கம்ஸப்ரேரிதரான வஸுரர்களுக்கு முனக்கும் பொல்லாங்கு விளையுமென்கிறாள். (௯)

(இ-ள்.) உகக்கும்-நீயுகக்கும்படியான, நல்லவரொடும்-நன்மையுடையவர்களோடே கூட, உழிதந்து-எங்கள் ஸந்நிதியிலே ஸஞ்சார விஹாரம்பண்ணி, அவர்களைப் பெறுகல், உன்றன் திருவுள்ளம்-உன் திருவுள்ளத்திற்பட்ட இடர்-துக்கங்கள். கெடுந்தோறும்-தீர்ந்து நீ ப்ரீதனும்போதெல்லாம் உன்னிலும்-அவர்களிலும், நாங்கள்-நாங்களும், வியக்க-மிகவும், இன்புறுதும்-உகப்புடையோமாவோம், அதுக்கடி நீ பிரிந்தால், எம்பெண்மை-எங்கள் பெண்மையை, ஆற்றோம்-ஆற்றமாட்டோம், அதுக்காக, எம்பெருமான்-எங்கள் ஸ்வாமியானவனே, பசுமேய்க்க-பசுமேய்க்க, போகேல்-போகாதேகொள், அதுக்குமேலே, கஞ்சனேவ-கம்ஸன் ஏவுவிப்ப, பலவசுரர்கள்-பலவஸுரர்களும் காமரூபிகளாகையாலே. வேண்டு-விரும்பும் உருவம்-ரூபங்களை, கொண்டு-கொண்டு, மிக-மிகவும், நின்றுழிதருவர்-ஸஞ்சரியாநிற்பார்கள், அகப்படில்-கையிலேயகப்படில், அவரொடும்-அவர்களோடும் நின்னொடு-உன்னோடும், ஆங்கே-அவ்விடத்திலே, அவத்தங்கள்-பொல்லாங்குகளான யுத்தங்கள், விளையும்-விளையாநிற்கும், உன்செருக்காலே உதாசரியாதே, என்சொல்-என்வார்த்தையை. கொள்-கைக்கொள்ள வேணும்; அந்தோ!-ஐயோ!, பிரிவார்வார்த்தையுங் கைக்கொள்ளவொண்ணாத பராக்கிருந்தபடியென்றாள்!.

வியத்தல்-ஆஶ்சர்யப்படுதல், உழிதருகை-ஸஞ்சரிக்கை; அவத்தம்-அநர்த்தம்-யுக்தமென்றுமாம். (௬)

ஆறு:—(உகக்கும்) உனக்கபிமதைகளாய் விலக்ஷணைகளாயுள்ளவர்களோடு திரிந்து உன்னுடைய திருவுள்ளத்தி லிடர்கெடுமளவில், நாங்கள் எங்களோடு ஸம்ஶ்லேஷித்ததிற்காட்டிலும் மிகவு மினியராவுதோம், வேறு சிலரோடே ஸம்ஶ்லேஷிக்கப் பொறுக்கமாட்டாத பெண்மைவேண்டோம், பலவஸுரர் கம்ஸப்ரேரிதராய் வேண்டின வடிவுகளைக்கொண்டு ஸஞ்சரியாநிற்பார், அவர்கள் கையிலே யகப்படில் அவர்களோடின்றே யவ்விடத்தில் பொல்லாங்குகள் விளையும், ஐயோ!, என்சொல்கொள்ளா யென்கிறாள். (௬)

ஈடு-அவ;—"உகக்குநல்லவரொடு முழிதராய்" என்று நான் போகாமைக்காகச் சொன்னவார்த்தை யித்தனையொழிய, உங்கள் ஸந்நிதியிலே நான் சிலரோடே பரிமாறுகை யுங்களுக் கநிஷ்டமன்றோவென்ன; எங்களோட்டைக் கலவியிற்காட்டில் திருவுள்ளத்தில் ப்ரியமே யெங்களுக்கு மிகவும் ஸுகம், ஆனபின்பு, ஸப்ரமாதமான தேசத்தில் போகாதொழியவேணு மென்கிறாள்.

(உகக்குமித்யாதி) எங்களைப்போலன்றிக்கே நீயுகக்கும் வைலக்ஷண்யத்தை யுடையவர்களோடே யெங்கள் கண்வட்டத்திலே ஸஞ்சரித்து, (உன்றனித்யாதி) நாமின்னுமோளாடு கலக்கப்பெற்றிலோமென்று உன் திருவுள்ளத்தில் வருமிடர்கெடுந்தோறும், (நாங்களித்யாதி) விஸ்மயத்திலேயாதல், மிகுதியிலேயாதல் இடக்கிறதுவியப்பு. புறம்புள்ளாரைப்போலன்றியே உன்னுகப்பே ப்ரயோஜநமானநாங்கள் மிகவுமுகப்புதோம். எதிற்காட்டிலென்னில்; எங்களுடன்கலக்குமதிற்காட்டிலென்னுதல்; அன்றிக்கே, நீயவர்களோடே கலந்தால் உனக்குப் பிறக்கும் ஆநந்தத்திற்காட்டி லென்னுதல்.

நானிப்படி செய்தால் நீங்கள் மிகவு மின்புறுவதாகச்சொன்ன விதுகூடுமோவென்ன (எம்பெண்மையாற்றோம்) உன்னுகப்புக்குப் புறம்பாய்வரும் ஸ்த்ரீத்வம் நாங்கள்வேண்டோம், நீ யுகந்தாரை உன்னை யுகக்குமவர்களல்லோங்காண் நாங்கள்; உன்னைத் தனித்துகப்பாள் மூக்கறைச்சியன்றோ. (எம்பெருமானித்யாதி) உனக்கெழுத்துவாங்குகிறோம், நீ பசுமேய்க்கப்போகாதொழியவல்லையே. நான்றான் போகாநின்றேனே, ஸ்வதர்மாநுஷ்டாநத்துக்காகப்போறேற்

றான் வருவதென்னென்ன; வருவதுசொல்லுகிறான் (மிகவித்யாதி) பலவசுரர்கள் வேண்டின வடிவுகொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்கிறார்கள்; ஸ்ரீப்ருந்தாவநத்திலெழும் பூண்டுகளடங்க அஸுரமயமாயன்றோ விருப்பது.

(வேண்டுருவங்கொண்டு) நீயுகக்கும்வடிவைக்கொண்டென்னுதல், (காமரூபிகளாகையாலே) உன்னை நலிகைக்கீடான வடிவைக் கொண்டென்னுதல், (கஞ்சனேவ) கம்ஸப்ரேரிதராய் வருகையாலே "தோற்றுப்போகிலும் அங்குக்கொலை தப்பாது" என்று மேல்விழுவர்கள். ஆரேவிலென், ஆர்மேல்விழிலென், நாம் புக்கபோரிலே வெற்றிகொண்டன்றோ மீளுவதென்ன (அகப்படில்) அதுமற்றைப்படியாகிற்செய்வதென். யுத்தத்தில் ஜயாபஜயங்கள் அவ்யவஸ்த்திதமன்றோ.

ஆனாற்றான் வருவதென்னென்ன (அவரித்யாதி) அவர்களும் நீயுமானவிடத்திலே பொல்லாங்குகள் விளையும்; இப்படி சொன்னவிடத்திலும் ஆனைக்குப்பாடுவாரைப்போலே அநாதரித்திருந்தான் (என்சொற்கொள்) அநாதரியாதே, நான்சொல்லுகிறவார்த்தையை புத்திபண்ணாய். (அந்தோ) எங்களையறியாவிட்டால் உன்னையுமறியாதொழிய வேணுமோ. (௯)

பத்தாம்பாட்டு.

அவத்தங்கள்விளையுமென்சொற்கொளந்தோவசுரர்கள்வன்கையர்கஞ்சனேவ * தவத்தவர்மறுகநின்றுழிதருவர்தனிமையும்பெரிதுனக்கிராமனையும் * உவர்த்தலையுடன்றிரிகிலுமென்றனெஞ்சமென்றுமுறவென்னுடையாவிவேமால் * திவத்திலும்பசுநிரைமேய்ப்புகத்திசெங்கனிவாயெங்களாயர்தேவே. (௧௦)

ப:—அநந்தரம். ஆஸ்ரிதரானகோபர்க்கு நிரதிஶயபோக்யனான நீ தனியே அஸுரர்கள் வர்த்திக்கிறகாட்டிலே வர்த்தியாநின்றாய், என்னெஞ்சு வேவாநின்றதென்கிறான். ௧௦)

(இ - ள்.) செ-சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய் - அதரஶோபையையுடையாய், எங்கள்-எங்கள் குலத்திலுள்ள, ஆயர்-இடையர்க்கெல்லாம், தேவே-போக்யமான ஸ்வாமியானவனே, வன்கையர்-

ப்ரபலரான, அசுரர்கள்-அஸுரர்களானவர்கள், கஞ்சனை-கம்ஸனை, தவத்தவர் தப:பரரானருஷிகள், மறுக-"உனக்கென் வருகிறதோ!" என்று நெஞ்சு கலங்கும்படி நின்றுழிதருவர்-ஸஞ்சரியா நிற்பர்கள், உனக்கு-உனக்கு, தனிமையும்-அஸஹாயதையும், பெரிது - குவாலாயிருக்கும்; இராமனையும்-ப்ரபலரான நம்பி மூத்தபிரானையும், உவர்த்தலை - உன் ஸ்வைரவிஹாரார்த்தமாக இனிமையற்று அவனோடுடன் பாடனல்லையாய், உடன்திரிகிலையும் - கூடத்திரிவதும் செய்கிறிலை, இவ்வளவில், அவத்தங்கள் - பொல்லாங்கு, விளையும் - விளையும், என்றென்று - என்றுபலகாலும் நினைத்து, என்னுடையாவி - என்நெஞ்சு, ஊடுற உள்ளுற வேம்-வேவாநின்றது. அந்தோ! - ஐயோ!. என்சொல்- என்வார்த்தையை கொள் - கேட்கவேணுங்காண், திவத்திலும் - பரமபதத்திலிருப்பிலுங் காட்டில், பசுநிரைமேய்ப்பு பசுமேய்ப்பை, உகத்தி-உகப்புதியாகாதே.

"மாயையினால்" என்கிற கணக்கிலே அங்கிருக்கும்போதும் இங்கே யுகப்புதியென்றுமாம் (௧௦)

ஆறு:—(அவத்தங்கள்) பலவான்களான வஸுரரைக் கம்ஸனை "உனக்கென் வருகிறதோ!" என்று ருஷிகளும்கூடக் கலங்குவர்கள், அவன்ஸந்நிதியிலே தீமைசெய்யவொண்ணாதென்று இராமனோடுகூடத்திரிகிறதும் செய்கிறிலையென்று மிகவும் என்னாத்மா வேவாநின்றது.

"நாம் போகிலன்றோ பயப்படவேண்டுவது, இதென்ன ஸ்நேஹந்தான்" என்று முறுவல்செய்ய; திருநாட்டிலும் பசுநிரைமேய்ப்புகந்தி ஆயர்தேவே; ஆனபின்பு, போனாயேயல்லையோவென்கிறாள்.

ஈடு-அவ;—முன்கைமிடுக்கரான வஸுரர்கள் கம்ஸப்ரேரிதராய் ஸஞ்சரிக்கிற காட்டிலே, நம்பிமூத்தபிரானையுமொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும் நோவுபடாநின்றேனென்கிறாள்.

(அவத்தங்களித்யாதி) அநுஷ்டானபர்யந்தமாக வேணுமென்றிருக்கவேண்டா, சொன்னவார்த்தையை ப்ரதிபத்திபண்ணவமையும். (அந்தோ) அநுஷ்டானகௌரவத்தாலிழியாதொழிகையன்றிக்கே என்வார்த்தையாக வமைவதே கொள்ளாமைக்கு!

(அசுரரித்யாதி) ஜந்மத்தால் தண்ணியருமாய், தாங்கள் பலருமாய், முன்கை மிடுக்கருமாயிருப்பார்கள்; அதுக்குமேலே, துஷ்

ப்ரக்ருதியான கம்ஸனேவவாய்த்துவருவது. (தவத்தவர் மறுகநின்றுழிதருவர்) என்னையிறே யுனக்குவிடலாவது; நீ நல்லவர்கள் குடல் மறுகும்படி ஸஞ்சரியாநிற்பர்கள்; தபோநிஷ்டரான ருஷிகள்; ஸ்வரக்ஷணத்துக்கு உன்கைபார்த்திருக்குமவர்கள்; தபோவிக்நத்தாலே கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்கள், (க) "ரக்ஷணீயாஸ் த்வயா ஶஶ்வத் — கர்ப்பபூதாஸ் தபோதநா:" என்றும், (உ) "வஹூநி பஹுஶோ ஶரீராணி — ஏஹி பஶ்ய ஶரீராணி" என்றுமிருக்குமவர்கள். "அவர்களால் உனக்கென்வருகிறதோ" என்று கலங்கவென்றுமாம். அன்றிக்கே, ஸ்ரீநாரதபகவான், ஸ்ரீஸுக்ரீவமஹாராஜர், பெரியாழ்வார், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானாரைச்சொல்லிற்றுதல்.

ஆனால் ஸ்நேஹிகளானவர்களுடைய விரோதியைப் பின்னைப் போக்கவேண்டாவோவென்ன (தனிமையும்பெரிதுனக்கு) உன்கால் நெடுக நெடுகத் தனிமையே மிக்குவிட்டதேயுனக்கு. (௩) "ஏகதா க்வசி நாராமம் க்ருஷ்ணஸ்ஸௌஹார்த்தலம்பட: - ஏகதாஹி விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ" என்று-நம்பிமூத்தபிரானை யொழியவே ஸஞ்சரிக்குங்காலம் பெரிதுனக்கு. (இராமனையுமுவர்த்திலை) "நம்பிமூத்தபிரான் ஸந்நிதியில் தீம்புசெய்யவொண்ணாது" என்று அவனுடனும் நெஞ்சு பொருந்தி வர்த்திக்கிறிலை.

(உவர்த்திலை) உவர்த்தலையுடையை. (உடன்திரிகிலையும்) நெஞ்சில் பொருத்தமில்லாவிட்டால், தூரக்கிலே கண்ட பெரிகளுக்கு "இவர்களிருவரும் கூடித்திரியாநின்றார்கள்" என்னும்படி ஒக்கத்திரிவதும் செய்கிறிலை. (என்றித்யாதி) நீபோகிறதுவென்றல்ல, நம்பிமூத்தபிரானுடன் கூடத்திரிகிறிலையென்றாய்த்து என்னுடைய ஹ்ருதயம் மறுபாடுருவவேவுகிறது. (உரு ரு) உள்ளுறவென்றபடி. என்னுடைய ஹ்ருதயமானது வேவாநின்றது.

இப்படி நிர்ப்பந்திக்கைக்கு நானிவனிருப்பைக் குலைத்துப் போகாநின்றேனோவென்ன (திவத்திலும் பசுநிரைமேய்ப்புகந்தி) ஆமாம், நீ ஓரோ விருப்புக்கள் குலைத்துக்கொண்டு போகப்பாரியாநிறபரம பதத்தி லிருப்பைக் குலைத்தன்றோ பசுநிரைமேய்க்கப் போந்தது.

(க) ரா-ஆ-க-உக-
(உ) ரா-ஆ-சு-கரு-
(௩) வி பு-ரு எ-க-

அங்கேயிருக்கவும் பெற்றதில்லை, அங்குத்தின் றும்போந்தது பொல்லா தாகச் செய்தகென் றிருக்கிறாள். அங்கேயிருந்தாலுகில் இங்கென் வாழ்ந்தெறியவேண்டாவே. நாம் பெறுவோம் இழப்போம் இவ்வஸ்து தானழியா தொழியலாய்த்தே.

அவர்களைவிட்டும் பசுக்களை விரும்பக்கடவதீ எங்களை யுபேக்ஷிக்கச் சொல்லவேணுமோ. அங்குநின் றுட்போந்திலோம் என்ன வொண்ணுதே அவனால். "இதொருப்ரேம ஸ்வபாவமிருந்தபடி யென்!" என்று ஸ்மிதம்பண்ணினன் (செங்கனிவா யெங்களாயர் தேவே) அதிலே யீடுபடுகிறார்கள். "அவ்விருப்புக்குலைந்து போந்தமையுண்டு, உங்களைவிட்டுப் போவேனே" என்று ஸ்மிதம்பண்ண; இவர்களும் வாய்கரையிலே யழுந்துகிறார்கள். (௧௦)

பதினொன்றும்பாட்டு.

செங்கனிவாயெங்களாயர்தேவத் திருவடிதிருவடிமேல்* பொருனற்சங்கணிதுறைவன்வண்டென்குருகூர் வண்சடகோபன்சொல் லாயிரத்துள்* மங்கையராய்ச்சியராய்ந்தமாலை யவனோடும்பிரிவதற் கிரங்கி * தையலங்கவன்பசுநிரைமேய்ப்பொழிப்பா னுரைத்தன விவையும்பத்தவற்றின்சார்வே. (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பகவல்லாபத்தை யருளிச்செய்கிறார். (௧௧)

(இ - ள்.) செ சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய்-திருவதரத்தையுடையனாய், எங்கள்-எங்களுக்கு போக்யபூதனாய், ஆயர்தேவு-அப்படியே ஆயர்க்குபோக்யபூதனாய், அத்திருவடி திருவடிமேல்-அவர்களுக்கு ஸ்வாமியுமான வவன்திருவடிகளின்மேலே, பொருனல்-திருப்பொருனலில், சங்கணி-சங்குகள்சேரும், துறைவன்-துறையையுடையராய், வண்-ஸம்பத்தையும், தென் குருகூர்-அழகையுமுடைத்தான திருநகரிக்கு நிர்வாஹகராய், வண்சடகோபன்சொல்-உதாரரான ஆழ்வாரருளிச்செய்த, ஆயிரத்துள்-ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, மங்கையர்-யௌவநஸ்வபாவைகளான, ஆய்ச்சியர்-இடைச்சிகள், ஆய்ந்தமாலை-அநுஸந்தித்ததொடையாய், அவனொடும்-அவனோடு, பிரிவதற்கு-பிரிகிறதுக்கு; இரங்கி-லேசித்து, அங்கு-அத்திரளிலே, தையல்-ப்ரபலையா

யிருப்பாளொரு இடைப்பெண்பிள்ளை, அவன்-அவன், பசுநிரைமேய்ப்பு - பசுநிரைமேய்க்கையை, ஒழிப்பான் - ஒழிக்கைக்காக, உரைத்தன- உரைக்கப்பட்டனவாயிருக்கிற, இவையும்பத்து-இவைபத்தும், அவற்றின்-அவர்களாய்ந்த மாலைகளின் பலமான வவனுடைய ஸம்ச்லேஷமே பலமாம்படி, சார்வு-சேர்ந்தன.

அல்லாத திருவாய்மொழிகளின் பலமே யிவற்றுக்கும் பலமாய்த்தினவென்றுமாம்; இவையும் அல்லாததிருவாய்மொழிகளில் சார்வதே! என்று இதினுடைய வைலக்ஷண்ய ஜ்ஞாநமே பலமாச்சுதாகவுமாம்.

இது எண்சீராசிரிய விருத்தம். (௧௧)

ஆறு;—(செங்கனிவாய்) செங்கனிவாயெங்களாயர் தேவத்திருவடி திருவடிமேல் பொருநல் சங்கணிதுறைவனுயிருந்த வண்டென்குருகூர் வண்சடகோபன்சொன்ன வாயிரத்துள், மங்கையராய்ச்சியராய்ந்தமாலை யவனொடும் பிரிவாற்றாமையாலே தையல் பசுநிரைமேய்ப்பொழிப்பான் சொன்ன விப்பத்து, அவன்திருவடிகளைச் சேர்விக்குமென்கிறார். (௧௨)

ஈடு-அவ;—நிகமத்தில், அவனை "பசுநிரைமேய்க்கப்போகவேண்டா" என்று நிஷேதித்த பாசுரமான வித்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார்.

(செங்கனிவாயித்யாதி) அவ்வயிரவுருக்கான முறுவலாலேயெங்களைத் தோற்பித்தாப்போலே, தன்பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த ஸர்வஸ்வாமி திருவடிகளிலே சொல்லிற்று. செங்கனிவாயென்கையாலே—தங்களைத் தோற்பித்தபடி சொல்லிற்று; ஆயர்தேவென்கையாலே—தன்பருவத்திலுள்ளாரைத் தோற்பித்தபடி சொல்லிற்று; (௧) "வ்ருத்தாநாம் ஸ்த்ரீணாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" - பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" (அத்திருவடி திருவடிமேல்) அந்த ஸர்வஸ்வாமியானவன் திருவடிகளிலே. அவன் சேஷித்வத்தைக் காட்டிக்கொடுத்தான்; திருவடிமேலென்கையாலே—இவரும் சேஷத்வத்திலே நின்றார்.

(பொருநற்சங்கணிதுறைவன்) தாமிருந்தவிடத்திலே ஸத்துக்களடங்கலும் வந்து சேருமாபோலே யாய்த்து, திருப்பொருநலில்

(௧) ரா-அயோ-௩-உஎ-

சங்குகள்வந்து சேரும்படி. (மங்கையரித்யாதி) அவனோட்டைப் பிரிவு பொறுக்கமாட்டாமையாலே ஒருபருவத்தி லிடைப்பெண்க ளநுஸந்தித்ததொடையாய். (தையலித்யாதி) "ஊரைபோலேயெல் லாரும் இரண்டுவார்த்தை சொன்னால் செவிப்படாது" என்று பார்த்து, அவனுக்கு மறுக்கவொண்ணாதபடி நப்பின்னைபிராட்டி யுடைய தரமுடையாளொருத்தி பசுமேய்க்கப்போகாமே மீட்கைக் காகச் சொன்னவை யாய்த்து. "அடிச்சியோம்" என்றும் "தொ ழுதகையோம்" என்றும், "ஆழுமென்னாருயர்" என்றும் "என் சொற்கொள்" என்றும் சொன்ன பன்மைக்கும் ஒருமைக்குமெல் லாம் சேருமிறே.

(இவையும்பத்தவற்றின்சார்வே) அவையென்கிறது - கீழில் திருவாய்மொழிகளையாய், "அவற்றினருகே இதுவுமொரு திருவாய் மொழியே!" என்று ஆஶ்சர்யத்திலேயாக்கியாய்த்து ஜீயருளிச் செய்ததும் வ்யாக்யானம் பண்ணிற்றும். அன்றிக்கே, (இவையும் பத்தவற்றின்சார்வே) கீழிற்றிருவாய்மொழிகளுக்குச் சொன்னபலம் இதுக்கும் பலமென்றதாகவுமாம். அன்றிக்கே, அவையென்கிறது— "மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை" என்கிறவற்றையாய், இவையு மவற்றோடொக்கும், அதினுடைய பலமே இதுக்கும் பலம். அது நிவர்த்தகமாகி விதுக்கும் பேறுண்டாம். அவர்கள் "நீபோகாதே கொள்" என்ன, அவன் தவிர்ந்து அவர்களுடனே கலந்தாப்போலே, இதுகற்றாரும் அவனோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர்.

[செங்கனிவாயெங்களாயர்தேவு-அவனொடும் பிரிவதற்கிரங்கி-மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை-தையல் அங்கவன்பசுநிரைமேய்ப் பொழிப்பானுரைத்தன - அத்திருவடிதிருவடிமேல் பொருநல் சங் கணிதுறைவன் வண்டென்குருகூர் வண்சடகோபன் சொல்லாயிரத் துள்-இவையும்பத்தவற்றின்சார்வே] என்றந்வயம். (௧௧)

பத்தாம்பத்து மூன்றாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

நான்காந்திருவாய்மொழி—சார்வே - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(சார்வே) இப்படி ப்ராஸங்கிகத்தை முடித்து, * பத்துடையடியவரிலே ப்ராரப்தமான பக்தியோக ஸௌலபத்வத்தை நிகமிக்கிறார்.

ப:—நாலாந்திருவாய்மொழியில், கூடவிருக்கச்செய்தே ஈஶ்வரனுடைய விஶ்லேஷஶங்கைபண்ணும் தமக்குப் பிறந்த ப்ரேமாதிஶயத்தாலே அவனும் விஶ்லேஷ ப்ரஸங்கமில்லாதபடி ஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தைத் தெளிவிக்க அத்தாலே ஸந்துஷ்டராய், தன்பக்கல்பக்தியுக்தராயிருப்பார்க்கு ஸௌலபனாயிருக்கும்" என்றறுதியிட்டு, அந்தபக்திலப்யத்வோபபாதகமாக; அவனுடைய பரத்வபோக்யத்வ விஶிஷ்ட பவ்யத்வத்தையும், அதுக்கடியான ஶ்ரிய:பதித்வத்தையும், அநபாயகத்வபூர்த்தியையும் ஆஶ்ரிதரக்ஷணஸ்தைர்யத்தையும், அநந்யகதிஸௌலபத்வத்தையும், அதிஶயித ஸௌஶீல்யத்வத்தையும், போக்யவிக்ரஹத்வத்தையும், நித்யாநுபாவ்யமான ரக்ஷகத்வத்தையும், தத்த்வயாதாத்ம்ய ப்ரகாஶகத்வத்தையும், அஸாதாரண ஜந ப்ராப்யத்வத்தையு மநுஸந்தித்து ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் தமக்குப் பிறந்த பக்தியானது போகோபகரணமாய்க்கொண்டு ப்ராப்யாந்தர்க்கதமான ப்ரகாரத்தை யநுஸந்தித்து ப்ரீதராகிறார் *

ஈடு-அவ;—தம்மைப்பிரிய நினைவின்றிக்கேயிருக்க அதிஶங்கையாலே பிரிந்தார்படும் வ்யஸநத்தைப்பட்டு, அத்தாலே யவஸந்நரானவரை, "உம்மை யொருநாளும்பிரியேன்" என்று அவனாஶ்வஸிப்பிக்க, அத்தாலே தரித்து மிகவும் ப்ரீதரானார் கீழ். முதற்றிருவாய்மொழியிலே, தத்த்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லிற்றது; இனி அந்த தத்த்வந்தானே ப்ராப்யமாயிருக்குமிறே. அந்த ப்ராப்யவேஷத்தையும், ப்ராப்திபலமான கைங்கர்யத்தையும், "படமுடையரவிற் பள்ளி பயின்றவன்" என்றும் "கடைத்தலைசீய்க்கப்பெற்றால்" என்றும் அநுஸந்தித்தார் * கெடுமிடரிலே; அந்த ப்ராப்யம் அப்போதே கைபுகுராவிடுமானாலும் கொண்டாடப் பிரிந்துபோந்த வாஸநையாலும் வெருவி யவஸந்நராக, இவர்க்கு ப்ராஸங்கிகமாகப் பிறந்த வ்யஸநத்தை யநுஸந்தித்து அவனும் ஆஶ்வஸிப்பிக்க, ஆஶ்வஸ்தராய் நின்றார் * வேய்மருதோளிணையிலே.

ஆக; முதல் திருவாய்மொழியிலே - தத்வவிஷயமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லி, அவ்வஸ்துதானே ப்ராப்யமாயிருக்கையாலே அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக் குபாயமான பக்தியோகத்தை *வீடுமின் முற்றத்தாலே சொல்லி, அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் என்று அவன் ஸௌலப்யத்தை *பத்துடையடியவராலே சொல்லி, ஆக *வீடுமின் முற்றத்திலும் *பத்துடையடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வரூபாநுரூபத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி, அத்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தமாகச் சொன்ன குணங்களைப் பராமர்சியா நின்றுகொண்டு, தாம் தம்முடைய பேற்றுக் குபாயமாக முதற்றிருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறாரிதில்.

இவ்விரண்டுகோடியும் இவர்க்குண்டாயிருக்கச் செய்தேயும், தம்முடையபேற்றுக் குடலாக விவக்ஷித்திருப்பது ப்ரபத்தியையிறே. முதல் திருவாய்மொழியிலே ப்ரபத்திக்கு ஸூசகமான ஸப்தமுண்டோ வென்னில்; "அருளினன்" என்றாரிறே. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்த வித்யையான பக்தியல்ல, அதுதன்னையே பார்க்குமென்று அபஸூத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும். அதுதானிவ்வாழ்வாருடைய ப்ரபாவத்தாலே கூடாதோவென்னில்; அது இவருடைய உக்திகளோடு விரோதிக்கும்.

" அருளினன் " என்கிற விப்புடைகளிலேயிறே யிவருடைய வுக்திகள். (க) " உபயபரிகர்மித ஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திக பக்தியோகைகலப்ய: " என்று ஜ்ஞாநகர்மங்களாலே ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்குமதிறேபக்தியாவது; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதுக்கநந்தரமான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாயிருக்கு மிவர்க்கு.

இனித்தான், இவர்வழியே போய் இவருடைய பேறே பேறாக நினைத்திருந்த பாஷ்யகாரரும், ப்ரபத்தியைப்பண்ணி, பின்னை பக்தி தொடங்கி ப்ரார்த்தித்தாரிறே. அவனுபாயமானாலும் இவனுக்கு ருசியுண்டாய் ப்ராப்யஸித்தி யுண்டாகவேணுமே, இல்லையாகில் புருஷார்த்தமாகாதே, ப்ராப்ய மின்னதென்று நிஷ்கர்ஷித்து, அந்த

க ஆத்மஸித்தி

ப்ராப்யருசி கண்ணழிவற வுடையவனுக்கிறே அவன்ப்ராபகனாவது; ஆகையாலே, இவருடைய பக்திப்ரபத்திகள் விகல்பிக்கலாம்படி யிறே யிருப்பது.

ஆக, *வீடுமின்முற்றத்திலும் *பத்துடையடியவரிலும் பிறர்க்குபதேசித்த பக்தி தம்முடையபேற்றுக் குடலாயிருந்தபடியைச் சொல்லி, இதுதான் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியைச் சொல்லி நிகமிக்கிறாரிதில்.

இது ஸாத்யத்தோடே சேர்ந்திருப்பது ப்ராப்தியுண்டானா லன்றோ வென்னில்; ஸாக்ஷாத்காரரூபமான வநுஸந்தாந முண்டாக வமையுமிறே இப்போது; குணமநுபாவ்யமானால அந்தகுணவிசிஷ்ட மாக விங்கேயிருந்து உபாஸிப்பாரின்றிறே ஆக; உபாஸநவேளை யிலும் அதிருக்கும்படியை யநுஸந்திக்கத் தட்டில்லையிறே.

ஆனால் பின்னைக் கீழெல்லா மிந்த ப்ராப்யாநுஸந்தாநமே யன்றோ பண்ணிப் போந்ததென்னில்; அவற்றைப்பற்றிப் பிறந்தன சிலரஸ விசேஷங்களைச் சொன்னவித்தனையிறே அவ்விடங்களில்; உபக்ரமித்தவர்த்தத்தை யுபஸம்ஹரிக்கையென்னுமொன்றுண்டே, அத்தைச் சொல்லுகிறதிங்கு.

இங்ஙனன்றிக்கே, பிள்ளான் ஒருருவிலே "'நீபசுமோக்ஷப் போகவேண்டா' என்றாள், 'ஆகில் தவிர்ந்தேன்' என்றான். இவன் றனை ஸாலப்யனில்லைகிடீர், இவன் பக்திலப்யனென்னுமிடம் ஸித்த மென்கிறார்" என்று பணித்தான்.

இன்னமும் முதற்றிருவாய்மொழியில் ப்ராப்யத்தை யருளிச் செய்தார்; அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாக, வேதாந்தங்களில் பக்தியென்றும் ப்ரபத்தியென்று மிரண்டுபாயங்களை விதித்தது; அவை யிரண்டிலும், பக்தி, த்ரைவர்ணிகாதிகாரம்; ப்ரபத்தி, ஸர் வாதிகாரம். அதில் ஸர்வாதிகாரமாய்த் தாம் திருவுள்ளத்தாலே தமக்குபாயமாக வங்கீகரித்த ப்ரபத்தியை, *வீடுமின்முற்றத்திலே யருளிச்செய்தார்; த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியை, *பத்துடை யடியவரிலே யருளிச்செய்தார். ஆக, இரண்டு திருவாய்மொழியிலு மருளிச்செய்த பக்திப்ரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந் தினபடியை யருளிச்செய்கிறார் *சார்வேதவநெறி, *கண்ணன்கழ லிணை, இரண்டாலும்.

அதில், *சார்வேதவநெறியாலே-ப்ரபத்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை யருளிச்செய்கிறார். "ச்சார்வேதவநெறிக்குத் தாமோதரன்றாள்கள்" என்று-தபஸ்ஸப்தத்தாலே ப்ரபத்தியைச் சொல்லுகிறது. (க) "தாநி வா ஏதாந்யவராணி தபாம்ஸி-தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்று தபஸ்ஸுக்களில் மிக்க தபஸ்ஸாகச் சொல்லிற்றிறே ப்ரபத்தியை. "பண்டேபரமன்பணித்தபணிவகையே - கண்டேன்கமலமலர்ப்பாபாதம், காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும் "இருமைவினைகடிந்திங் கென்னையாள்கின்றான்" என்றும், (உ) "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய-மாமேகம்ஶரணம் வ்ரஜ-அஹம்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற வர்த்தத்தை யருளிச்செய்தார்.

ஆளவந்தாரருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது - "ப்ரபத்தி விஷயமாகவாய்த்து *வீடுமின்முற்றம்; "உடையவருமப்படியே ப்ரபத்திவிஷயமாக வருளிச்செய்து கொடுபோந்து, பாஷ்யமருளிச் செய்தபின்பு, "ரஹஸ்யோபாயத்தை வெளியிடவொண்ணாது" என்று *வீடுமின்முற்றத்தையும் பக்திவிஷயமாக்கி யருளிச்செய்தார்.

"ஆக, முதற்றிருவாய்மொழியிற் சொன்ன ப்ராப்யஸ்வரூபத்தையும் ப்ராப்திபலமான கைங்கர்யத்தையும், *கெடுமிடரிலே 'படமுடையரவிற் பள்ளிபயின்றவன்' என்றும் 'கடைத்தலைசீய்க்கப்பெற்றால்' என்றுமருளிச்செய்து, அக்கைங்கர்யத்தில் களைபறித்து, 'உன்றன்றிருவுள்ள மிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்' என்று உத்தரகண்டத்தில் *நமஸ்ஸப்தார்த்தத்தை யருளிச்செய்து, *கெடுமிடராலும் *வேய்மருதோளிணையாலும்-முதற்றிருவாய்மொழியை நிகமித்து, * சார்வேதவநெறியாலும் * கண்ணன்கழலிணையாலும் - *வீடுமின்முற்றத்திலும் *பத்துடையடியவரிலும் சொன்னபக்தி ப்ரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை யருளிச்செய்தார்" என்று ஆளவந்தாரருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது. *

(க) தை: நா-ருO-   (உ) கீதை-கஅ-சுசு-

முதற்பாட்டு.

சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள் * கார்மேகவண்ணன் கமலநயனத்தன் * நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநேமியான் * பேர்வானவர்கள் பிதற்றும்பெருமையனே. (௧)

ப:— முதற்பாட்டில், ஸர்வஸ்மாத்பரனாய் போக்யபூதனானவன் பக்திலப்யனென்கிறார். (௧)

(இ - ள்.) கார்மேகம் - காளமேகம்போலே ஸ்யாமளமான. வண்ணன்-வடிவையுடையனாய்; அதுக்குப்பரபாகமாம்படி, கமலம் - கமலம் போலேயிருக்கிற, நயனத்தன் - திருக்கண்களையுடையனாய், அவ்வடிவழகேயன்றியே, நீர்வானம் மண்ணெரிகாலாய்நின்ற - பஞ்சபூதப்ரமுகமான ஸமஸ்தஜகத்தும் ப்ரகாரமாம்படி அந்தராத்மாவாய் நேமியான்-ரக்ஷணபரிகரமான திருவாழியையுடையனாய். பேர் - இவ்வழகுக்கும் ப்ராப்திக்கும் ரக்ஷகத்வத்துக்குமான திருநாமங்களை, வானவர்கள்-பரமபதவாஸிகளானவர்கள், பிதற்றும் - ப்ரீதிப்ரகாசத்தாலே அக்ரமமாகச் சொல்லும்படியான, பெருமையன் - பெருமையுடையனாய், இப்படி உபயவிபூதிநாதனாயிருந்து, தாமோதரன் - "மத்துறுகடைவெண்ணெய் களவினிலுரவிடை யாப்புண்டெத்திறம்" என்கிறபடியே வெண்ணெய்க்களவிலே தாம்பாலேகட்டுண்டு அத்தாலே தாமோதரனென்று பேராம்படி ஆஸ்ரிதபவ்யனானவனுடைய. தாள்கள்-திருவடிகளானவை, தவநெறிக்கு-"வணக்குடைத்தவநெறி" என்று ப்ரஸித்தமான பக்தி மார்க்கத்துக்கு, சார்வே-ப்ராப்யமாயேயிருக்கும். (௧)

ஆறு;—ஸௌந்தர்யத்தினாலும் ஐஸ்வர்யத்தினாலும் திவ்ய விபூதியாலும் பரிபூர்ணனாயிருந்துவைத்து ஆஸ்ரிதஸௌலப்யத்வார்த்தமாக தத்ஸஜாதீயதயாவதீர்ணனான வெம்பெருமானுடைய திருவடிகள் பக்தியோகத்தினாலே ப்ராபிக்கலாம், இதிலொரு ஸம்சயமில்லையென்கிறார். (௧)

ஈடு-அவ;— உபயவிபூதியுக்தனாயிருந்துவைத்து ஆஸ்ரிதஸுலபனானவனுடைய திருவடிகள் பக்தியோகலப்யமென்கிறார்.

(சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்) (தவநெறிக்கு - சார்வே) "பத்துடையடியவர்க்கெளியவன்" என்றும் "எளிவருமியல்வினன்" என்றும் சொன்ன அவன் திருவடிகள் சார்வென்கிறார்

சார்வு-ப்ராப்யம். (தவநெறிக்கு) பக்திமார்க்கத்துக்கு. தபோமார்க்கமென்றபடி "வணக்குடைத்தவநெறி" என்றாரே அங்கே; அத்தைச் சொல்லுகிறார்.

"தவநெறி" என்னுங்காட்டில் பக்தியைச் சொல்லிற்றோவென்னில்; (க) "நகேஸூஜ்ஞோரூ:-நமஸ்யந்தஸ்சமாம்" என்று நமஸ்ஸை காரணசரீரமாகவுடைத்தாயிருக்குமிறே பக்தி; இவனொரு ப்ரணாமத்தைப் பண்ணினால் "இவன் நம்மைநோக்கிக் குவாலாகவருந்தினான்" என்று இதுதன்னைப் பெரிய காயக்லேசமாக நினைத்திருக்குமவனாகையால் சொல்லுகிறது. அன்றிக்கே, (உ) "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று ஜ்ஞாநவிசேஷமான பக்தியைத் தபஸ்ஸென்று சொல்லிற்றாகவுமாம்.

(தாமோதரன்தாள்கள்) "உரவிநோடிணைந்திருந்தேங்கியவெளிவு" என்றத்தைச் சொல்லுகிறாரிங்கு. யசோதாதிகள்கையிலே கட்டுண்டு தழும்பு சுமந்ததுவே திருநாமமாயிருக்குமவனிறே; யசோதாதிகள்கையிலே கட்டுண்பானொருவனை பின்பு, அவனையுகப்பார் அவன்காலைக்கட்டிக் கொள்ளுமித்தனையிறே.

எப்படிப்பட்டவன் ஸுலபனாகிறானென்னில்; விலக்ஷணவிக்ரஹயுக்தனாய் உபயவிபூதி யுக்தனானவனிவர்! என்கிறார் (கார்மேக வண்ணன்) நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே ஸ்ரமஹரமான வடிவையுடையவன். பக்திதனக்கு இவன்றான் க்ருஷிபண்ணவேண்டா; ருசிக்கு உத்பாதகனுமாய் பின்பு அத்தை வளர்த்து அதுபக்வமானால் தானே ப்ராப்யமாம் வடிவையுடையவன். * காதல் கடல் புரையவிளைவித்தகாரமர் மேனியிறே; கார்காலத்தில் மேகம்போலேயென்னுதல், கறுத்தமேகமென்னுதல்; "புயற்கருநிறத்தனன்" என்றத்தைச் சொல்லுகிறார்.

(கமலநயனத்தன்) அகவாயில் குணங்களுக்கு ப்ரகாசகமாயிருக்குமிறே திருக்கண்கள்; அநுக்ரஹமடையத் தோற்றுவது கண்வழியேயிறே. வாத்ஸல்யப்ரகாசகமான திருக்கண்களையுடையவன். வடிவழகுகண்டு பேச்சிழுகையன்றிக்கே, மேன்மையாலும் பேசவிழவேண்டுமவனாய்த்து.

(க) கீதை-௯-௧௪- (உ) முண்டக-

கூஅ திருவாய்மொழி, கப-ப, சு-தி, உ-பா, பெருமை வ்யாக்யாநம்.

(நீர்வானமித்யாதி) விக்ரஹ வைலக்ஷண்யமேயன்றிக்கே ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. "யாவையும் யாவரும் தானுமமைவுடை நாரணன்" என்றதத்தை நிகமிக்கிறார். நீருமித்யாதி பஞ்சபூதங்களையும் சொன்னவித்தால் - அவற்றின் கார்யமான தேவாதி விசேஷங்களையும் நினைக்கிறது. இத்தால் - லீலாவிபூதியைச் சொல்லுகிறது.

(நேமியான்) கையுந்திருவாழியுமாய் நித்யவிபூதியிலேயிருக்குமிருப்பைச் சொல்லுகிறது. (பேர்வானவர்கள்) இவ்வருகிலாக்கரான தேவர்களன்றிக்கே அவ்வருகில் பெருமக்களோத்தும்படியான பெருமையை யுடையவன். அன்றிக்கே, "வானவர்கள் - பேர்பிதற்றும் பெருமையன்" என்றுமாம். இங்கு ருசியுடையாரும் பிதற்றுமித்தனை, ப்ராப்யம் கைபுகுந்து அவ்வநுபவபட்டாராயிருக்கிறவர்களும் பிதற்றுமத்தனை.

[கார்மேகவண்ணனாய், கமலநயனத்தனாய், நீர்வானம் மண்ணெரிகாலாய்நின்ற நேமியானாய், பேர்வானவர்கள் பிதற்றும் பெருமையனாயிருந்துவைத்து - தாமோதரனானவன் திருவடிகள் - தவநெறிக்கு - சார்வே - இது நிஸ்ஸிதம்]

இரண்டாம்பாட்டு.

பெருமையனேவானத்திமையோர்க்கும் * காண்டற்கருமையனேயாகத்தணையாதார்க்கு* என்றுந்திருமெய்யுறைகின்றசெங்கண்மால் * நாளுமிருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றானே. (உ)

ப:— அநந்தரம், பரத்வாதி ஹேதுவான ஸ்ரிய:பதித்வத்தையுடையவன், தன் ஸ்ரீலாதிஸயத்தாலே யென்னை யடிமை கொள்ளாநின்றானென்கிறார். (உ)

(இ-ள்) வானத்து-ஊர்த்வலோகவாஸிகளான, இமையோர்க்கும்-ப்ரஹ்மாதிகளுக்கும், பெருமையன்-அவ்வருகான பெருமையையுடையனாய், ஆகத்து - நெஞ்சிலே, அணையாதார்க்கு - அநுஸந்தியாதார்க்கு, காண்டற்கு-காண்கைக்கு, அருமையன்-அரியனாயிருக்குமவனாய், என்றும்-ஸர்வகாலமும், திரு-லக்ஷ்மியானவள், "அகலகில்லேனிறையும்" என்று, மெய்-திருமேனியிலே, உறைகின்ற நிரந்தரவாஸம்பண்ணுகை

யாலே, செங்கண்-நிரதிசயைஸ்வர்ய ஸூசகமான சிவந்த திருக்கண்களையுடைய, மால்-பெரியவன், இருமைவினைகடிந்து - புண்யபாபரூப கர்மங்களைப் போக்கி, இங்கு-இந்தவிபூதி தன்னிலே, நாளும்-நாள்தோறும், என்னை-என்னை, ஆள்கின்றான்-அடிமைகொள்ளுகிறான். (உ)

ஆறு:—(பெருமையனே) ப்ரஹ்மாதிகளுக்கு ஈஸ்வரனாய், அநாஸ்ரிதர்க்கு துர்த்தர்ஸனாய், பெரியபிராட்டியாரோடு நித்யஸம்ஸ்லிஷ்டனாயிருந்த எம்பெருமான், நாளுமிருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றானென்று கொண்டு, தம்முடைய லாபத்தைப் பேசுகிறார். (உ)

ஈடு-அவ;—ஸர்வேஸ்வரனாய் ஸ்ரிய:பதியாயிருந்து வைத்து என்விரோதியைப் போக்கி யென்னை யிங்கே யடிமைகொள்ளாநின்றானென்று, கீழ்ச்சொன்ன ஸௌலப்யம் தமக்குப் பலித்தபடியை யருளிச்செய்கிறார்.

(பெருமையனே வானத்திமையோர்க்கும்) "அமைவுடைமுதல் கெடலொடிவிடை யறநிலமதுவாமமைவுடையமரர்" என்றத்தைச் சொல்லுகிறது. அல்லாதார் கீழேயிருக்க தாங்கள் விலக்ஷணமான தேசங்களிலே யிருக்கிறார்களாய், ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும் தாங்களே கடவர்களாக நினைத்துத் தங்களைக் குவாலாக நினைத்திருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் தன்னையாஸ்ரயித்து ஸ்வரூபம் பெறவேண்டும்படியான பெருமையை யுடையவன். (வானத்து) அவ்வாஸியை யவர்களுக்குள்ளது; அவனைப் பார்த்தால் நம்மோடவர்களோடு வாசியில்லை. ஸம்ஸாரத்தில் நம்மிலும் கனவியராயிருப்பர்கள். நமக்குப் பற்றினவளவேயிறே விடவேண்டுவது, அவர்களுக்கு த்ரைலோக்யமும் விடவேணுமே.

(காண்டற்கித்யாதி) தானேவந்து மேல்விழா நின்றால் விலக்காமையின்றிக்கே யிருப்பார்க்குக் காண வரியனாயிருக்கும். ஸம்பந்தமின்று தேடவேண்டா, பெறவேணுமென்கையும் வேண்டாவென்கையுமிறே யுள்ளது. "பிறர்களுக்கரியவித்தகன்" என்றத்தைச் சொல்லுகிறது.

(என்றும்திருமெய்யுறைகின்ற) ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச் சொல்லுகிறதிறே. * அகலகில்லேனிறே. "மலர்மகள்விரும்பும் நமரும் பெறலடிகள்" என்றத்தைச் சொல்லுகிறது. என்றுமொக்

கப் பெரியபிராட்டியார் வர்த்திக்கிற திருமேனியை யுடையவன். (செங்கண்) அவளோட்டை நித்யஸம்ஶ்லேஷத்தாலே, நீர்பாய்ந்த பயிர்போலே செவ்விபெற்ற திருக்கண்களையுடையவன். (மால்) (௧) "யஸ்யஸா ஜநகாத்மஜா - யஸ்யஸா ஜநகாத்மஜா" என்றவளை யுடையனாகையால் வந்த பெருமையைச் சொல்லுகிறது.

(நாளுமித்யாதி) (இருமைவினைகடிந்து-நாளும்-இங்கென்னை யாள்கின்றானே) புண்யபாபரூப கர்மங்களைப் போக்கி, இத்தைவிட்டொருதேச விசேஷத்திலே போனால் கொள்ளக்கடவ வடிமையை இஹலோகத்திலே நாள்தோறும் கொள்ளாநின்றான். அங்குப் போனால் குணாநுபவத்தாலே ஸத்தையை நிர்வஹிக்கும்; இங்கு குணஜ்ஞாநத்தாலே தரிப்பியாநிற்கும். (௨)

மூன்றாம்பாட்டு.

ஆள்கின்றானாழியானால் குறைவுடையம்* மீள்கின்றதில்லைப்
பிறவித்துயர்கடிந்தோம்* வாள்கெண்டையொண்கண் மடப்பின்னை
தன்கேள்வன் * தாள்கண்டுகொண்டென் தலைமேல் புனைந்தேனே

ப:— அநந்தரம், நப்பின்னைப்பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே நிரதிஶயாநுபாவ்யனான க்ருஷ்ணன் திருவடிகளை யநுபவிக்கப்பெற்றேன். அவன் ரக்ஷகனாக விரோதிமறுவலிடாது; என்ன குறையுண்டென்கிறார்.

(இ-ள்) (௨) "கைகழலாநேமியான் நம்மேல்வினைகடிவான்" என்கிறபடியே, ஆழியான் - கையுந் திருவாழியுமாய்க் கொண்டு ஆள்கின்றான் - விரோதியைப்போக்கி ரக்ஷித்தருளாநின்றான் அத்தாலே, பிறவித்துயர் - ஜந்மப்ரயுக்த ஸகலது:க்கங்களையும், கடிந்தோம் - போக்கினோம், மீள்கின்றதில்லை இனி அதுமீளுகிறதில்லை; ஆனபின்பு, ஆரால் குறைவுடையம் - நம்மோடு பிறரோடு வாசியற ஒருவராலும் ஒருகுறையையுடையோமல்லோம், வாள் - கூர்மைநெடுமையாலே வாளும், கெண்டை - குளிர்த்திமிளிர்த்தியாலே கெண்டையும், ஒண் - போலியாம்படி விலக்ஷணமான, கண் - கண்ணையுடையளாய், மடம் - மடப்பம் முதலான ஆத்மகுணங்களாலே பூர்ணையான, பின்னைதன் - நப்பின்னைப்பிராட்டி

---

(௧) ரா-ஆர-௩௫-௧௮- (௨) பெரிய திருவ-௮௭-

திருவாய்மொழி, ௧௦-ப, ௬-தி,௨-பா, ஆள்கின்றான்வ்யாக்யானம். ௧௦௧

க்கு. கேள்வன் - அபிமதநாயக னானவனுடைய, தாள் - திருவடிகளை, கண்டுகொண்டு-அபரோக்ஷித்து, என்தலைமேல் என்தலைமேலே, புனைந்தேன் - தரிக்கப்பெற்றேன். (௩)

ஆறு;—(ஆள்கின்றானாழியான்) ஆள்கின்றானாழியான் ஆரால் குறைவுடையம், இனி இஸ்ஸம்ஸாரத்தில் மீளக்கடவதன்று; எங்ஙனே யென்னில்; இந்த ஸம்ஸாரதுஃகத்தைக் கடிந்தோம், வாள்கெண்டை யொண்கண்மடப்பின்னைதன் கேள்வனுடைய திருவடிகளைக் கண்டுகொண்டு என்தலைமேல் புனைந்தே னென்கிறார். (௩)

ஈடு-அவ;—மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப் போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருவடிகள் ஶிரோபூஷணமாகப் பெற்றே னென்கிறார்.

(ஆள்கின்றானாழியான்) ஆழிவைத்த கையும் தானுமாய் விரோதியைப் போக்கி யடிமைகொள்ளாநின்றான்; வகுத்த ஸர்வேஶ்வர னடிமைகொள்ளாநின்றா னென்னுதல். பின்னையு மவனை பார்த்திருக்கவேண்டு மசேதந க்ரியாகலாபங்களைப் பூண்கட்டாநிற்பர்கள் சிலர்; (௧) "கூரம்பனல்லால்" என்று அம்பின் கூர்மையையும் "சுடர்வட்டவாய்நுதி நேமியீர்" என்று திருவாழியில் கூர்மையையுங் கொண்டு பெறவிருப்பர்கள் சிலர். அஶக்தனான தன்னாலே ஸாத்யமான க்ரியாஜாதத்தைப்பற்றிப் பெறவிருப்பர்கள்சிலர். ஸித்தஸ்வரூபமான ஸர்வஶக்தியைப்பற்றிப்பெற விருப்பர்கள்சிலர்; க்ரியாஜாதத்தை நெகிழச் சொல்லி, "கெடுவாய், என்னையன்றோ பற்றுகிறது" என்றானிறே.

(ஆரால்குறைவுடையம்) என்னாலே யிழக்கவேண்டுதல்; ஆராயக்கடவ யமாதிகளுக்கும் வந்துகிட்டலாதல்; அவன்றன்னளவும் சென்றால் பின்னையுமொன்றைப் பார்த்திருத்தல் செய்யவேண்டும்படியா யிருப்பதொன்றையோ நான்பற்றிற்று. (ஆரால்) என்கிறார் காணும், என்று மொருசேதநனாலே பேறென்றிருக்கு மவராகையாலே.

(மீள்கின்றதில்லை) இனி மறுவலிடுகிறதில்லை. (பிறவித்துயர் கடிந்தோம்) ஸம்ஸாரதுரிதத்தை யோட்டினோம். பரமபதத்தைத்

---

(௧) ௬-திருவ-அ-

புகச்செய்வேயும் ருசிமுன்னாகப் பேறல்லாமையாலே கடலில்புக்க துரும்புபோலே மீளப்போந்தார்களிறே வைதிகபுத்ரர்கள். "மயர்வறமதிநலமருளினன்" என்று ருசிமுன்னாக அவன் தரப்பெறவிருக்கிற நமக்குப்புநராவ்ருத்தி ப்ரஸங்கமுண்டோ. (கடிந்தோம்) என்கிறாரிறே, அவன் செய்வானாக வெறட்டுக்கொண்ட கார்யத்துக்கு (௧) "ஸ்திதொஸ்மி-ஸ்த்திதோஸ்மி" என்னலாம்படி யிருக்குமிறே.

(வாளித்யாதி) அவன் ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததாகில் அடைகுவளம் தடைப்படும்போலேகாணும். இனியென்னாலேதான் விடப்போமோ, அவனாலேதான் விடப்போமோ, என்னுடைய பாரதந்த்ர்யம்போலே அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்துக்கு மேதேனும் கண்ணழிவுண்டோ. அவன் ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததேதான் தன்னாணை யிழக்கிறான். (௨) *மணநோக்கமுண்டானிறே. ஒளியையுடைத்தான கெண்டைபோலே முக்தமாய் வைத்தகண் வாங்காதே கண்டுகொண் டிருக்கவேண்டும்படியான அழகிய கண்களை யுடையளாய் ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபன்.

(தாள்கண்டுகோண்டு) காட்சிக்கு மேற்றுசொல்விற்றிறே (என் தலைமேல் புனைந்தேனே) "துயரறுசுடரடி தொழுதெழு" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும் "கோலமாமென் சென்னிக்கு" என்றும் சொல்லுகிறபடியே, மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப்போலே யிருக்கிற போக்யதை சொல்லுகிறது. "நின் செம்மாபாதபற்புத்தலை சேர்த்து" என்று ப்ரார்த்தித்தவத்தைத் தலையாகப்பெற்று க்ருதக்ருத்யனானேன். (௩)

நான்காம்பாட்டு.

தலைமேல்புனைந்தேன்சரணங்கள் * ஆலினிலைமேல்துயின்ற னிமையோர்வணங்க * மலைமேல்தான்நின்றென் மனத்துளிருந் தானை * நிலைபேர்க்கலாகாமைநிச்சித்திருந்தேனே (௪)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணத்தில் ஸத்திரஸ்வபாவனானவனை நெஞ்சிலிருந்த விருப்புக் கொலைக்கவொண்ணாதென்று அறுதியிட்டிருந்தேனென்கிறார்.

---

(௧) கீதை-௧௮-

(௨) தி-மொ ௮-௧௦-௪-

(இ - ள்.) சரணங்கள் - அவன் திருவடிகளை, தலைமேல் - என் தலை மேலே, புனைந்தேன்-வைத்துக்கொண்டிருந்தேன், அகடிதகடநாஸமர்த்தனாய்க்கொண்டு, ஆலினிலைமேல் - ஆலிலையில், துயின்றான் கண்வளர்ந்தருளும் ஸர்வஜ்ஞனாய், இமையோர்-நித்யஸூரிகள், வணங்க தொடர்ந்துவணங்கும்படி, மலைமேல் - திருமலையிலே, தான் - ஸ்வயம் ப்ரயோஜநமாம்படியாக, நின்று - எழுந்தருளிநின்று, என்மனத்துள் - என்னெஞ்சுக்குள்ளேபுகுந்து, இருந்தானை - ப்ரதிஷ்டிதனாயிருந்தவனை நிலை - இவ்விருப்பில் ஸ்த்தைர்யம், பேர்க்கலாகாமை - கொலைக்கவொண்ணாமையை, நிச்சித்து - நிச்சயித்து, இருந்தேன் - அத்தாலே க்ருதக்ருத்யனாயிருந்தேன். (௪)

ஆறு:—(தலைமேல்)இனியிவனை யென்தலையில் நின்றும் ஒருவராலும் பேர்க்கவொண்ணாதென்கிறார். (௪)

ஈடு-அவ; —என்மநஸ்ஸிலேயிருக்கிற ஸர்வேஶ்வரனை யொருவராலும் விஶ்லேஷிப்பிக்கவொண்ணாதென்று நிஶ்சயித்து, அத்தாலே க்ருதக்ருத்யனாயிருந்தேனென்கிறார்

(தலைமேல்புனைந்தேன்சரணங்கள்) *அமரர்சென்னிப் பூச்சூடப் பெற்றேன். ப்ரார்த்தித்துப்போகையன்றிக்கே அத்திருவடிகளை யென்தலைமேலே வைத்துக்கொள்ளப் பெற்றேன். இப்பேறிவர்பெறுகைக்கு அவன் க்ருஷிபண்ணினபடி சொல்லுகிறதுமேல். அவன் *வண்தடத்தினுட் கிடந்து தபஸ்ஸுபண்ணிற்று இவரிப் பேறுபெறுகைக்கு.

(ஆலினிலைமேல்துயின்றான்) தன்னைக்கொண்டு கார்யமுடையார் சிலரைக்கண்டிலன்; எல்லார்க்கு மாராட்சிப்படும்படியான செயலைச் செய்வோமென்று பார்த்தான், வேண்டாவென்பாரைக்கண்டதில்லை. அதுஸாத்மித்தவாறே நித்யஸூரிகளும் தானுமாகவந்து திருமலையிலேநின்றான், அதுவும் ஸாத்மித்தவாறே இவருடைய ஹ்ருதயத்திலேவந்துபுகுந்தான்; இங்கு விலக்குவாரில்லாமையாலே ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாக விருந்தான். (க) *பொருப்பிடையே நின்றும் புனல்குளித்துங்காணுமிவர் நெஞ்சிலே புகுந்திருந்தது. (உ) *பனிக்கடலில்பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து இவருடைய *மனக்கடலிலே வாழப்புக்கான், இப்படியிருந்தவனை.

(க) ௩-திருவ-எ௬- (உ) பெரியாழ்-தி-ரு-௪-௯-

(நிலைபேர்க்கலாகாமை) இவன்போகைக் குறிப்பாக என்னாலாவதெல்லாம் செய்தேன், அதுக்கும் கேட்பானாயிருந்திலன். (நிச்சித்திருந்தேன்) (௧) "நஸ்யேத் - நஸ்யதி" என்றிருந்தேன். அவன்படியையறிந்தவிவனுக்கு நிர்ப்பயனாயிருக்கத் தட்டில்லையிறே (௧) [ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஸ்சந - ஆநந்தப்ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஸ்சந] தன்சோகம் மறுநனையும்படியான வாத்ஸல்யமிவன்பக்கலிலே யுண்டென்றறிந்தால், பின்னையிவன்சோகம் போகைக்குக் குறையில்லையிறே. [குதஸ்சந - குதஸ்சந] பின்னை புத்திபூர்வகமாகப்பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு மஞ்சவேண்டா. (௪)

ஐந்தாம்பாட்டு.

நிச்சித்திருந்தேனென்னெஞ்சங்கழியாமை * கைச்சக்கரத்தண்ணல்கள்வம்பெரிதுடையன் * மெய்ச்சப்படான்பிறர்க்குமெய்போலும்பொய்வல்லன் * நச்சப்படும்நமக்குநாகத்தணையானே. (௫)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதவத்ஸலனாய் அநாஸ்ரிததுர்லபனானவன், அநந்யகதிகளான நமக்கு ப்ராப்யனாக ஆசைப்படப் படுமென்கிறார்.

(இ-ள்) என் நெஞ்சம் - என் நெஞ்சை, கழியாமை - விட்டகலாதபடியான ஸ்வபாவத்தை, நிச்சித்திருந்தேன் - அறுதியிட்டிருந்தேன் சக்கரம் - ரக்ஷகமாய் போக்யமான திருவாழியை. கை - கையிலேயுடையனாய், அண்ணல் - அஸாதாரணஸ்வாமியாய், கள்வம்பெரிதுடையன் - நெஞ்சிலேயிருக்கச்செய்தே நானறியாதபடி தானறிந்ததாகப் பேசி அவ்வுபகாரங்களிலே பாரிப்பையுடையனாய், தன் ஸ்வபாவம் தானறிந்து கொண்டாடுகிறாப்போலே, பிறர்க்கு மெய்ச்சப்படான் - பிறர் கொண்டாடாதவனாய், மெய்போலும் - ஆஸ்ரிதர்க்கு மெய்யே செய்யுமாபோலே, பொய்வல்லன் - அநாஸ்ரிதர்க்குப் பொய்யே செய்யவல்லனாய், நாகத்தணையான் - ஆஸ்ரிதஸம்ஸ்லேஷ ஸ்வபாவனான அநந்தசாயியானவன், நமக்கு - நமக்கு, நச்சப்படும் - பரமப்ராப்யபூதனாக ஆசைப்படும்.

ஆறு;—(நிச்சித்திருந்தேன்) இவ்வளவேயோவிவன் கிறுத்திவைத்து செய்ய நினைத்திருக்கிறான், இப்படி பெரியனே வல்லனென்னில்; ப்ராதிகூலருக்குக் காணவரியன், நமக்கெளியன்காணென்கிறார். (௫)

---

(௧) தை-ஆ-௯-

௩௫-அவ:—அவனென்னிறத்தில் செய்யநினைக்கிறவை யொருவர்க்கறிய நிலமன்றென்கிறார்.

(நிச்சித்தித்யாதி) நீரிலே கிடந்தும் பர்வதாக்ரத்திலேநின்றும் தன்பேறாக தபஸ்ஸு பண்ணிவந்து என்னெஞ்சிலே யிருக்கையாலே, இனியொருகாலமும் விட்டுப் போகானென்று நிஶ்சயித்திருந்தேன். (கைச்சக்கரத்தண்ணல்) கையிலே திருவாழியையுடைய ஸர்வேஶ்வரன். ஆஶ்ரிதரை யொருநாளும் கைவிடாதவன்; (க) "எப்போதும் கைகழலாநேமியான்" என்னக்கடவதிறே.

(கள்வம்பெரிதுடையன்) நெஞ்சைக் கைவிடாமையன்றிக்கே, இங்கேயிருந்து நாமறியாதிருக்கத் தானறிந்ததாகக் கொண்டு அவ்வருகே குவாலைப் பாரியாநின்றான். பரமபதத்தேறக் கொண்டுபோக வொருப்படுவது, அமாநவனை யிடுவித்து ஸ்பர்ஶிக்க நினைப்பது, * மதிமுகமடந்தையரை வரக்காட்டி யெதிர்கொள்ளப் பார்ப்பதாய்க் குவாலைப்பாரியாநின்றான்.

"இதுதான் ஸர்வஸாதாரணமாகிற் செய்வதென்" என்றஞ்ச வேண்டா (மெய்ச்சப்படான்பிறர்க்கு) நான் தன்குணங்களைச் சொல்லிப் புகழுகிறாப்போலே, பிறர் தன் குணங்களைச் சொல்லிப் புகழலாம்படியிரான்; அவர்களுக்கு துஷ்ப்ராபனாயிருக்கும். (மெய் போலும் பொய்வல்லன்) அர்ஜுநாதிகள்பக்க லிருக்குமாபோலே யிறே துர்யோதநாதிகள்பக்கலிலுமிருப்பது; கார்யத்தில்வந்தால் மெய்செய்வாரைப்போலே பொய்செய்து தலைக்கட்டும்.

"இதுதான் நம்மளவிலுமேறிற் செய்வதென்" என்றஞ்ச வேண்டா (நச்சப்படும்நமக்கு) உகவாதார்பக்கலில் செய்பவற்றை நம் பக்கல் செய்யான். அதுக்கு விஶ்வாஸமென்னென்னில் (நாகத்தணையனே) நம்மோடு ஸஜாதீயர் பக்கல் செய்வதுகொண்டு கார்ய மென், நம்மோடு ஸஜாதீயர்பக்கல் பரிமாறினதன்றோ நமக்குப்படிமா; நம்முடையபேற்றுக் கடியுமாய் நமக்கு ஸஜாதீயருமானாரோடு பரிமாறும்படி யிதுவன்றோ. (௫)

(க) பெரிய திருவ-அ௭-

ஆறும்பாட்டு.

நாகத்தணையானைநாடோறுஞ்ஞானத்தால்* ஆகத்தணைப்பார்க்
கருள்செய்யுமம்மானை * மாகத்திளமதியஞ்சேருஞ்சடையானை *
பாகத்துவைத்தான்றன்பாதம்பணிந்தேனே (௬)

ப:—அநந்தரம், நித்யாஸ்ரிதரோடு முமுக்ஷுக்களோடு ப்ரயோஜநாந்தரபரரோடு வாசியற உபகரிக்கும் ஸௌசீல்யாதிரூபத்தையுடையவன் திருவடிகளிலே வணங்கப்பெற்றேனென்கிறார்.

(இ - ள்.) நாகம் - நித்யகைங்கர்யபரரான திருவநந்தாழ்வானை, அணையானை - படுக்கையாகவுடையனாய் நாடோறும் - ஸர்வகாலமும் ஞானத்தால்-பக்திரூபஜ்ஞாநத்தாலே, ஆகத்து-நெஞ்சிலே, அணைப்பார்க்கு-வைத்தநுபவிக்கும் முமுக்ஷுக்களுக்கு, அருள்செய்யும் - நிரதிசய போக்யனாய்க்கொண்டுபகரிக்கும், அம்மானை-ஸ்வாமியானவனாய், மாகத்து - ஆகாஸவர்த்தியான, இளமதியம் - இளம்பிறையானது, சேரும்-சேரும்படியான, சடையானை-ஜடையையுடையனாகையாலே, போக்த்ருத்வோபாஸகத்வங்களிரண்டையுமுடையருத்ரனை, பாகத்து - தன் திருமேனியிலொருபக்கத்திலே, வைத்தான்றன் - வைத்த நிரதிசய ஸௌசீல்யவானுடைய, பாதம்பணிந்தேன் - திருவடிகளை வணங்கப் பெற்றேன்.

"அணையானை, அம்மானை" என்கிற வேற்றுமைப்போலி இரண்டு ஐகாரம் அசையாய்க்கிடக்கிறது. அன்றியே, (பாகத்துவைத்தானைப் பாதம்பணிந்தேனே) என்று பாடம் சொல்லுவாருமுளர். (௬)

ஆறு;—(நாகத்தணையானை) ஆஸ்ரிதருடைய தாரதம்யம் பாராதே, திருவநந்தாழ்வானுக்கருள்செய்யுமாபோலே அவர்களுக்கு நாடோறுமருள்செய்யுமம்மான்றன் பாதப்பணியப்பெற்றேனென்கிறார். (௬)

ஈடு-அவ:—இன்றும்ப்ரயோஜநாந்தரபரரையும் நித்யாஸ்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன் திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேனென்கிறார். (திருவநந்தாழ்வானுக்கும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் வாசி வையாதே யுடம்புகொடுக்குமவனை வணங்கப்பெற்றேனென்கிறாரென்றுமாம்.)

(நாகத்தணையானை) உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனாய்த்து. (நாடோறுமித்யாதி) ஞானத்தாலாகத் தணைப்பார்க்கு

நாள்தோறு மருள்செய்யுமவனாய்த்து. இப்போது, ஞானமென்று-ஜ்ஞாநவிசேஷமான பக்தியைச் சொல்லுகிறது. பக்தியாலே ஹ்ருதயத்திலே கொடுபுகுந்து சேர்ப்பார்க்கு நாள்தோறு மருள்செய்யுமவனாய்த்து.

இவனையெப்போதும் நினைக்கப்போகாதே! ; அக்குறைதீர ஏகரூபனான தான் நாள்தோறு மருள்செய்யுமாய்த்து. (மாகவித்யாதி) ஸௌகப்ரதாநனென்று தோற்றும்படி சந்த்ரனைச்சூடி ஸாதகத்வ ஸூசகமான ஜடையையுமுடையனான ருத்ரனுக்குத் திருமேனியிலே யொருபார்ஸ்வத்திலே யிடங்கொடுத்தவனுடைய திருவடிகளை யாஸ்ரயிக்கப்பெற்றேன், இனி எனக்கொரு குறையுண்டோ.

ஏழாம்பாட்டு.

பணிநெஞ்சேநாளும் பரமபரம்பரனை * பிணியொன்றுஞ்சாராப்
பிறவிகெடுத்தாளும் * மணிநின்றசோதி மதுசூதனென்னம்மான் *
அணிநின்றசெம்பொனடலாழியானே. (௭)

ப:— அநந்தரம், நிரதிசயபோக்யமான விக்ரஹத்தை யுடையவன் நம்மை விரோதியைப்போக்கி யடிமைகொள்ளுமவனாகையாலே ஸர்வாதிகனானவனை யநுபவியென்று, நெஞ்சைக்குறித்தருளிச் செய்கிறார்.

(இ-ள்.) மணிநின்றசோதி-நீலரத்நத்தின் நிறத்தில் தேஜஸ்ஸுபோலேயிருக்கிற நிறத்தையுடையவனாய், மதுசூதன்-மதுவை நிரஸித்தாப்போலே அநுபவ விரோதியைப் போக்கி, என்னம்மான்-அவ்வழகை யநுபவிப்பித்த வென்ஸ்வாமியாய், அணிநின்ற-தனக்குத்தானாபரணமாய் நிற்பதாய், செம்பொன் - சிவந்த பொன்போலே ஸ்ப்ருஹணீயமான வடிவையுடைத்தாய், அடல் - ஆஸ்ரிதவிரோதிநிரஸநார்த்தமான யுத்தோத்யோகத்தை யுடைய, ஆழியான்-திருவாழியை யுடையவன், பிறவி-ஈர்ஜந்மத்தை, கெடுத்து-போக்கி, ஆளும்-அடிமைகொண்டருளும், பிணி-ஸம்ஸார க்லேசங்கள், ஒன்றும்-ஒன்றும் சாரா - தட்டாது, ஆதலால் பரமபரம்பரனை-தனக்கு மேலில்லாதவனாய்க்கொண்டு ப்ரஹ்மாதிகளுக்கும் பரனானவனை, நெஞ்சே-நெஞ்சே, நாளும் நித்யமாக, பணி-வணங்கி யநுபவிக்கப்பார். (எ

ஆரு:—(பணி) ஆஸ்ரிதஸுலபனாய், தத்விரோதி நிரஸநஸ்வபாவனாய், ததநுகுண திவ்யாயுதோபேதனாய், ஸர்வேஸ்வரனாயிருந்த வெம்பெருமானை, நெஞ்சே, வணங்கு; வணங்கில் பின்னையொருநாளு மொருதுக்கம் வாராது, துக்கஹேதுவான ஸம்ஸாரத்தைப் போக்கி நம்மையடிமைகொண்டருளு மென்கிறார். (எ)

ஈடு-அவ;—நம் ப்ரதிபந்தகங்களையெல்லாம் தானே போக்கி யடிமைகொள்ளுமவனை நாள்தோறு மநுபவியென்று, திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார்.

(பணியித்யாதி) நெஞ்சே, நாள்தோறு மநுபவிக்கப்பார். நல்லவாய்ப்பாயிருந்தது. (பரமபரம்பரனை) இந்த்ராதிகளுக்குப்பரரான ப்ரஹ்மாதிகளுக்கும் பரரான நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனானவனை. (பிணியொன்றும்சாரா) துக்கங்களொன்றும் நம்மை ஸ்பர்ஸியாது. அந்த துக்கங்களுக்கடியான ஜந்மத்தை அடிவேரோடே போக்கி நம்மை நித்ய கைங்கர்யம் கொள்ளுமவன்.

(மணிநின்றசோதி) ஜந்மத்தை யுண்டாக்கினாலும் விடலாமோ வடிவழகிருக்கிறபடி. நீலமணியினொளியை வடிவாக வகுத்தாற் போலேயிருக்கிற வடிவையுடையவன். (மதுசூதன்) அவ்வடிவழகை யநுபவிப்பார்க்குவரும் விரோதிகளை, மதுவைப்போக்கினாற்போலே தள்ளிக்கொடுக்குமவன். (என்னம்மான்) இப்படி யென்விரோதியைப் போக்கி முகந்தந்தவன்.

(அணியித்யாதி) அநுபவிப்பார்க்கு விரோதிகளையும் போக்கி, திருக்கைக்குத்தானே யாபரணமாய் அநுபவிப்பார்க்கு ஸ்ப்ருஹணீயமான வடிவையுடைய யத்தேகாந்தமான திருவாழியைக் கையிலேயுடையவன். அநுபவத்துக்கும் தானேயாய் விரோதிநிரஸநத்துக்கும் தானேயான பரிகரத்தை யுடையவன். (எ)

எட்டாம்பாட்டு.

ஆழியானாழி யமரர்க்குமப்பாலான்* ஊழியானாழிப்படைத்தான் நிரைமேய்த்தான்* பாழியந்தோளால்வரையெடுத்தான்பாதங்கள் * வாழியென்னெஞ்சே மறவாதுவாழ்கண்டாய். (அ)

ப:—அநந்தரம், ஸர்வாதிகனாய் ஸர்வப்ரகாச ரக்ஷகனானவன் திருவடிகளை, நெஞ்சே, விஸ்மரியாமலநுபவித்து வாழும்படி பாரென்கிறார்.

(இ-ள்.) ஆழியான் - ரக்ஷகமான திருவாழியை யுடையனாய், ஆழிகம்பீரஸ்வபாவரான, அமரர்க்கும் - நித்யஸூரிகளுக்கும், அப்பாலான் - அவ்வருகான மேன்மையை யுடையனாய், ஊழியான் - ஸம்ஹ்ருதிஸமயத்தில் தானொருவனுமேயாய், ஊழிபடைத்தான்-காலோபலக்ஷித ஸமஸ்தவஸ்துக்களுக்கும் ஸ்ரஷ்டாவாய் நிரைமேய்த்தான்-ஸ்ருஷ்டமான வஸ்துக்களைப் பின்சென்று ரக்ஷிப்பானாய் வைத்து, அவற்றுக்காபத்து வந்தால் பாழி - மிடுக்கையுடைத்தாய், அம்-போக்யமான, தோளால் - திருத்தோளாலே வரை - மலையை, எடுத்தான் எடுத்து நோக்குமவனுடைய, பாதங்கள் - திருவடிகளை, என், நெஞ்சே - நெஞ்சே, மறவாது - மறவாதே, வாழ்கண்டாய் - நித்யாநுபவம்பண்ணி வாழப்பார், வாழி - இவ்வாழ்வு நித்யமாகச் செல்லுக.

ஆழியான் - அபரிச்சிந்ந ஸ்வபாவனென்றுமாம். வாழியென்று - வாழ்த்துதலாகவுமாம். (அ)

ஆரு:— (ஆழியான்) * அயர்வறுமமரர்களதிபதியாய், அவர்களிற்காட்டிலும் விஸஜாதீயமான ஸ்வரூபகுணவிபூதிகளையுடையனாய் நித்யஸித்தனாய், காலதத்வ ப்ரப்ருதி ஸமஸ்தபதார்த்தங்களுக்கும் ஸ்ரஷ்டாவாயிருந்துவைத்து, ஆச்ரிதஸௌலப்யார்த்தமாக தத்ஸஜாதீயதயாவதீர்ணனாய், தத்ஸமாநசேஷ்டிதனாய், எல்லாருக்கும் புகலிடமாயிருந்த திருத்தோளாலே வரையையெடுத்து ஆச்ரிதரக்ஷணம் பண்ணியருளினவன் திருவடிகளை, என் நெஞ்சே, மறவாது வாழ்கிடாயென்கிறார். (அ)

ஈடு-அவ:—"அவனையநுபவி" என்றவாறே உகந்தநெஞ்சைக் கொண்டாடி, அவனை யிடைவிடாதே யநுபவியென்கிறார்.

(ஆழியான்) ஸர்வேச்வரத்வ ஸூசகமான திருவாழியைக் கையிலேயுடையவன். (ஆழியித்யாதி) அத்திருவாழி யாழ்வாரோபாதி, கம்பீரஸ்வபாவரான நித்யஸூரிகளுடைய ஸ்வரூபஸ்திதியாதிகள் ஸ்வாதீநமாம்படி யிருக்குமவன். (ஊழியான்) நித்யஸூரிகளும் தானுமாய் பரமபதத்திலே பேரோலக்கமாக விருக்குமவன், இப்படி யண்டாண்டகாரியவர்க்கமடங்கலு மழிந்து காலமோஷமான காலத்திலே தான்வந்து தோற்றுமவன். (ஊழிபடைத்தான்) காலோபலக்ஷித

மான ஸகலபதார்த்தங்களையும் (௧) "ஸோऽகாமயத-பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பத்தாலே யுண்டாக்கினவன். (நிரைமேய்த்தான்) இப்படி ஸகலபதார்த்தங்களையும் தான்படைத்து, "தன்னை வேறே சிலர்படைத்தார்கள்" என்னலாம்படி வந்தவதரித்து, பசுக்களை ரக்ஷிக்குமவன். ஸ்வரக்ஷணத்தி லன்வயமின்றிக்கே பண்ணும் ரக்ஷணத்தை விலக்காத பசுக்களை ரக்ஷிக்குமவன்.

(பாழியந்தோளால்) இவனிப்படி யிவற்றை நோக்காநிற்க, இந்த்ரன் பரிக்ரஹத்தாலே யிவை நோவுபடும்படியாகக் கல்வர்ஷத்தை வர்ஷிக்க, அத்தை மலையையெடுத்து நோக்குமவன். பாழியென்று - வலியாதல், இடமுடைமையாதல்; புறம்பெங்கும் வர்ஷத்திலே நோவுபடாநிற்க, இவன் தோள்நிழலிலே யொதுங்கினவர்களுக்கு மதிளுக்குள்ளே யிருப்பாரைப்போலே பயங்கெட்டிருக்கலாம்படியான வலியைச் சொல்லுதல்;

அன்றிக்கே, பந்நகஸ்ஸம் குடியிலுள்ளாரும் இத்தோள்நிழலிலே யொதுங்கினாலும் இருவாய்ப்பாடியளவன்றிக்கே யின்னமும் பத்துத் திருவாய்ப்பாடிக் கிடம் போருமென்னும்படியான ரக்ஷகத்வத் துடிப்பிருக்கும்படியைச் சொல்லிற்றாதல்; (௨) "[illegible] யாகேவஷ்ஷொ யஸ்ய[illegible] [illegible] டப்பேதாயன்யிலே [illegible]" என்கிற [illegible] கள் [illegible] [illegible]. (அந்தோள்) [illegible] தோள். (௩) "[illegible] காப்பு" என்று [illegible] [illegible] (௪) [illegible] [illegible].

(பாழி) [illegible] [illegible] [illegible] (௫) "[illegible]" [illegible] [illegible] (என்னாத்தே) [illegible] [illegible]

(௧) ஸை-ஆரா-௬- (௨) [illegible] (௩) [illegible]
(௪) நாய்ச்சி-௧௩-௩- (௫) [illegible]

கிற நெஞ்சே. ஆத்மாவுக்கு கரணகோடியிலே யந்வயித்த நெஞ்சு தானே பந்தஹேதுவாகா நின்றதிறே புறம்புள்ளார்க்கு. இங்ஙனன்றிக்கே, என்வழியேபோந்து எனக்கு மோக்ஷஹேதுவான நெஞ்சே. (மறவாது) கைபுகுந்ததென்று இதரவிஷயங்களிலே செய்வுற்றைச் செய்யாதேகிடாய். (வாழ்கண்டாய்) உன்னுடைய வாழ்ச்சிக்கு நான் கால்பிடிக்க வேண்டுகிறதென், பால்குடிக்கக் கால் பிடிக்கிறேனிறே.

மறவாது வாழ்கண்டா யென்கையாகிலுள்ளது, கீழ்ச்சொன்ன விசேஷணங்களுக்கு ப்ரயோஜநமென்னென்னில்; புறம்புபோய் பணைலே முக்கவொண்ணாதே!, ரக்ஷகனுஙவல்லவனைப் பற்றவேணுமே; ரக்ஷணத்துக்குப் பரிகரமுடையவன் ரக்ஷகனாகவேணும்; நிரபேக்ஷருடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகளுக்கும் நிர்வாஹகனானவன் ரக்ஷகனாகவேணும்; ஒருக்காலுளனவது இலனவதாகாநிற்கிறவனுக்கு என்றுமுளனானவன் ரக்ஷகனாகவேணும்; இவையில்லாதவன்று உண்டாக்கினவன் ரக்ஷகனாகவேணும்; உண்டானவன்று ரக்ஷகனைக்கு ஸ்வரக்ஷணத்தில் குறையநின்றவற்றையும் நோக்குமவன் ரக்ஷகனாகவேணும்; இதிருந்தபடியாமாகில் மறந்துகாண்.

ஒன்பதாம்பாட்டு

கண்டேன்கமலமலர்ப்பாதங் காண்டலுமே * விண்டேயொ
ழிந்தவினையாயினவெல்லாம் * தொண்டேசெய்தென்றுந் தொழுது
வழியொழுக * பண்டேபரமன் பணித்தபணிவகையே. (௯)

ப:— அநந்தரம, தத்த்வயாதாத்ம்யத்தை அவன் ப்ரகாசிப்பிக்கக் கண்டு அநுபவிக்கப் பெற்றேனென்கிறார்.

(இ - ள்.) தொண்டேசெய்து-தன்பக்கலிலே நிரதிசயபக்தியைப் பண்ணி, என்றும் - ஸர்வகாலத்திலும், தொழுது - சேஷவ்ருத்தியை யுடையேனாய்க்கொண்டு, வழியொழுக - அந்தவழியாலே சந்தாநவ்ருத்தியாய் நடக்கைக்காக, பண்டே - பூர்வகாலத்திலே, பரமன் - ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன், பணித்த பணிவகையே-அருளிச்செய்த மந்த்ர ரஹஸ்யப்ரகாரத்திலே, கமலமலர் - தாமரைப்பூப்போலே நிரதிசய போக்யமான, பாதம் - திருவடிகளை, கண்டேன் - சேஷத்வாநுரூப

மாக அபரோக்ஷித்தேன், காண்டலுமே-இந்த ஜ்ஞாநம் பிறந்தவளவில், வினையாயினவெல்லாம் - அநுபவவிரோதியான அஹங்காரமமகாராதி ஸமஸ்த துரிதங்களும், விண்டேயொழிந்த - ஸவாஸநமாகவிட்டுப்போயித்தின. (௯)

ஆறு:—(கண்டேன்) "என்னை சரணாகதராணுருடைய வபேக்ஷிதமெல்லாம் நானே செய்வேன்" என்று எம்பெருமான் பண்டேயருளிச்செய்தருளினபடியே, அவனுடைய ப்ரஸாதத்தாலே, நிரவதிகபக்திகாரிதமான ஸர்வமோக்ஷவ்ருத்தியையும் ஸர்வகாலமும் பண்ணலாம்படி அவன் திருவடி மலர்களைக்கண்டேன். கண்டவாறே என்னுடைய ஸமஸ்த து:கங்களும் போயினவென்கிறார். (௯)

ஈடு-அவ:—(௧) 'ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு-ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" என்கிறபடியே அநேககால ஸாத்யமான பக்தியாலே லபிக்கப்படுமவனை கேவல மவன்ப்ரஸாதத்தாலே காணப்பெற்றேனென்கிறார். இப்பாட்டிற் சொல்லுகிற ப்ரபத்தியோடு விகல்பிக்கலாம்படியிருக்கிற பக்தியைச் சொல்லிக்கொண்டு போந்தார் கீழ்; அதுக்குமடி அவனுடையாலே சொல்லுகிறாராதல். ஸ்வயம் நிரபேக்ஷமானது தன்னையே சொல்லுகிறாராதல்; தாம்பெற்றவழியே சொல்லுகிறாராதல்.

(கண்டேன்) என்றும் கேட்டேபோகக்கடவ விஷயத்தைக் கண்ணாலே காணப்பெற்றேன், தம்முடைய ப்ரபத்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை - ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றபடியைச் சொல்லுகிறார், இத்தால் ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாந ஸாக்ஷாத்காரத்தைச் சொன்னபடியிறே. (கமலமலர்ப்பாதம்) ப்ராப்தியையொழியவே ஜ்ஞாநமாத்ரமே யமையும்படி போக்யமாயிருக்கும்படி. (காண்டலுமே) கண்டவளவிலே. (விண்டேயொழிந்தவினையாயினவெல்லாம்) (௨) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அவனடியாக வருகிற திறே; வினையாயினவடங்கலும், "இவர்கேவலரல்லர், அடியுடையராயிருந்தார்" என்றுவிட்டுப் போய்த்தின.

(தொண்டேயித்யாதி) அம்ஸ்லோகத்துக்கிதுவும் கருத்தென்கிறாரிவர். ஔபாதிகமானது போகக்கடவதே; உபாயத்துக்கு

(௧) லக்வத்ரிஸ்ம்ரு (௨) கீதை-௧௮-௬௬-

பலப்ரதத்வமுண்டே. " இனிஸ்வரூபம் நிலைநின்றதாயிருக்குமிறே, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியும் நித்யமாயிருக்குமிறே " என்று அங்கு அர்த்தப்ராப்தமானது தன்னையே யிங்கே வாய்விடுகிறார். (தொண்டேசெய்தென்றும் தொழுதுவழியொழுக) ஸ்வரூபம் நித்யமானபின்பு ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியும் நித்யமாய்ச் செல்லும்படியாக. (பண்டேபரமன்பணித்த பணிவகையே-கண்டேன் கமல மலர்ப்பாதம்) அவன் (௧) " [illegible] - மாமேகம்ஶரணம்வ்ரஜ " என்றபடியாலே நானவன் திருவடிகளைக் காணப்பெற்றேன். (௯)

பத்தாம்பாட்டு.

வகையால் மனமொன்றி மாதவனை* நாளும்புகையால்விளக்கால் புதுமலரால்நீரால்* திசைதோறமரர்கள் சென்றிறைஞ்சநின்ற* தகையான்சரணந் தமர்கட்கோர்பற்றே. (௧௦)

ப:—அநந்தரம், ப்ரயோஜநாந்தரபரர்க்காஶ்ரயணீயனானவன் அநந்யப்ரயோஜநர்க்கு ப்ராப்யபூதனென்கிறார்.

(இ - ள்.) வகையால் - ஶாஸ்த்ரோக்த ப்ரகாரங்களாலே, மனம் - நெஞ்சை, ஒன்றி - ஒருங்கப்பிடித்து, மாதவனை - தங்களபிமதவிஷயத்துக்குறுப்பாம்படி ஶ்ரிய:பதியான தன்னை, நாளும்-காலந்தோறும், புது-விலக்ஷணமான, புகையால் விளக்கால் மலரால் நீரால் - தூபதீப புஷ்ப ஜலங்களாலே, திசைதோறு - நின்றநின்றதிக்குக்கள்தோறும், அமரர்கள் - ப்ரஹ்மாதி தேவர்கள், சென்றிறைஞ்ச-ஆஶ்ரயிக்கும்படி, நின்ற-நின்ற, தகையான் - ஸ்வபாவத்தை யுடையவன், சரணம் - திருவடிகள், தமர்கட்கு-அநந்யப்ரயோஜநரான அஸாதாரணஜநங்களுக்கு, ஓர் - அத்விதீயப்ராப்யமாய்க்கொண்டு, பற்று - அபாஶ்ரயமாம். (௧௦)

ஆறு:—(வகையால்) பக்தியோகத்தைச் சொல்லவுபக்ரமித்து நிர்ஹேதுகமாக நானெம்பெருமானுக் கடிமைசெய்யப் பெற்றேனென்று கொண்டு நடுவே தம்முடைய ஸம்ருத்தியைப் பேசி;

---

(௧) கீதை-௧அ-௬௬-

பின்னையும் அந்த:கரணத்தை நியமித்து, பகவதேக விஷயமாக்கி, தத்ஸமாராதநோசிதமான த்ரவ்யவிசேஷங்களைக்கொண்டு அந்யார்த்தமாக இந்த்ராதிகளவனை யாச்ரயிக்க, அவர்களுடைய வபேக்ஷிதத்தைச் செய்தருளுகிற வவன்திருவடிகளே ப்ராப்யமென்றிருப்பாருடைய வபேக்ஷிதஞ் செய்தருளுமே, அதிலொரு ஸம்சயமில்லையென்றுகொண்டு, அந்த பக்தியோகத்தினாலே ஸுப்ராபனுமென்னுமிடத்தையே சொல்லி முடிக்கிறார். (௧௦)

ஈடு-அவ:—ப்ரயோஜநாந்தரபரரோடு ஸாதநாந்தரபரரோடு ப்ரபந்நரோடுவாசியற அவனே உபாயமென்று உக்தத்தை நிகமிக்கிறார்.

(வகையால் மனமொன்றி) சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற வழியே நெஞ்சொருமைப்பட்டு. (மாதவனை) வித்யதிக்ரமத்துக்கும் அநவதாநத்துக்கும் அஞ்சவேண்டா, லோகாபவாத பரிஹாரார்த்தமாக இவன் செய்தவை யென்னுவது, அதுக்கும் பலமிவனை வந்து கிட்டாது, "இவன்வழி போராமையும் நெஞ்சொருமைப்படாமையும் இவன்தலையிலே யேறிட்டுக் கைவிடக்கடவதோ" என்பாருமருகே யுண்டு.

இத்தால்-அந்த ச்லோகத்திலே லக்ஷ்மீஸம்பந்தமும் சொல்லிற்றுப்த்து. ஸ்வரூபாநுபந்தி தர்மங்கள் சொல்லவுமாம், சொல்லாதொழியவுமாமிறே; ஆகையிறே, த்வயத்தில் பிரிய வநுஸந்திக்கவுமாய், திருமந்த்ரத்திலொன்றாக வநுஸந்திக்கவுமா யிருக்கிறது. (௧) "[illegible] - அந்தர்க்கத குணமேவ தேவதாம்பஜதே" என்று சொல்லாநின்றதிறே; இந்த தேவதாஸ்வரூபந்தன்னிலே அபஹதபாப்மத்வாதி குணங்களையும் சொல்லுகையாலே.

(நாளுமித்யாதி) காலநியதியின்றிக்கே, ஆராதநோபகரணங்களுக்கும் நியதியின்றிக்கே, தங்களுக்குக் கைவந்த உபகரணங்களைக்கொண்டு, பெரியதிருநாளைக்கு ஸர்வதோதிக்கமாக வந்தேறுமாபோலே, ப்ரஹ்மாதிகள் வந்தாச்ரயிக்கும்படியான ஸ்வபாவத்தையுடையவனுடைய திருவடிகள்; தன் திருவடிகளைப் பற்றினார்க்கு, பின்னையும் புறம்புபோ யொருபற்றுத் தேடவேண்டாதபடியான பற்று.

(௧) த்ரமிடபாஷ்யம்.

திருவாய்மொழி, ௧௦-ப், ௪-தி, ௧௧-பா; பற்றென்றுவ்யாக்யாநம்.

அநந்யப்ரயோஜநரான பக்திமான்களுக்கும், பலப்ரதனுய் உபாயமாயிருக்கும்; தன்னையே பற்றினூர்க்கு அவ்யவஹிதோபாயமாம். (௧௦)

பதினென்ரும்பாட்டு.

பற்றென்றுபற்றிப் பரமபரம்பரனை * மல்திண்டோள்மாலை
வழுதிவளநாடன் * சொல்தொடையந்தாதி யோராயிரத்துளிப்பத்
தும் * கற்றூர்க்கோர்பற்றாகுங் கண்ணன்கழலிணையே. (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக, பகவச்சரணாரவிந்தம் ப்ராப்யமென்றருளிச் செய்கிறூர்.

(இ - ள்) பரமபரம்பரனை - தனக்குமேலில்லாதபடி ஸர்வஸ்மாத்பரனுய், மல் - மல்லயுத்தத்தில், திண் - திண்ணிதான, தோள்-தோளையுடையனுய், மாலை - ஆஶ்ரிதவ்யாமுக்தனுகையாலே ப்ராப்யப்ராபகபூதனுன ஸர்வேஶ்வரனை, பற்றென்று - தமக்கபாஶ்ரயமாக வறுதியிட்டு, பற்றி - பற்றின, வழுதிவளநாடன் - திருவழுதிநாட்டுக்கு நிர்வாஹகரான ஆழ்வார், சொல்-அருளிச்செய்த, தொடை - ஶப்தஸந்தர்ப்பரூபமான, அந்தாதி - அந்தாதி, ஓராயிரத்துள் - ஓராயிரத்துள், இப்பத்தும் - இப்பத்தையும், கற்றூர்க்கு - அப்யஸித்தவர்களுக்கு, கண்ணன் - தாமோதரனுன க்ருஷ்ணன், கழல் - திருவடிகள், இணை - இரண்டும், ஓர் - அத்விதீயமான, பற்றாகும் - ப்ராப்யமாம். (௧௧)

இது கலிவிருத்தம்.

ஆறு:—(பற்றென்று) இத்திருவாய்மொழிகற்றூர்க்கு எம்பெருமான் திருவடிகள் ஸ்வலபமாமென்கிறூர். (௪௧)

ஈடு-அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றூர்க்கு க்ருஷ்ணனுடைய திருவடிகள் ஸுலபமாமென்கிறூர்.

(பற்றென்றுபற்றிப்பரமபரம்பரனை) ஸர்வேஶ்வரனை ப்ராப்ய ப்ராபகமென்றுபற்றி. (மற்றிண்டோள்மாலை) இவன் ப்ரபத்திபண்ணி அத்யவஸிக்கு மத்தனையேவேண்டுவது, ரக்ஷணத்தி லவன்பக்கலொரு குறையுமில்லை. இவர்கள் விரோதிகளைப் போக்குகைக்கீடான மிடுக்கையும் வ்யாமோஹத்தையு முடையவனென்கிறது.

கக திருவாய்மொழி, ௧௦-ப,ச-தி,௧௧-பா,பற்றென்று வ்யாக்யாநம்.

(வழுதியித்யாதி) (க) ௸பாரொ்ரமெயெவயோ-ஙாம ஶ்ரீ ரொணைஷிஹிரநிதழ-பாட்யேகேயேசமதுரம் ப்ரமாணேஸ்த்ரிப்ரந்தம்" என்கிறபடியே, அழகியசொற்களாலே தொடுக்கப்பட்ட வந்தாதியான வாயிரத்திலும் வைத்துக்கொண்டு இந்தப்பத்தும் கற்றார்க்கு. (கண்ணன்கழலிணை ஓர்பற்றாகும்) "தாமோதரன்தாள்கள், தவநெறிக்கு - சார்வே" என்கிறபடியே-க்ருஷ்ணன் திருவடிகளே-இனி அவ்வருகுபோய் ஒன்றுதேடிப் பற்றவேண்டாதபடியான பற்றாகும். (௧௧)

பத்தாம்பத்து நாலாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) ஶா-பால-ச,௫-

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

ஐந்தாந்திருவாய்மொழி—கண்ணன் கழலிணை - ப்ரவேசங்கள்.

ஆறு:—(கண்ணன் கழலிணை) பக்தியோகத்தைச் சொல்லு கிறது. *

ப:—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் போகோபகரணபூதையான பக்தியினுடைய ஸ்வரூபத்தை ப்ரபாதித்து, அதினுடைய ப்ரகார ப்ரதிபாதநார்த்தமாக, பஜநீயனான ஸர்வேச்வரனுடைய; மந்த்ரலிங்கமான அஸாதாரண நாமத்வத்தையும், நாமார்த்தபூதரூஞ்ஜியோகத்தையும், ஸ்ருஷ்ட்யாதி கர்த்ருத்வத்தையும், ஆச்ரயணார்த்தமான அர்ணவசாயித்வத்தையும், மோக்ஷப்ரதத்வத்தையும், ரக்ஷணார்த்த ஸௌலப்யத்தையும், உபாயோபேயத்வத்தையும், அதிசயித புருஷ போக்யத்வத்தையும், அநந்யப்ரயோஜந ஸுலபத்வத்தையும், ஆச்ரிதரக்ஷணத்திலதிசயிதமஹத்வத்தையு மநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேச்வரனை, உக்தார்த்தப்ரதிபாதகமான மந்த்ராநுஸந்தாந பூர்வகமாக புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு கரணத்ரயங்களாலு மநுபவிக்க, ஸமஸ்தவிரோதிகளும் தானேபோம், நிரதிசயபுருஷார்த்தமும் கைப்படுமென்று பலவ்யாப்தமான பக்தியோகப்ரகாரத்தை ஸங்க்ரஹமாம்படி ஸங்க்ரஹேண வுபதேசித்துத் தலைக்கட்டுகிறார். *

ஈடு - அவ;—பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொன்னார் கீழ்; அத்தனைக்ரமம் பொறுக்கமாட்டாதே ஈச்வரன் தம்மைக்கொண்டுபோகையிலே த்வரிக்கிறபடியைக்கண்டு; அதாகிறது—"மரணமானால்" என்றது அவனுக்கு நெடுநாளாய், அவ்வளவும் பொறுக்கமாட்டாதே அவன் கொடுபோகையிலே த்வரிக்க அத்தை யநுஸந்தித்து; "நமக்குப் போக்குத் தவிராதபின்பு இனியிவர்கள் தங்களுக்கு பக்திமான்களுடைய பரிமாற்றமிருக்கும்படியு மறியவேண்டிவெடுதான் றுகையாலே அத்தையுபதேசிப்போம்" என்று பார்த்தார். இவர்தா மெம்பெருமானோபாதியும் க்ருபையுடையவர்களாறும்.

"இது தாமென்று இவர்களுக்குக் குறைகிடந்ததாகிறதென்" என்று அதிருக்கும்படியை யுபதேசிப்போமென்று பார்த்து பரோப

தேசத்திலே யொருப்பட்டு; அவன் தம்மைப் பரமபதத்திலே கொடுபோவதாக த்வரிக்கிறபடியாலும் "கேட்கிற விவர்களுக்கு ப்ரதிபத்திக்கு விஷயமாகவேணும்" என்னுமத்தாலும் பாசுரப்பரப்பறும்படி சுருங்கக்கொண்டு ;

அந்தபக்திக்கு ஆலம்பநமான திருநாமத்தைச் சொல்லி, இதிலிழிவார்க்கு அநுஸந்திக்கப்படும் மந்த்ரமின்னதென்றும், அதிலர்த்தாநுஸந்தாநமே மோக்ஷஸாதநமென்றும், அவ்வழியாலே பக்தியைப்பண்ணுங்கோளென்றும், கரணத்ரயத்தாலு மவனையாஸ்ரயியுங்கோளென்றும், இப்படி யாஸ்ரயிப்பார்க்கு அவன்றான் ஸுலபனென்றும், ஸ்ரியஃபதியாகையாலே ஸ்வாராதனென்றும் - இவனையிடுவித் தாஸ்ரயிப்பித்து இதுதன்னையே அவன்திருவுள்ளத்திலே படுத்திக் குவாலாக்குவாரு மருகேயுண்டென்றும், ஆஸ்ரயிக்குமிடத்தி லதிகாரி ஸம்பத்திவேண்டா, ருசியுடையா ரெல்லாருமிதுக்கதிகாரிகளென்றும், புஷ்பாத்யுபகரணங்களைக்கொண் டாஸ்ரயியுங்கோளென்றும், இதிலேயிழிய விரோதிகள் தன்னடையே போமென்றும், இப்புடைகளிலே சொல்லி ;

நாமின்னமும் சிலநாளிங்கே யிருக்கிறோ மன்றிக்கே போக்கணித்தானபின்பு எல்லாருமித்தைக் கொள்ளுங்கோளென்று உபதேசித்து, அத்தோடே தொடங்கின பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார். *

முதற்பாட்டு.

கண்ணன்கழலிணை* நண்ணும்மனமுடையீர்* எண்ணுந்திரு நாமம்* திண்ணம்நாரணமே. (௧)

ப:—முதற்பாட்டில் உபாஸநத்துக் காலம்பநமான மூலமந்த்ரப்ரதாநமான மந்த்ரத்தை யநுஸந்திக்க, அவன் திருவடிகளை ப்ராபிக்கலாமென்கிறார்.

(இ - ள்.) கண்ணன் - ஸர்வஸுலபனான க்ருஷ்ணனுடைய, கழலிணை - ஆஸ்ரிதார்த்தமான திருவடிகளை, நண்ணும் - ப்ராபிக்கைக்கீடான, மனம் - நெஞ்சை, உடையீர் - உடையநீங்கள், எண்ணும் - அநுஸந்திக்கைக்கு யோக்யமான, திருநாமம் - திருநாமம், திண்ணம்-நிஸ்

ஸிதமாக, நாரணமே-விஷ்ணுகாயத்ரியிலுபாத்தமான மர்யாதையாலே மந்த்ரப்ரதாநபூதமான நாராயணஶப்தமே,

ப்ரணவநமஸ்ஸுக்களும் சதுர்த்தியும் அபேக்ஷிதமல்ல, திருநாமமான நாராயணஶப்தத்தை யெண்ணுங்கோளென்றுமாம். (௧)

ஆறு:—எம்பெருமான் திருவடிகளைப் பெறவேணுமென்றிருப்பார் திருமந்த்ரத்தையே சொல்லுங்கோள், அவன்திருவடிகளைப் பெறுகை நிஶ்சிதமென்கிறார். (௧)

ஈடு-அவ ;—பக்தியுக்தராய்க்கொண்டு அவனை யநுஸந்திப்பார்க்கு ஆலம்பநமான திருமந்த்ர மின்னதென்கிறார்.

(கண்ணன்கழலிணை நண்ணும்மனமுடையீர்) கீழ்ச்சொன்னது தன்னைத்திரிய வொருக்காலநுபாஷிக்கிறார்; இவர்களுக்குக் கேட்கவேண்டுவத்தைச் சொல்லுகைக்குறுப்பாக. "சார்வேதவநெறிக்குத் தாமோதரன்றாள்கள்" என்றாரே, அது தன்னையிங்கே "கண்ணன்கழலிணை" என்கிறார். க்ருஷ்ணன் திருவடிகளைக் கிட்டவேணுமென்றிருப்பீர். (கண்ணன்கழலிணை) பரமபதத்திலே சென்று காணவேண்டும்படி யிருக்கையன்றிக்கே, ஸர்வஸுலபனானவன் திருவடிகளை. ஆஶ்ரிதர்க்காகத் தூதுபோதல் ஸாரத்யம்பண்ணுதல் செய்யும் திருவடிகள்.

(நண்ணும்) பிரிந்துகூடினாரைப்போலே யிருக்கிறதுகாணும்; * (௧) ஞுஜமாஶ-ஆஜகாமபோலே, (மனமுடையீர்) "நிதியுடையீர்" என்னுமாபோலே, இது தன்னையே குவாலாக நினைத்திருக்கிறார். இதுக்கதிகாரி ஸம்பத்தித்தடவேண்டா, ருசியுடையா ரெல்லாருமதிகாரிகள். ஸ்வர்க்கபலமானதுக்கு அதிகாரியதியும் ப்ராயஶ்சித்தமும் வேண்டாநின்றது, அபுநராவ்ருத்திலக்ஷண மோக்ஷத்துக்கு அதுவேண்டா தொழிகிறது, ப்ராப்யத்துக்கநுரூபமான அதிகார மிவனால் ஸம்பாதிக்க முடியாமையாலே.

(எண்ணும்திருநாமம்) அநுஸந்திக்கப்படும் திருநாமமென்னுதல், பக்திமான்களைச் சொல்லுகையாலே அதுதான் "அது, அது" என்னும்படியாயிருக்கையாலே சொல்லுதல். எண்ணும்திருமந்த்ரமென்னாதே, நாமமென்கிறது - இதுக்கோரதிகாரிநியதி அங்கநியதி

---

(௧) ரா-யு-௧௭-௧-

வேண்டா, ப்ரஜை தாய்பேரைச் சொல்லுமோபாதி யமையுமென்கைக்காக. அதுதானேதென்னில் (நாரணம்) இதுதான் ஸ்வாமிவாசகமாயிருக்கையாலே, "அம்மே!" என்பாரைப்போலே யிருக்கிறதாய்த்து. இதுவும் இன்னமேதுவும் வேணுமென்றால் (நாரணமே) இவ்வளவே யமையும்.

கனத்தபேற்றுக் கிவ்வளவு போருமோவென்னில் (திண்ணம்) நிஸ்சிதம். (க) "ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே - ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யமுத்த்ருத்யபுஜமுச்யதே" என்னுமாபோலே, திண்ணமென்கிறது. அவதாரணத்தாலே-ப்ரணவத்தை யொழியவும் நமஸ்ஸையொழியவும் சதுர்த்தியையொழியவும் இவ்வளவே பூர்ணமென்கை. நாரணமென்று - இல்லாதமகாரத்தையுங்கூட்டி உள்ளவற்றைக் குறைத்துச் சொல்லுகையாலே, அளத்திற்பட்டதெல்லா முப்பாமாபோலே இத்தோடேகூடினதெல்லாம் உத்தேஸ்யமென்றும், குறைந்தாலும் "அங்கம் தப்பிற்று, ஸ்வரம் தப்பிற்று" என்று ப்ராயஸ்சித்தியாய்ப் போகவேண்டுமவற்றிற்காட்டில் இதுக்குண்டான வாசிசொல்லுகிறதாய்த்து. (உ)

இரண்டாம்பாட்டு.

நாரணனேம்மான் * பாரணங்காளன் * வாரணந்தொலைத்த * காரணன்தானே. (உ)

ப:—அநந்தரம், திருநாமத்துக் கர்த்தபூதமான குணவிபூதியோகத்தை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) நாரணன்-(உ) "ஏஷ நாராயண: - ஏஷநாராயண:" என்கிறபடியே நாராயணஸப்தவாச்யன். எம்மான்-என்னைப்போல்வார்க்கு நாதபூதனுகையாலே லீலாவிபூதிக்கு நிர்வாஹகனாய், பாரணங்காளன் - பூமிப்பிராட்டிக்கு வல்லபனுகையாலே நித்யவிபூத்யுபலக்ஷிதனாய், வாரணந்தொலைத்த - ப்ரதிபந்தக குவலயாபீடநிரஸநனான, காரணன்றானே - ஜகத்காரணபூதனுயுள்ள க்ருஷ்ணன்தானே. (உ)

(க) பாரத. (உ) ஹரிவம்ஸ-ககரு-

ஆறு;—(நாரணன்) திருமந்த்ரத்தினுல் ப்ரதிபாத்யனை நாராயணனுகிறுனென்னில்;

ஸர்வேஸ்வரனுய், ஸர்வலோகரக்ஷகனுய், ஸர்வ ஜகத்காரணனுய், வாரணம்தொலைத்தவன்றனே யென்கிறுர். (உ)

ஈடு-அவ:—இரண்டாம்பாட்டிலும் மூன்றும்பாட்டிலும் இதினுடைய வர்த்தத்தைச் சொல்லுகிறது. எதேனுமாகத் திருமந்த்ரம் ப்ரஸ்துதமானவாறே, முன்னே அர்த்தத்தைச் சொல்லிப் பின்பு வாசகஸப்தத்தைச் சொல்லுதல், முன்னே யிதுதன்னைச் சொல்லிப் பின்னை அர்த்தத்தைச் சொல்லுதல் செய்யக்கடவதாயிருப்பதொரு நிர்ப்பந்தமுண்டிவர்க்கு. "எண்பெருக்கந் நலத்தொண் பொருளீறில - வண்புகழ்நாரணன்" என்னுதல், "யாவையும் யாவருந் தானுமமைவுடை நாரணன்" என்னுதல்; "நாரணன்முழுவேழுலகுக்குமாநாதன்" என்னுதல், "நாராயணன்நங்கள்பிரானவனே" என்று "அவனே யகல்ஞாலம் படைத்திடந்தான்" என்னுதல் செய்வர்.

(நாரணன்) மேல் அர்த்தோபந்யாஸம் பண்ண நினைத்து, ஸப்தோபாதாநம்பண்ணுகிறுர். (எம்மான்) எனக்கு ஸ்வாமியானவன். (பாரணங்காளன்) பாரணங்குண்டு - ஸ்ரீபூமிப்பிராட்டி, அவளுக்கு நிர்வாஹகன். பூமிக்கபிமாநிநியிறே. "பாரணங்காளன்" என்கையாலே - நித்யவிபூதியோகம் சொல்லுகிறது; எம்மானென்றது - லீலாவிபூதிக்கு உபலக்ஷணம்; ஆக, உபயவிபூதியுக்தனென்றபடி.

குற்றஞ்செய்தது பொறுக்கைக்கொரு விபூதியும், பொறுப்பிக்கைக் கொருவிபூதியுமாய்த்து (க) "க்ரூரா ஹவஸ்ச-க்ருதாகஸ:" குற்றம் தலைநிரம்பிப் புறம்பு புகலில்லாதாரை ரக்ஷிக்கு மீஸ்வரன்; குற்றம் நிரம்பி அந்த்ரப மில்லாதாரைப் பொறுப்பிக்கும் பிராட்டி; "தலையறுக்கச் சொல்லுகிறதென், கொடுக்கச் சொல்லுகிறதென்; நம்முடைய நிக்ரஹமாகில் அதுக்குமூலம், நிக்ரஹம் பலிக்கும்படி பண்ணிப் பின்பு அநுக்ரஹத்தைப் பண்ணவேணுமோ" என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி.

(வாரணம்தொலைத்த) தன்னைப் பெறவேணுமென்றிருப்பாருடைய ஆஸ்ரயணவிரோதிகள், குவாலயபீடம் பட்டதுபடும்,

(க) வரதராஜஸ்தவ-

விரோதிநிரஸந மிதுக்குறுப்போவென்னில்; முதலிலே தொடங்கி அதில் சொல்லிக்கொண்டு போருகிறது ரக்ஷணமிறே; அதுக்குக் களைபிடுங்கி நோக்கவேணுமே. (க) "அவ-ரக்ஷணே - அவரக்ஷணே" என்னக்கடவதிறே. (காரணந்தானே) இவற்றினுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் ஸ்வாதீநமாக வுடையனாயிருக்கையும் அதுக்கர்த்தமிறே. (௨)

மூன்றாம்பாட்டு.

தானேயுலகெல்லாம் * தானேபடைத்திடந்து * தானேயுண்டுமிழ்ந்து * தானேயாள்வானே. (௩)

ப:—அநந்தரம், ஸ்ருஷ்ட்யாதி கர்த்ருத்வரூபமான வர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) தானே - நாராயணமப்த வாச்யனானதானே, உலகெல்லாம் (உ) "ஸ்வ-ம்வலி்தவ் ஹை ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம" என்கிறபடியே ஸமாநாதிகரிக்கலாம்படி ஸர்வலோகத்துக்கும் ஏகப்ரகாரியாய், ஸாமாநாதிகரண்ய நிபந்தநமான ஸ்ருஷ்ட்யாதிகளில்வந்தால், தானே ஸஹகாரிநிரபேக்ஷமாகத்தானே; படைத்து - ஸ்ருஷ்டித்து, இடந்து - ப்ரளயத்திலே யிடந்தெடுத்து, ப்ரளயத்துக்குமுற்கோலி தானே அபேக்ஷாநிரபேக்ஷமாக. உண்டு - தன் வயிற்றிலேவைத்துநோக்கி, உமிழ்ந்து - அநந்தரத்திலேயுமிழ்ந்து, ஸேவ்யங்கர ப்ரஸங்கமில்லாதபடி, தானே - ஸர்வாதிகனானதானே, ஆள்வான் - நிர்வஹிக்கும். (௩)

ஆறு;—(தானே) நிகிலஜகந்நியமந ஸ்ருஷ்டி ரக்ஷணாதிகளைப் பண்ணுவானும், அந்தவாரணமதொலைக்க நளின வவன்றோ வென்கிறார். (௩)

ஈடு-அவ;—ஸ்வாமித்வ ப்ரயுக்தமான ஸர்வவிதரக்ஷணங்கள் பண்ணும்படி சொல்லுகிறது.

(தானேயுலகெல்லாம்) (உ) "ஸர்வம்வலி்தவ் ஹை ஸர்வம் கல்விதம்ப்ரஹ்ம" (௩) "தஜ்ஜலாந் - தத்த்வமஸி" என்னக்கடவ

(க) தாதுபாடம்- (உ) சாந்தோ-௩-கச- (௩) சாந்தோ-சு-அ

திறே. தானே படைத்திடந்து தானேயுண்டுமிழ்ந்து தானேயாள் வானுகையாலே, தானே யுலகெல்லா மென்கிறது; "தஜ்ஜாநிதி-தஜ்ஜலாநிதிவத்" இங்குச் சொல்லுகிற தாதாத்ம்யம் ஸ்வரூபேணைக்யம்சொல்லுகிறதல்ல, ஶரீராத்மபாவத்தாலே சொல்லுகிறது. காரணத்வம்சொல்லில் விகாராஸ்பதமாமென்று ஶங்கித்து, ஶரீராத்மபாவத்தாலே சொல்லுகிறது, ஶரீரகதமான பால்ய யௌவநாதிகள் ஆத்மாவுக்குத் தட்டதாப்போலே, இவற்றைப்பற்றிவரும் விகாராதிகள் அவனுக்கு வாராதென்று தோஷாஸ்பர்ஶம் சொல்லுகைக்காகச் சொல்லுகிறது.

(தானேபடைத்து) (௧) "தத³ஸ்ருஜத-தம: ஏகோபவதி" என்கிறபடியே ஸூக்ஷ்ம சிதசிச்சரீரியான தானே ஸகலலோகங்களையுமுண்டாக்கி. * அசிதவிஶேஷிதமான தசையானகையாலே, அபேக்ஷிப்பாருமின்றிக்கே * தயமாநமநாவாய்த்தானேயிறே ஸ்ருஷ்டித்தான். (தானே - இடந்து) ப்ரளயங்கதையான பூமி "என்னையெடுக்கவேணும்" என்றபேக்ஷிக்கவன்றிறே நஷ்டோத்தரணம்பண்ணிறது.

(தானேயுண்டு) ப்ரளயம்வரப்புகாநின்றதென்றறிவாரில்லையே. (உமிழ்ந்து) உள்ளேகிடந்து நோவுபடுமித்தனையல்லது, "எங்களை வெளிநாடுகாணப் புறப்படவிடவேணும்" என்றறியாதிருக்க, தானேயுமிழ்ந்து. இப்படி ஸர்வவிதரக்ஷணங்களையும் பண்ணுகையாலே (தானேயுலகேல்லாம்) (௨) "ஸர்வம் க²ல்விதம் ப்³ரஹ்ம" (௩)

நான்காம்பாட்டு.

ஆள்வானுழிநீர் * கோள்வாயரவணையான் * தாள்வாய்மலரிட்டு * நாள்வாய்நாடீரே. (௪)

ப:—அநந்தரம், (௩) "ஆபோ நாரா:-ஆபோநரா:" என்கிற நிர்வசநமர்யாதையாலே அர்ணவஶாயியான நாராயணன் திருவடிகளிலே புஷ்பாதிகளை ஸமர்ப்பித்து நித்யமாகவாஶ்ரயியுங்கோளென்கிறார்.

(௧) சுபால-௬-௨-
(௨) சாந்தோ-௩-௧௪-
(௩) வி-பு ௧-௪-௬-

கஉச திருவாய்மொழி, க௦-ப, ரு-தி,ச-பா, ஆள்வான் வ்யாக்யானம்.

(இ - ள்.) ஆழிநீர் - ஏகார்ணவமான காரணஜலத்திலே, கோள் வாய் - பெருமிடுக்கையும் ஸ்துதிமுகமான முகத்தையுமுடையனை, அர வணையான் - திருவரவணையை யுடையனுய்க்கொண்டு, ஆள்வான்-ஜகந் நிர்வாஹகனை சேஷியினுடைய, தாள்வாய் - திருவடிகளிடத்தே, மல ரிட்டு - புஷ்பங்களை ஸமர்ப்பித்து, நாள்வாய்நாடீர்-நாள்தோறும் ஸாபே க்ஷரா யாஶ்ரயியுங்கோள்.

கோள்வாயென்று - (க) "ஹ்ருஷீகேஶோ மஹாபலஶாலீ - பலஶாலி" என்கிறபடியே மிடுக்குச்சிடமான வாயென்றுமாம்; அன்றியே. கோ ளென்கிறது - ஒளியாய், * பஞ்சஜன்யத்தாலே யுஜ்ஜ்வலமுக மென்றுமாம். (ச)

ஆரு;—(ஆள்வான்) ஜகத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கட லிலேவந்து கண்வளர்ந்தருளுகிற வெமபெருமான் திருவடிமலர் களிலே திருமந்த்ரத்தைக் கொண்டு நாடோறும் மலரிட்டு அவன் திருவடிகளைப் பெறுங்கோளென்கிறார். (ச)

ஈடு-அவ;—(உ) "ஆபோ நாரா இதி ப்ரோக்தா - ஆபோ நாரா இதிப்ரோக்தா:" என்று ஒரு நிர்வசநப்ரகார முண்டிறே யிதுக்கு; அவ்வழியாலே திருமந்த்ரத்தை நிர்வசித்து திருமந்த்ரத் தைச் சொல்லிக்கொண்டு புஷ்பாஞ்ஜலியைப்பண்ணி யாஶ்ரயி யுங்கோளென்கிறார்.

(ஆள்வான்) இவற்றையடைய வடிமைகொள்ளுமவன். (ஆழி நீர் - ஆள்வான்) அடிமைகொள்ளும் ப்ரகாரமிருக்கிறபடி. காரண ஜலத்திலே ஸ்ருஷ்ட்யுந்முகனுய்க்கண்வளர்ந்தருளி, அத்தசையிலே சேதநஸமஷ்டியை ரக்ஷித்தவன்.

(கோள்வாய்) மிடுக்கையுடையவா யென்னுதல், ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவான வாயென்னுதல், (அரவணையான்தாள்வாய் மலரிட்டு) ஸ்வாராதனென்றதாய்த்து. அநந்தஶாயி திருவடிகளிலே செவ்வி பூவைப்பணிமாறி. (நாள்வாய் நாடீரே) நாள்தோறு மாஶ்ரயியுங் கோள் ; அத்திருவநந்தாழ்வானுடைய பேறு உங்களுக்கும் பெற லாம்.

(க) ஸ்தோ-ரத்-ருக- (உ) வி-பு-க-ச-௬-

ஐந்தாம்பாட்டு.

நாடீர்நாடோறும்* வாடாமலர்கொண்டு* பாடீரவன்னாமம்*
வீடேபெறலாமே. (ரு)

ப:—அநந்தரம், மோக்ஷப்ரதனான நாராயணன் திருநாமங்களைப் பாடுங்கோள், பரமபுருஷார்த்தத்தைப் பெறலாமென்கிறார்.

(இ-ள்.) நாடோறும்-நாள்தோறும், வாடாமலர்கொண்டு-செவ்விப் பூக்களைக்கொண்டு, நாடீர்-உங்களர்த்தித்வம் தோன்றும்படி யாச்ரயியுங்கோள், அவ்வளவில் பர்யவஸியாதே, ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு, அவன்நாமம் - அந்நாராயணனுடைய திருநாமத்தை, பாடீர் - பாடுங்கோள், அந்த ஆராதநமும் ஸாமகாநமுமே, வீடே-நிரதிசயபுருஷார்த்தலக்ஷணமோக்ஷமாக, பெறலாம் - பெறலாம். (ரு)

ஆறு:—(நாடீர்) திருமந்த்ரத்தைச் சொல்லி அவன்திருவடி மலர்களிலே வாடாமலர்கொண்டு நாடோறும் பணிமாற, அவன் திருவடிமலர்களைப் பெறலாம், இது நிஸ்சிதமென்கிறார். (ரு)

ஈடு-அவ;—இப்படி செவ்விமாறாத புஷ்பத்தைக் கொண்டு அவன்திருநாமத்தை ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகச் சொல்லுங்கோள். அப்படி செய்யவே, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறலாமென்கிறார்.

(நாடீர்நாடோறும்) பசித்தபோதெல்லா முண்ணுமாபோலே. (வாடாமலர்கொண்டு) உங்களுடைய வஸ்திவேஷாநுரூபமான புஷ்பங்களைக்கொண்டு. (பாடீரவன்னாமம்) (க) "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்று முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே, அவனுடைய திருநாமங்களை ப்ரீதிபூர்வகமாகப் பாடுங்கோள்.

நாடுகென்கையாலே - மாநஸவ்யாபாரத்தைச் சொல்லிற்று; வாடாமலர்கொண்டென்கையாலே - காயிகத்தைச் சொல்லிற்று; பாடுகென்கையாலே வாசிகத்தைச் சொல்லிற்று; (வீடேபெறலாமே) ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பண்ணவே, (உ) "ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்

(க) தை-ப்ருகு-௧0. (உ) சாந்தோ-அ-௧௨.

இறத்தைப் பெறலாம். இனியத்தைச் செய்யப் பெரியத்தைப் பெறலாம். (௫)

ஆறாம்பாட்டு.

மேயான்வேங்கடம் * காயாமலர்வண்ணன் * பேயார்முலை யுண்ட * வாயான்மாதவனே. (௬)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமாகவும் அநுபவார்த்தமாகவும் திருமலையிலேவந்து பிராட்டியோடே ஸந்நிஹிதனானானென்கிறார்.

*(இ - ள்) ஆஶ்ரிதர்க்கநுபாவ்யமாய், காயாமலர் - காயாம்பூப்போலே ஶ்யாமளமான, வண்ணன் - வடிவையுடையனாய், அநுபவப்ரதிபந்தகமான ப்ரக்ருதியை, பேயார் - பூதனையினுடைய, முலை-விஷபூர்ணமான முலையை, உண்ட-பசையறச்சுவைத்தாப்போலேபசையறுக்கும், வாயான-வாங்மாதுர்யத்தையுடையனானவன். (௧) "ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹ மோததே - ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹ மோததே" என்கிறபடியே, மாதவன் - * அலர்மேல்மங்கையோடே, வேங்கடம் - திருமலையிலே, மேயான் - நித்யவாஸம்பண்ணாநின்றான்.*

ஆறா:—(மேயான்) * *அதஸீஸுமஸமாமலச்சவியாய் ஶ்ரிய:பதியாயிருந்த பேயார்முலையுண்ட வாயான். நம்முடைய சக்ஷுராதிகரணங்களுக்கு விஷயமாயிருக்கிற அவன் திருவடிகளிலடிமை செய்யலாவதென்னில்; அவனன்றோ ஸகலமநுஜநயநவிஷயதாங்கதனாய் ஸர்வஸுலபனாய்க் கொண்டு திருமலையிலே புகுந்துநின்றருளுகிறானென்கிறார்.* (௬)

ஈடு - அவ;—*நீர்சொன்னபடி செய்யலாவது ஆஶ்ரயணீயனைக் கண்டாலன்றோ, கண்டாஶ்ரயிக்க வேண்டாவோவென்ன; பிற்பாடரான நமக்காகத் திருமலையிலே நின்றருளினான், அவனையாஶ்ரயியுங்கோளென்கிறார்.*

(மேயான்வேங்கடம்) (வேங்கடம்-மேயான்) *உங்களையாஶ்ரயிப்பித்துக் கொள்ளுகைக்காகத் திருமலையிலே பொருந்தி வர்த்திக்கிறவன். கண்டவாறே தான்பஜிக்கலாயிருக்குமோ வென்னில்* (காயாமலர்வண்ணன்) *துரும்புமெழுந்தாடி அடிமையிலே மீண்டல்லது நிற்கவொண்ணாதபடியான வடிவுபடைத்தவன்.*

---

(௧) வேங்கடாசல மாஹாத்ம்யம்.

விரோதிவர்க்கம் பின்னைச்செய்வ தென்னென்னில் (பேயார் முலையுண்டவாயான்) பூதனைபட்டதுபடுமத்தனை. (மாதவனே) நம் பூர்வவ்ருத்தம்பாராதே விஷயீகரிப்பிக்கைக்கு அருகே யிருப்பாருமுண்டு. (௬)

ஏழாம்பாட்டு.

மாதவனென்றென்று* ஓதவல்லீரேல்* தீதொன்றுமடையா* ஏதஞ்சாராவே (௭)

ப:—அநந்தரம், இப்படி ஸர்வப்ரகாரோபாஸ்தி பண்ணமாட்டாதாருண்டாகில், உங்கள் ஸகலக்லேசமும் தீரும்படி, உபாயோபேயமான அந்தஃபுரத்தில் வார்த்தையைச் சொல்லுங்கோளென்கிறார்.

(இ-ள்.) மாதவன் - புருஷகாரயோகமென்ன, கைங்கர்யவர்த்தகத்வமென்ன, இரண்டாகாரத்தையுமுடைய லக்ஷ்மீவிசிஷ்டனானவனுடைய மாதவனென்கிற திருநாமத்தை, என்றென்று - பூர்வகண்டமர்யாதையாலே உபாயத்வேந ஆஶ்ரயணீயனென்றும், உத்தரகண்ட மர்யாதையாலே உபேயத்வேந புருஷார்த்தபூதனென்றும் அநுஸந்தித்து. (௧) ‘ [illegible] ’’ என்கிறபடியே, ஓத - உச்சரிக்கைக்கு, (௨) ‘‘ [illegible] ’’ என்கிறபடியே கிடையாதது கிடைத்தது, வல்லீரேல் - வல்லீகோளாகில், தீதொன்றும்-முன்பு ஆர்ஜ்ஜித்தக்ரூரபாபங்கள், அடையா-பலப்ரதோந்முகமாகக்கொண்டுகிட்டாது. (௩) ‘‘ [illegible] ’’ என்கிறமர்யாதையாலே, ஏதம்சாரா-மேலுண்டான பாபப்ரவ்ருத்திகள் கூடாது.

(௪) ‘‘ [illegible] ’’ என்கிறபடியே அநுபவமே யாத்ரையாமென்று கருத்து. (௭)

ஆறு;—(மாதவன்) இந்த பக்தியோகத்தி லநதிகாரிகள் மாதவனென்னும் திருநாமத்தைச் சொல்லுங்கோள், சொல்லுமிடத்தில்

---

(௧) அதிமாநுஷ ௬௦-
(௨)
(௩)
(௪) கத்யத்ரய-௩-

ப்ரதிகூலராய்ச் சொல்லவொண்ணாதார் சொல்லும்; "பகவத்கைங்கர்ய விரோதியாய் ப்ராப்தாப்ராப்தமான ஸர்வபாபங்களும் நசிக்கு மென்கிறார். (எ)

ஈடு-அவ;—ப்ரதிப்ரேரிதராய் ஆஸ்ரயிக்கவும் இனிமையோ டே திருநாமம் சொல்லவும் மாட்டாதார், அந்த:புரபரிகரமானார் வார்த்தையைச் சொல்லவே, பூர்வோபாயத்தில் பலம் ஸித்திக்கு மென்கிறார்.

(மாதவனென்று ஓதவல்லீரேல்) நாராயண மந்த்ரத்தோடே யித்தைச் சேர்த்துச் சொல்லப்பாருங்கோள். "நாரணமே" என்றாரே கீழே. (ஓதவல்லீரேல்) உங்களுக்கு ருசியில்லையாகிலும் பரப்ரேரிதராய்க் கொண்டு நிரந்தரமாகச் சொல்லவல்லீகோளாகில். (தீதொன்றுமடையா) பூர்வாகம் நசிக்கும்.

(ஏதம்சாராவே) உத்தராகத்துக்கு அஸ்லேஷமேயாம். பூர்வாகத்தை விநாசிக்கும், உத்தராகத்தில் நெஞ்சு செல்லாது. கீழ்ச் சொன்ன திருமந்த்ரமும் இப்பாட்டில் சொன்ன ஸ்ரீமந்த்ரமும் தனித்தனியே பேற்றுக்கு பர்யாப்தமானவின்பு, இரண்டையும் சேர்த்துச் சொன்னவர்களுக்குப் பேறு சொல்லவேண்டாவிறே. (எ)

எட்டாம்பாட்டு.

சாராவேதங்கள் * நீரார்முகில்வண்ணன் * பேராரோதுவார் * ஆராரமரரே. (அ)

ப:—அநந்தரம், உத்கர்ஷாபகர்ஷமில்லாதபடி ஸர்வபுருஷ போக்யபூதனானவன் திருநாமத்தைச் சொல்லுமவர்கள் ஸூரிஸமாநரென்கிறார்.

(இ-ள்) ஏதங்கள் - துக்கங்கள்தாமே, சாரா - ஸ்வயமேவ கிட்ட மாட்டாதுகள். ஜலஸ்தலவிபாகமறவுபகரிக்கையாலே ஸர்வஜநபோக்யமாய், நீரார் - நீர்நிறைந்த, முகில்வண்ணன் - காளமேகம்போலே யிருக்கிற நிறத்தையுடையவனுடைய, பேர் - திருநாமத்தை, ஆரார் - த்ருப்திபிறவாத வளவாய்க்கொண்டு, வர்ணாஸ்ரமாதிகளின் றியிலே உத்தமாதமாதிகாரத்தை யுடையராய்க்கொண்டு, ஆர் ஆயாவரேனும், ஓதுவார் - சொல்லுவார், அவர்கள், அமரரே - ஸூரிகளிறே.

ஆரார் - த்ருப்தராகாரென்றுமாம். (அ)

ஆறு;—(சாரா) அபக்ருஷ்டரான நாங்களதிகாரிகளோ வென்னில் ;

யாவர் சிலர் திருநாமஞ் சொல்லவல்லார், அவர்களிறே இத்திருநாமஞ்சொல்ல வதிகாரிகளான வுத்க்ருஷ்டராவிரு ரென்கிறார், இத்திருநாமத்தைச்சொல்லுவார் யாவர் சிலர், அவர்கள் நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகராய் என்றுமவன் திருவடிகளிலே யடிமைசெய்யப் பெறுவர்களென்றுமாம். (அ)

ஈடு-அவ;—அதிகாரி நியதியில்லை, ஆரேனுமாகத் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் நித்யஸூரிகளோ டொப்பர்களென்கிறார்.

(சாராவேதங்கள்) ஒரு பொல்லாங்கும் வந்து கிட்டாது. (நீரார்முகில்வண்ணன்) நீராலே பூர்ணமான மேகம்போலே யிருக்கிற நிறத்தையுடையவன். அவ்வடிவு காணுந்தனையுமிறே உபதேசிக்கவேண்டுவது (பேராரோதுவார்) அவன் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் யாவர் சிலர்.

(ஆராரமரரே) அவர்களேதேனும் ஜந்மவ்ருத்தங்களை யுடையரேயாகிலும், அவர்கள் இருந்தபடியே நித்யஸூரிகளோடொப்பர். அவ்வோ ஜந்மஸ்த்திதிகளிலே நித்யஸூரிகளோ டொப்பர்கள். ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக அவர்களேற்ற மருளிச்செய்கிறார். (அ)

ஒன்பதாம்பாட்டு.

அமரர்க்கரியானை* தமர்கட்கெளியானை* அமரத்தொழுவார்கட்கு* அமராவினைகளே. (கூ)

ப:—அநந்தரம், அநந்யப்ரயோஜந ஸுலபனானவனை அநந்யாஶ்ரயிப்பார்க்கு ப்ரதிபந்தகங்கள் கிட்டாவென்கிறார்.

(இ - ள்.) அமரர்க்கு-ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளுக்கு, அரியானை - துர்லபனாய் தமர்கட்கு - ஸம்பந்தஜ்ஞாநமுடைய அநந்ய ப்ரயோஜநர்க்கு, எளியானை - ஸுலபனானவனை, ப்ரயோஜநங்களைக்கொண் டகலப்போகாதே அநந்யராய்க்கொண்டு, அமர - பொருந்த,

தொழுவார்கட்கு - தொழுவார்க்கு, வினைகள் - ப்ராப்திப்ரதிபந்தகபாபங்கள், அமரா - ஸ்பர்ஸியாதுகள். (௯)

ஆறு;—(அமரர்க்கு) ஆஸ்ரிதரான தேவாதிகளுக்குங் கூட வரியவனாய், ஆஸ்ரிதர்க்கெளியனா யிருந்தவனை, அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு ஓரஞ்ஜலிமாத்ரம் பண்ணவுமமையும், கைங்கர்ய விரோதிகளெல்லாம் போமென்கிறார். (௯)

ஈடு-அவ;—ஜந்மாதிக ளப்ரயோஜகமானாலும் ப்ரயோஜநாந்தரபரதா ஹேதுவான பாபங்கள் செய்வதென்னென்னில்; ப்ரயோஜநஸாபேக்ஷராய்க்கொண டாஸ்ரயிக்கவே அவைதாமே போமென்கிறார்.

(அமரர்க்கரியானை) எத்தனையேனு மதிஸயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் ஸ்வயத்நத்தால் ப்ராபிக்கவொண்ணாதவனை; (௧) "யஜ்ஞாயம்ஸமவாப்நோதி ப்ரஹ்மா ஜாநாதி - யந்நாயம்பகவாந்ப்ரஹ்மா ஜாநாதி" (தமர்கட்கெளியானை) அநந்ய ப்ரயோஜநர்க்கு ஸுலபனானவனை. ஒரு குரங்காகவுமாம், ஒரு வேடுவிச்சியாகவுமாம், ருஷிகளாகவுமாம், அவர்களுக் கெளியனாயிருக்கும்; (௨) "ஸுக்ரீவம் ஸரணம்கத: - ஸுக்ரீவம்ஸரணங்கத:" (௩) "ஸோப்யகச்சந் மஹாதேஜா: - ஸோப்யகச்சந் மஹாதேஜா:" (௪) "ஜகௌ ஸ நிஸாஹு - இமௌஸ்மமுநிஸார்த்தூல" என்று சொல்லுகிறபடியே. (அமரத்தொழுவார்கட்கு) ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு தொழுமவர்க்கு. (அமரா வினைகளே) ப்ரயோஜநாந்தரபரதைக் கடியான விரோதிகள் வந்து கிட்டா. (௯)

பத்தாம்பாட்டு.

வினைவல்லிருளென்னும்* முனைகள்வெருவிப்போம்* சுனைநன் மலரிட்டு* நினைமின்னெடியானே. (௧௦)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணத்தி லளவிறந்த பாரிப்பையுடையனானவனையாஸ்ரயியுங்கோள், அவித்யாகர்மாதி ஸமஸ்ததோஷங்களும் நிவ்ருத்தமாமென்கிறார்,

---

(௧) வி-பு-௧-௯-௫௯-   (௨) ரா-கிஷ்-௩-௨ப-

(௩) ரா-பால-௧-   (௪) ரா-பா-௩௧-௪-

(இ - ள்.) வினை - பூர்வாகோத்தராகாதிரூப கர்மங்களும், அதுக் கடியான, வல்லிருள் - அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநரூபமான ப்ரபல தமோவிகாரங்களும், என்னும் - என்றென்று பரிகணிக்கப்பட்ட, முனைகள் - விரோதிவர்க்கத்தினுடைய தேஹஸம்பந்தம் ருசிவாஸநைகளாகிற வுத்யோகங்கள், வெருவிப்போம் - தாமேயஞ்சி விட்டுப்போம், சுனை - தண்ணிலமான சுனையிலுண்டான, நன்மலர் - செவ்விப்பூக்களை, இட்டு - ஸமர்ப்பித்து, நெடியான் - ஆஸ்ரிதவிஷயத்தில் அபர்யந்தோபகாரதையை யுடையவனை, நினைமின் - அநுஸந்திக்கப் பாருங்கோள். (௧௦)

ஆறு ;—(வினை) திருமந்த்ரத்தைச் சொல்லி அழகிய மலர்களைக் கொண்டு அவன் திருவடிகளிலே பரிமாறி அவனை ஸ்நேஹயுக்தமாக நினையுங்கோளென்று கொண்டு, ப்ரஸ்துதமான பக்தி யோகத்தைச் சொல்லி முடிக்கிறார். (௧௧)

ஈடு - அவ ;—அவ்வளவேயன்றிக்கே, கைங்கர்ய ப்ரதிபந்தகங்களும் போம், ஆனபின்பு, அவனை யாஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

(வினையித்யாதி) வினை - கர்மம், வல்லிருள் - ப்ரபலமான வஜ்ஞாநம், அதுக்கடியான தேஹஸம்பந்தம், இவற்றைப்பற்றி வருகிற ருசிவாஸநைகளாகிற விக்நிரள்கள். முனை - திரள், (வெருவிப் போம்) "உமக்கிது நிலமன்று" என்று மீதயாய்ப்போம். அன்றிக்கே, முனையென்று-முகமாய், முகங்கெட்டுப்போமென்றுமாம்

(சுனைநன்மலரிட்டு) அப்ராக்ருத த்ரவ்யம் தேடியிடவேணு மென்னவேண்டா. (நினைமின்) "சிந்திப்பே யமையும்." உங்களுக்குப் பாங்கான ஸமயத்திலே ஒருக்கால் நினையுங்கோள்; (௧) "ஸக்ருத் ஸ்மர்த்தா" என்கிறபடியே.

(நெடியானே) நீங்களொருக்கால் நினைத்துவிட்டால், பின்னை அவன்றானே (௨) "அஹம் ஸ்மராமி - அஹம் ஸ்மராமி" என்று உங்களை நினைத்தபடியே யிருக்கும்; ஒருக்கால் நினைத்து இவனைப் போல் கலங்கவேண்டுவதில்லையிறே அவனுக்கு. ஸர்வஜ்ஞனை ஸம்பந்நனுமாய் அகர்மவஶ்யனுமாகையாலே உருவ நினைத்தபடியே யிருக்குமிறே அவன். (௧௦)

---

(௧) வராஹ-சரம

பதினொன்றாம்பாட்டு.

நெடியானருள்சூடும் * படியான்சடகோபன் * நொடியாயிரத்திப்பத்து * அடியார்க்கருள்பேறே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக பகவத்ப்ரஸாதத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) நெடியான்-ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனுடைய, அருள்-ஸர்வப்ரகாரத்தாலுமுண்டான ப்ரஸாதத்தை, அதிகரித்து, சூடும்-அநுபவிக்கும், படியான் - ஸ்வபாவத்தையுடையரான சடகோபன்-ஆழ்வாருடைய, நொடி - சொல்லான, ஆயிரத்து - ஆயிரத்து இப்பத்து - இப்பத்தானது. அடியார்க்கு - பகவச்சேஷபூதரானார்க்கு. அருள்பேறு-ப்ரஸாதலாபரூபமாயிருக்கும்.

நொடி - சொலவு; இதுவஞ்சித்துறை. (கக)

ஆறு;—(நெடியான்) இத்திருவாய்மொழி வல்லார் ஆழ்வாரைப் போலே நெடியானருள் சூடும்படியாவா ரென்கிறார். (கக)

ஈடு-அவ;—நிகமத்தில், இப்பத்தும், அப்யஸித்தவர்களை ஆழ்வார் தம்மைப்போலே பகவத்விஷயீகார பாத்ரமாக்கு மென்கிறார்.

(நெடியானித்யாதி) ஸர்வேஶ்வரனானவனுக்குப் பாத்ரபூதரா கையே ஸ்வபாவமான வாழ்வார். அதாவது — "ஆற்றநல்லவகை காட்டுமம்மான்" என்று தன் குணசேஷ்டிதங்களை ஸாக்ஷிக்க ஸாக்ஷிக்க அநுபவிப்பித்துக் கொண்டு போந்தபடியை யநுஸந்தித்து விஸ்மிதரானார்கீழ்; இப்போது, அவன் கொடுக்கக்கொடுக்க வாங்கினெல்லா முண்டறுக்க வல்லரானா ராய்த்து. நொடிதல் - சொல்லுதல்.

(இப்பத்தடியார்க் கருள்பேறே) இப்பத்துத்தானே, இத்தை யப்யஸித்தார்க்கு, "நெடியானருள் சூடும்படியான்" என்றதாகவே பேறாக்கும். [அடியார்க்கு - அப்யஸித்தார்க்கு, அருள்பேறு - ப்ரஸாதலாபம்.] ஈஶ்வரன் கொடுத்த ஸாதர்ம்யம் ஆழ்வார்க்காக்க மாட்டாமை யில்லையிறே. (கக)

பத்தாம்பத்து ஐந்தாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமானுஜாயநம:

ஆறாந்திருவாய்மொழி—அருள்பெறுவார் - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(அருள்பெறுவார்) இனித் தன்திறத்தி லெம்பெருமான் செய்தருளுகிறபடியைத் தன் திருவுள்ளத்தோடேகூட வநுபவிக்கிறார். *

ப:—ஆறாந்திருவாய்மொழியில், இவ்வாழ்வாருடைய பக்திவைலக்ஷண்யத்தையும் அது தம்மளவில் நில்லாமல் பிறர்க்கு முபதேசித்து ப்ரீதராம்படியையுங்கண்ட வீஶ்வரன், "இப்படி ப்ரவணரான விவரை யாவதாத்மபாவியாம்படி அமர்ந்த நிலத்திலே கொண்டுபோயநுபவிக்க வேணும்" என்று பாரிக்கிற வவனுடைய; உபகாரோத்யோகத்தையும் அஸாதாரண ஸம்பந்தத்தையும், பலப்ரதாநத்வரையையும், ஆஶ்ரித ரக்ஷகத்வத்தையும், அதிஶயிதாங்கீகாரத்தையும், ஸ்த்ரீராஸக்தியோகத்தையும், ஆஸக்திஸூசக லக்ஷணகரத்வத்தையும், ஸம்ஶ்லேஷஜநிதௌஜ்ஜ்வல்யத்தையும், அத்யாதரவிசிஷ்டத்வத்தையும், அநவதிகோபகாரத்தையு மநுஸந்தித்து ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் தமக்குப்பரதந்த்ரனாய் நின்று பண்ணுகிற வாத்ராதிசயத்தைத் தம்முடைய திருவுள்ளத்தோடேகூட வுசாவி ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு-அவ ;—* பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர, ஈஶ்வரனை ஆழ்வார் பின்தொடர்ந்தபடி சொல்லிற்று; இது தொடங்கி, ஆழ்வாரை ஸர்வேஶ்வரன் பின்தொடருகிறபடி சொல்லுகிறது.

இப்படி பக்தி ஸ்வரூபத்தை யுபதேசித்துக் கையொழிந்தவநந்தரம் தன்பக்கலிலே யிவர்க்கு விடாய்பெருகுகிறபடியைக்கண்டு, இவர்க்கு முன்பே விடாய்த்துத் திருவாட்டாற்றிலே தங்குவேட்டையாகவந்து நிற்கிறவனுகையாலே இவரைக் கொண்டுபோகையிலே அவனுக்கு த்வரைமிக்கது. இவராளவல்லவிறே அவனுடைய விடாய்; (க) "நஜீவேயம்க்ஷணமபி-நஜீவேயம்க்ஷணமபி" என்னு மேற்றமுண்டிறே. "ஆழ்வாரும் நாமுமா யநுபவிக்கவேணும்" என்றுபாரித்து, "அதுசெய்யுமிடத்தில், அவ்வநுபவத்துக்கொரு விச்சேதம் வாராதபடி யேகாந்தமா யிருப்பதொரு தேச விசேஷத்

(க) ரா-ஸு-சா-சா-சO

திலே கொடுபோய்வைத் தநுபவிக்கவேணும்" என்றபாரிக்க, "அது செய்யுமிடத்தில், இவர்க்குப் பரதந்த்ரனாய் இவர் நியமித்தபடி செய்தோமாகவேணும்" என்று இவரநுமதி யொழியச் செய்ய மாட்டானாய் நின்றான்; ஸர்வேச்வரனைத் தாம்நியமிக்கமாட்டாரே தம்முடைய பாரதந்த்ர்யத்தாலே;

இப்படி தம்பக்கலிலே அதிநிவேசாதிசயத்தைப் பண்ணுகிற வனுடைய மேன்மையையும், அப்படிப்பட்ட மேன்மையையுடையவன் தம்பக்கல் பரதந்த்ரனாய்த் தாழநிற்கிறபடியையுமநுஸந்தித்து, இதுதனக்கு உசாத்துணையாக ஸம்ஸாரிகளைப் பார்த்தவிடத்து, அவர்கள் சப்தாதி விஷயங்களிலே அந்யபரராய் அவற்றோடே பணிபோந்திருந்தார்கள், அவன்றன்னைப் பார்த்தவிடத்தில், அதிநிவேசாதிசயத்தையுடையனாய் முன்னடி தோற்றாதேயிருக்கிறவனாகையாலே அவனிதுக்காளாக மாட்டிற்றிலன்;

இனி இவ்விஷயீகாரத்துக் கிலக்கான தாமும் தம்மோடொக்க நெஞ்சு போயிருந்தது, அந்நெஞ்சைக் குறித்து, "அவனுடைய மேன்மையிருந்தபடியும், அப்படி மேன்மையுடையவன் நம்பக்கல் தாழநின்ற நிலையும், நாம்பெற்ற பேற்றின் கனமிருந்தபடியுமெல்லாம் கண்டாயே!, நம்கார்யம் விழுந்தபடி கண்டாயே!" என்று, இத்தைத் தம் திருவுள்ளத்தோடே கூட்டி யினியபராகிறார்.

இதுக்கு முன்பெல்லாம், "ஸர்வேச்வரனாகிறான், ஸர்வநியந்தாவாய் ஸ்வதந்த்ரனாயிருப்பானொருவ னென்றிருந்தார்; இப்போது, அங்ஙனன்றிக்கே, ஆச்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிறார். முன்பெல்லாம், தம்மாலே பாரதந்த்ர்யத்தை யிழந்தார்; இப்போது, அவனாலே பாரதந்த்ர்யத்தை யிழக்கிறார். அது தான் * இருந்தார் வியந்திலே சொல்லிற்றில்லைபோ வென்னில்; அதிலிதுக்கு வாசியென்னென்னில் - "அடியார் தம்மடியனேன்" என்று ஹேதுவோடே அநுஸந்திக்கிறார். *

முதற்பாட்டு.

அருள்பெறுவாரடியார் தம்மடியனேற்கு * ஆழியானருள்தருவானமைகின்றானது நமதுவிதிவகையே * இருள் தருமாஞாலத்துளினிப்பிறவியான்வேண்டேன் * மருளொழிநீமடநெஞ்சே வாட்டாற்றானடிவணங்கே, (௧)

ப:—முதற்பாட்டில், தன்விஷயத்தில் ஶேஷத்வ ஜ்ஞாநமுடையையு டைய நமக்கு நிரவதிகோபகாரத்தைப் பண்ணுவதாக வுத்யோகியா நின்றான், அதுதானும் நாம் நியமித்தபடியே செய்வானாயிரா நின்றா னென்று, நெஞ்சைக்குறித்தருளிச் செய்கிறார்.

(இ - ள்.) அருள் - தன்னுடைய நிரவதிக ப்ரஸாதத்தை, பெறு வார் - பெறுகையை நிரூபகமாகவுடையராய், அடியார்தம் - அதுக் கடியான ஶேஷத்வஜ்ஞாநத்தையுடையார்க்கு, அடியனேற்கு-அஸாதா ரண சேஷபூதனாயிருக்கிற வெனக்கு, ஆழியான்-திருவாழியாழ்வானைக் கைவிடாதாப்போலே, அருள்-ஸ்வவிஷயமான பூர்வாநுபவரூப மஹோ பகாரத்தை, தருவான் - பண்ணுவானாக, அமைகின்றான் - உத்யுக்தனா யிராநின்றான், அது - அது, ஸ்வதந்த்ரனான தான் நினைத்தபடி செய் கையன்றியே, நமது விதிவகையே - புருஷார்த்தமாகையாலே நாம் விதித்த ப்ரகாரத்திலே யாகாநின்றது; ஆனபின்பு, இருள் தரு-அஜ்ஞா நபாதகமாயிருக்கிற, மா - பெரிய, ஞாலத்துள் - ஜகத்தில், இனி-அவ னுடைய விஷயீகாரம் பெற்றபின்பு, பிறவி - "இழிபட்டோடு முடலி னிற்பிறந்து தன்சீர்யான் கற்று." என்கிறபடியே பகவத்பாகவதாநுபவ ப்ரீத்யர்த்தமாகவும் பிறக்கையை, யான் வேண்டேன் - அவன்நினைவறி ந்த நான் இச்சிக்கிறிலேன், மடம்-பற்றிற்று விடமாட்டாத சபலமான, நெஞ்சே - நெஞ்சே, மருள் - "அவன் நினைவொழிய நாம் நினைத்தபடி அர்ச்சாவதாராத்யநுபவம் பண்ணவேணும்" என்கிற ஸ்வதந்த்ராபி ஸந் திரூபமான வறிவுகேட்டை, நீ - நீ, ஒழி - தவிரப்பார், தவிர்ந்தமை தோன்ற, வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே நமக்கு பலப்ரதனாய்க் கொண்டுவந்து நிற்கிறவன், அடி - திருவடிகளை, வணங்கு - உன் ஜக மத்யத்தாலே வணங்கப்பார், (௧)

ஆறு;—எம்பெருமான் தன்னருள் சூடுமடியரான வடியார்க் கடியேனா யிருக்குமிதுவே படியாயிருந்த வெனக்கு, ஆழியான் நிர வதிக ஸம்ருத்தியைத் தருகையிலே சமைந்திராநின்றான்; அதுவும் நான் சொன்னபடியே செய்தருளக்கடவனா யிராநின்றான்; ஆன பின்பு இனி இந்த ஸம்ஸாரத்தை நான்வேண்டேன், நீயுமிந்த ஸம் ஸாரத்தைவிட்டு அவன் நமக்குத்தந்தருளுகிற தன்திருவடிகளாகிற ஸம்ருத்தியைக் கைக்கொண்டு அந்த ஸம்ருத்தியை யநுபவியென்று தம்முடைய நெஞ்சைக்குறித்தருளிச் செய்கிறார். (௧)

ஈடு-அவ;—ஈஶ்வரன் நம்மை விஷயீகரிக்கையிலே யொருப்ப டாநின்றான், அது தானும் நாம் விதித்தபடி செய்வானாயிராநின்றா னென்கிறார்.

(அருள்பெறுவாரடியார்தம் மடியனேற்கு) ஹேதுத்தானிருக் கிறபடி. ஸர்வேஶ்வரன் பண்ணும் ப்ரஸாதாதிசயத்துக்கு விஷய பூதராயிருப்பார் சிலருண்டு, அவர்கள் நமக்கு ஸ்வாமிகள். அவர் கள் பக்கலிலே அவன் பண்ணின வருள் நம்மளவும் வர வெள்ளங் கோத்ததுகா ணென்கிறார். (க) "தாநஹம்த்விஷதः - தாந ஹம்த்விஷதः" என்று ப்ரஜை தீம்பிலே கைவளர்ந்தால் மாற்றைக் கொண்டு ": வாய் வாய்" என்பாரைப் போலே, அவன்றான் சீற வேண்டும்படி யிருப்பார் சிலருண்டு, அவர்களைப்போ லன்றியே, (உ) "ததாமி-ததாமி" என்று அவனுடைய வருளுக்கு விஷய பூதராயிருப்பார் சிலருண்டு, அவர்கள் பக்கல் பண்ணுமருளை நம் பக்கலிலே பண்ணினான்.

ராஜாவுக்குப் புறம்பு ஒருமுறையிலே செல்லாநின்றாலும், தன்னைஶ்வர்யத்தையுங் கொடுத்துத் தன்னுடம்பையுங் கொடுக்கு மிறே மஹிஷீவிஷயத்தில்; அப்படியே அவன் தன்னை முற்றாட் டாகக் கொடுத் தநுபவிப்பித்துத் தான் பரதந்த்ரனும்படி யிருப் பார் சிலருண்டு, அவர்கள் பக்கல் பண்ணுமருளை யென்பக்கலிலே பண்ணினான். (அருள்பெறுவாரடியார் தம்மடியனேற்கு) இருவர்க் கும் நிரூபகமிருக்கிறபடி. இவர் அருள்பெறுவாரடியார் தம்மடியார், அவன் ஆழியான்; இருவர்க்கும் நிரூபகர் ததீயஶேஷத்வமும். (அடிய னேற்கு) "விடுமாறென்பதென்" என்றும் "நீக்கமில்லாவடியார் தம்மடியா ரடியாரடியோ ரெங்கோக்கள்" என்றும் "தமர்கள் தமர் கள் தமர்களாம் சதிரே வாய்க்க" என்றும் நான் சொன்ன அவ் வார்த்தையையே நினைத்திருந்தான் காணவன்; (ஈ) "அடிகளடியே நினையுமடியவர்கள் தம்மடியான்" என்கிறபடியே இத்தையேயாய்த்து இவர் தமக்கு ஸ்வரூபமாக நினைத்திருப்பது.

(ஆழியானருள்தருவா னமைகின்றான்) ஸர்வேஶ்வரன் நம் பக்கலில் முழுநோக்காக நோக்கி ப்ரஸாதாதிசயத்தைப் பண்ணுவா

(க) கீதை-கசு-கக- (உ) கo-கo-
(ஈ) தி-மொ-உ-கூ-கo-

னுகப் பாரியாநின்றான்; திருவாழியை யொருகண்ணாலே பார்ப்பது, இவரை யொருகண்ணாலே பார்ப்பதாகா நின்றான்; — "விடலில் சக்கரத் தண்ணலே மேவல் விடலில்" என்கிறபடியே கையில் திருவாழியை விடிலன்றோ உம்மை விடுவதென்று நின்றான். (ஆழியான்) அவர்களை யிட்டுத் தன்னை நிரூபிக்கவேண்டும்படியாய்த் திருப்பது. (க) "ஸுஹ்ருதோ வா-ஸுஹ்ருதோ வா த-ந-அஸ்மாபிஸ்துல்யோபவது" என்று அவர்களெல்லார் பக்கலிலும் பண்ணுமருளை யென்றொருவன் பக்கலிலும் பண்ணாநின்றான். அவர்கள் அருள் பெறுவாரடியாரான வடியாராய்த்து, இவனும் அருள்தருவானமை கின்றாய்த்து (அமைகின்றான்) பாதிஸம்வாதம் குறைபற்றது. அருளைக் குறையறத் தருவதாகப் பாரியாநின்றான்.

அவன் ப்ரஸாதாதிசயத்தைப் பண்ணுவதாகப் பாரியாநின்றானகில் அவன்றான் ஸர்வேச்வரனாகில் பின்னைக் கண்ணழிவென்னென்னில் (அது நமது விதிவகையே) அது செய்யுமிடத்தில் நான் சொன்னபடி செய்தானாகவேண்டி யிராநின்றான். (அது நமது விதிவகையே) "அது நம்முடைய பாக்யாநுகுணமாகவிறே" என்று இதுக்குப் பூர்வர்கள் நிர்வஹிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இத்திருவாய்மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது, நாம் விதித்தபடியே செய்வானாயிருந்தா னென்கிறான்" என்றருளிச் செய்வர் (உ) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி — அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று பாரித்துப் போந்தவர் தாமே (ங) "க்ரியதாமிதி ஸிரோவஹ-க்ரியதாமிதி மாம்வத" என்னப் பார்த்திருந்தாப்போலே, இவர் சொன்னபடி செய்வானாயிராநின்றான்.

"நமது சொல்வகையே" என்னாதே, (விதிவகையே) என்பானென்னென்னில்; வித்யதிக்ரமத்தில் ப்ரத்யவாயத்துக் கஞ்சுவானைப் போலே அஞ்சாநின்றான் தான் நினைத்தபடி செய்கைக்கு. தன்பக்கல் குறைவற்றாலும் இத்தலையிலிச்சை யொழியக் கொடுபோகானே அவன்; புருஷோத்தமன் அபும்ஸ்த்வம் வரும்படி செய்யானே. (நமது விதிவகையே) (ச) "த்வயாநுஜானஸௌஹார்த்த வீக்ஷணை-ததநுஜாநந்தமுதாரவீக்ஷணை:" "இதுக்கு பட்டர் தாமே யருளிச் செய்ய நான் கேட்டேன்" என்றருளிச் செய்தார்.

(க) ரா-யுத்-௧௮-௩௮-　　(உ) ரா-அயோ-௩௧-௨(
(ங) ரா-ஆர-௧௫-௭-　　(ச) ஸ்தோ-ர-

சேனை முதலியார் சட்டையும் மயிர்க்கட்டும் கையும் பிரம்புமாய் வந்து புகுரப் புக்கவாறே, நாய்ச்சிமாருந் தானுமாய் ஸ்வைரமாக விருக்கிறவது தவிர்ந்து நாய்ச்சிமாரும் ஸிம்ஹாஸநத்தி லொரு மூலைகளிலே யொதுங்க, தானும் ஸவிநயமாக விருக்குமாய்த்து, வ்ருத்தஸாமந்தரைக் கண்ட ராஜாக்களைப்போலே. இவர் தாமும் "இவ்விருப்புக்குத் தண்ணீர்த் துரும்பாக வொண்ணாது" என்று ஜகந்நிர்வாஹத்துக்கு வேண்டுமவற்றைப் பாசுரப் பரப்பற விண்ணப்பஞ் செய்வராய்த்து. பிராட்டிமாரோடிருக்கு மதிலு மினிதா யிருக்குமிறே அவனுக்கு இவர் தம்மைக்காண; (௧) "ஸ்ரீயெனை-ப்ரியேணைவிறே" "இன்னானை ப்ரஹ்மாவாக்கவேணும், இன்னானை மாற்றவேணும்" என்று வேண்டுமவற்றைச் சுருங்க விண்ணப்பஞ் செய்வர்; "ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லா மப்படியே" என்று கண்களாலே மேலெழுத்திட்டுக் கொடுக்கும்.

இவ்வார்த்தை யருளிச் செய்தபோது, கிடாம்பியாச்சானோடு அல்லாதாரோடு வாசியறக் குமிழி நீருண்டது; ஆச்சான்றான் பட்டர்க்கு ஸ்நேஹித்திருக்கும்போர; இளையாழ்வான், ஆச்சானை "பட்டர்தம்மை யாஶ்ரயித்தவர்களிற் காட்டிலும் நீர் காடு அநுவர்த்திப்பானென்" என்று கேட்க, "நீ அன்று கண்டிலை காண்; எம்பெருமானார் பட்டர் கையிலே புஸ்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே யொரு ஶ்லோகத்தை விண்ணப்பம் செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக் கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, 'நம்முடையா ரடங்கலும் நம்மை நினைத்திருக்குமா போலே இவனை நினைத்திருங்கோள்' என்றருளிச் செய்தார்."

அருளுகிறான் ஸர்வேஶ்வரனாகில் அதுதான் நாம் நினைத்தபடி செய்வானாயிருந்தானாகில் இனிக் கண்ணழிவென்னென்ன (இருளித்யாதி) இனி, நீயுபதேசிப்ப மித்தனையே வேண்டுவது, இதுவே கண்ணழிவு. நானவன் வழியே போவதாகப் பார்த்தேன், நீயுமவன் வழியே போகப்பாராய். உமக்குத்தான் அவன் வழியே போகவேண்டுகிற தென்னென்ன; இருள் தருமா ஞாலமாயிருந்தது. ஸம்ஸாரமாகிறது இருக்கவிருக்க அஜ்ஞாநத்தைத் தருவதொன்றாய்த்து; ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானையுமிறே யெதிரிடப் பண்ணிற்று. (இருள்)

---

(௧) ஸ்தோ-ரத்ந

"வானுயரின்பமெய்திலென் மற்றைநரகமேயெய்திலென்" என்று நினைத்திருந்ததொரு ப்ரமமுண்டு முன்பு, இப்போதது தவிர்ந்தேன்.

அது தவிரவேண்டுவானேன் னென்னில்; ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்துக் குடலாயிருக்கையாலும், உகந்தருளின நிலங்களிலுண்டான வாதராதிசயத்தாலுமாக, "அங்கே யிருக்கிலென், இங்கே யிருக்கிலென்' என்று அவனெல்லைக்குள்ளே கிடக்குமத்தனையன்றோ வேண்டுவதென்றிருந்தோம், அதுவேயாகப் பெறாதே, மற்றைப்படிக் குடலாயிருந்தது. ப்ரக்ருதிவஸ்யனுக்கு ஸப்தாதி விஷயங்களிலே கொடுபோய் மூட்டும் ஸம்ஸாரஸ்வபாவத்தை யநுஸந்தித்தபின்பு விடுவதாகவே துணிந்தேன். (யான்வேண்டேன்) என்புத்தியால் விட்டேன், அவனிருத்தில் செய்யலாவதில்லை.

ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன (மருளொழிநீ) உன்னதொரு நினைவுண்டு, அத்தைத் தவிரப்பார். "தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் - திருவாறன்விளையதனை மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென் சிந்தனை," என்று விரோதி கழிந்து போம்வழியெல்லாம்போய், இது பரமபதத்துக்குப் போம்வழி, இது திருவாறன்விளைக்குப்போம்வழி" என்றால் "ப்ராப்யவஸ்துத்தானிங்கேவந்து கிட்டிற்றாகில் இனி இங்கே யடிமைசெய்ய வமையாதோ" என்று ப்ரமித்திருப்பதொன்றுண்டு, அத்தைத் தவிரப்பார். மருளென்று - அறிவின்மைக்குப்பேர். (மடநெஞ்சே) "உத்தேஸ்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தது" என்று இத்தையே பார்க்கிறாயித்தனைபோக்கி, நம்மையும் பார்க்கவேண்டாவோ.

(வாட்டாற்றானடிவணங்கே) நமக்கு ஹிதகாமனாய் வந்திருக்கிறவவன்வழியேபோய் அவனை யநுபவிக்கப்பாராய். உகந்தருளின நிலங்களிலே வந்துநிற்கிறது நம்மை அவ்வருகே கொடுபோகைக்காயிருக்கும், நீயுமவன் நினைவிலே போகப்பாராய். (அடிவணங்கே) அடிவணங்குகையாவது - சரணம்புகுகையிறே.

இரண்டாம்பாட்டு.

வாட்டாற்றானடிவணங்கி மாஞாலப்பிறப்பறுப்பான் * கேட்டாயேமடநெஞ்சே கேசவனெம்பெருமானை * பாட்டாயபலபாடிப் பழவினைகள்பற்றறுத்து * நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினமே. (உ)

ப:— அநந்தரம், ஸர்வப்ரகாரோபகாரகனாய் நிருபாதிகபந்துவான வனை நாம் கிட்டப்பெற்றபடிகண்டாயே! என்று பூர்வோபகார பரம்பரையை ஸ்மரிப்பிக்கிறார். (உ)

(இ-ள்.) மாஞாலம்-மஹாப்ருதிவியிலேயுண்டான, பிறப்பு-ஜந்ம ஸம்பந்தத்தை, அறுப்பான்-அறுக்கைக்காக, வாட்டாற்றான் திருவாட்டாற்றிலே ஆஶ்ரிதஸுலபனானவனுடைய, அடிவணங்கி-திருவடிகளை ஆஶ்ரயித்து, கேசவன்-போகப்ரதிபந்தகமான கேசியைநிரஸித்தவனாய், எம்பெருமானை-அப்படி நம்முடைய விரோதியையும் போக்கி யடிமை கொண்டவனை, பலபாட்டாய-பஹுவிதமான கீதங்களானவற்றை, பாடி-பாடுகையாகிற கைங்கர்யத்தைப்பண்ணி, பழவினைகள்-அநாதியான அவித்யாகர்மாதிகளை. பற்றறுத்து-ஸவாஸநமாகவறுத்து. நாட்டாரோடு-அஹங்காராதி தூஷிதரான லௌகிகரோடு, இயல்வு-ஸஹவாஸத்தையும், ஒழிந்து-தவிர்ந்து, நாரணனை-நிருபாதிகபந்துவாய்க் கொண்டு இன்று பலப்ரதாநோத்யுக்தனான நாராயணனை, நண்ணினம்-கிட்டப்பெற்றோம், மடம்-என்னோடுடன்பட்டு பவ்யமான, நெஞ்சே-நெஞ்சே, கேட்டாயே-இவ்வுபகார பரம்பரைகளிருந்தபடிகேட்டாயே.

ஆறு:—(வாட்டாற்றான்) வாட்டாற்றானுடைய திருவடிகளை யநுபவித்துக்கொண்டு, ப்ரதிபந்தகத்தைப்போக்குகைக்காக அவனை யபேக்ஷித்தும், அபேக்ஷித்தபடியே ப்ரதிபந்தகத்தைப் போக்கி, அந்நபாநாதி தாரகராயிருந்த நாட்டாருடைய ப்ரஸங்கத்தை யொழிந்து, பகவதேகதாரகராய், அவனைவந்து ப்ராபிக்கப்பெற்றோமே, நெஞ்சே நமக்குவிளைந்த ஸம்ருத்திகண்டாயே யென்கிறார்.

ஈடு - அவ:—"விதிவகையே" என்று-கேவலம் பகவத்க்ருபையாலே வந்ததாகச் சொல்லுகிறவிதன், அடியிலே (க) "இந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்றிலோமோ நாமன்ன; நாம் அபேக்ஷித்தவளவோ பெற்றதென்கிறார்.

(க) திருவி-க-

[மாஞாலப்பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி-கேசவனெம்பெருமானைப் பாட்டாயபலபாடிப் பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினம் - கேட்டாயே மடநெஞ்சே] இதெல்லாமவனருளாலே வந்ததாயிருந்ததோ, நாமிரந்துபெற்றதா யிருந்ததோ. விரோதிபோகவேணுமென்னு மிவ்வளவன்றோ நாமபேக்ஷித்தது; கெடுவாய், நாமபேக்ஷித்தவளவறிதியே. (மாஞாலப்பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி) "ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணும்" என்றன்றோ நாம் ஸர்வேஶ்வரன் திருவடிகளை யாஶ்ரயித்தது. அதுக்குமேலே அவன் நம்மை அடிமையுங்கொண்டான்கண்டாயே. வாசிகமான வடிமையன்றோ கொண்டது.

(கேசவனெம்பெருமானை) கேசிஹந்தாவான ஸர்வேஶ்வரனை, கேசியைப்போக்கினப்போலே நம்விரோதியைப்போக்கி நம்முடைய ஶேஷத்வத்தை நிலைநிறுத்தி நமக்கு ஸ்வாமியா யுள்ளவனை; அன்றிக்கே, ப்ரஶஸ்தகேசன்; தன்னழகைக்காட்டி நம்மையடிமை கொண்டவனென்றுமாம். அவ்வளவேயோ, (பாட்டாயபலபாடி) * பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவும்படியன்றோ நம்மை யிடுவித்துக் கவிபாடுவித்துக் கொண்டபடி. "விரோதியைப்போக்கியடிமை கொள்ளவேணும்" என்று நாமபேக்ஷிக்க, அதுவுங் கிடக்கச்செய்தே அடிமைகொண்டான் கண்டாயே.

(பாடிப்பழ்வினைகள்பற்றறுத்து) நாமடிமை செய்ய, ப்ராப்திப்ரதிபந்தகமாய் அநாதிகாலார்ஜிதமான அவித்யாதிகளெல்லாம் போகப்பெற்றபடி கண்டாயே. இவர் வினையறுக்கக் குடத்த வேப்பங்குடிநீராகாணும் (௧) [கெஶவம்வெஉ)ஷ-கேஶவம்வைத்யம்] இவன் நெடுநாள்கூட ஈட்டினவித்து, ஸர்வஶக்திபோக்கப்புக்கால் ஒருக்காலே போகலாயிருக்குமிறே. (நாட்டாரோடியல்வொழிந்து) (உ) *உண்டியேயுடையே யுகந்தோடு மிம்மண்டலத்தாரோடு கூற்றறப்பெற்றபடி கண்டாயே. "யானேயென்றனதே" என்று அஹங்காரமமகார வஶ்யராயிருக்கிறவர்களோடே ஸம்பந்தமறப் பெற்றோம். (௩) "ஐ ஐ வுலகினதியல்வே" "இவையென்ன வுல

(௧) விஷ்ணுதர்ம-
(உ) பெருமாள்தி-௩-௪-
(௩) திருவா-௯-

இயற்கை" "கொடுவுலகங்காட்டேலே" என்னப்பண்ணினபடி கண்டாயே; "உங்களோடெங்களிடையில்லை" என்று கழிந்தவரிறே.

(நாரணனை நண்ணினம்) ஸோபாதிக பந்துக்களை விட்டவளவோ, நிருபாதிகபந்துவைப்பற்றவும் பெற்றோம். விட்டவர்கள் தன்னை ஆகாராந்தரத்தாலே பற்றுகிறார்காணும். முக்தனுக்கு ததீயத்வாகாரத்தாலே அநுபாவ்யமாகிறதிறே யிதுதான். ஸ்வயம் பாகந்தவிர்ந்து பிதாவோடே யொன்றாக ஜீவிப்பாரைப்போலே காணும். படுக்கைக்கீழே மஹாநிதிகிடக்கப் புறங்கால்வீங்கிச் சாவாரைப்போலேயிறே, நாராயணனுமிருக்கச் செய்தேயும் நண்ணாதிருந்தபடி. (கேட்டாயே மடநெஞ்சே) பெற்றபேற்றின்கனத்தை யநுஸந்தித்து, வகாதநுவகுத்தகின்று இயிர்க்கிருக்கிறாயோ, இத்தை யநுபவியாநின்றாயோ; (௧) * [ஸௌமித்ரேதாவஸம்ஸ்ருத்ய ஸௌமித்ரேபுங்க்ஷ்வ] (௨) [வெதேஹிராமஸேகவித் - வைதேஹிரமஸேகச்சித்] போலே.

"மாஞாலப்பிறப்பறுப்பான் - கேசவனெம்பெருமானை-வாட்டாற்றானடிவணங்கி - பாட்டாயபலபாடிப் பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணினம் - கேட்டாயே மடநெஞ்சே" என்றந்வயம். (௨)

மூன்றாம்பாட்டு.

நண்ணினம்நாராயணனை நாமங்கள்பலசொல்லி * மண்ணுலகில்வளம்மிக்க வாட்டாற்றான்வந்து * இன்றுவிண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்விதிவகையே * எண்ணினவாறாகாவிக் கருமங்களென்னெஞ்சே. (௩.)

ப:— அநந்தரம், நாம் த்வரிக்கவேண்டும் கார்யத்திலே தான் மிகவும் த்வரியாநின்றான், இது நாம் நினைத்தவளவன்றியே யிராநின்றதீயென்று ஹ்ருஷ்டராகிறார்.

(இ - ள்.) என்னெஞ்சே - எனக்கநுபவோபகரணமான நெஞ்சே, மேன்மைக்கும் நீர்மைக்கும்போக்யதைக்கும் ப்ரகாசகமான, பலநாமங்

---

(௧) ரா-அயோ- (௨) ரா-அயோ-

கள்-பலதிருநாமங்களையும், சொல்லி-சொல்லி, நாராயணனை-அத்திரு நாமங்களுக்கெல்லாம் பிறப்பிடமான நாராயணனென்கிற நாமத்தை யுடைய நிருபாதிகபந்துவை, நண்ணினம்-கிட்டப்பெற்றோம், மண்ணுலகில் - பூலோகத்திலே, வளம் - சீலஸௌலப்யாதி குணஸம்பத்தி னுடைய, மிக்க-மிகுதியை யுடையனாய்க்கொண்டு, வாட்டாற்றான்-திரு வாட்டாற்றிலே நிற்கிறவன், வந்து - நான் சொல்லவேண்டாதபடி தானே உத்யுக்தனாய்க் கொண்டுவந்து, இன்று-நம்பக்கல் முன்பொரு ஹேதுவின்றியே யிருக்க இன்று, விண்ணுலகம்-பரமபதத்தை, விதி வகையே-நமமநுமதிகொண்டு, தருவானாய்-தருவானாக, விரைகின்றான்- விரையாநின்றான்; இக்கருமங்கள்-இக்காரியங்கள், எண்ணினவாறாகா- நாமவன்பாடே செல்லவும் நாமர்த்திக்கவும் நாமதிலே த்வரிக்கவும் அவன் நினைவுபார்க்கவு மெண்ணியிருந்த ப்ரகாரமன்றியே, தான் வருகையும் அபேக்ஷிக்கையும் த்வரிக்கையும் நினைவு தான்பார்க்கையு மாய் விட்டான். (௩)

ஆறு:—(நண்ணினம்) நாமங்கள் பலசொல்லிக்கொண் டபேக்ஷித்து நாராயணனை ப்ராபிக்கப்பெற்றோம், அதின்மேலே, அவன் தானேவந்து நிர்ஹேதுகமாக நமக்குத் திருநாட்டைத் தருகையிலே விரையாநின்றான், நாம "இதைச்செய்" என்று சொல்லுமிதுவே தாழ்வாக விருக்கிறனத்தனை, ஆனபின்பு, இனி அவனை நண்ணினோமே யல்லோமோ, நெஞ்சே, இங்ஙனே யிருப்பதொரு ஸம்ருத்தி நமக்கு விளையக் கடவதாக ஸ்வப்நத்திலேதான் நினைவுண்டோ வென்கிறார். (௩)

ஈடு-அவ:—நெஞ்சே, "நம்மை விஷயீகரிக்கவல்லனே" என்று நாமிருக்க, அவனவனன்றிக்கே பலிக்கிறபடி யென்னென்கிறார்.

(நாராயணனைநாமங்கள் பலசொல்லி - நண்ணினம்) ப்ராப்தனான ஸ்வாமியைக் கிட்டப்பெற்றோம். (நாமங்கள் பலசொல்லி) (௧) "நமோ நாராயணேதி ... - நமோ நாராயணாயேதி மந்த்ர ஸர்வார்த்தஸாதக:" என்றிதுவே யமையுமிறே பலத்துக்கு; ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி

(மண்ணுலகில் த்யாதி) பரமபதத்திற்காட்டில் ஸம்ருத்திமிக்கிருக்கின்ற திருவாட்டாற்றைத் தனக்கு நிரூபகமாகவுடையவன். வளம் - ஸம்ருத்தி. ரக்ஷ்யவர்க்கம் குறைவற்ற தேசமாகையாலே

(௧) நாரதீய-

ரக்ஷகனுக்கு ஸம்பத்து மிக்கிருக்குமிங்கு; கைங்கர்யத்துக்கு விச்சேத மில்லாமையாலே சேஷபூதனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கு மங்கு, (வந்து) நாம் செல்லவேண்டும் தேசமடங்கத் தானேவந்து.

(இன்று) நம்பக்க லிதுக்கடியாயிருப்பதொன்று நெண்ணேற்றில்லை, இன்றிங்ஙனே விடியக்கண்டகித்தனை. (விண்ணுலகம் தருவானாய்) அங்கே ஒருகுடி யிருப்புமாத்ரமே கொடுத்து விடுவானா யிருக்கிறிலன். "வானவர்நாடு" என்றும் "ஆண்மின்கள்வானகம்" என்கிற பொதுவை யறுத்து நமக்கே தருவானாக த்வரியாநின்றான். ஆவதழிவதாகிற விபூதி யிவர்க்குத்தர மன்றென்றுகாணு மவன் நினைவு. இவர்க்கே கொடுக்கையாவது - இவர் ப்ரார்த்தித்தபடியே * வழுவிலாவடிமையைக் கொடுக்கையிறே

(விரைகின்றான்) நம்மைப்போலாறி யிருக்கிறிலன். "சிறப்பில் வீடு - இறப்பிலெய்துக வெய்தற்க" என்றிருந் ஆற்றலுண்டிறே நமக்கு. தான் முற்பாடனாய்ச் சரக்குக்கட்டிப் புறப்பட்டு நிற்பது, இவர் தாழ்த்தாரென்று மீளப்போய்ப்புக்கு "ஆழ்வீர், போரீரோ போரீரோ" என்று பதறாநின்றான். ஒரு கார்யப்பாட்டாலே வைத்தானாய், அக்கார்யம் முடியுமளவானவாறே த்வரியாநின்றான். ஸர்வஶக்தியான தனக்கும் க்ரமப்ராப்தி பற்றாதபடியாய்த்து த்வரையிருக்கிறபடி. ஸங்கல்பித்தகார்யம் செய்யுமளவும் பொறுக்கிறிலனாய்த்து. இப்படி செய்ய நினையாநின்றானாகில் நினைக்கிறான்.

தான் ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனாகில் பின்னை யிங்ஙன் விரையவேண்டுகிறதென்னென்னில் (விதிவகையே) நாம்சொல்லை பரமபதம் தந்தானாகவேணுமென்றிராநின்றான். "எம்மாவீட்டுத் திறமும்செப்பம்" என்றாரே, அது தவிர்ந்து "உண்டிட்டாயினி யுண்டொழியாய்," "திருவாணை நின்னாணை" என்று தடுத்தும் வளைத்தும் செய்தால் பின்பு கொடுப்பதாக விராநின்றான். (விதிவகையே - விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்!) இவர்க்கு ருசிபிறப்பதற்கு முன்பு தானெதிர்சூழல்புக்கு விரைந்து நின்றான், ருசிபிறந்தபின்பு இவர் விரையத்தொடங்கினார், அதுவன்றி அவனுக்கு இவரளவல்லாதபடி விரைதல் மிக்கது, அதுவன்றி இவர் விஸ்மயப்படுகிறார். இவனுக்கு ருசிபிறக்குமளவுமிறே அவ

திருவாய்மொழி,௬0-ப்; ௬-இ,௬-பா;என்னெஞ்சம்வ்யாக்யாநம். ௯௪ ஞு

ஞறியிருப்பது; இவனுக்குண்டாகில் பின்னை பேற்றளவும் செல்ல விரைவான் அவனுய்த்து. உடையவனிறே உடைமைக்கு விரைவான்.

(எண்ணினவாறுகா) (௧) "இந்நின்றநீர்மை யினியாமுறாமை" என்று இவ்வளவன்றோ நாமெண்ணிற்று, அவனை "விரைய வேணும்" என்றெண்ணினோமோ. (இக்கருமங்கள்) பகவத்விஷயத்தில் தாந்தாமெண்ணியிருந்தவளவல்லகாண் காரியம் பலிக்கும்படி. லௌகிகரிலே சிலரை "என்கார்யத்துக்கு நீகடவை" என்று சொன்னாலும், பின்னையும் பேற்றளவுஞ் செல்லத் தனக்கே ப்ரவர்த்திக்கவேணுமே; அப்படியே நினைத்திராதேகொள்ளாய் இவ்விஷயத்திலும். (என்னெஞ்சே) அவன் முறையிலே விரைய நாம் பெற்றது நீ முறையிலே நிற்கையன்றோ. பந்தஹேதுவாகை தவிர்ந்து நீ மோக்ஷஹேதுவாகையன்றோ. உன்னாலேவந்த ஸம்ருத்தியன்றோ இவைதல்லாம். (௩)

நான்காம்பாட்டு.

என்னெஞ்சத்துள்ளிருந்திங்கிருந் தமிழ்நூலிவைமொழிந்து * வன்னெஞ்சத்திரணியனை மார்விடந்தவாட்டாற்றான் * மன்னஞ்சப்பாரதத்துப் பாண்டவர்க்காய்ப்படைதொட்டான்* நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான்செய்வானே. (௪)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணத்தில் பக்ஷபாதியானவன் நமக்கு நிரவதிகோபகாரகனு யிராநின்றானென்கிறார். (௪)

(இ - ள்.) நன்னெஞ்சே - பகவத்விஷயமென்றால் ப்ரவணமான நெஞ்சே, வன்னெஞ்சத்து - ப்ராவண்யமில்லாதவளவன்றியே ப்ரத்வேஷ பூயிஷ்டமாம்படி வலியநெஞ்சையுடைய, இரணியனை-ஹிரண்யனை, நோய்நின்றவிடம் குட்டமிட்டுப் பரிஹரிப்பாரைப்போலே, மார்விடந்த-அவன் நெஞ்சிருக்கிறமார்பை இடந்து ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக, வாட்டாற்றான்-திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனாய், மன்-ராஜாக்களெல்லாரும், அஞ்ச - அஞ்சும்படி, பாரதத்து - பாரதஸமரத்திலே, பாண்டவர்க்காய் - பாண்டவர்களுக்காக, படைதொட்டான் - ஆயுதமெடேனென்று ஆயுதமெடுத்த பக்ஷபாதியாய், நம்பெருமான்-இவ்வப

(௧) திருவி-௧-

தாநங்களாலே நமக்கு ஸ்வாமியானவன், என்னெஞ்சத்து - அங்யபரமான என் ஹ்ருதயத்தை வசீகரித்து, உள்ளிருந்து உள்ளே பொருந்தியிருந்து, இங்கு-இவ்விருப்பிலே, இரு அத்யந்த விலக்ஷணமாம்படி பெரிய தமிழ்-த்ரமிடமயமான, நூல் - ஶாஸ்த்ரரூபமாய், இவை - அபரோக்ஷஸித்தமான போக்யதையை யுடைத்தான வித்திருவாய்மொழி தன்னை, மொழிந்து-தானே ப்ரவர்த்தகனா யருளிச்செய்து, அவ்வளவில் நில்லாதே, நமக்கு-நமக்கு, அருள்-அதிசயிதோபகாரங்களை, தான் செய்வானே-பண்ணுவானாகத் தானே பாரியாநின்றான். (௮)

ஆறு:-(என்னெஞ்சத்துள்) ஸநகாதி பரமயோகி வாங்மநஸா பரிச்சேத்யமான திருநாட்டை நம்முடைய சிறுமைபாராதே நமக்குத் தந்தருளுமோ வென்னில்;

என்னுடைய நிகர்ஷமும் சிறுமையும்பாராதே என்னெஞ்சுள் புகுந்திருந்து என்னை யுபகரணமாகக் கொண்டு திருவாய்மொழியைச் சொல்லி ஆஶ்ரிதவிரோதிகளான ஹிரண்ய ராவணாதி நிரஸநத்தையும் எனக்கு போக்யமாகச் செய்தருளின நிரவதிக ஸௌஶீல்ய காருண்யௌதார்யாதி குணங்களையுடையனாயிருந்தவன், இனித் திருநாட்டை நமக்குத் தந்தருளுமென்னுமிடம் சொல்லவேணுமோ, என்னைக்கொண்டு திருவாய்மொழியைச் சொல்லுவிக்கையாகிற விந்த ஸம்ருத்தியிற் காட்டிலும் சீரியதோ திருநாடென்கிறார். (௮)

ஈடு-அவ:—ஸர்வேஶ்வரன் நாம் விதித்தபடியே செய்வானாகச் சொன்னவிது ஸம்பவிக்குமோவென்னில்; அவனுடைய வாஶ்ரித பாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தால் கூடாததில்லைகா ணென்கிறார்.

(என்னெஞ்சத்து) அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே தன்னையொழிந்த ஶப்தாதிவிஷயங்களை யுகந்து போந்த நெஞ்சாய்த்து இவர் "என்னெஞ்சு" என்றிருப்பது; இதின் குணதோஷங்கள் கிடந்தபடி கிடக்க, இவர் "என்னது" என்றதுவே ஹேதுவாக அவன்மேல்விழாநின்றான், இவர் "என்னெஞ்சு, என்று புறம்போகால் வாங்காநின்றார். அவன் அதுவே ஹேதுவாக உள்ளேபோக வடியிடாநின்றான். (உள்) விடாயர் மடுவில் நீரைநீக்கி உள்ளே ஆழ முழுகிக் கிடக்குமாபோலே, நெஞ்சினுள்ளேபுகுந்தான். (இருந்து) தனக்கவ்வருகொரு ப்ரவ்ருத்தி யுண்டாகவும், அங்கே போவானாகவும் நினைத்திருக்கிறிலன். ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாக விருந்து.

(இங்கு) அங்கில்லாத ஸம்பத்தையும் இங்கேயுண்டாக்கினுன். (இருந்தமிழ்) அவ்விபூதிக்கு மடங்காதபடியாய்த்து இவற்றின் நன்மை. "கேட்டாரார்" என்னக்கடவதிறே. (நூல்) பின்புள்ளார்க்கு மிதுகொண்டு லக்ஷணம் கட்டலாம்படியாய்த் திவையிருப்பது. இவராற்றுமையாலே சொல்லச் செய்தேயும், அது ஸர்வலக்ஷணோபேதமாம்படி சொல்லுவித்தாணுய்த்து. (இவை) "இன்னதுசெய்தான்" என்னைப்புக்கு நடுவே "இவை" என்று அநுபவிக்கிருராய்த்து. (மொழிந்து) ஒருவன் பாடின கவியைக் கற்றுச் சொன்னவனும், தனக்கதிலே குவாலாக வந்வயமுண்டாக அபிமானித்திருக்கும்; அதுவும் நினைத்திருக்கிறிலர்காணு மிவர். "என் முன் சொல்லும்" என்றவற்றையு மொன்றாக நினைத்திருக்கிறிலர்.

(வன்னெஞ்சத்தித்யாதி) பகவத்விஷய மென்றால் அதிர்ந்திருக்கும்படி திண்ணிதான நெஞ்சையுடைய ஹிரண்யனுடைய முருட்டு நெஞ்சை அநாயாஸேந இடந்த திருவாட்டாற்றுன். முன்பு தமப்பன் பகையாகச் சிறுக்கனுக்கு உதவினவன், நமக்குத வாதோ வென்று கருத்து. துர்மாநம் கிடந்தவிடத்தைக் குட்டமிட் டிடந்தான் காணும். (வாட்டாற்றுன்) பிற்பாடர்க் குதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வர்த்திக்கிறவன். அவன்நெஞ்சிற் குறை தீர்த்தாப்போலே நம்நெஞ்சிற் குறைதீர்க்கவந்து நிற்கிறவன்.

(மன்னஞ்ச) அதிரதமஹாரதரென்று பேர்பெற்றவர்களடங்கலும், ஸிம்ஹத்தைக்கண்ட நரிபோலே குலையும்படியாக. ராஜலோகமடங்கலு மஞ்சும்படியாக. (பாண்டவர்க்காய்) (௧) "இன்னார் தூதன்" என்னும்படி அவர்களுக்குக் கையாளாய். (படைதொட்டான்) படையெடுத்தான், படைவிட்டானென்னப் பெற்றதில்லை. ஸங்கல்பத்தைக் குலைத்தா னித்தனையே; கார்யங்கொள்ளப்பெற்றதில்லை. ஸத்யஸங்கல்ப னென்றது ஆஸ்ரிதரை யொழிந்தவிடத்திறே; விடாவிட்டது, அர்ஜுநன் "நீ ஆயுதம்விடுகை எனக்கவத்யம்" என்கையாலே. ஆகில் தவிரலாகாதோ வென்று தவிர்ந்தான்.

(௨) [மன்னர்மறுகவித்யாதி] அர்ஜுநன் குதிரைகளிளைத்தவளவிலே, கடிநஸ்தலத்திலே நீர் நரம்பறியுமவனாகையாலே வாருணாஸ்த்ரத்தைவிட்டு அங்கே நீரையுண்டாக்கிக் குதிரைகளைவிட்டு

(௧) தி-மொ-௨-௨-௩- (௨) பெரியாழ்-௪-௨-௭-

நீ ஆட்டிப்புரட்டி யெழுப்பிக் கொடுபோந்து பூட்டிக்கொண்டுவந்து முன்னே நிறுத்தின வித்தைக்கண்ட ராஜலோகமுடைய, "இவனுடைய பக்ஷபாதமிருந்தபடியால் நாமிவனை வெல்லுகையென்றொன்றுண்டோ" என்று கூடல் மறுகிற்றாய்த்து. [முன்னங்குனிந்து மோழை யெழுவித்து] எல்லாருங்காணக் குமிழ்நீரெழும்படி பண்ணினான்.

அவனுடைய வாஶ்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தவாறே நெஞ்சநுகூலித்தது (நன்னெஞ்சேயித்யாதி) அக்லே னென்றமைக்கு நீயுண்டு, ஆமோமென்கைக்கு அவனுண்டு, அவனை ப்ரேரிக்கைக்கு க்ருபையுண்டு. (நம்பெருமான்) நமக்கு ஸ்வாமியானதான், நமக்கு அருள்பண்ணிவிடும். "விண்ணுலகந் தருவானாய் விரைகின்றான்" என்கிறபேற்றைப் பண்ணிவிடும்; இது ஸித்தம். இசைகைக்கு நீயுண்டு. இசைவிப்பிக்கைக்கு அவனுண்டு, இசைவைக்கொண்டு கார்யம் செய்கைக்கு ஸம்பந்தமுண்டு, இனி நம்பேற்றுக்குக் குறையுண்டோ. (௪)

ஐந்தாம்பாட்டு.

வானேறவழிதந்த வாட்டாற்றான்பணிவகையே * நானேறப் பெறுகின்றேன் நரகத்தைநகுநெஞ்சே* தேனேறுமலர்த்துளவந்திகழ் பாதன்செழும்பறவை * தானேறித்திரிவானதாளிணை யென்றலை மேலே. (௫)

ப:— அநந்தரம், அவனருளிச்செய்த ப்ரகாரத்திலே நான் பரம பதத்தைப் பெறுகின்றேன். அதுக்கடியான விஷயீகாரத்தாலே போக்ய மான திருவடிகள் என் தலையிலே யாய்த்தின வென்கிறார். (ரு)

(இ-ள்) வானேற - பரமபதத்திலே போகைக்குறுப்பாக, வழி தந்த - "போம்வழியைத்தரும்" என்கிறபடியே அர்ச்சிராதிமார்க்கத்தை யுண்டாக்கித்தந்து. அத்தாலே கொண்டுபோவதாக. வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனானவன், பணிவகையே - "பண்டே பரமன் பணித்த பணிவகையே" என்கிறபடியே. நான் - அவன் நினைவே நினைவாம்படியான நான், ஏற - மேலேசெல்ல, பெறுகின்றேன் - பெறுகின்றேன், அதுக்கடியாக, தேன் - மதுவானது, ஏறு - மிகாநின்றுள்ள,

மலர்த்துளவம் - மலரையுடைய திருத்துழாய், திகழ்பாதன் - செவ்வி பெற்று விளங்கும்படியான திருவடிகளை யுடையனுய், செழும்பறவை- தார்ஸ்யாகாரனை பெரிய திருவடியை, தானேறித்திரிவான் - தான் விரும்பியேறி ஆஸ்ரிதார்த்தமாக ஸஞ்சரிக்குமவனுடைய, தாளிணை- அந்த போக்யமான திருவடிகளிரண்டும், என் தலைமேலே-என் தலைமே லாய்த்தின, நெஞ்சே-நெஞ்சே நரகத்தை ஸம்ஸாரத்தை, நகு-ஸாவஜ் ஞமாகச் சிரித்துப் போம்படியார். (ரு)

ஆறு ;—(வானேற) திருநாடுபெறவேணுமென்றபேக்ஷை யுடையாரெல்லார்க்கும் வானேறுகைக்கீடான வுபாயத்தைக் கொடுத்தருளினன்; அவனுடைய ப்ரஸாதத்தாலே, தேனேறு மலர்த்துளவத்திருத்தலை யலங்க்ருதமாயிருந்த வவனுடைய தாளிணை பெரிய திருவடிமே லேறுமாபோலே யென்தலைமேலே நானேறப் பெறுகின்றேன், இனி அவனைப் பிரிந்திருக்கையாகிற நரகத்தை வென்றிருப்பே னென்கிறார். (ரு)

ஈடு-அவ;—அவன் பரமபதத்துக்குப் போக வாஸ்ரிதர்க்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகப்பெறுகின்றேன், நித்யாஸ்ரித ரைப்போலே யென்னை விஷயீகரிக்கவும் பெற்றேனென்கிறார்.

(வானேறவித்யாதி) பரமபதத்திலேபோய்ப் புகுகைக்கு அர்ச் சிராதிமார்க்கத்தைத் தந்த. பரமபதலாபத்திலு மவ்வருகே யொரு லாபமென்னும்படியிறே அர்ச்சிராதிகதி ஸித்தி. "போம்வழியைத் தரும்" என்றிறேபடும்படியிறே அதினுடைய வைலக்ஷண்யம், (வாட்டாற்றான்) இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினவிடம். (பணி வகையே) அவன் திருவுள்ளமானபடியே. அதாவது-(க) "ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்ய" என்றத்தைச் சொல்லு கிறார்; "பண்டேபரமன்பணித்த பணிவகையே" என்றாரிறே; "மாமேகம்" என்றத்தைச் சொல்லிறதாகவுமாம்.

(நானேறப்பெறுகின்றேன்) (உ) "கண்ணன்வைகுந்தனோடென் னெஞ்சினாரைக்கண்டால்" என்று தூதுவிட்டுப் பார்த்திருக்கக் கடவ நான் உனக்குச் சொல்லவேண்டும்படியாவதே!. (நானித்யாதி) நான் பரமபதத்திலே யேறப்பெறுகின்றேன். ஆனல் நான் செய்ய வேண்டுவதென்னென்ன (நரகத்தைநகுநெஞ்சே) ப்ராப்யபூமி கிட்

(க) கீதை-கஅ-௬௬- (உ) திருவி-௩௦-

டிற்றென்று கடுகக் கால்வாங்கிப் போகப் பாராநின்றாய். நெடு நாள் நம்மைக் குடிமக்களாக்கி யெளிவரவுபடுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்துச் சிரித்துப்போருகிறாய். "உன்னைவென்றோமிறே" என்று புரிந்து பார்த்துச் சிரித்துப்போரு. பிள்ளையழகிய மணவாளப்பெருமாளரையர் க்ரந்தியைப் பார்த்துச் சிரித்துச் சொன்ன வார்த்தையை நினைப்பது.

(க) [தேநநாதேநஹதா நிஜகாமஹரீஸ்வர:-தேநநா தேநமஹதா நிர்ஜகாமஹரீஸ்வர:] மஹாராஜர் வந்தறைகூவ, "பூர்வ க்ஷணத்திலே பரிபவப்பட்டுப்போனவன் இப்போது வந் தறைகூவும் போது, வெறுமனல்ல, போதல்லாப்போதிலே நீ புறப்படக்கடவை யல்லை" என்று தாரை காற்கட்டச் செய்தேயும், க்ஷத்ரியனுகை யாலே பரிபவம் பொறுக்கமாட்டாமை புறப்பட்டு, "விடற்றோகை யிருந்தபடியென், பழையகோழைத்தனமற்றுத் தெளிந்து முழங்கி யிருந்தது, இதுக்கோரடி யுண்டாகவேணும், உண்டாய்த்தாகில் நமக்கிரை போருகிறது" என்றானிறே, [ஹரீஸ்வர:] இதுக்கு முன்பு பிறரைறகூவ ஜீவித்தவனல்லன்.

அப்படியே அவனை யுண்டைகொண்ட பலத்தாலே, ஸம்ஸாரத் தைப் பார்த்து "உன்னைவென்றோமிறே" என்று கையைத்தட்டிச் சிரித்துக்கொண்டாய் போருவது; அறிவுகேடர்க்கு, நரகமென்று-யமாதி கள் குடியிருப்பைச் சொல்லிற்றாகவுமாம். "மற்றைநரகம்" என் கிற ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது; *வானுயரின்பத்துக் கெதிர்த் தட்டிறே.

நாமிப்படி ஸம்ஸாரத்தைக் கைதட்டிச் சிரிக்கைக்கு நமக்கு உத்தேஸ்யவஸ்து தான் கைபுகுந்ததோவென்ன (தேனேறித்யாதி) திண்ணகப் பெருக்குப்போலே நாட்செல்ல நாட்செல்லத் தேனேறி வாராநிற்பதாய் மலரையுடைத்தான திருத்துழாயானது விளங்கா நின்றுள்ள திருவடிகளை யுடையவன், (செழும்பறவை) அவனோட் டை ஸம்ஸ்லேஷத்தாலே குளிர்ந்து தர்மநீயமான வேஷத்தைத யுடைய திருவடியை, இத்தால் ஸர்வேஸ்வரனோட்டை ஸ்பர்ஸ மிவனுக் கிருக்கும்படி சொல்லிற்று

(க) ரா-பால-க-

(தானேறித்திரிவான்) அவனுக்காகவு மன்றிக்கே அவன்தோளி விருப்பு ஸ்வகஸ்பர்ஸமா யிருக்கையாலே அவனை மேற்கொண்டு ஸஞ்சரியாநிற்குமாய்த்து. (தானேறித்திரிவான தாளிணையென்தலை மேலே) திருவடி திருத்தோளிலும் என்தலையிலுமான வித்து தவிர்ந்து என்தலையிலேயாய்த்து; அவனிழவுக்கு வெறுக்கவேண்டா விறே; அவன்தானே கொடுவந்து கொடுக்கப்பெற்றவ ராகையாலே. ஆகையிறே ஒருபழுவேறப் பெற்றது. (ரு)

ஆறும்பாட்டு.

தலைமேலதாளிணைகள் தாமரைக்கண்ணெனம்மான் * நிலைபேரானென்னெஞ்சத் தெப்பொழுதுமெம்பெருமான் * மலைமாடத் தரவணைமேல் வாட்டாற்றான்மதமிக்க * கொலையானைமருப்பொசித்தான் குரைகழல்கள்குறுகினமே. (சு)

ப:—அநந்தரம், திருவடிகளைத் தலையிலே வைத்தவள வன்றியே, என்னெஞ்சிலே ஸ்த்திரமாகப் புகுந்து நிற்கிறவன் திருவடிகளைக் கூடப்பெற்றோ மென்கிறார்.

(இ - ள்.) தாளிணைகள் - அவன்திருவடிகள், தலைமேல - என்தலைமேலே யிராநின்றன, அத்தால்வந்த வுகப்புக் தன்னதாம்படி தோன்ற தாமரைக்கண் - தாமரைப்போலே சிவந்த திருக்கண்களை யுடையனாய், என்னம்மான் - என்னைப் பெறுப்பேறாகப் பெற்றானாய்க் கொண்டு எனக்கு ஸ்வாமியானவனாய், அவ்வளவன்றியே, என்னெஞ்சத்து-என்னெஞ்சுக்குள், எப்பொழுதும் - எப்போதும், நிலைபேரான்-நின்றநிலை பேரானாய், எம்பெருமான்-என்பக்கலிலே நிலைபெறுகையாலேஸர்வாதிகனாய், எனக்கு உபகரிக்கைக்காக, மலை மலைபோலேயிருக்கிற, மாடம்-மாடங்களையுடைய, வாட்டாறு - திருவாட்டாற்றிலே, அரவணைமேலான் - திருவரவணையின்மேலே கண்வளர்ந்தருளுகிறவனாய்; ப்ராப்திப்ரதிபந்தகங்களை, மதம்மிக்க-மதத்தாலேமிக்கு, கொலை-கொலையிலே) உத்யுக்தமான, யானை-குவலயாபீடத்தை, மருப்பொசித்தான்-ம்ருங்கபங்கம் பண்ணினாப்போலே என்னநுபவ விரோதியை யழித்தவனுடைய, குரை-வீரக்கழலில் த்வநியையுடைய, கழல்கள் - திருவடிகளை குறுகினம்-கூடப்பெற்றோம். (சு)

ஆறு :—(தலைமேல) திருவடிகளை யென் தலைமேலே வைத் தருளினான், அழகிய திருக்கண்களாலே யென்னைக் குளிரப்பார்த் தருளாநின்றான், ஒருக்காலு மென்னெஞ்சில் நின்றும் நிலைபேரான், இங்ஙனே அவன் திருவடிகளை நாம் குறுகப்பெற்றோ மென்கிறார்.

ஈடு - அவ ;—திருவாட்டாற்றிலே ஸந்நிதிபண்ணி யென்னை ஸர்வதோமுகமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப் பெற்றோமென்கிறார்.

(தலைமேலதாளிணைகள்) "நின்செம்மா பாதபற்புத் தலை சேர்த்து" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும் நான் ப்ரார்த்தித்தபடியே, அழகிய திருவடிகளாலே தலை அலங்கார மாகப் பண்ணினான்.

(தாமரைக்கணென்னம்மான்) என்முன்னேநின்று குளிர நோக்கி "ஜிதம்" என்னப்பண்ணாநின்றான். (நிலைபேரானென்னெஞ் சத்து) நெஞ்சுவிட்டுப்போகாதே நின்றாய்த்து இதெல்லாம் செய் கிறது. ஸௌபரி ஐம்பதுவடிவு கொண்டாப்போலே, இவன் தன்னை யநுபவிக்க நாநாபவநம் கொள்ளுமாபோலே, அவன்றானிவனை யநுபவிக்க அநேகவிக்ரஹம் கொள்ளாநின்றான். (எப்பொழுதும்) "எப்பொழுதும்நாள் திங்களாண்டூழியூழி" என்று தன்னை யநுப விக்கைக்கு நான் பாரித்த துறைகளடையக் கைக்கொண்டான், ஸர்வாங்கீணயோகமடையக் காட்டாநின்றான். என்னெஞ்சிலேநிற்பது, அப்படியே கண்ணுக்கிலக்காம்படி முன்னேநிற்பது, திருவடிகளைத் தலைமேலே வைப்பதாகிற விதெல்லாம் ஒருக்காலேசெய்யாநின்றான்.

(எம்பெருமான்) உடைமை உடையவனைப் பெற்றாலிருக்குமா போலன்றிறே, உடையவன் உடைமையைப் பெற்றாலிருக்கும்படி. (மலையித்யாதி) மலைகளைப் புடைபடத் தொளைத்து நெருங்கவைத்தாற் போலே யிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந் தருளினவன் இத்தால் - ப்ராப்யவஸ்துவைச் சொல்லுகிறது, பர்யங்க வித்யையிற் சொல்லு கிறபடியே,

(மதமித்யாதி) அநுபவவிரோதிகளடங்கலும் குவலயாபீடம் பட்டது படுமித்தனை. அவனிவன் விரோதியைப்போக்க இவனுக்

கநுபவத்திலே யந்வயம். (குரைகழல்கள் குறுகினம்) ஆபரணவொலி செவிப்படாநின்றது. "இடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ" என்று ப்ரார்த்தித்தது பெற்றோம். (௬)

ஏழாம்பாட்டு.

குரைகழல்கள்குறுகினம் நங்கோவிந்தன்குடிகொண்டான் *
திரைகுழுவுகடல்புடைசூழ் தென்னாட்டுத்திலதமன்ன* வரைகுழுவு
மணிமாட வாட்டாற்றான்மலரடிமேல் * விரைகுழுவுநறுந்துளப
மெய் நின்றுகமழுமே. (௭)

ப:—அநந்தரம், தான் ஸம்ஶ்லேஷித்ததுக் கடையாளந் தோன்றும்படி ஆஶ்ரித ஸுலபனான க்ருஷ்ணன்றா னென்னெஞ்சிலே பூர்ணமாக விருந்தானென்கிறார். (௭)

(இ-ள்.) குரை - விலக்ஷணமான, கழல்கள் - திருவடிகளை, குறுகினம்-குறுகப்பெற்றோம், "நிலைபேரான்" என்கிறபடியே, நம்-நமக்கு பவ்யனான, கோவிந்தன் - க்ருஷ்ணனானவன், பரிபூர்ணமாக, நம்நெஞ்சை குடி - குடியிருப்பாக, கொண்டான் - ஸ்வீகரித்தான்; அத்தாலே, திரை-திரைகள், குழுவு-திரளத்திரண்ட. கடல்-கடலாலே, புடை-பரிஸரத்திலே. சூழ்-சூழப்பட்டு. தென்னாடு-தென்னாட்டுக்கு, திலதமன்ன-திலகம்போலே யிருப்பதாய், வரைகுழுவு - மலைகள் திரளவிருந்தாப்போலே யிருக்கிற. மணிமாடம் - மணிமயமான மாடங்களையுடைய, வாட்டாற்றான் - திருவாட்டாற்றி லெழுந்தருளி யிருக்கிறவனுடைய, மலரடிமேல் - விகஸிதபத்மம்போலே நிரதிஶயபோக்யமான திருவடிகளின்மேலே. விரை - பரிமளங்கள், குழுவு - திரண்டு, நறுந்துளபம் - கமழுகிற திருத்துழாயானது, மெய்நின்று-என் ஶரீரத்திலே ஸ்திரமாகநின்று. கமழும்-கந்தியாநின்றது. (௭)

ஆறு;—(குரைகழல்கள்) இப்படி நெஞ்சே நாம் குரைகழல்கள் குறுகினம், நங்கோவிந்தன் ஸபரிக்ரஹமாக வந்து என்னுள்ளே புகுந்தருளினான்- இதுக்கடையாள மென்னென்னில்; வாட்டாற்றான் திருவடிகள் திருத்துழாய் என்னுடம்பெல்லாம் கமழ்கிறபடி பாரா யென்கிறார். (௭)

ஈடு-அவ;—“குறுகினம்” என்ற விதென்கொண் டறிவ தென்னில்; பார்க்கலாகாதோ உடம்பு கோயிற்சாந்து நாறுகிறபடி யென்கிறார்.

(தூரைகழல்கள் குறுகினம்) அணித்தென்னு மித்தைப் பற்றச் சொல்லுகிறேனல்லேன், கிட்டினோம். (நங்கோவிந்தன்) ஆஸ்ரிதர்க்கு ஸ்வம்மாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன். (கோவிந்தன் குடிகொண்டான்) (க) “அரவத்தமளியினோடு மழகியபாற்கடலோடு மரவிந்தப்பாவையும் தானும்கம்படி வந்துபுகுந்து” என்கிறபடியே-திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடுங்கூடக் காணு மிவர் நெஞ்சிலே புகுந்தது.

(திரையித்யாதி) திரைமிக்கிருந்துள்ள கடலாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய். தென்னாட்டுக்கொரு திலகம்போலேயாய், மலைகளை நெருங்கவைத்தாப்போலே மணிமயமான மாடங்களை யுடைத்தான திருவாட்டாற்றைக் கலவிருக்கையாகவுடைய ஸர்வேஸ்வரனுடைய. (மலரடிமேல்) செவ்வி, குளிர்த்தி, பரிமளங்களையுடைத்தான திருவடிகளின்மேலே, பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாயானது. (மெய்நின்றுகமழுமே) என்னுடம்பு நிரந்தரமாக நாறுகின்றது.

“அன்றிமற்றோருபாயம்” என்று தோழிசொல்லியும் “வெறிகொள் துழாய்மலர்நாறும்” என்று தாயார் சொல்லியும் போந்தவிது, தன்வாயாலே சொல்லும்படியாய்த்து. (மெய்நின்றுகமழுமே) என்வார்த்தை பறியவேணுமாகில் என்னுடம்பை மோந்து பார்க்கமாட்டிகோளோ; (எ)

எட்டாம்பாட்டு.

மெய்நின்றுகமழ்துளப விரையேறுதிருமுடியன் * கைநின்ற சக்கரத்தன் கருதுமிடம்பொருதுபுனல் * மைநின்றவரைபோலுந் திருவுருவவாட்டாற்றுக்கு * என்னன்றிசெய்தேனுவென் னெஞ்சில் திகழ்வதுவே. (அ)

(க) பெரியாழ்-ரு உ-கo-

ப:—அநந்தரம், நிரதிசயபோக்யமான வடிவோடே யென்னெஞ்சிலேபுகுந்து உஜ்ஜ்வலனானைக்கு அவனுக்கென்ன நன்மை செய்தேனென்கிறார். (௮)

(இ - ள்.) மெய்நின்று - திருமேனி முழுக்கநின்று. கமழ்துளபம் - பரிமளத்தைப் பண்ணுகிற திருத்துழாயினுடைய, விரை-ஸௌரப்யம், ஏறு - அதிசயித்துவருகிற. திருமுடியன் - திருமுடியை யுடையனாய், கருதுமிடம் - திருவுள்ளத்தில் நினைத்தவிடத்திலேபோய். பொருது - பொருது, கைநின்ற-(௧)“ஸாஉவாஸ-௰ஜஹாஉ-ராமபார்ஶ்வம்ஜகாம” என்னுமாபோலே மீண்டு திருக்கையிலேநின்ற, சக்கரத்தன் - திருவாழியையுடையனாய் புனல்-ஸமுத்ரஜலம்போலே, நின்ற-ஸ்த்திரமான, மை - கருமையை யுடைத்தான, வரைபோலும் - மலைபோலே, திருவுருவ - உருமிக்கவழகிய வடிவையுடையனாய்க் கொண்டு, வாட்டாற்றாற்கு - திருவாட்டாற்றிலே ஸுலபனானவனுக்கு, (௨) “ராவணெநாஹயம்ஹரு தழ - ராவணேநோபயம்ஹ்ருதம்” என்று - ப்ராணனொருக்கலையாக வடிமைசெய்த பெரியவுடையாரைப் போலவும், (௩) “ஊ்ஷூாவஸீதா - க்ருஷ்டாஸீதா” என்ற திருவடியைப்போலவும், என்னன்றி - என்ன நன்மை, செய்தேனோ - தனக்குச் செய்தேனாக, என்னெஞ்சில் திகழ்வது - என்னெஞ்சிலே புகுந்து உஜ்ஜ்வலனாகிறது. (௮)

ஆறு;—(மெய்நின்று) திருத்துழாய் தொடக்கமாக வபர்யந்த போக்யங்களையுடையனாய், ஸ்வேச்சாநுவிதாயி ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்திக திவ்யாயுதோபேதனாய், நிரவதிக ஸௌந்தர்ய விஶிஷ்டனாயிருந்த வாட்டாற்றாற்கு நானென்ன வநுகூல வ்ருத்திபண்ணினேனாகக்கொண்டு தானென்னுள்ளே புகுந்து திகழுகிறதென்கிறார். (௮)

௯௫ அவ:—அத்யந்தவிலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனாய் என் ஹ்ருதயத்திலேவந்து புகுந்து உஜ்ஜ்வலனானைக்கு நானென்ன நன்மைசெய்தேனென்கிறார்.

---

(௧) ரா-யு-௪௰-௨௧-

(௨) ரா-ஆர-௬௭-

(௩) ரா-பால-௧-

(மெய்யித்யாதி) திருமேனியிலே நின்று கமழா நின்றுள்ள திருத்துழாயில் பரிமளமானது கொழித்தெறடா நின்றுள்ள திருமுடியையுடையவன். கடலில் நீர் ஸஹ்யத்திலேறக் கொழித்தாப்போலே காணும் மலரடிமேல் திருத்துழாயின் பரிமளமானது மெய்யெல்லாங்கொண்டு தலைக்குமேலே போனபடி,

(கையித்யாதி) பாவஜ்ஞனைனயாலே ஸர்வேச்வரன் திருவுள்ளத்திற் கருத்தறிந்து யுத்தத்திலேபுக் கெதிரிகளை யழியச்செய்து வெற்றிகொண்டு. (௧) "ஸவத-ஞெசைவ நாராவிரக்ஷ - ஸ்வதாரணீம்புராவிரத்" என்கிறபடியே கையிலேவந்திருக்குமாய்த்து; (௨) * "ராஜீவாக்ஷ-ஜஹார் - ராமபார்ச்வம்ஜகாம" போலே

[கயஹரிவர நாயஃ-அதஹரிவரநாதஃ] ஒரு முத்தின் குடை நிழலிலே பையல் பெருமாளுக்கெதிராகவந்து தோன்றினவாறே பொறுக்கமாட்டாமை மேல்விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயாப்ரயோகத்திலே கைவைக்குமளவான வாறே, "இனிநமக்குமது வேண்டிவரும், அது நமக்கீடல்ல, பெருமாள் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாமழிக்கவொண்ணாது" என்று மீண்டார். (௩) [ராமேணஹி ப்ரதிஜ்ஞாதம் - ராமேணஹி ப்ரதிஜ்ஞாதம்] ஸத்யஸங்கல்பரான பெருமாள் ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார். [ஹர்யக்ஷ-கணஸந்நிதௌ - ஹர்யக்ஷகணஸந்நிதௌ] வீரர்கள் திரள்நடுவே ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது. ஆனபின்பு, இவர்க்கு நிர்விஷயமாக்க வொண்ணாதென்று பார்த்தார். [ஹரிவர நாயஃ-ஹரிவரநாதஃ] தாம்செய்த விக்கார்யம் தம்பரிகரத்தில் செய்வாரில்லாமல் செய்தாரல்லர், பொறுமையாலே செய்தாரித்தனை. [ப்ராப்யஸங்க்ராமகீர்த்தி-ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம்] பூசல் பாக்யமென்று தனியேயொன்றுண்டிறே, அத்தால்வந்த புகழைத் தாம் படைத்தார். [நிசிசரபதிம் - நிசிசரபதிம்] களவுபூசல்செய்வார்க்கொதுங்க நிழலான பையலை. ராஜபுத்ரர்களை யகற்றித் தனியிடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலையிறே [ஆஜௌ] அவர்களுக் கதுபியான செவ்வைப் பூசலிலே. [யோஜயித்வா ப்ரஸநா-

---

(௧) ரா-யு-௧௧௧-௨௦-   (௨) ரா-யு-௫௦-௨௧-

(௩) ரா-ஸு-௫௧-௩௨-

யோஜயித்வாஸ்ரமேண] அவனை யிளைப்போடே கூட்டினார், தாம் புகழோடே கூடினார். [மம நைதி விஸாலம் யஜு யித்வா — ககநமதிவிஸா லம்லங்கயித்வா] நடுவிடைவெளி பெருத்திருக்கிற வாகாசத்தை வருத்தமறக்கடந்தார். [ஸூர்யஸ்ய நா — அர்க்கஸூநு:] அதுசெய்தபடி ஆதித்யபுத்ரனென்று தோற்றும்படியாயிருந்தது. உதயகிரியிலே தோற்றினால் பின்பு அஸ்தமித்து நிற்கக்காணுமித்தனையிறே. [ராகவாஸ்ய ஸஂஜஹா — ராமபார்ஸ்வம்ஜகாம] பெருமாளைப் பிரிந்தபடியாலே வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி, மதிக்கவொன்றுசெய்து வாராமையாலே, நேர்கொடு நேர் முன்னிற்கமாட்டாதே பெருமாளருகே போய்நின்றார்; மையல் தலையைப் பிடுங்கிக் கொடுவந்து திருவடிகளிலே யிடப்பெறாத நாம் என்சொல்லி முன்னே நிற்பதென்று பெருமாளருகேவந்துநின்றார்.

(புனலித்யாதி) புனல்போலவும் மைபோலவும் நின்றவரை போலவு மிருக்கிறவென்னுதல், மைமாறாத வரைபோலேயென்னுதல். வாட்டாற்றாற்கென்று - பூஜாவாசியன்று, வாட்டாற்றானுக்கென்றபடி. (என்னன்றிசெய்தேனோ) என்ன நன்மை செய்தேனாக. பெரியவுடையாரைப்போலே தலையோடே முடிந்தேனோ, திருவடியைப்போலே (க) "த்ருஷ்டாஸீதா - த்ருஷ்டாஸீதா" என்று வந்தேனோ.

அன்றியே, தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம்பண்ணினேனாம்படி விஹிதகர்மங்களை யநுஷ்டித்தேனோ, என்னநன்மை செய்தேனாக, என்னெஞ்சிலே புகுந்தபின்பு பெறும்பேறு பெற்றாற்போலே விளங்காநின்றான். ஐஸ்வர்ய ஸூசகமானதாரது, நினைத்ததுசெய்து தலைக்கட்டவல்ல பரிகரமது, வடிவழகது, இப்படி துறைதோறும் தலைமைபெறும்படி யிருக்கிறவன் என்னெஞ்சிலே புகுந்து பெறும் பேறுபெற்றானையிராநின்றான். (அ)

ஒன்பதாம்பாட்டு.

திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும் * திகழ்கின்ற திருமாலார் சேர்விடந்தண்வாட்டாறு * புகழ்நின்றபுள்ளூர்திப்போ ரரக்கர்குலங்கெடுத்தான் * இகழ்வின்றியென்னெஞ்சத் தெப்பொழுதும்பிரியானே. (௯)

(க) ரா-ஸு-

ப:—அநந்தரம், ஸ்ரியஃபதியாய்க் கொண்டு திருவாட்டாற்றிலே நின்றவன், என்னெஞ்சை யொருக்காலும் பிரிகிறில னென்கிறார்.

(இ - ள்) திகழ்கின்ற திருமார்பில் - ஸ்வாபாவிகமாக விளங்குகிற திருமார்பில், திருமங்கைதன்னோடும் - நித்யயௌவந ஸ்வபாவையான லக்ஷ்மியோடேகூட, திகழ்கின்ற திருமாலார் - விளங்குகிற ஸ்ரியஃபதியானவன், சேர்விடம்-தான் நித்யவாஸம்பண்ணுகிறவிடம், தண்-ஸ்ரமஹரமான வாட்டாறு-திருவாட்டாறு, (க) "தாஸஸ்ஸகா" என்கிறபடியே, புகழ்கின்ற - சேஷத்வகீர்த்திக்கு வாஸஸ்தானமான, புள் - பெரியதிருவடியை, ஊர்தி-நடத்துவானாய், இவ்வாஹநபலத்தாலே, போர் - யுத்தோத்பலரான, அரக்கர் - ராக்ஷஸருடைய குலம் - திரளை, கெடுத்தான் - நசிப்பித்தவன். என்னெஞ்சத்து-ஹேயமானவென்னெஞ்சிலே, இகழ்வின்றி-ஒரு அநாதரமின்றியே, எப்பொழுதும்-ஸர்வகாலமும், பிரியான்-பிரிகிறிலன். (சு)

ஆறு;—(திகழ்கின்ற) தனக்கு திவ்யமஹிஷி-ஸர்வலோகேஸ்வரியான பெரியபிராட்டி; சேர்விடம் திருவாட்டாறு; தன் திருவடிகளில் கைங்கர்யைகநிரதரே புகழாகவுடையனாயிருந்த பெரிய திருவடி - தனக்கு திவ்யவாஹநமும் அப்ரதிகதிரோதி நிரஸநோபகரணமும்; இங்ஙனே யிருந்து வைத்து, என்னுடைய நிகர்ஷத்தைப் பார்த்து என்னையிகழாதே ஒருக்ஷணமென்னைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தை யுடையனாய்க்கொண்டு என்னெஞ்சினுள்ளே புகுந்திருந்தருளினான்; ஒருவனுடைய குணவத்தை யிருக்கும்படியே யிதுவென்கிறார். (சு)

ஈடு - அவ;—அத்யந்தம் பூர்ணனை தானிகழாதே என் மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன், ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

(திகழ்கின்றவித்யாதி) வெறும்புறத்திலே விளங்காநின்றுள்ள திருமார்விலே யெழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்காநின்றுள்ள ஸ்ரியஃபதியானவன். அல்லாதாரையும் ஸ்ரீமான்களென்று சொல்லுமிறே ஔபசாரிகமாக, அப்படியல்லவிக்கு; * திருமங்கை தன்னோடும் திகழ்கை

(க) வே-தண்-ர

திருவாய்மொழி, ௧௦-ப, ௬-தி,௧௦-பா,பிரியாது வ்யாக்யாநம். ௧௫௧

யாலே ஶ்ரிய:பதியென்று பேரையுடையவன். இந்த ரேபமு மொரு ப்ரயோஜநமில்லை; திருமாலானவனென்றபடி; "புள்ளூர்தி" என்றவோபாதி.

(சேர்விடம் தண்வாட்டாறு) ஶ்ரிய:பதித்வத்தோபாதியும் போருமாய்த்து அவ்வூரை யிருப்பிடமாகவுடையனா யிருக்கிறவதுவும். (புகழித்யாதி) புகழெல்லாம் தன்பக்கலிலே கிடக்கும்படி யிருக்கிற பெரியதிருவடி-வாஹநம். புகழுடங்கலும் கிடப்பது அவன் பக்கலிலே; அத்தையுடையனென்கிற விதுவே யிவனுக்கேற்றம். (போரித்யாதி) செவ்வைப் பூசலிலே ராக்ஷஸஜாதியைக் குலமாக முடித்தான்.

(இகழ்வித்யாதி) "ஸம்ஸாரி" என்று பிற்காலியாதே, ஒரு கார்யப்பாட்டாலே செய்தானாய், பின்பு விட்டுக் கைப்பிடிக்கையன்றிக்கே ஸர்வகாலமும் விடுகிறிலன். பித்தோபஹதர் சந்தபங்கத்தினின்றும் கைவாங்கமாட்டாதாப்போலே, க்ஷணகாலமும் பிரிய மாட்டுகிறிலன். (௯)

பத்தாம்பாட்டு.

பிரியாதாட்செய்யென்றுபிறப்பறுத்தாளறக்கொண்டான்* அரியாகியிரணியனையாகங்கீண்டானன்று* பெரியார்க்காட்பட்டக்காற் பெறாதபயன்பெறுமாறு* வரிவாள்வாயரவணைமேல்வாட்டாற்றான் காட்டினனே. (௧௦)

ப:— அநந்தரம். பெரியவர்கள் எதிர்த்தலையில் சிறுமைபாராதே அநந்தரத்திலே யுபகரிப்பாரென்னு மித்தை யெனக்கு ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

(இ-ள்.) பிரியாது-யாவதாத்மபாவி பிரியாதே, ஆட்செய்-அடிமை செய், என்று-என்றுசொல்லி, பிறப்பு - அதுக்கு விரோதியான ஜந்ம ஸம்பந்தத்தை, அறுத்து - அறுத்து, அற மிகவும், ஆட்கொண்டான் - அடிமைகொண்டவனாய், அன்று - பெற்றதமப்பனாலே ப்ரஹ்லாத னீடு பட்டவன்று, அரியாகி-நரஸிம்ஹமாய், இரணியனை-ஹிரண்யனுடைய, ஆகம் - சரீரத்தை, கீண்டான் - பிளந்தவனாய், வரி-வரியையும், வாள்-ஒளியையுமுடைத்தாய், வாய்-பஹுமுகமான, அரவணைமேல் - திரு

வரவணையின்மேலே, வாட்டாற்றான்-திருவாட்டாற்றிலே கண்வளர்ந்தருளுகிறவன், பெரியார்க்கு - பெரியவர்களுக்கு, ஆட்பட்டக்கால்- அடிமைப்பட்டால், பெறுத-பெறுதற்கரிதான பயன் ப்ரயோஜநங்களையும், பெறுமாறு-பெறும் ப்ரகாரத்தை, காட்டினன்-காட்டினான். (௧௦)

ஆறு;—(பிரியாது) இனியொருகாலமும் தன்னைப் பிரியாதே ஸர்வசேஷ வ்ருத்தியையும் பண்ணுமென்று கொண்டு என்னை யநந்யார்ஹசேஷமாகக் கொண்டானின்று; அரியாகி யிரணியனை யாகங்கீண்டானென்று; பெரியார், தங்களை யாஸ்ரயித்தவர்களுடைய சிறுமையும் கொடுக்கப்படுகிற பொருளின் சீர்மையும் பாராதே, அவர்களுக்கு "இனியில்லை" என்னும் சீரிய பொருளைக் கொடுப்பாரென்னுமிடம், வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டியருளினானென்கிறார். (௧௦)

ஈடு-அவ;—மஹாபுருஷர்களை யடைந்தால் எதிர்த்தலை பாராதே தங்கள் தரத்தைக் கொடுப்பர்களென்னு மிவ்வர்த்தத்தை, திருவாட்டாற்றில் நாயனாரென் பக்கலிலே காட்டினாரென்கிறார்.

(பிரியாதித்யாதி) நமக்குப் பிரியாதே யடிமைசெய் யென்றருளிச் செய்து, விரோதியையும் போக்கி, நித்ய கைங்கர்யத்தையும் கொண்டான். "எனக்கே யாட்செய்" என்னவேணுமென்று நாம் * எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே செய்தான், (௧) "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்று * பொய்ந்நின்றஞானத்தி லபேக்ஷித்தபடியே பிறப்பறுத்தான். "தனக்கேயாக" என்று * எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே ஆளறக்கொண்டான்.

(அரியாகியித்யாதி) இதுக்கு முன்பே தமக்குப் பண்ணின் னுபகாரத்தைச் சொல்லுகிறார். (அரியாகி) ந்ருஸிம்ஹமாய் ஹிரண்யனுடைய முரட்டுடலை அநாயாஸேந பிளந்தான். (அன்று) அன்றப்படி செய்தான்; இன்றிப்படி செய்தான் (௨) "ப்ராப்ய ஸர்வ - க்ருதார்த்தோஸ்மி" என்கிறபடியே என் விரோதியைப் போக்கி நித்ய கைங்கர்யத்தைக் கொண்டான். "முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்றிறே யிவர் ப்ரார்த்தித்தது.

(பெரியாரித்யாதி) மஹாபுருஷ ஸமாஸ்ரயணத்தாலே துர்லபமான ப்ரயோஜநத்தைப் பெறுமவர்களென்று பக்த்யருந்த, வரி

(௧) திருவி-௧-

(௨) ரா-ஜூ ௧௩ ௭-

(பெரியாரித்யாதி) மஹாபுருஷ ஸமாஸ்ரயணத்தாலே துர்லபமான ப்ரயோஜநத்தைப் பெறுவர்களென்னு மர்த்தத்தை, வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டினான். (௧)[ஜ்ஞாநாம்ஸம்ஸ்ரயஜம் ஸர்வம் தேவாதீநம் ததாபி-மஹாத்மநாம்ஸம்ஸ்ரயமப்யுபேதோ நைவாவஸீதந்தி துர்க்கதோபி] மஹாபுருஷ ஸமாஸ்ரயணம்பண்ணினால், பின்னை அவர்கள், கொள்ளுகிறவன் சிறுமைபார்த்தல் கொடுக்கிறவின் பெருமைபார்த்தல் செய்யாதே கொடுப்பர்களென்று இங்ஙனேயாட்டிலே யொன்றுண்டு; அத்தை யென்பக்கலிலே காட்டினான். ப்ரஹ்லாதாதிகளைக்கொண்டு கவிபாடுவித்துக் கொண்டானே. (௧௦)

பதினொன்றாம்பாட்டு.

காட்டித்தன்கனைகழல்கள்கடுநரகம்புகலொழித்த* வாட்டாற்றெம்பெருமானைவளங்குருகூர்ச்சடகோபன் * பாட்டாயதமிழ்மாலையாயிரத்துளிப்பத்துங்கேட்டு* ஆரார்வானவர்கள்செவிக்கினியசெஞ்சொல்லே. (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய் மொழிக்குப் பலமாக விதினுடைய நித்யஸூரி போக்யதையை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) தன்கனைகழல்கள் - நிரதிசயபோக்யமாம்படி ஸப்தோத்தரமான வீரக்கழலையுடைய தன்திருவடிகளை காட்டி - காட்டி, கடு - துஸ்ஸஹமான, நரகம்புகல் - ஸம்ஸாரநிரய ப்ரவேஸத்தை, ஒழித்த - ஒழித்த, வாட்டாறு - திருவாட்டாற்றில், எம்பெருமானை ஸ்வாமியானவனைப்பற்றி, வளம் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன்-ஆழ்வாருடைய. பாட்டாய-பாட்டாயிருக்கிற, தமிழ்மாலை, தமிழ்த்தொடையரான, ஆயிரத்துள்-ஆயிரத்துள், செவிக்கினிய-செவிக்கு மதுரமாய், செஞ்சொல்-கரணத்ரயமும் ஏகரூபமாகையாலே செவ்விய சொல்லாயிருக்கிற இப்பத்தும்-இவைபத்தையும், வானவர்கள் - நித்யஸூரிகள், கேட்டாரார்-கேட்டு ஒருக்காலும் த்ருப்தராகார்.

இது கலிவிருத்தம். தாழிசையுமாம். (௧௧)

ஆறு:—(காட்டி) * அயர்வறுமமரர்க ளித்திருவாய்மொழியைக் கேட்டா லென்படுவாரோ வென்கிறார், (௧௧)

ஈடு-அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யநுபவிக்க வுரியார் நித்யஸூரிகளென்கிறார்.

(காட்டித்தன்கனைகழல்கள்) நிர்ஹேதுகமாகத் தன் ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக்காட்டி. (கடுநரகம் புகலொழித்த) "இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்று அபேக்ஷித்தபடியே செய்தானாய்த்து. அறிவுடையார்க்குப் பொறுக்க வொண்ணாத நரகம் ஸம்ஸாரமிறே. (வளம்) அழகியதான திருநகரியைத் தமதாக வுடையரான ஆழ்வார்.

(பாட்டாயவித்யாதி) (க) "[illegible]-பாட்யேகேயேசமதுரம்" என்கிறபடியே இசையிலே புணர்ப்புண்ட திருவாய்மொழி யாயிரத்திலும் இப்பத்தையும் கேட்டு. (ஆரார்வானவர்கள்) இத்தைச் சொல்லக்கேளாநின்றால் "இன்னம்சொல், இன்னம்சொல்" என்னுமித்தனைபோக்கி, கேட்ட அம்சத்தாலே த்ருப்திபிறவார்க ளாய்த்து; பகவத்குணங்களை யநுபவித்து, அதுக்குப் போக்குவிடுகைக்குப் பாசுரமின்றிக்கே விம்மல் பொருமலாய்ப் படுகிறவர்கள், இப்பாசுரம் கேட்டால் விடார்களிறே, அதுக்கு ஹேதுவென், அவனுடைய சீலகுணாநுபவம் பண்ணினோமோவென்னில்; இப்பாசுரத்துக்குத் தோற்றென்கிறார்.

(செவிக்கினிய) (உ) "[illegible] - ஸம்ஸ்ரவேமதுரம்" என்கிறபடியே செவிவழியேபுக்கு நெஞ்சுக் கினிதாகை யன்றிக்கே, செவிப்பட்டபோதே பிடித்து ரஸிக்கையாலே; அதுக்கடி யென்னென்னில் (செஞ்சொல்லே) நினைவும் சொலவும் செயலு மொருபடிப்பட் டிருக்கையாலே; "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே" என்று, "செந்தமிழ்பத்தும்" என்றாரிறே இவர்தாமே.

பத்தாம்பத்து ஆறாந் திருவாய்மொழி முற்றிற்று.

(க) ரா-பால-ச-நி-

(உ) ரா.ஸு-[illegible]-நிக-ஞ.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாந்திருவாய்மொழி—செஞ்சொல் - ப்ரவேஶங்கள்.

ஆறு:—(செஞ்சொற்கவிகாள்) தான் சொன்னபடியே செய்யக் கடவனாகச் சமைந்துகொண்டு தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருளின வெம்பெருமான் தம்மோடுகலந்த கலவியாலே தமக்குப் பிறந்த நிரவதிக ப்ரீத்யதிசயத்தாலே. *

ப:—ஏழாந் திருவாய்மொழியில், கீழிவர்க்குப் பரமபதத்தைக் கொடுக்கையிலே யுத்யோகித்த ஸர்வேஶ்வரன் இவர் முடியிலே திருவடிகளை வைத்துத் திருவுள்ளத்திலே பூர்ணமாகப் புகுந்திருந்து, "விரைகுழுவு நறுந்துளவம் மெய்நின்று கமழும்" என்னும்படி திருமேனி முழுக்கத் திருத்துழாய் பரிமளமாம்படியாக விவருடைய ஶரீரத்தோடு அந்தஃகரணத்தோடு மற்றுமுள்ள வவயவங்களோடு வாசியற அத்யபிநிவிஷ்டனா யாதரிக்கிறபடியைக் கண்டு, இவ்வாதராதிசயத்துக்கு ஹேதுவான வவனுடைய ஆஶ்ரித விஷயமான வபிநிவேசத்தையும், அதிசயிதபோக்யத்வத்தையும், ஆஶ்ரிதஸ்நேஹத்திலாதரத்தையும், அகிலத்யந்தாபிநிவேசத்தையும், ரஸிகத்வத்தையும், ஸர்வாதிகத்வத்தையும், ஆஶ்ரிதார்த்த தேசவாஸத்தையும், ஸர்வப்ரகார ஸம்ஶ்லேஷத்தையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஹேதுத்வத்தையும், அபேக்ஷாபராதீநத்வத்தையு மநுஸந்தித்து, ஏவம்விதனான ஸர்வேஶ்வரனுடைய வாதராதிசயமிருந்தபடியால், தாம் "இனியாமுறாமை" என்று தாமுபேக்ஷித்த தேஹாதிகளையும் விளம்பமறக்கொண்டு போவானைப்போலே யிராநின்றது; அஸ்திரமாய், தோஷதூஷிதமாகையாலே அபுருஷார்த்தமாய், அநுபவ விரோதியாகையாலே அநபிமதமாயிருக்கிற வித்தை நம்பக்கலாதரத்தாலே விரும்பாநின்றான். இத்தை யறிவித்தும் நாமவனை யர்த்தித்தும் விடுவித்துக் கொள்ளுவோமென்று தெற்கில் திருமலையிலே யவனை யபேக்ஷிக்க, அதுக்காகவவன் நிவர்த்திப்பிக்கையிலே உத்யுக்தனானபடியைக் கண்டு ஹ்ருஷ்டராகிறார் *

ஈடு-அவ:—"விதிவகையே" என்கிறபடியே அவன் தம்மைக் குறித்த பாரதந்த்ர்யப நிற்கிறபடியை யநுஸந்தித்தார். அவ் வழியாலே "விரைகுழுவு நறுந்துளவம் மெய்நின்று கமழுமே" என்றும், "தலைமேல தாளிணைகள்" என்றும், அவன் தன் திருமேனியோடே புகுந்து கலந்தபடியைப் பேசினார்;

தம்மோடேவந்து கலந்து தம்மைக்குறித்துப் பாரதந்த்ரனாய் திருமேனியை விடமாட்டாதே அவன் பண்ணுகிற வ்யதிரேகத்தைக் கண்டு; "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்று நாமடியிலே யர்த்திக்கச் செய்தேயும் இங்கு நம்மைவைத்தது ஒரு கார்ய புத்த்யாவாகாதே யென்றிருந்தோம்; அதாவது - இப்ப்ரபந்தம் தலைக்கட்டுவித்துக் கொள்ளுகையிறே; அது அவ்வளவிலன்றிக்கே நம்முடம்பு விரும்பி விடமாட்டாமையாலே யாயிருந்தது; இவன் வெறுமுடம்பனா யிருந்தான்.

"கவிபாடுவித்துக் கொள்ளுகையென்று வ்யாஜமாத்ரம், ஆநுஷங்கிகபலமாய் வந்ததத்தனை, இதுவே யிவனுக்கு நினைவு" என்று பார்த்தார்; "இவனிவ்வுடம்பை விரும்புகிறது நம்பக்கலாதரத்தாலேயிறே, இப்படி நம்மை விரும்பின விவ்வளவிலே நம்மபேக்ஷிதம் செய்வித்துக்கொள்ளுவோம்" என்று பார்த்து, "தேவர் திருவுள்ளத்திலோடுகிறதென்" என்றார்; "நானுடம்பனாயே வேறொன்றறியாமல் படுகிறபாடன்றோ, மற்றுண்டோ" என்றான்; "அங்ஙனேயாகில், தேவரீரில் பண்ணியருளுகிற விருப்பத்தைத் தவிரவேணும்" என்று விண்ணப்பம் செய்ய; இவர் விலக்கினது மிகவுமவனுக் கபிநிவேசத்துக்குடலாய்த்து; தந்தாமைக்கொண்டருமைப்படுத்துவர்களிறே மேல்விழுகைக்காக, அதுபோலே யாய்த்து.

இப்படி இவனிதிலே பண்ணுகிற ஆதரத்தைக்கண்டு. "இவனுடைய வ்யதிரேக மிருந்தபடியால் இவ்வுடம்போடே நம்மைக் கொடுபோக நினைத்திருக்கிறான்போலே யிருந்தது, அப்படிசெய்த போது இஸ்ஸம்ஸாரம் நமக்கு நித்யமாய்விடும், இங்கேயிருந்து இதுக்கொரு முடிவு கண்டு தாமத்தை யிழந்தோமாமித்தனை, இத்தைக் கழித்துக் கொள்ளவேணும்" என்று பார்த்தார்;

"என் பக்கல்பண்ணின வ்யதிரேகமாகில் இத்தை விரும்புகைக்கடி, எனக்கிது அநபிமதம், தேவரீரில்பண்ணுகிற விருப்பத்தைத் தவிரவேணும்" என்ன; "நீரும்முடைய வுத்தேச்யத்தை விடாதவோபாதி நாமும் நம்முத்தேச்யத்தை விடுவோமோ" என்ன; "இவனிப்படி விரும்புகிறது இதினுடைய தோஷதர்சநம் பண்ணாமையிறே. இவனை யிதில் தோஷதர்சநத்தைப் பண்ணு

விப்போம்" என்று பார்த்து, "இதாகிறது உபசயாத்மகமாய் ஹேயமாயிருப்பதொன்று, விரும்பப்படுமாத்மாவைப்போலே ஏக ரூபமாய் விலக்ஷணமாயிருப்ப தொன்றல்ல, இத்தை யுபேக்ஷித் தருளவேணும்" என்றார்; அதுதானே யிவனுக்கு விருப்பத்துக் குடலாய்த்து; அபிமத விஷயத்திலழுக்குகப்ப பாரைபோலே.

"ஸர்வதா இவன் விடமாட்டானாயிருந்தான், இவன்றன்னைக் காற்கட்டியாகிலு மிக்காற்கட்டை யவிழ்த்துக் கொள்ளுவோம்" என்று பார்த்து, "இதில்பண்ணுகிற விருப்பத்தை தேவர் தவிர வேணும்" என்று சரணம்புக்கார்; இவர்சொன்னபடி செய்ய விழிந் தவனுகையாலே தனக்கிதிலே மேன்மேலபேக்ஷை செல்லச்செய் தேயும் "இவர்க்கிதிப்படியுபேக்ஷா விஷயமான பின்பு நாமுமினி யித்தை வருந்தி யுபேக்ஷிப்போம்" என்று பார்த்தான்; இவர் பக் கல் பாரதந்த்ர்யத்தாலே இத்தையொழிய வவன்கொடுபோவானா யிருந்தான்.

ஆக இப்படியாலே தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிகமித்து, "ஸர்வநியந்தாவாய் ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன், தனக்கு இதிலே யபேக்ஷையும் செல்லாநிற்கச்செய்தே, நாம் 'இத்தைத்தவிரவே ணும்' என்னத் தவிருவதே?, இதொரு ஶீலமிருக்கும்படியே!, இவ் விஷயத்தி லொருவருமிழியாதேகொள்ளுங்கோள், இழிந்து நான் பட்டதுவேயமையும்" என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பிறர்க்குச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

முதற்பாட்டு.

செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட் செய்மின்திருமாலிருஞ்சோ லை * வஞ்சக்கள்வன்மாமாயன் மாயக்கவியாய்வந்து * என்நெஞ்சு முயிருமுள்கலந்து நின்றாரறியாவண்ணம் * என்நெஞ்சுமுயிருமவை யுண்டு தானேயாகிநிறைந்தானே. (௧)

ப:—முதற்பாட்டில், "கவிபாடுவித்துக்கொள்ள" என்றொரு வ்யாஜத்தாலே ஈஶ்வரன் தன்பக்கல் பண்ணின வபிநிவேசத்தைக் கண்ட ஹர்ஷத்தாலே, தந்தாமை வேண்டியிருப்பா ரிவ்விஷயத்தி லகப்படாமல் ஆத்மாவை நோக்கிக்கொண்டு அடிமைசெய்யுங்கோ ளென்று, தாம்பட்டபடியை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) திருமாலிருஞ்சோலை - ஆஸ்ரிதாநுக்ரஹார்த்தமாக திருமலையிலே ஸந்நிஹிதனாய், அகப்பட்டாருடைய ஸர்வஸ்வத்தையும் அபஹரிக்குமிடத்தில், வஞ்சக்கள்வன் - அபஹாரகனென் றறியவொண்ணாதபடி வஞ்சித்த பஹரிப்பானாய், மாமாயன் - அதுக்கடியாய் எதிர்த்தலையை மதிமயக்கும் அத்யாஸ்சர்யமான ரூபகுணாதிகளை யுடையனானவன், மாயக்கவியாய் - கவிபாடுவித்துக் கொள்ளுகையாகிற க்ருத்ரிம வ்யாபாரத்தாலேயுள்ளனாய், வந்து - தாமிருந்த விடத்திலே தான் அபிநிவிஷ்டனாய்வந்து, உள்ளுறைக்காட்டுவாரைப்போலே, என்னெஞ்சுள்ளும் - என்னெஞ்சுக்குள்ளேயும், உயிருள்ளும் - ஆத்மாவுக்குள்ளேயும், கலந்து - ஒருநீராகக் கலந்து, நின்றார் - பரிஸரவர்த்திகளான லக்ஷ்மீப்ரப்ருதிகளும், அறியாவண்ணம் - அறியாதபடி, அவை - அந்த, என் னெஞ்சும் - நெஞ்சையும், உயிரும் - உயிரையும், பிரித்துக்காணவொண்ணாதபடி, உண்டு - க்ரஸித்து, அசேதநமான நெஞ்சோபாதி சேதநனுடைய போக்த்ருத்வமும் அஸத்ஸமமாம்படி தானேயாகி - தானே போக்தாவாய்ப் பெரும்பேறு பெற்று, நிறைந்தான் - அவாப்த ஸமஸ்தகாமனானான்; செம் - ப்ரயோஜநமில்லாத செவ்வையையுடைத்தாய் ஸ்வயம் ப்ரயோஜநரூபமான, சொல் - சொற்களாலே, கவிகாள் - கவிபாடவல்லவர்களே, உயிர்காத்து - அவன்கையில் உங்களுடைய வாத்மாத்மீயங்களகப்படாதபடி காத்துக்கொண்டு, ஆட்செய்மின் - வாசிகமான வடிமை செய்யப் பாருங்கோள்.

அநந்யப்ரயோஜநரா யிழிவார்க்கு ஆத்மாத்மீயங்கள் அவனாலே அபஹ்ருதமாகை அவர்ஜநீயமென்று கருத்து. (௧)

ஆறு:—எம்பெருமானைக் கவிபாடுமவரைக் குறித்து, நீங்களவனுக் கடிமைசெய்யுமிடத்தில் உங்களுயிரைக் காத்துக்கொண் டடிமைசெய்யுங்கோள். அவன் தனக்கடிமை செய்வாரை அவராத்மயமாம்படி அதிமாத்ர ஸம்ஸ்லேஷத்தைப் பண்ணி பாதிக்கும்; அவர்களுடைய விச்சாநுகுணமாக வடிமைசெய்வித்துக் கொள்ளும் ஸ்வபாவனல்லனோ வென்னில்; அவன் பாதிக்கும் ஸ்வபாவனை யிருந்துவைத்தே பாதியாதானேபோலே யிருந்த [illegible] வஞ்சகன்கிடீர்கோள். எங்ஙனே யென்னில்; என்னையுங்கணமாகக் கொண்டு கவிசொல்லுகை யென்னும் வ்யாஜத்திலே யென்னுள்ளே வந்துபுகுந்து, கலந்து; "இன்னபடி செய்கிறேன்" என்று

* அபர்வறு மமரர்க்கு மறிய நிலமல்லாததொருபடி யென்னெஞ்சையு முயிரையும் தன்னுள்ளேயடக்கி. தானேயாம்படி மாளபுஜித்து பரிபூர்ணனுனென்கிறார். (க)

ஈடு-அவ;—"திருவாய்மொழி பாடுவிக்க" என்றொரு வ்யாஜத்தாலே புகுந்து தம்பக்க லவன்பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, அவனுக்கடிமை செய்வார் சிலர்திகளிலே யகப்படாதே கொள்ளுங்கோளென்கிறார்.

(செஞ்சொலித்யாதி) செவ்விய சொல்லேயுடைய கவிகாள்! கவிக்குச் செவ்வையாவது-அநந்யப்ரயோஜநமா யிருக்கை; ப்ரயோஜநத்தைக் கணிசிக்கை கவிக்கு குடிலமாகையாவது, "இன்கவிபாடும் பரமகவிகள்" என்றும் (க) "செந்தமிழ்பாடுவார்" என்றும் சொல்லுகிற முதலாழ்வார்களேயாய்த்து நினைக்கிறது. (உ) "பெருந்தமிழன் நல்லேன்" என்று (௩) "வாயவனையல்லதுவாழ்த்தாது" என்கிறவர்களிறே அநந்யப்ரயோஜநர்.

(உயிர்காத்தாட்செய்மின்) உங்களை நோக்கிக்கொண்டு நின்று கவிபாடப் பாருங்கோள். நீங்களுண்டாய்க் கவிபாடவேணுமே. இத்தலையுண்டானாலிறே அத்தலைக்கு மங்களாசாஸநம் பண்ணலாவது. "ஆட்செய்மின்" என்கிறார் கவிபாடுகை-வாசிகமான வடிமையாகையாலே. * ஆட்கொள்வானொத்தென்னுயிருண்ட மாயனிறே-அடிமைகொள்வாரைப் போலே புகுந்து மற்றைப்படியேயாயிருக்கும் படிப்பது, பரிஹரித்துக்கொள்ளுங்கோள்.

"ஆழங்காலிலேயிழிந்தமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே, கொண்டைக்கோல் நாட்டுகிறா" என்று சிற்றாள்கொண்டான். உடையவர், "இன்னுருயிரென்னுமையாலே அவனுயிரைக்காத்தாட்செய்புங்கோள்" என்றருளிச்செய்வர். அதாவது-அவன் மேல்விழுவிழுந் தாங்களிருப்கையாவது அவனை யிழக்கையிறே; ஆனபின்பு அவனுயிரைக் காவுங்கோள். "இவ்விடம்பாப்புந்துறை, இவ்விடம்மடு" என்று சிலவர் எல்லை குறிக்குமாபோலே.

"வம்மின்புலவீர்" என்று முதலிலே ருசியில்லாதாரையுமிரந்தழைக்கிறவிவர் சிலர்திகளிலே யிழிகிறவர்களையும் விலக்குகி

(க) தி-மொ-உ-அ உ- (உ) உ-திருவ-எச-

(௩) ௩-திருவ-௩௧-

ரூரிறே ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துருகும்" "வல்வினையேனை யீர்கின்றகுணங்களையுடையாய்" என்று சிலகுணங்களிலே புண்பட்டிறே யிவரிருப்பது. உங்களை யிழக்கக் காரியம்பாராதே, அவனுடைய வைஶ்வர்யத்திலே யிழிந்து கவிபாடப்பாருங்கோள். சிலகுணத்தி லிழியநினையாதே கொள்ளுங்கோள். (கவிகாளுயிர்காத்தாட்செய்மின்) "கவிகாள்" என்றால் "உயிர்காத்துக்கவிபாடுங்கோள்" என்னவிறேயடுப்பது, அங்ஙன் சொல்லாதே "ஆட்செய்மின்" என்கிறாய்த்து; "ஆட்செய்கையாவது - கவிபாடுகை என்றிருக்கும்: * புகழுநல்லொருவனில் தப்வாஸனையாலே.

"இஸ்ஸீலகுணத்திலிழியாதே கொள்ளுங்கோள்" என்று நிர்ப்பந்திக்கைக்கு ஹேதுவென்னென்னில்; ஹேது சொல்லுகிறார் மேலெல்லாம், "தானேயாகிநிறைந்தானே" என்று தம்மைக்காண்கிறிலர்காணும். (திருமாலிருஞ்சோலை) திருமலையில் நிலையும் சிலத்துக்குடலிறே. (வஞ்சக்கள்வன்) களவுதானும் மெய்யென்னக்களவுகாணுமாய்த்து, "என்கண்ணன் கள்வமெனக்குச் செம்மாய்நிற்கும்" என்னுமாபோலே-களவுகாணாநிற்கச்செய்தே செவ்விதென்று தோற்றும்படியிருக்கும். களவுதன்னைக் களவுகாணுமாய்த்து.

இத்தலையில் சேஷத்வத்தை நிலைநிறுத்துவாரைப்போலே புகுந்து, தானத்தை யெறட்டுக்கொண்டு, சேஷித்வத்தை யித்தலையிலே வைத்து கிரமாவஹிபா நிற்குமாய்த்து. இப்படி நீரவன்களவையறிந்தீராகில் தப்பாதொழிவானென்னென்னில் (மாமாயன்) இப்படி யறியச்செய்தேயும் தப்பவொண்ணாதபடியான வாஶ்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையவன்; (க) "மையலேற்றிமயக்க" இத்யாதி.

குணசேஷ்டிதங்களாலே யும்மை அவனகப்படுத்தின வழிதானேதென்ன (மாயக்கவியாய்) "ஆழ்வீர், உம்மைக்கொண்டு லோகத்தில் நடையாடாதன சிலகவிபாடுவித்துக்கொள்ளப் பாராநின்றோம், அப்படி செய்வோம்" என்றாய்த்துப்புகுந்தது; கவியென்றொருவ்யபதேசத்தையிட்டுக் கொண்டுவந்தான்; அபிமதவிஷய மிருந்தவிடத்தே தண்ணீரென்று புகுருமாபோலே. (வந்து) அபேக்ஷித்தானும் தானேயாய்த்து. நான் தானிருந்தவிடத்தே சென்று "என்னையிட்டுச் சில கவி பாடுவித்துக் கொள்ளவேணும்" என்றுசொல்ல,

(க) நாய்ச்சி-தி-உ-ஶ-

திருவாய்மொழி, ௧௦-ப, எ-தி,௧-பா,செஞ்சொல் வ்யாக்யாநம். ௧௬௯

செய்கையன்றிக்கே, தானேவந்தான். அபிநிவேசத்தையுடையனாய் அப்படியே வந்து அநுஸரித்தான்.

இதிறே சீலமாவது; வந்தவிடத்தில் அவன் உமக்கு நலிவாகச் செய்வதேதென்னில் (என்னெஞ்சுமுயிரும்) நெஞ்சென்று-தேஹத்துக்கு உபலக்ஷணம். உயிரென்று - ஆத்மா. (உள்கலந்து) ஒருநீராகக் கலந்து. சரீரத்தோடு ஆத்மாவோடு வாசியற அவகாஹியாநின்றான். (நின்றாறறியாவண்ணம்) இப்பரிமாற்றத்துக்கு தேசிகரான பிராட்டி, திருவனந்தாழ்வான், திருவடி முதலானோர்க்கும் அபூமியாம்படியாய்த்து என்னோடு கலந்தது. இப்படிப்பட்ட பரிமாற்றத்தில் நிற்பாரவர்களிறே; அவர்களுக்கும் தெரியாதபடி; "ஆருயிர்பட்டதெனதுயிர்பட்டது" என்னுமாபோலே. (என்னெஞ்சுமுயிரு மவையுண்டு) தேஹாத்மவிவேகம் பண்ணமாட்டுகிறிலன்; "உருவுமாருயிருமுடனேயுண்டான்" என்னுமாபோலே- தேஹத்தையும் ஆத்மாவையு மொக்க புஜித்தான்.

(தானேயாகி) தம்மைக் காண்கிறிலர் காணும். இரண்டு தலையுமாய் புஜிப்பாரைப்போலே புகுந்து போக்தா தானேயானான். "என்னை முற்றப்பருகினான்" என்னுமாபோலே, இத்தலைபோக்யமாயற்றதாய்த்து. இத்தலை யொருசேதநவஸ்துவென்று தோற்றாதபடியாக வாய்த்துப் பரிமாறிற்று. பிறர்க்குறுப்பாயிருக்குமதொழியத் தனக்கென்ன ப்ராப்தியில்லாத வஸ்துவ்யாபாதியாகப் பண்ணினான். "தனக்கேயாக" என்கிறபடியே கொண்டான். போக்யவஸ்து தன்னிலையும் ஸ்வரூபபேதங்களுண்டாகாநின்றதிறே; அவ்வோபாதியாய் விட்டது சேதநவஸ்துவும்.

(தானேயாகி) ஈரரசுதவிர்த்தான். இத்தலையைப் புறக்கவ்வப் பண்ணித் தானே அபிமாநியாய்நின்றான். (நிறைந்தானே) முன்பு அவாப்தஸமஸ்தகாமனென்கிற பேரேயாய், இவரைப்பெற்றபின் பாய்த்து பரிபூர்ணனாய்த்து. இங்ஙனே யிருக்கையிறே சீலமாவது; அதாவது - பெரியவன் சிறியவனோடே வந்து கலக்குமிடத்தில் தன் பெருமையும் இவன் சிறுமையும் தோற்றாதபடி புரையறக் கலக்கையிறே; (க) "க்ரு தக்ரு த்ருஶஶ்ராமஃ - க்ருதக்ருத்யஸ்ததாராமஃ" என்னுமாபோலே.

(க) ரா-பா-க-

ஈடு - அவ;— தம்மோடு கலந்தபின்பு அவனுக்குப் பிறந்த ஸம்ருத்தியைக் கண்டினியராகிறார்.

(தானேயாகிநிறைந்து) இருவருங்கூடப் பரிமாறப்புகுந்து தானே பெற்றானுயிராநின்றான். (எல்லாமித்யாதி) ஸகலலோகங்களும் அந்த லோகங்களுக்குண்டான மநுஷ்யாதிகளும் தானேயாய் நின்றான்; ஸர்வேஶ்வரனென்றபடி. ஸர்வேஶ்வரனுக்கு மிப்போதோவென்னில்; ஓம், அப்படியே ரக்ஷகனாய்க்கொண்டேயிறே அவனுக்கு ஸ்வரூபம். ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப் பண்ணியல்லது நியந்தாவாக வொண்ணாதே. இவரைப் பெறுவதற்குமுன்பு தன்னுடைய ஐஶ்வர்யமடையக் கண்ணாந் தாரகம் போலே காணும்கிடந்தது.

ஆத்மாதான் நித்யனாயிருக்கச் செய்தே, பகவத்ஜ்ஞாநம் பிறவாதபோது (௧) "அஸந்நேவஸபவதி - அஸந்ப்ரஹ்மேதிவேதசேத்" என்னலாய், அதுபிறந்தபோது "ஸந்தமேநம் ததோவிது:" என்னலாம்படியிருக்குமாப்போலேகாணும் அவனுமிருப்பது. ப்ரதிஸம்பந்தியை யபேக்ஷித்துக்கொண்டிருக்கையிரண்டு தலைக்குமொக்கும். (௨) "நானுன்னையன்றியிலேன் - நீ யென்னை யன்றியிலை" என்கிறபடியே - இவன் சேஷபூதனாய்க் கொண்டு உளனாம்; அவன் சேஷியாய்க் கொண்டு உளனாம்.

(தானேயானேன்பானாகி) யானென்பான் தானேயாகி. ஸர்வ விஷயமாக நிற்கும்நிலையொழிய இந்தவ்யக்தி விசேஷத்தில் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (யானேன்பான் - தானேயாகி) நானென்று நாமமாத்ரமானநான் தானென்னலாம்படியானேன். தம்மைத் தடவிப் பார்த்தவிடத்தில் காண்கிறிலர், அவன்தலையாலே சுமக்கக்காண்கிற வித்தனை. அவனும் தன்தலையிலே பாரதந்த்ர்யத்தை யெறட்டுக்கொண்டு இவர்தலையிலே ப்ராதாந்யாஹங்காரத்தை வைக்கையாலே யிவரையே காண்கிறவித்தனை;

விஶிஷ்டவஸ்துவில் விசேஷ்ய ப்ராதாந்யத்தாலே விசேஷண மாத்ரமான தம்மைக்காண்கிறிலராய்த்து. கார்யாவஸ்த்தையோடு காரணாவஸ்த்தையோடு வாசியற வஸ்துவிஶிஷ்டமாயிருக்கச்செய்

(௧) தைத்-ஆ-௬- (௨) ச-திருவ-௭-

ஈடு-அவ;—தம்மோடு கலந்தபின்பு அவனுக்குப் பிறந்த ஸம்ருத்தியைக் கண்டினியராகிறார்.

(தானேயாகிநிறைந்து) இருவருங்கூடப் பரிமாறப்புகுந்து தானே பெற்றானாயிராநின்றான். (எல்லாமித்யாதி) ஸகலலோகங்களும் அந்த லோகங்களுக்குண்டான மநுஷ்யாதிகளும் தானேயாய் நின்றான்; ஸர்வேஶ்வரனானென்றபடி. ஸர்வேஶ்வரனுக்கு இப்போதோவென்னில்; ஓம், அப்படியே ரக்ஷகனாய்க்கொண்டேயிறே அவனுக்கு ஸ்வரூபம். ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப் பண்ணியல்லது நிர்வாஹகவொண்ணாதே. இவரைப் பெறுவதற்குமுன்பு தன்னுடைய ஐஶ்வர்யமடையக் கண்ணாற் தாரகம் போலே காணும்கிடந்தது.

ஆத்மாதான் நித்யனாயிருக்கச் செய்தே, பகவத்ஜ்ஞானம் பிறவாதபோது (௧) "அஸந்நேவஸபவதி - அஸத்ப்ரஹ்மேதிவேத சேத்" என்னலாய், அது பிறந்தபோது "அஸ்தி ப்ரஹ்மேதிசேத்வேத - ஸந்தமேநம் ததோவிது:" என்னலாம்படியிருக்கிறப்போலேகாணும் அவனுமிருப்பது. ப்ரதிஸம்பந்தியை யபேக்ஷித்துக்கொண்டிருக்கை யிரண்டு தலைக்குமொக்கும். (உ) "நானுன்னையன்றியிலேன் - நீ யென்னை யன்றியிலை" என்கிறபடியே - இவன் சேஷபூதனாய்க் கொண்டு உளனாம்; அவன் சேஷியாய்க் கொண்டு உளனாம்.

(தானேயானேன்பானாகி) யானென்பான் தானேயாகி. ஸர்வவிஷயமாக நிற்கும்நிலையொழிய இந்தவ்யக்தி விசேஷத்தில் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (யானேன்பான் - தானேயாகி) நானென்று நாமமாத்ரமானநான் தானென்னலாம்படியானேன். தம்மைத் தடவிப் பார்த்தவிடத்தில் காண்கிறிலர், அவன்தலையாலே சுமக்கக்காண்கிற வித்தனை. அவனும் தன்தலையிலே பாரதந்த்ர்யத்தை யெறட்டுக்கொண்டு இவர்தலையிலே ப்ராதாந்யாஹங்காரத்தை வைக்கையாலே யிவரையே காண்கிறவித்தனை;

விஶிஷ்டவஸ்துவில் விசேஷ்ய ப்ராதாந்யத்தாலே விசேஷணமாத்ரமான தம்மைக்காண்கிறில ராய்த்து. கார்யாவஸ்தையோடு காரணாவஸ்தையோடு வாசியற வஸ்துவிஶிஷ்டமாயிருக்கச்செய்

(௧) தை-ஆ-௬- (உ) ச-திருவ-எ-

தேயும், ப்ரஹ்மமே உபாதாநமென்னக் கடவோமிறே; தத்கதமான விகாராதிகள் வருமென்று ஶங்கித்து, அவற்றை விஶேஷணாம்ஶத்தே பொருக்குகிறதும் அவனுக்கு தோஷாஸ்பர்ஶத்துக்காக. ஆனாலும் வஸ்துத்தான் ஒன்றென்னலாயிருக்குமிறே; ஸ்வாபாவிகஸம்பந்தம் கண்ணழிவற்றிருக்கையாலே. கடபடாதிகளைப்போலே ப்ருதக்ஸ்திதியுண்டாயிருக்கிறதன்றே, ப்ரகார ப்ரகாரிபாவத்தாலே சொல்லுகிறகிறே; ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தைப்பற்றிக் கிடக்குமோபாதியாய்த்து.

இப்படிவஸ்து விருக்கையாலே (தன்னைத்தானேதுதித்து) (க) "வசஸாம்வாச்யமுத்தமம்" என்கிறபடியே - அஹமர்த்தமும் அவனளவும் சென்று காட்டக்கடவதாய், அஹம்ஶப்தமு மவனளவும்சென்று காட்டக்கடவதாயிறே யிருப்பது. இவர் பக்கலிலே பிறக்கச் செய்தேயும் அவன் செய்தானென்று அவன்தலையிலே யேறிடலாயிருக்குமிறே. நான் ஸ்துத்யனுகில்கிடீர் ஸ்தோதா நானவது.

(எனக்கித்யாதி) (உ) "ஸர்வரஸ: - ஸர்வரஸ:" என்கிற பொதுவான நிலையன்றிக்கே எனக்கு நிரதிசயபோக்யனானவனே; "கொடியேன்பருகின்னமுதே" என்கிறபடியே; "தன்னைத்தானே துதித்து" என்கிறவிடத்தில் தம்மைக் கண்டிலர்; இங்குத்தாமுளராகவும் தமக்கினிதாகவும் தொடங்கிற்று. தாம்பாடின கவிகேட்டு அவனினிபனாயிருக்கிறவிருப்பு தமக்கினிதாயிருக்கிறபடி.

(திருமாலிருஞ்சோலைக்கோனே) கீழ்ச்சொன்ன ரஸவத்பதார்த்தங்களோபாதியாய்த்துத் திருமலையில் நிற்கிறநிலையும் (௩) "திருமாலிருஞ்சோலையங்கட்டியைக் கரும்பின்றவின்சாற்றை" என்னக் கடவதிறே. (திருமாலிருஞ்சோலைக்கோனேயாகி) உபயவிபூதியோகத்தால்வந்த வேற்றத்துக்கு மவ்வருகேபோ ரேற்றமேபோலே திருமலையையுடைய னானதனால் வந்தவேற்றம். (கோனேயாகி) இவரைப்பெற்றபின்பாய்த்து ரக்ஷகத்வம் பூர்ணமாய்த்து; இல்லையாகில், ஸ்ரீவைகுண்டத்திலிருப்போடு திருமலையில் நிலையோடு வாசியற்றுப்போமிறே.

(க) ஜிதா-க-எ-　　　　(உ) சாந்தோ-௩-கச-

(௩) தி-மொ-எ-௩-௬-

(நின்றொழிந்தான்) இங்கே நின்றபின் யாய்த்துப் பரகுபரகற்றது க்ருதக்ருத்யனாயிராநின்றான். (என்னை முற்றுமுயிருண்டே) என்னுயிரை முற்றும் உண்டே. விபுவானவன் அணுத்ரவ்யத்தைப் புஜிக்கைக்குத் தனக்கேற்றமாம்படியாக்வாய்த்து இத்தனையானைபடி. (உ)

மூன்றாம்பாட்டு.

என்னைமுற்றுமுயிருண்டேன் மாயவாக்கையிதனுட்புக்கு *
என்னைமுற்றுந்தானேயாய் நின்றமாயவம்மான்சேர் * தென்னன்
திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான் * இன்னம்
போவேனேகொலோ வென்கொலம்மான்திருவருளே. (ங)

ப:—அநந்தரம், என்னளவன்றியே என் தேஹத்தையுமாதரம் பண்ணி, அத்தாலே ஸந்துஷ்டனாய் ப்ரதிஷ்டிதனாகாநின்றானென்கிறார்.

(இ-ள்.) என்னை - என்னை, முற்றும் - ஸர்வப்ரகாரத்தாலும், உயிருண்டு - ஆத்மாநுபவம்பண்ணி. அவ்வளவில் நில்லாதே, என் - என்னுடைய, மாயம்-அஜ்ஞாநாதிகளுக்கு ஹேதுவாய்க்கொண்டு. ஆக்கையிதனுள் - ப்ரக்ருதிகார்யமாய் ப்ரத்யக்ஷஸித்ததோஷத்தையுடைத்தான பந்தகமான ஶரீரத்துக்குள்ளே, புக்கு - புக்கு, என்னை - ஆத்மாஜீவனானவென்னையும், முற்றும் - அநுபந்தியான ஶரீராதி ஸமஸ்தவஸ்துவையும்பற்ற, தானேயாய்-அஹந்தாமமதாதிகள் இத்தலையில் நடையாடாதபடி தானே அபிமாநியாய், நின்ற - அத்தாலே க்ருதக்ருத்யனாய் நின்ற, மாயம் - ஆஶ்சர்யகுண சேஷ்டிதங்களையுடைய, அம்மான்-நிருபாதிக ஸ்வாமியானவன். சேர் - பொருந்தி வர்த்திக்கிற தேசமாய், தென் - தெற்கு திக்குக்கு, நன் - ஶ்லாக்யமாயிருக்கிற; திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையாகிற, திருமலையிலே, நிற்கிற, திசை - திக்கைநோக்கி, கைகூப்பி - ஶேஷத்வாநுரூப வ்ருத்தியைப்பண்ணி, சேர்ந்தயான் - கிட்டினநான், அவ்வளவன்றியே, அவ்வதேசத்தளவன்றியே, இன்னம் அத்திக்கையுமாதரிக்கும்படியானவளவு பிறந்தபின்பு போவேனேகொலோ-ஒருகந்தவ்ய பூமியுண்டாய்ப் போகிறேனோ, அம்மான் - நிருபாதிகஶேஷியாயிருக்கிறவனுடைய, திருவருள்-அபிநிவேசங்கள், என்கொல் - என்னாயிருக்கிறது.

இதிற்காட்டில் வேறு சில ப்ராப்யங்களுண்டாய் அவற்றை யுபகரிக்கப்பாரிப்பாரைப்போலே யிராநின்றதென்று கருத்து, தெய்வமென்று - அத்தேசத்தில் ராஜாவைச் சொல்லவுமாம். (௩)

ஆறு:—(என்னை) என்னை புஜிக்கருளுகிறான். இந்த ஹேயமான ப்ராக்ருதியினுள்ளேபுகுந் தென்னை புஜித்து என்னைமுற்றும் தானேயானான். இப்பேறு பெறுகைக்கு ஹேதுவென்னென்னில்; அவன் சேர் தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை கைகூப்பப் பெற்றேன், என்னுடனிப்படியே கலந்து பரிமாறியும் பின்னையும் கலந்து பரிமாறாதானாய், அடிகொட்டுக் கலந்து பரிமாறுகையிலே பாரித்தருளாநின்றான், இன்னமிதுக்கு மேலுமொரு ஸம்ஸ்லேஷ மூண்டோ, திருவுள்ளமென்றான் என்கிறார், (௩)

ஈடு-அவ:—அவனுக்குத் தம் பக்கலுண்டான வபிநிவேசத்தினுடைய வெல்லையில்லாமையை யருளிச்செய்கிறார்,

(என்னைமுற்றுமுயிருண்டு) (௧) "பஸ்யஸாஜநகாத்மஜா - ஸுமுகேமஹிதேஜஸ்-யஸ்யஸாஜநகாத்மஜா- அப்ரமேயம் ஹி தத் தேஜ:" என்றவேற்றத்தோபாதியும் போருமாய்த்து இவருயிரை யெங்கும்புக் கநுபவிக்கப் பெறுகையால்வந்த வேற்றம். (என்மாய வாக்கை) என்னுடைய வாத்மவஸ்துவை யநுபவித்து அவ்வளவிலே தான் தவிருவானா யிருந்தானோ. (௨) "அழுக்குடம்பு" என்றும், "பொல்லாவாக்கை" என்றும், "புண்ணைமறையவரிந்து" என்றும் சொல்லுகிறபடியே - "இதுஹேயம்" என்று இவர் தாமருவருத்துப் புறப்பட நில்லாநின்றார்; இவரிகழாநிற்கச்செய்தே அவன் இது உத்தேஸ்யமென்று மேல்விழாநின்றான்.

(உள்புக்கு) சுமந்தெஞ்சாலே யிக்கைத யிவரருவருத்துப் புறப்பட்டு நின்றார். புகுந்தென்னாதே "புக்கு" என்கிறது - அக்கோடு தமக்குத் தொற்றற்றிருக்கிறபடி தோற்றுகைக்காக. அதாவது - அவன்தலை துலுக்குப் பெறுமளவும் பார்த்தாய்த்து இவரிருக்கிறது "மங்கவொட்டு" என்னுமளவும் அவனித்தைத விடமாட்டாமையாலே உள்ளே புகுராநின்றான். (இதனுள்புக்கு) அநாதிகால மசித்தோடே முகம்பழகிப்போந்தவனிறே யிவன்; சேதநத்வாரா குந்தியடியிட்டு நிற்குமவனிறே அவன்; அவன்மேல் விழாநின்றான். தன

(௧) ரா-ஆர-௩௭-௧அ. (௨) திருவி-௧.

க்கு ப்ரகாரமான வாத்மவஸ்துவுக்கு ப்ரகாரமாய்க்கொண்டு தனக்கு ப்ரகாரமாம்படியிறேயிது. (௧) "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஸ்ய- அநேநஜீவேநாத்மநாநுப்ரவிஸ்ய" என்னக்கடவதிறே.

(என்னைமுற்றும் தானேயாய்) இப்படி ஆத்மவஸ்துவோடு அசித்தோடு வாசியற எங்கும்புக்கு வ்யாபிக்கையாலே "தானே" என்னத் தட்டில்லையிறே, இவர் நான் என்னுமதத்தையும் கொண்டான். இவர் மமகாரவிஷயத்தையும் கொண்டான், ஈஸ்வரனுக்குங் கூட விளாக்குலைகொண்டநுபவிக்க வொண்ணாதபடி யானாராய்த்து. (நின்ற) (௨) "அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:- அந்தர்ப்பஹிஸ்சதத்ஸர்வம் வ்யாப்யநாராயணஸ்ஸ்தித:" என்கிற பொதுவான நிலையன்றிக்கே. (மாயமித்யாதி) ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேஸ்வரனுங்கூட "தண்ணீர், தண்ணீர்" என்று கிட்டும்படியான தேசமாய்த்து,

(தென்னன் திருமாலிருஞ்சோலை) தென்னனென்று-அங்குத்தைக்கு ப்ரதானனைச் சொல்லி; அவனதான திருமலையென்னுதல்; அன்றிக்கே, தெற்கில் திக்கிலேயாய் நன்றானவென்னுதல். (திசைகைகூப்பிச்சேர்ந்தயான்) அவன்விரும்பின திக்கை விரும்பினாராய்த்து இவரும்; ஒருதிக்குப்படவிறே இவர் விரும்புவது. அதாவது - அவனையுகந்து, அவ்வழியாலே அவன்விரும்பின தேசத்தையுகந்து, அத்தோடு ஸம்பந்தமுடைய திக்கையுகந்து, இப்படி அவனோடு ஸம்பந்தஸம்பந்திகளளவும்வர வுகக்கும்படி கைகழியப்போந்தநான்.

அவன்றானிவரையுகந்து இவரோடு ஸம்பந்தமுடையதேஹத்தை விரும்புகிறப்போலேயாய்த்து. "என்னெண்டானானான்" என்றாரிறே அடியிலே, (இன்னம்போவேனேகொலோ) எனக்கு இத்திக்குக்கவ்வருகு கர்தவ்யபூமியுண்டோ, ஒருதிக்குப்பட்ட நான் இனியவ்வருகுபோவேனோ; இவனிப்படிகிடந்து படுகைக்கு, இனியவ்வருகுபோகையாவது-திருமலையில் ஸம்பந்தத்தை யறுத்துக் கொள்ளுகையிறே.

(என்கோலம்மான் திருவருளே) ஸர்வேஸ்வரனைப்பற்றிவரும் போது நிர்விஷயப்ரமமுண்டாமாகாதே, என்செய்யாதானாய்த் தான்

(௧) சாந்தோ-௬-௩ (௨) தை-நாரா-௧௧-

இவனிங்ஙன்கிடந்து படுகிறதென்றபடி, இவர்திறத்திலெல்லாம் செய்தும், ஒன்றும் செய்யாதாரைப்போலே "எத்தைச்செய்வோம்" என்றிராநின்றுனைப்பத்து. (௩)

நான்காம்பாட்டு.

என்கொலம்மான் திருவருள்களுலகு முயிருந்தானேயாய் * நன்கென்னுடலங்கைவிடான் ஞாலத்தூடேநடந்துழக்கி* தென்கொள்திசைக்குத்திலதமாய் நின்ற திருமாலிருஞ்சோலை* நங்கள்குன்றங் கைவிடான் நண்ணாவசுரர்நலியவே. (௪)

ப;—அநந்தரம். என்சரீரத்தை விரும்புகைக்கு ஹேதுவானவையா லே திருமலையையு மாதரித்து. இரண்டு ஸ்தலத்தையும் கைவிடுகிறிலெ னென்கிறார்.

(இ - ள்.) ஒருவனைப் பிடிக்கைக்கு ஊரைவளைப்பாரைப்போலே, என்னைப்பெறுகைக்காக. உலகும் - ஸர்வலோகங்களும், உயிரும் - ஸர்வ ப்ராணிகளும், தானேயாய் - தானேயாம்படி அந்தராத்மாவாய்க்கொ ண்டு வ்யாப்தனாய் அவ்வளவில்நில்லாதே, நண்ணா - தன்னையாஸ்ரயிக் கையில் விமுகரான, அசுரர் - ஆஸுரப்ரக்ருதிகள். நலிய-நசிக்கும்படி யாக, த்ரைவிக்ரமாபதாநமுகத்தாலே என்னை லபிக்கைக்கு ஸ்தலம் தேடுவாரேபோலே, ஞாலத்தூடே - பூமிக்குள்ளே, நடந்துழக்கி - நடந்து மிதித்து, தென் - தெற்கென்கிறபேரை, கொள் - கொண்ட, திசைக்கு - திக்குக்கு. திலகமாய்நின்ற - ப்ரஸாதஹேதுவாயிருக்கிற. திருமாலிருஞ் சோலை - திருமாலிருஞ்சோலையென்று பேராயிருக்கிற, நங்கள் - நம்போல் வார்க்கு, குன்றம் - அநுபாவ்யமான திருமலையை, கைவிடான் - என்னை லபிக்கைக்கநுரூபஸ்தலமென்று விரும்பிக்கைவிடுகிறிலன்; அதுவுமி யாக, என்னுடலம் - என்சரீரத்தையும், நன்கு - மிகவும், கைவிடான் கைவிடுகிறிலன்: அம்மான் - ஸ்வாமியானவனுடைய, திருவருள்கள் - உபகாரங்களானசீலப்ரகாரங்கள், என்கொல் - என்னாயிருக்கிறன. (௪)

ஆறு;—(என்கோலம்மான்) என்னுடைய ப்ரக்ருதியிலுள்ளே புகுந்து இவ்வாத்மாவை புஜிக்கைக்கு நினைகையுமன்றிபே ஸர்வஜ்ஞரான ஸர்வ வரனாயிருந்தான், என்னுடைய ப்ரக்ருதிதன்னையுங்கூட தனக்கு போக்யமாகக்கொண்டு ஒருக்ஷணமும் கைவிடுகிறிலன்; இப்படி

திருவாய்மொழி. ௧௦-ப, எ-தி, ௬-பா, என்கொல்வ்யாக்யானம். ௩௭௭

"என்னோடுள்ள ஸம்ச்லேஷம் பெறுகைக்கிடான தேசமேதோ" என்று தேடிக்கொண்டு, திருமலையிலேவந்துபுகுந்து, தான்கருதிய படியே அங்கே ஸம்ச்லேஷித்து ப்ரீதனாய், "இந்தஸம்ருத்தியெல் லாம் விளைவித்தது திருமலையிறே" என்றுகொண்டு, திருமலையை யும் என்னுயிருமுடனும்போலே தனக்கு போக்யமாகக் கொண்டு கைவிடுகிறிலன்; என்னுயிரையு முடலையும் திருமலையையு மநுப வித்து ப்ரீதனானான்; ப்ரதிகூலர் இந்த ஸம்ருத்திகண்டு பொறுக்க மாட்டாதே தரைப்படும்படி ப்ரீதனானானென்கிறார். (௬)

ஈடு-அவ:—தம்முடைய திருமேனியிற் காட்டிலும் தம்மோ டே பரிமாறலாம் நிலமென்று அவனுக்குத் திருமலையிலுண்டான வ்யாமோஹத்தை யருளிச்செய்கிறார்.

(என்கோலம்மான் திருவருள்கள்) ஸர்வேச்வரனுக்கு நிர திசயாநந்த ப்ரமமுண்டா மாகாதே! (உலகித்யாதி) என்னகுறை யுண்டாய்த்தா னிப்படி கிடந்துபடுகிறான். (நன்கென்னுடலம்கை விடான்) செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரன்நீசஸ்த்ரீகாற்கடையிலே துவளுமாபோலே.

(நன்கென்னுடலம்) ஸர்வேச்வரன் தன்னைக்கேட்டார்க்குச் சொல்லுகிற வார்த்தை யிருக்கிறபடி; ஆழ்வாரை "நமக்குத்தந்த திருமேனியன்றோ" என்னுநின்றாய்த்து. நன்கு-நன்றாக. மிகவு மென்றபடி. (என்னுடலம்) "இவருடைய மமகார விஷயமானதன் றோ, நமக்கு உத்தேச்யம்" என்றிரா நின்றான்: என்னுடைய "அட ங்கெழில் சம்பத்திலேதேனும் பாம்புசெத்ததோ" என்னுநின்றான்.

(ஞாலத்தித்யாதி) எத்தனைகாலமுண்டு அவனிப்பேறுபெறு கைக் கு மூன்று திரிகிறது. ஸர்வஸாதாரணனான ஸ்வாமியுடையவ்யா பாரமெல்லா மெனக்கெனக்கென்னலாமிறே மோஷப்ராதர்க்கு. இந்த்ர னுக்கு "ராஜ்யம்பெற்றேன்" என்னவுமாய், மஹாபலிக்கு "ஔதார் யம்பெற்றேன்" என்னவுமாய், சிலர்க்கு (௧) "பொன்பயந்தேன்" என்னவுமாய், இவர்க்கு "எனக்காகச் செய்தான்" என்னவுமாயிருக் கிறதுகாணும்.

(தென்கோளித்யாதி) தெற்கில் திக்குக்கோ ராபரணமான திரு மாலிருஞ்சோலை. (நங்கள்குன்றம்) ஆச்ரிதருடைய ஸங்கேதஸ்த்த

(௧) தி-மொ-௯-௬-௨-

லம், (நங்கள்குன்றம்கைவிடான் - நன்கெண்ணுடலம்கைவிடான்) திருமலையை ப்ராபகமாகவும் ஆழ்வார்திருமேனியை ப்ராப்யமாகவும் நினைத்திராநின்றான். ஆழ்வார் திருமேனியாயுத்தேஶ்யம், அது பெறுகைக்காய்த்து திருமலையில்நிலை. (நண்ணாவசுரர்நலியவே) "நெடும்பகைதற்செய்யத்தானேகெடும்" என்னுமாபோலே, இவனிவ்விடத்தைவிடாதேவர்த்திக்க ஆஸுரவர்க்கம்முடிந்துபோய்த்து.

[உலகுமுயிரும் தானேயாய்-ஞாலத்தூடே நடந்துழக்கி, தென்கொள் திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை நங்கள்குன்றம்-நண்ணாவசுரர்நலிய கைவிடான்-நன்கெண்ணுடலம் கைவிடான் - என்கொலம்மான் திருவருள்கள்.] (௪)

ஐந்தாம்பாட்டு.

நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த * எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பந்தலைச் சிறப்ப * பண்ணார் பாடலின்கவிகள்யானாய்த்தன்னைத் தான்பாடி * தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே. (௫)

ப:—அநந்தரம், தம்மோடு ஸம்ஶ்லேஷித்து திருவாய்மொழி பாடக்கேட்ட ப்ரீதியாலே ரஸிகனாய் ஆளத்திவையாநின்றானென்கிறார்.

(இ - ள்,) நண்ணா - பகவத்விஷயத்தைக் கிட்டக்கடவோமல்லோமென்று ப்ரத்யூஹராயிருக்கும், அசுரர் - ஆஸுரப்ரக்ருதிகள், நலிவெய்த-இவ்வதிசயம் பொறுக்கமாட்டாமல் விநாசத்தையடையவும், நல்லவமரர் - பக்திபரராய்க்கொண்டு அநுகூலரான தேவர்க்கம், மிகவுமுகப்பாலே, பொலிவெய்த - ஸம்ருத்தியை லபிக்கவும், எண்ணாதனகள்- அவாப்தஸமஸ்தகாமனுடைய குணவிபூதிக்குமேலே இதுக்குமென்பெண்ண வரியாத அதிசயங்களை, எண்ணும் - ப்ரேமத்தாலே ஆஶாஸியாநிற்கும், நல் - ஸ்நேஹயுக்தராய், முனிவர் - அநுபவஶீலரான முனிவர்கள், கேட்டநுபவித்து, இன்பந்தலைச்சிறப்ப - ஆநந்தநிர்ப்பரராகவும், பண் - பண், ஆர் - நிறைந்த, பாடல் - இசையையுடைய, இன்கவிகள் - இனியகவிகளை, யானாய் - தனக்கு ப்ரகாரபூதனான நானாய்க்கொண்டு தன்னை - * ஸ்தவ்யனாய் * ஸ்தவப்ரியனான தன்னை, தான்பாடி - ஸ்தோதாவாய்க்கொண்டு தானேபாடி, திருமாலிருஞ்சோலையான் - திருமாலி

ருஞ்சோலையானுய்நிற்கிற, என்னம்மான் - என் ஸ்வாமியானவன்; தன் மேன்மைபாராதே, பாட்டில் ரஸாதிசயத்தாலே, தென்றுதென்னும் - தென்று என்று ஆனந்திக்கையாநிற்கும்.

நவிவு - நாசம். (௫)

ஆறு;—(நண்ணு) ப்ரதிகூலர் தரைப்படும்படியாகவும் தனக்கு நல்லரான அமரர் ஸம்ருத்தராம்படியாகவும், லீலோபகரணமாயும் போகோபகரணமாயுமிருந்த நிரவதிகஸம்ருத்திகளெம்பெருமானுக்குளவாயிருக்கச் செய்தே இவையொழியவே அதின்மேலே ஸத்ய ஸங்கல்பனுயிருக்கு மெம்பெருமான்றன்னாலும் ஸம்பாதிக்கவொண்ணுதே வாங்மநஸாகோசரமான அபர்யந்தஸம்ருத்திகளெம்பெருமானுக்குளவாக வேணுமென்று மநோரதியாநிற்கும் நன்முனிவர், "நம்முடைய மநோரதாநுரவர்த்தியான நிரவதிகஸம்ருத்திகளெம்பெருமானுக்கு விளையப்பெற்றோம்; இனி நமக்கொரு குறையில்லை" என்றுகொண்டு நிரவதிக நிர்வ்ருதியை யுடையராம்படியாகவும், பண்ணார்பாடலான இன்கவிகளை யென்னையிட்டுப் பாடுவித்து இக்கவிகளாகிற அம்ருதத்தைப்பருகிக்களித்து, அம்ருதபானம்பண்ணின வண்டுகள்போலே தென்றுதென்றென்று திருமலையிலேநின்று பாடியருளாநின்றானென்கிறார். (௬)

ஈடு - அவ:—அவன் தம்மோடே கலந்து தம் வாயாலே திருவாய்மொழிகேட்ட ப்ரீதியுள்ளடங்காமலானந்தித்து ஆனந்திக்கையாநின்றானென்கிறார். "நன்கென்னுடலம்கைவிடான்" என்னுமளவன்றிக்கே என்னுக்திமாத்ரத்திலே களியாநின்றானென்கிறாரென்றுமாம்.

* நண்ணுவசுரர்நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த எண்ணுதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்பவாய்த்து திருவாய்மொழி தானவதரித்தது ஸ்வாத்யனுடைய அவதாரம்போலேயாய்த்து ஸ்வாத்தியினுடைய அவதாரமும்; (௧) "பரித்ராணாய - பரித்ராணாய" (௨) "அகிலஜகத்பத்மபோதாய - அகிலஜகத்பத்மபோதாய" என்னுமாபோலே.

(நண்ணுவித்யாதி) ப்ரதிகூலநிரஸநத்துக்கு வேறொருகருவியெடுக்கவும் வேண்டாதே, அநுகூலரக்ஷணத்துக்கும் வேறொன்று

(௧) கீதை-௪-௮- (௨) வி-பு-௫-௩-௨-

தேடவும் வேண்டாதே, அநந்யப்ரயோஜநரா யிருப்பார்க்கு ஸ்வயம் ப்ரயோஜநமுமா யிருக்குமாய்த்து,

(நண்ணுவசுரர்நலிவெய்த) அவ்யபதேஶ்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததைக்கேட்டு "இவனென் செய்தானென்" என்றுகர்ஹித்தான்-ஆ "திருமங்கை வாங்குங்காட்டில் அந்தர்பாவம் குலைந்ததோ, திருவாய்மொழியென்றும் ஸ்ரீராமாயண மென்றும் வலியன விரண்டு மஹாப்ரபந்தங்களுண்டாயிருக்க" என்றானாய்த்து; இப்படி உகவாதார் நெஞ்சுளுக்கும்படியான ப்ரபந்தமாயிற்று. (க) "விபரீதஸ்வபாவாஸுரா: - விபரீதஸ்ததாஸுரா:" என்னக்கடவதிறே; பொருந்தாமையை யுடைய அஸுரவர்க்கமானது மண்ணுண்ணும்படியாக. ஸம்பந்தமில்லை யென்னவொண்ணாதே, "பொருந்தோம்" என்கையிறேயுள்ளது.

(நல்லவமரர்போலிவெய்த) (உ) "விஷ்ணுபக்திபரோதேவ: - விஷ்ணுபக்திபரோதேவ:" என்னக்கடவதிறே. அநுகூலரானவர்கள் உண்ணாதேதடிக்க, இவர்களுக்கு நன்மையாவது பகவத்பக்தராயிருக்கை, "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னக்கடவதிறே.

(எண்ணுதனவித்யாதி) புறம்பொருவரெண்ணுகை யிலவற்றை யெண்ணுவார் சிலருண்டாய்த்து, ஸர்வேஶ்வரன் ரக்ஷகன் அவனை யொழிந்தவடங்கலும் ரக்ஷ்யம்" என்றிருக்கையன்றிக்கே, உபாஸ்திபூர்த்தியுக்தனுக்கு இன்னம் சிலவித்திவேணுமென்றும் ஸர்வஜ்ஞனான ஸம்பந்தனுக்கு இன்னம் சில குணங்கள் வேணுமென்றும் காற்று இப்புடைகளிலே யெண்ணுவார் சிலருண்டாய்த்து.

அவர்கள் (இன்பந்தலைச்சிறப்ப) திருவாய்மொழி பாவசிக்க பின்பு "அவனுக்கு குணவித்திகள் வேணாது" என்றிருக்க விருந்து தீர்ந்து, அந்தால் கிரஹிசயாநந்திதாக, (நன்மறையவர்) அவனுடைய ஸம்ருத்தியை மங்களம்பண்ணும் ஸ்வபாவராயிருக்கை. அன்றிக்கே, "திருவாய்மொழியை யெரிய வேவிருந்த ஸைப்பந்த வேண்டா" என்று இதுவே மங்களம்பண்ணியிருந்தார் ப்ரஹ்மணாவாள.

(க) விஷ்ணு த-

(உ) வி-த-

ஆ (பா) ஒருமதிளே-

(பண்ணார்பாடல்) பண்ணோடே சேர்ந்த பாட்டு, புஷ்பமானது பரிமளத்தோடே அலருமாபோலே, பண்ணுமிசையும் மிகுந்திருக்குமாய்த்து. (இன்கவிகள்) இசையும் பண்ணுமொழியவே தொக்குக் கழிந்த சுளைபோலே கவிதானே யினிதாயிருக்குமாய்த்து. (யானாய்த் தன்னைத்தான்பாடி) பிதாவானவன் புத்ரனுக்கு பசுவை நீர்வார்த்துக் கொடுத்து அவன்பக்கலிலே தான்மீள நீரேற்றுப் பசுவைப் பெறுமாபோலே, ஸுதனை வார்த்தையைக்கற்பித்து அவன்சொல்லக் கேட்டு இனியனுமாபோலே; தான் பாடினானாகில் ஸ்ரீகீதையோடொத்துப்போம்.

நம்பி திருவழுதிநாடுதாஸர், "அருள்கொண்டாடும்" என்கிற பாட்டிலே, "ஸ்ரீகீதையை அப்யஸித்தானொருவன் ஸந்யாஸதசையிலே சென்றால் பலருமாக நாழியரிசியைக்கொடுத்து விஸ்வஸிக்கமாட்டாமையாலே 'புறந்திண்ணையிலேயிட' என்பார்கள்; திருவாய்மொழி கற்றானொரு விண்ணப்பம் செய்வான் சென்றால், ஸர்வேஸ்வரனகப்படப் புறப்பட்டெதிர்கொண்டு அகமொழித்துக் கொடுத்து அழுதுபடியுமெடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள்" என்றாராம். "பண்டே பரமன்பணித்த" என்று இவரங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீகீதைதானும் வீறுபெற்றதிறே.

(தென்னாவென்னும்) செருக்காலே "தென்னா, தென்னா" என்று ஆளத்திவையா நிற்குமாய்த்து; ஸம்ஸாரிசேதநனுக்கு பகவல்லாபமுண்டானால் (க) "ஹாஉஹாஉஹாஉ - ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" என்று ஸாமகானம்பண்ணுமாபோலே; (உ) "அவாக்யநா த:- அவாக்யநாதர:" என்கிறவன் தைர்யபங்கம்பிறந்து பாடாநிற்குமாய்த்து. (என்னம்மான்) ஸுதவசநமினிதாம்போது ப்ராப்தியுண்டாகவேணுமிறே; அதுக்கடியான ப்ராப்தியைச் சொல்லுகிறதாய்த்து.

(திருமாலிருஞ்சோலையானே) இவரைப்பாடுவிக்கமுக்கோட்டை (௩) "பாட்டினாலுன்னை யென்னெஞ்சத் திருந்தமை-காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே" என்று அவரைப்பாடுவித்த முக்கோட்டையிறேயிது. தாம்பாடின கவிகளினிமையை யநுஸந்தித்தார், இவை தாம்பாடியாகப் பிறந்தனவென்று சொல்லலாயிருக்கிறதில்லை, இதுக்கடி

(க) தைத்-ப்ருகு கo- (உ) சாந்தோ-௩-கச- (௩) தி-மொ-அ-கo-க-

யென் என்றுபார்த்தார், அவன் தன்னெஞ்சிலே புகுந்திருந்து பாடு வித்தானாயிருந்தது "கண்ணபுரத்துறையம்மான்" என்று கவிபாடு வித்த முக்கோட்டையைச் சொல்லுகிறார். (ரு)

ஆறும்பாட்டு.

திருமாலிருஞ் சோலையானே யாகிச்செழு மூவுலகும் * தன்
னொருமா வயிற்றினுள்ளே வைத்தூழியூழி தலையளிக்கும் * திருமா
லென்னையாளுமால் சிவனும்பிரமனுங் காணாது * அருமாலெய்தி
யடிபரவ வருளையீந்த வம்மானே. (சு)

ப:—அநந்தரம், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு முபகாரகனாய் ஸ்ரிய:பதியானவன், திருமலையில்நின்று என்னை யடிமை கொள்ளுகைக்கு வ்யாமுக்தனா யிராநின்றானென்கிறார்.

(இ-ள்.) சிவனும்-ஜ்ஞாநாதிகனான ருத்ரனும், பிரமனும்-ப்ரஹ்மாவும், காணாது-காணப்பெறாதே, அரு-பெறுதற்கரிதான. மால்-அதிசயித பக்தியை, எய்தி - உடையராய்க்கொண்டு, அடி - திருவடிகளை, பரவ - ஸ்தோத்ரம்பண்ண, அருளையீந்த-தன்நிரவதிகக்ருபையாலே அபேக்ஷித ப்ரதாநம்பண்ணின, அம்மான்-ஸர்வாதிகனாய், செழு - விலக்ஷணமான, மூவுலகும்-ஜகத்த்ரயத்தையும், தன்-அகடிதகடநா ஸமர்த்தனான தன்னுடைய, ஒரு-அத்விதீயமாய், மா-அடக்கின விடந்தெரியாமலடக்கவல்ல சக்தி மாஹாத்ம்யத்தையுடைய, வயிற்றினுள்ளே - திருவயிற்றினுள்ளே ஒருபுடையிலே; வைத்து-வைத்து, ஊழியூழி-கல்பந்தோறும், தலை-தலையாக, அளிக்கும்-ரக்ஷிக்குமவனாய், திருமால்-இந்தசேஷ்டிதங்களுக்கு உபபாதகமான ஸ்ரிய:பதித்வத்தையுடையவன், திருமாலிருஞ் சோலையானேயாகி - திருமாலிருஞ்சோலையிலே நிலையுடையனாய்க்கொண்டே, என்னை என்னை, ஆளும் - அடிமைகொள்ளுகையிலே, மால் - பெருப்பித்தனா யிராநின்றான்.

ஒருமாவென்று - ஏகதேசமான அத்யல்பஸங்க்யையைச்சொல்லிற்றாகவுமாம்.

ஆறு;—(திருமாலிருஞ்சோலையானே) த்ரைலோக்யமெல்லாம் தன் சிறுவயிற்றிலேவைத்து யுகந்தோறும் ரக்ஷிக்குமதுக்கு ஸ்வாமியானாய், ஸ்ரிய:பதியாய், ப்ரஹ்மருத்ராதிகளா லவ[illegible]

யுங்களனாய், தத்ஸம்ருத்த பலப்ரதனாய், ஸர்வேஶ்வரனாயிருந்த திருமாலிருஞ்சோலையான், எனக்குப்பித்தனாய் என்னைப்பிரிகிறிலனென்கிறார். (௬)

ஈடு - அவ:—ஶ்ரிய:பதியானவன் திருமலையிலே நின்றருளி யென்னை யாளுகையிலே வ்யாமுக்தனானானென்கிறார்.

(திருமாலிருஞ்சோலையானேயாகி-என்னையாளுமால்) திருமலை தனக்கு வஸ்தவ்யபூமியாகக்கொண்டு நிற்கிறவன், என்னை யடிமை கொள்ளுகைக்காக வென்பக்கல் வ்யாமோஹ மொருவடிவு கொண்டாற்போலே யிருக்கிறவன், (செழுமூவுலகும்) கட்டளைப்பட்ட த்ரைலோக்யத்தையும், (ஒருவித்யாதி) அத்விதீயமாய்ச் சிறிதான வயிற்றிலேவைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாகரக்ஷிக்கும். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே என்னையொழியத் தனக்குச் செல்லாதானாயிருக்கை. (திருமால்) ஶ்ரிய:பதி.

(என்னையாளுமால்) என்னை யடிமை கொள்ளுகைக்காகப் பிச்சேற்றின தொருவடிவு கொண்டாப்போலேயிருக்குமவன். (சிவனும் பிரமனு மித்யாதி) ப்ரஹ்மருத்ராதிகள், காணப்பெறாமையாலே நிரதிஶய பக்தியுக்தராய்த் திருவடிகளை யடைவுகெடவேத்த, அவர்களுக்கு முகந்தோற்றாமே கடக்கநின்று அருளைப் பண்ணிக்கொடுக்கும் ஸர்வேஶ்வரன், எனக்குக்கண்ணுக்கிலக்காம்படி திருமலையிலே வந்துநின்று என்னை யடிமைகொள்ளுகையிலே பெரும்பித்தனானான்.

ஏழாம்பாட்டு.

அருளேயீயென் னம்மானே யென்னும்முக்கணம்மானும் * தெருள்கொள்பிரம னம்மானுந் தேவர்கோனுந் தேவரும் * இருள்கள்கடியும் முனிவருமேத்து மம்மான்திருமலை * மருள்கள்கடியும்மணிமலைதிருமாலிருஞ்சோலைமலையே. (௭)

ப:—அநந்தரம், தம்மை யங்கீகரிக்கைக்காக அவன் வந்துநின்ற திருமலையினுடைய வைலக்ஷண்யத்தைப் புகழ்ந்தருளுகிறார்.

(இ - ள்.) என்னம்மானே-என்னுடைய ஸ்வாமியானவனே, அருளை - உன்னுடைய க்ருபையைத் தந்தருளவேணும், என்னும் - என்று

கொண்டு, முக்கண்ணம்மானும் - த்ரிநேத்ரனாய் ஈஸ்வராபிமாநியான ருத்ரனும், தெருள்கொள் - ஸ்ரஷ்ட்ருத்வார்த்யுபயுக்தமான ஜ்ஞாநாதிகுணத்தையுடைய, பிரமனம்மானும் - ப்ரஹ்மாவாகிற ஸ்ருஜ்யஜகத்பதியும், தேவர்கோனும் - தேவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், தேவரும் - த்ரயஸ்த்ரிம்ஶத்கோடிதேவர்களும், இருள்கள் - ஸ்வரூப புருஷார்த்த விஷயமான ஜ்ஞாநாபாவம் அந்யதாஜ்ஞாநம் விபரீதஜ்ஞாநம் முதலான தமஸ்ஸுக்களை, கடியும் - புராணோக்த்யுபதேசமுகத்தாலே போக்கக்கடவரான, முனிவரும் - பரமருஷிகளும், ஏத்தும் - ஸ்தோத்ரம் பண்ணும்படியான, அம்மான் - ஸ்வாமியானவனுடைய வாஸஸ்தாநமான, திருமலை - திருமலையாய், மருள்கள் - ப்ராப்திப்ரதிபந்தகமான அவித்யாதி ஸகல ப்ரமங்களையும், கடியும் - போக்கக்கடவதாய். மணி நிரதிசயபோக்யமாம்படி விலக்ஷணமான. மலை - மலை, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையென்று திருநாமமான, மலையே - திருமலையிறே.

ஆறு:—(அருளாழி) இஸ்ஸம்ருத்தி யெல்லாம் திருமலையை யாஶ்ரயித்திறே வந்ததென்றுகொண்டு, திருமலையை [illegible] கிறார்.

ஈடு - அவ;—தம்முடைய விஸ்ஸம்ருத்திக்கெல்லாம் திருமலையானபின்பு, இத்தேசந்தானே நமக்கு ப்ராப்யமென்று திருமலையைக் கொண்டாடுகிறார்.

அருளாழியென்பர்கள் - ப்ரஸாதத்தைப் பண்ணியருளென்பர்கள். (என்னம்மானே) நீயருளாதொழிந்தால் புறம்பு எங்களுக்குப் புகலுண்டோ; ப்ராப்தனான நீயருளவேண்டாவோ வென்பர்கள்.

இப்படி சொல்லுகிறவர்கள் தானென்னில் (முக்கண்ணம்மான்) லலாடநேத்ரனாய் ஈஸ்வராபிமாநியான ருத்ரன், அவனுக்கும் ஜ்ஞாநப்ரதனாய், ஜநகனாகையால் வந்த [illegible] சதுர்முகன், தேவஜாதியை சனியும் புதனும் [illegible] இந்த்ரன், தங்களையுடையானை அவனுக்கேற்றபடி [illegible] தேவர்கள் அஜ்ஞாநாந்தகாரத்தை [illegible] போக்கடிக்கும் ஸமர்த்தர்களான ருஷிகள், இவர்களடங்கலும் [illegible] செய் தேத்தும்படியாக ஸர்வேஶ்வரன் [illegible] மேல் விழுந்து படுகொடுக்கும் தேசமாய்த்து.

திருவாய்மொழி, ௧௦-ப, ௭-தி, ௮-பா, திருமால்வ்யாமோஹம். ஸ்ரீ

(மருள்கள்கடியும் மணிமலை) ப்ராப்ய விரோதியானவற்றை யடையப்போக்கும் தேசமாய்த்து. அதாகிறது - திருமலையை யொழிந்ததொன்றே ப்ராப்யமென்று பிறக்கும் புத்தியைத் தவிர்த்துத் தருமாய்த்து. இதெல்லா மெதுதானென்னில்; மற்றுமுண்டோ (திருமாலிருஞ் சோலைமலையே.) (௭)

எட்டாம்பாட்டு.

திருமாலிருஞ் சோலைமலையே திருப்பாற்கடலே யென்தலையே *
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமே யெனதுடலே * அருமா
மாயத் தெனதுயிரே மனமே வாக்கே கருமமே * ஒருமாநொடியும்
பிரியானென்னூழி முதல்வனொருவனே. (அ)

ப:—அநந்தரம், திருமலை தொடக்கமான திவ்ய தேசங்களோடொக்க வென்னுடைய ஸர்வாவயவங்களையும் விரும்பி யொருக்ஷணகாலமும் பிரிகிறிலன், இவனொருவனுயிருக்கிறானே! என்று விஸ்மிதராகிறார்.

(இ-ள்.) திருமாலிருஞ்சோலைமலையே - திருமாலிருஞ்சோலைமலையையும், திருப்பாற்கடலே திருபாற்கடலையும், அவற்றோடொக்க என்றலையே - என்தலையையும், திருமால் - (க) "ஸ்ரீயாஸஹாஸ்ரீய ஸார்த்தம்" என்கிறபடியே ஸ்ரீய:பதியாய்க்கொண்டிருக்கிற, வைகுந்தமே - பரமபதத்தையும், தண் - ப்ரமஹரமான, திருவேங்கடமே - பெரிய திருமலையையும். அப்படியே எனதுடலே - என் சரீரத்தையும், அரு - துஸ்தரமாய், மா - அதிசயிதையாய், மாயத்து - ஆஸ்சர்யமான ப்ரக்ருதியோடே ஸம்ஸ்ருஷ்டமான, எனதுயிரே - என் ஆத்மாவையும், மனமே - மனஸ்ஸையும், வாக்கே - வாக்கையும், கருமமே - க்ரியையையும், ஒருமாநொடியும் - ஒருக்ஷணத்திலொருமாப்பொழுதும். பிரியான் - பிரிகிறிலன், என்னூழிமுதல்வன் - என்னை லபிக்கைக்காக காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனானவன், ஒருவனே! - ஒருவனுயிருக்கிறானே!.

ஊழிலோகாரங்கள் - எண்ணுதல், அவையே அஸாதாரணமாம்படி விரும்பினபடியாதலாயிருக்கிறது. நொடி - க்ஷணம். (உ)

ஆறு; — (திருமாலிருஞ்சோலை) விளைந்த ஸம்ருத்திதானே தென்னில்; இதென்கிறார்.

திருமாலிருஞ்சோலை, திருப்பாற்கடல், திருநாடு, திருமலை தொடக்கமாகத் தானெழுந்தருளியிருக்கும் திருநகரிகளெல்லாவற்றிலுமுள்ள ஸம்ஶ்லேஷத்திலும் ப்ரீதனுமாபோலே, என்னுடைய அவயவங்களிலே யோரோரவயவத்தோடுள்ள ஸம்ஶ்லேஷத்திலே ப்ரீதனாய், என்னையொருக்ஷணமும் பிரியில் தரிக்கமாட்டுகிறிலன்; "ஒருவனுடைய வபிநிவேசமிருக்கும்படியேயிது" என்கிறார்.

ஈடு - அவ: - திருமலை தொடக்கமான கோயில்களெல்லாவற்றிலும் பண்ணுமபிநிவேசத்தை யென்னவயவங்களிலே பண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன், இவன் படியிருந்தபடியென்? என்கிறார்.

(திருமாலிருஞ்சோலைமலை யித்யாதி) தெற்கில் திருமலையையும், திருப்பாற்கடலையும், இவருடைய உத்தமாங்கத்தையுமொக்கவிரும்பினான்; ஶ்ரீவைகுண்டத்தையும், வடக்கில் திருமலையையும், இவர் திருமேனியையுமொக்கவிரும்பாநின்றான். (திருமால்வைகுந்தம்) (க) "ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: - ஸ்ரியாஸார்த்தம் ஜகத்பதி;" என்கிறபடியே அம்மிதுநத்துக்குத் தகுதியான தேசம்; ஆக, இராறு திருமலைகளிலும் பரவ்யூஹங்களிலும் பண்ணும் விருப்பத்தையுடைய விவர் திருமேனியொன்றிலும் பண்ணாநின்றானென்றபடி.

(அருவித்யாதி) இவருடைய ஆத்மவஸ்துவிலும் மற்றையவயவங்களிலுமொக்க விரும்பாநின்றான். அவதாரணத்தால் - அவ்விரண்டிலும் க்ரமத்தாலன்றிக்கே க்ஷணகாலமுமிடைவிடாதே ஸௌபரியைப்போலே அநேகம் வடிவுகொண்டு நில்லாநின்றானென்கிறது. (அருவித்யாதி) ஆத்மவஸ்துவென்றொரு வ்யபதேசமாத்ரமாய், அநாதிகாலம் அசித்திலே கலசி அத்தாலே அசித்ஸமானமாயிருக்கிறது. அருவென்கையாலே - (உ) "தைவீஹ்யேஷா குணமயீ - மமமாயா துரத்யயா" என்கிறபடியே ஒருவரால் கடக்க வரிதாயிருக்குமுள்ள அசித்தோடே கலசிக்கிடக்கிற வாத்மவஸ்துவிலும்.

(க) வாயுபுராணம். (உ) கீதை-எ-கச-

(மன்மேவர்க்கேகருமமே) கீழ், இது தன்னை ஒன்றாக விரும்பினபடி சொன்னார்; இங்கு தனித்தனியே யெல்லாவற்றிலும் மோக்ஷகாலத்திலே விருப்பத்தைப் பண்ணின்படியைச் சொல்லுகிறார். (ஒருநாளொருபொழுதும்பிரியேன்) ஒருக்ஷணத்தில் லேசதேசமும் பிரிகிறின்றான்றின்றிலன் பொன்றில் கால்வாங்கிப்போயநுபவிக்கிறிலன். (என்னூழிமுதல்வனொருவனே) என்னிட்டத்தில் விலக்ஷணைக்காக காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான அத்விதீயனுள்ளவன்.

ஸம்ஹாரகாலத்தில் ஸகல சேதநாசேதநங்களுக்கும் தன்னை யொழியச் செல்லாதபோலேயாய்த்து இவர் திருமேனியை யொழியத் தனக்குச் செல்லாதே யிருக்கிறபடி. காரியகாரணாவஸ்த்த ஸகலத்துக்கு மாதாரமா யிருக்கிறவன் தன்னுடைய ஸத்தை பெண்சரீராதீநமாம்படி யிராநின்றான். (என்னூழி முதல்வனொருவனே!) என்னுடைய சரீரவிஷ்டனான ஸர்வேஸ்வரனுடையபடி யிருந்தபடி யென்! இச்சடலத்தையே பெரியவீஸ்வரனென்கிறது, இவனுமொருவனே! என்கிறார். (அ)

ஒன்பதாம்பாட்டு.

ஊழி முதல்வ னொருவனேயென்னு மொருவ னுலகெல்லாம் *
ஊழிதோறுந்தன் னுள்ளேபடைத்துக் காத்துக் கெடுத்துழலும்* ஆழி
வண்ணனென் னம்மானந்தண் திருமாலிருஞ்சோலை * வாழிமன
மே கைவிடேலுடலு முயிரு மங்கவொட்டே. (௯)

ப:—அநந்தரம், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஹேதுபூதனான ஸர்வேஸ்வரன் தம்முடைய ஸ்ரீராதிகளை விரும்பினபடியைக் கண்டு அதை விடும்படிக் கேட்டாக, "அவனை நாங்கருளிநிற்கிற திருமலையையாஸ்ரயி, ஒருக்காலும் கைவிடாதேகொள்" என்று தந் திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார்.

(இ-ள்.) ஊழி-காலோபலக்ஷித ஸமஸ்தவஸ்துக்களுக்கும், ஒருவனே முதல்வன்-ஒருவனே காரணபூதனாக, என்னும்-(க) "ஏக ஏவ-ஏகமேவ" என்று காரண வாக்யங்களிலே சொல்லப்பட்ட, ஒருவன்-அத்

(க) சாந்தோ-சு-உ-

விதீயனாய். உலகெல்லாம் - ஸமஸ்தலோகங்களையும், ஊழிதோறும்-ஸ்ருஷ்ட்யாத்யநுகூல காலந்தோறும், தன்னுள்ளே-தன் ஸங்கல்பைகதேசத்துக்குள்ளே, படைத்து - ஸ்ருஷ்டித்து, காத்து - ரக்ஷித்து, கெடுத்து-ஸம்ஹரித்து உழலும் - இதுகாணே யாத்ரையாக நடத்தும், ஆழி வண்ணன் -அபரிச்சிந்ந ஸ்வபாவனாய், என்னம்மான்-இந்த ப்ராப்திமுகத்தாலே எனக்கு ஸ்வாமியானவனுடைய, அம்-தர்ஸநீயமாய் தண் - ஸ்ரமஹரமான, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையை, மனமே - நெஞ்சே, உடலுமுயிரும் - நமக்கு த்யாஜ்யமான தேஹப்ராணாதிகள், மங்க - மங்கும்படியாக, ஒட்டு-செறிந்தாஸ்ரயிக்கப்பாராய் கை விடேல் - நம்காரியம் செய்துமுடிக்குந்தனையும் கைவிடாதேகொள், வாழி-இத்தாலே நீவாழ்வாயாகவேணும்.

ஆழிவண்ணனென்று - அபரிச்சிந்ந போக்யமான விக்ரஹத்தையுடையவனென்றுமாம்.

ஆறு:—(ஊழிமுதல்வன்) "நமக்கிந்த ஸம்ருத்தி யெல்லாம் திருமலையாலேவந்த ஸம்ருத்திகிடாய், நெஞ்சே, இனி திருமலையைக் கைவிடாதேகிடாய்" என்று நெஞ்சைக்குறித்துச் சொல்லி, "இவ்வாத்மாவினுடைய நிகர்ஷம்பாராதே யித்தோடே கலந்தருளினையேயாகிலும், என்னுடைய ஹேயமான இந்த ப்ரக்ருதியி லபிநிவேசத்தை விட்டருளவேணும்" என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார். (ங)

ஈடு-அவ; —நமக்கிந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாய்த்து, திருமலையைக் கைவிடாதே கொள்ளென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

(ஊழிமுதல்வ னொருவனே யென்னுமொருவன்) காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனானவ னொருவனேயென்று (க) "ஸதேவ-ஸோம்ய" இத்யாதிப்ரமாணங்களாலே சொல்லப்படுகிற ஒருவன். கார்யாகாரமான விதையவழிந்தவன்று இவற்றைத்தன்மேலே யேறட்டுக்கொண்டு நிற்கிறவன்கிடீர் இப்போதென்னுடம்பிலே வந்து தங்குகிறான். காரணாவஸ்தையில் சிதசித்

(க) சாந்தோ-சு-உ-

துக்களுடைய ஸத்தை தன்னதீநமாம்படியிருக்குமவன் ஸ்வஸத்தை யென்னதீநமாம்படி யிராநின்றான்.

காரணாவஸ்த்தையில் ஸத்தையை நோக்கிவிட்டால் பின்னையோ தானிவை தன்னைத்தான் நோக்கிக்கொள்ளுகிறது (உலகெல்லா மித்யாதி) நாமரூபங்களைக் கொடுத்துவிட்டால், பின்னைத்தான் தங்கள் கார்யம் தாங்கள் செய்கிறார்களோ. இத்தால் சொல்லிற்றாய்த்தென்னென்னில்; எல்லாவவஸ்த்தையிலு மிவரையொழியத் தரிப்பானாயிருக்கிறிலன். ப்ரளயாத்யாபத்துக்களி லெவற்றுக்குத் தன்னையொழிய ஸ்த்திதியில்லாதாப்போலே, தானிவரையொழியில் தரிக்கமாட்டானா யிராநின்றான். (ஆழிவண்ணன்) கம்பீரஸ்வபாவனென்னுதல்; கடல்போலே ஸ்ரமஹரமான வடிவைக்காட்டி யென்னை ஸம்ஸாரப்ரளயத்தில் நின்று மெடுத்தவனென்னுதல்.

(அந்தண் திருமாலிருஞ்சோலை) அவனுக்குங்கூட தர்ஸநீயமாய் ஸ்ரமஹரமான தேசம். (வாழிமனமேகைவிடேல்) நெஞ்சே, நாஞ்சொல்லுகிற ஸம்ருத்தி யுனக்கு மாகிடுக. அவனிப்படி நம் பக்கலிலே மேல்விழுந்து விரும்புகையாகிற ஸம்ருத்திக்கெல்லாம ஹேது திருமலைபாய்த்து; இத்தை யொருக்காலும் கைவிடநினையாதே கிடாயென்கிறார் தந்திருவுள்ளத்தைப்பார்த்து.

அவனும் தன் திருவுள்ளத்தைக் குறித்து "ஆழ்வாரைத் தந்தது அவருடைய திருமேனியாயிருக்கும், நீயுமத்தை யொருக்காலும் விடாதேகிடாய்" என்றான்; "பிரானே, அங்ஙனொண்ணாது, இத்தைத்தவிரவேணும்" என்று நிர்ப்பந்திக்கிறார் (உடலுமுயிரும் மங்கவொட்டு) ஸரீரமும் ப்ராணனும் மங்கும்படி இசையவேணும். இது அத்திருமலைபோலே யுபாதேயமா யிருப்பதொன்றன்று, சால ஹேயமா யிருப்பதொன்று; இத்தை மங்கவிசையவேணும்.

மங்கவொட்டென்கையாலே - "இதுக்கு முன்புத்தை ஆழ்வாருடைய விருப்பு ப்ராரப்தசேஷத்தாலல்ல; பகவதபிப்ராயத்தாலே" என்னுமிடம் தோற்றுகிறது. ஈஸ்வரன் பற்றிவிடேனென்றிருக்கையாலே யிருந்தாரென்கிறது; "உடலம்கைவிடான்" என்றாரிறே.

பத்தாம்பாட்டு.

மங்கவொட்டுன் மாமாயை திருமாலிருஞ் சோலைமேய * நங்
கள்கோனே யானேநீயாகி யென்னை யளித்தானே * பொங்கைம்
புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் * இங்கிவ் வுயி
ரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே. (௧0)

ப:—அநந்தரம். இப்படி திருவுள்ளத்தாலே திருமலையை யாஶ்ரயித்து திருக்கச்செய்தேயும் அவனுடைய ஸத்யபிநிவேஶத்தை நிவர்த்திப்பிக்கைக்காக்ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய ஹேயதையைப்பரிகணித்து, ஏவம்பூதையான வுன்னுடைய மர்யாதிக்கும்படி யநுமதிப்பண்ணி யருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

(இ - ள்.) திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையிலே, மேய - நித்யவாஸம்பண்ணி, நங்கள்கோனே - என்போல்வார்க்குஸ்வாமியானவனும், யானேநீயாகி - நானே யெனக்குப்பரிஹரித்துக்கொள்ளுமாபோலே வேறுபாடறநீதானேயாய், என்னை - என்னை, அளித்தானே - ரக்ஷித்தவனே, பொங்கு - போக்யதையாலே கிளர்ந்து புலப்படுகிற, ஐம்புலனும் - ஶப்தாதி விஷயங்களைந்தும், பொறியைந்தும் - அதிலேயகப்படுத்துகைக்குக் காரணமான ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், கருமேந்திரியம் - அவ்விஷயங்களில் ப்ரவ்ருத்திகைக்கு ஹேதுவான கர்மேந்த்ரியங்களைந்தும், ஐம்பூதம் - ஶப்தாத்யாஶ்ரயமாயும் இந்த்ரியாஶ்ரய ஶரீராரம்பகமாயுமுள்ள ப்ருதிவ்யாதி பூதங்களைந்தும், இங்கு - ஸம்ஸாரதசையில், இவ்வுயிரேய் - ஜீவனோடே அத்யந்தஸம்ஸ்ருஷ்டமான, பிரகிருதி - ப்ரக்ருதி, மான் - வ்யவஸாயஹேதுவான மஹாந், ஆங்காரம் - அபிமாந ஹேதுவான அஹங்காரம், மனங்கள் - ஸங்கல்பநிதானமான மாநஸம் ஆகிற உன்மாமாயை - உன்னுடைய அத்யாஶ்சர்யமான ப்ரக்ருதி ப்ராக்ருதங்களானதுகள், மங்கவொட்டு - மங்கும்படி யிசைந்தருளவேணும்.

ஆறு;—(மங்கவொட்டு) தாமிப்படி ப்ரார்த்திக்கச் செய்தேயும் தம்முடைய ப்ரக்ருதியிலுள்ள ஸ்நேஹத்தாலே எம்பெருமான் தம்முடையசொல்லை யாதரியா திருக்க.

அவனுக்கிதினுடைய ஹேயதையை ப்ரதர்ஶிப்பித்து, இந்த ஹேயமான ப்ரக்ருதியிலபிநிவேசத்தை யவஶ்யம் விட்டருளவேணுமென்று பின்னையு மபேக்ஷிக்கிறார்...... (௧)

ஈடு-அவ;— இப்படி யிவர் நிர்ப்பந்திக்கச்செய்தேயும் ஆனைக்குப் பாடுவாரைப்போலே கேளாதிருந்தான்; அதுக்கடி. "சாந்து பூசுவார் பாணியையுடைத்தோ பூசுவது, இதென் சொன்னீரானீர்" என்ன; திரியவும், மங்கவொட்டென்கிறார்.

(உன்மாமாயை-மங்கவொட்டு) ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நிபந்தித்த ப்ரக்ருதியை மங்கவிசை. "த்யாஜ்யமென்றறிந்த பின்பு உம்முடைய சரீரத்தை நீரே யுபேக்ஷிக்குமத்தனையன்றோ, நாமிசைய வேண்டுகிறதென்" என்ன, ஸர்வஶக்தியான நீ பிணைத்த பிணையை அஶக்தனான நான் விடவோ (௧) "தைவீஹ்யேஷா குணமயீ மமமாயா துரத்யயா" என்றிலையோ,

(திருமாலிருஞ்சோலைமேயநங்கள்கோனே) பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டு நீ திருமலையிலே வந்து முற்பாடனாய் நிற்கிறது நான் சொன்னபடி காரியஞ்செய்வதாகவன்றோ. நீ நினைத்தபடி காரியஞ்செய்யப் பார்த்தாயாகில் பின்னை யவ்விருப்பிலே யென்னை யழைத்துக்கொள்ளாயோ, திருமலையிலே வந்து நின்று என்னுடைய சேஷத்வத்தையும் உன்னுடைய சேஷித்வத்தையு மெனக்கறிவித்தவனே.

(யானேநீயாகியென்னையளித்தானே) என்னபிஸந்தியை நீயுடைமையாய் என் காரியம் செய்யக்கடவை நீ, இப்போது நானிரக்கவிருக்கிறதென்; நானபேக்ஷியாதிருக்க இதுக்கு முன்பெல்லாம் நீயேயன்றோ என்னுடைய ரக்ஷணங்கள் பண்ணிப்போந்தாய்.

இப்படி சொல்லச்செய்தேயும், இத்தைத் தவிர்த்துக்கொடுக்ககில்லாமையாலே பேசாதிருந்தான்; நான் நிர்ப்பந்திக்கச்செய்தேயும் கேளாதாரைப்போலே பேசாதேயிருக்கிறதென் என்ன; "நான் பேசாதிருக்கிறேனல்லேன், நீர் 'ஹேயம்' என்று சொல்லுகிற இதுதான் எனக்கு உபாதேயமாயிராநின்றது, ஆகையாலே ஹேயோபாதேய விபாகம் பண்ணமாட்டுகிறிலோம், அறிந்த நீர் ஹேயமென்கிறது தன்னை யெனக்கின்னதென்று சொல்லீர். நானறிந்து தரவென்றான்; ஆகில் கேட்கலாகாதோவென்று சொல்லுகிறார்.

(பொங்கைம்புலனித்யாதி) "உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயா | முணர்வைப்பெறவூர்ந்து" என்று அவன்

(௧) கீதை-௭-௧௪-

றனிவர்பக்கல் செய்தத்தை யிப்போதவனுக்கு இவர்காம் தெரிவிக்கிறார், ஒருகர்மம்செய்தது செய்யமாட்டாமையில்லையிறே வ்யாமோஹம்; அதுபோது மன்றிக்கே இதுநிலைநிறகுமதிறே.

சேதநனைத்தந்தாமுக் குரியரல்லாதபடி விக்ருதராம்படியா ணவல்ல சப்தாதிகளைந்தும், வறுகாற்றத்தைக்காட்டிச் சிலபதார் தங்களைத் தப்பாதபடி யகப்படுத்துமாபோலே இச்சேதநனை அவ் விஷயங்களிலே கொடுபோய் மூட்டிமுடிக்கவற்றான ஜ்ஞாநேந்த்ரியங் கள், கர்மேந்த்ரியங்கள், ப்ருதிவ்யாதிகள், கார்யாவஸ்தமான சி வஸ்துவைப்பற்றிக்கிடக்கிற ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், ம ஸ்ஸு, ஆக இவையாகிற வுன்னுடைய மாயாமையைப் பங்கொட்டு காரணாவஸ்தமானது தானே அவஸ்தாந்தரமாகையிறே கா யமாகையாகிறது, (௧௦

பதினொன்றாம்பாட்டு.

மானாங்காரமனங்கெடவைவர்வன்கையர்மங்க * தானாங்கா மாய்ப்புக்குத்தானே தானேயானானை * தேனாங்காரப் பொழிற்கு கூர்ச்சடகோபன்சொல்லாயிரத்துள்* மானாங்காரத்திவைபத்துந்தி மாலிருஞ்சோலைமலைக்கே, (௧௧

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக இவரர்த்தித் படியே ஈஶ்வரனுடைய விரோதிநிரஸநோத்யோகத்தைச் சொல்லி கொண்டு, அதுவே யித்திருவாய்மொழிக்குப்பலமாகவருளிச்செய்கிறார்

(இ - ள்.) மானாங்காரமனம்-மஹதஹங்கார மநஸ்ப்ரமுகமான சரீ ஸம்பந்தம், கெட - நசிக்கும்படியாகவும், வன்கையர் - ப்ரபலமான ஐவர் - இந்த்ரியங்களைந்தும், மங்க - ஸ்வவிஷயங்களோடே மங்கி போம்படியாகவும், தானாங்காரமாய் - தானே பெரிய அபிமானத்தை டையனாய்க்கொண்டு, புக்கு - புகுந்து, தானே தானேயானானை - எ றாத்மாவும் தானேயாய் ஆத்மீயமும் தானேயானவனை, தேனாங்காரம் வண்டுகளுடைய செருக்கையுடைத்தான, பொழில் பொழிலையுடைய குருகூர்ச்சடகோபன் - திருநகரிக்கு நிர்வாஹகரான வாழ்வார், சொ லாயிரத்துள் - அருளிச்செய்தவாயிரத்துள், திருமாலிருஞ்சோலைமலை

கே - திருமாலிருஞ்சோலைமலைக்கேயான, இவைபத்தும்-இவைபத்தும், மாஹுங்காரத்து - மஹதஹங்காரோபலக்ஷித ஸமஸ்தவிரோதிநிவ்ருத்தியிலே தாத்பர்யம்.

இப்பத்தும் அப்யஸித்தார்க்கு மஹதஹங்காராதிகள் தானேகழியுமென்று கருத்து. இது அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு:—(மாஹுங்காரம்) நான்சொன்னபடியே செய்தருளும் ஸ்வபாவனானவாறே தனக்கத்யந்தமபிமதமாயிருந்த விப்ரக்ருதியிலபிநிவேசத்தை விட்டருளி பெரியசெருக்கோடேகூட வென்னுள்ளேபுகுந்துகலந்தருளினவெம்பெருமான், என்னோடுகலந்து பரிமாறுகையால் அவனுக்குள்ள கர்வத்தைச் சொல்லுகிறதாய், எம்பெருமானைப்ரதிபாதித்த வாயிரம் திருவாய் மொழியிலும் பெரியகீர்த்தியோடே யெழுந்த வித்திருவாய்மொழி திருமாலிருஞ்சோலையை ப்ரதிபாதிக்கிறதென்கிறார். (கக)

ஈடு: அவ:—நிகமத்தில், மஹதஹங்கார விஷயமான வித்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்றென்கிறார்,

(மாஹுங்காரமனங்கெட) மஹான், அஹங்காரம், மநஸ்ஸு என்று சொல்லுகிறவிவை கெடும்படியாக. இவைப்ரக்ருதிக்கு முபலக்ஷணம். (ஐவர்வன்கையர்மங்க) கர்மேந்த்ரியங்களுக்கும் ஶப்தாதிகளுக்கு முபலக்ஷணம். (வன்கையர்-பெருமிடுக்கர்) பின்னை அவனிதுக்குச்சொல்லிற் றென்னென்னில் ; இதில்பண்ணுகிற நிர்ப்பந்தத்தைத் தவிருகிறானென்னத்தீருமிறே. அவன் " செய்கிறோம் " என்று தலைதுலுக்கினால் பின்னைப் பெற்றதாயிருக்கத் தட்டில்லையே.

(தானிந்யாதி) தானெனக் கழிமபியாய்ப் புக்கென்னுதல், (தானே தானேயானானை) ஆத்மாத்மீயங்களிலெனக்குண்டான அபிமானத்தைத் தவிர்த்துத் தானேயபிமாநியானவனை. அன்றிக்கே. இத்தலையிலர்த்தித்வத்தைப் பாரியாதே தானேயர்த்தியுமாய், இதுக்கபிமாநியும் தானேயானவனென்னுதல்.

(தேனுங்காரமித்யாதி) வண்டுகளினுடைய அபிமாநமேயான பொழிலையுடைய திருமலைக்கு நிர்வாஹகரானவாழ்வாரருளிச்செய்த

வாயிரத்திலும், மஹதாதிரூபமான ப்ரக்ருதி பிரஸார்த்தமாக சொன்னவிப்பத்து மென்னுதல், பெரிய செருக்கோடே சொன்ன விப்பத்துமென்னுதல். (திருமாலிருஞ்சோலைமலைக்கே) திருமலை விஷயமாகவாய்த்துச்சொல்லிற்று; அழகரைச்சொன்னவிடமுண்டாகில் அதில் கல்பகதருவைச்சொன்னவோபாதி. திருமலையிலுள்ள தடைய வுத்தேஸ்யமாகக் கடவதிறே; (க) "எம்பெருமான்பொன் மலைமே லேதேனுமாவேனே" என்றும் சொன்னார்களிறே.

பத்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழி முற்றிற்று,

(க) பெருமாள்திரு-௪ ௰-

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

எட்டாந்திருவாய்மொழி.

திருமாலிருஞ்சோலை - ப்ரவேஶங்கள்.

ஆறு:—(திருமாலிருஞ்சோலை) "இப்படி யபிநிவிஷ்டனாய்க் கொண்டென்னோடேகலந்து பரிமாறுகைக்கு ஹேதுவென்" என்று எம்பெருமானைக்கேட்டால், அங்ஙனே அபிநிவிஷ்டனாயிருந்த வவை னாலும் பரிக்லுப்தமானஹேதுக்களிலொரு ஹேதுவுமென்பக்கலுண்டாகச் சொல்லவொண்ணாது, இனி யென்பக்கலில்லாத ஹேதுவை யென்பக்கலிலே அத்யாரோபித்துச் சொல்லப்பார்க்கிறும். *

ப:—எட்டாந்திருவாய்மொழியில், கீழே தாமபேக்ஷித்தபடியிலே ஈஶ்வரன் கார்யம்செய்வதாக அறுதியிட்டபடியைக்கண்டு, "இப்படிநம்பக்கல் வ்யாமோஹம்பண்ணுகைக்கும் நாமபேக்ஷித்தகாரியம் செய்யும்படி பாரதந்த்ரனாகைக்கும் நம்பக்கலொருஹேதுவில்லை, நிர்ஹேதுகமாக நம்மைவிஷயீகரித்தருளினனித்தனை" என்றறுதியிட்டு, அதுக்கடியான அவனுடைய யாத்ருச்சிகாநுகூல்ய நிபந்தனமான பூர்ணங்கீகாரத்தையும், அங்கீகாரஸ்தைர்யத்தையும், ஸாகமத்வாதிஶயத்தையும், புருஷார்த்தப்ரதத்வத்தையும், ப்ராப்திப்ரதிபந்தக நிவர்த்தகத்வத்தையும். போகரஸப்ரதத்வத்தையும், நித்யாநுபாவ்யத்வத்தையும், நிரவதிக ஸர்வப்ரகார போக்யத்வத்தையும். நிர்ஹேதுகோபகாரகத்வத்தையும், நித்யகைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் நிருபாதிகபூர்ண விஷயீகாரத்தைப்பண்ணி ஸமஸ்த விரோதியும் நிரஸ்தமாம்படி திருப்பேரிலே ஸந்நிஹிதனாய் நிரதிஶயாநந்தாவகமான அநுபவத்தைப்பிறப்பித்தான். இதொருசீலாதிஶயமே: என்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார். *

ஈடு;— தன்னைக் குறித்து ஸர்வேஶ்வரனுக்குண்டான பாரதந்த்ர்யத்தைப் பேசுகிறார் * அருள்பெறுவாரடியாரிலே ; அந்தப்பாரதந்த்ர்யந்தன்னை முடியாநடத்தினபடியைச் சொன்னார் * செஞ்சொற்கவியில்; "நீர்சொன்னபடியே செய்யக்கடவோம்" என்று தலைக்கட்டுகிறார்.

இவர்தம்மைத் திருமேனியோடே கொடுபோவதாகத் தேங்கினவைத்தமிறே நம்பிள்ளாறு, அதொழியக் கொடுபோவதாக வற்ற

வன்றே பதறத்தொடங்கினான்; "செழும்பறவை தானேறித்திரி வான்" என்று - திருவடி திருத்தோளிலே பெறிலாக்கிற இவனை விஷயீகரித்தது; அத்திருவடி திருத்தோளிலே வந்து இவனைக் கொடுபோவதாகப் பார்த்தான்,

சிலரை ஆதிவாஹிகர்க்காகக் காட்டிக்கொடுபோம், சிலரைப் பெரியதிருவடியை வரக்காட்டிக்கொடுபோம்; திருவடி திருத்தோளிலேவந்து தானே கொடுபோமவரிறேயிவர்; (௧) "ஸ்வைநாராஜஸ்தம் நயாமி - அஹம்ஸ்மராமி மத்பக்தம் நயாமி" என்கிறபடியே. * கள்வன்கொல்பிராட்டியை யாளிட்டுக்கொடுபோமன்றிறே இவரையுமாளிட்டுக்கொடுபோவது (௨) [தானிலம் இக்பாக] "ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தைத் தப்பிப்போந்தோம். (௩) "நசபுநராவர்த்ததே - நசபுநராவர்த்ததே" "என்கிறதேசத்திலே புகுந்தோம்" என்று தானேசொல்லித் தேற்றிக்கொண்டிறேபோவது.

ஆகவிப்படி தம்மை யவ்வருகே கொடுபோனைமயிலே பதறுகிற படியை யநுஸந்திக்கார்; "இவனிப்படி நம்பக்கல் பதறுகைக்கடி யென்" என்று பார்த்தார்; தம்பக்கலொன்றுமின்றிக்கேயிருக்க, முதலிலே தம்பக்கலிலே அத்வேஷத்தையும் பிறப்பித்து, அதுவழியாக விசேஷ கடாக்ஷத்தைப்பண்ணி, தம்பக்கலிலே யிச்சையையும் பிறப்பித்து, "தானேயுபாயம்" என்னும் புத்தியைப் பிறப்பித்து, அதுக்குப்பின் ஸாரபலமாயிருக்கிற தன்னுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து விஷயங்களிலே போகத்தை "பணாட்டிப்படுப்பாயோ" என்று தானே சொல்லும்படி பண்ணி, தன்பக்கல் ருசியையும் பிறப்பித்து, தானேவந்து அவ்வருகே கொடு போவானாகத் த்வரிக்கிறபடியை யநுஸந்தித்து;

"இன்றிப்படி என்னையாதரிக்கிறவன் அநாதிகாலம் என்னை விட்டாறியிருக்கடியெங்ஙனே, இன்றிப்படி பதறுகைக்குக் காரணமேதுவென்" என்று பார்த்தார்; தம்பக்கலொரு ஹேதுவும் கண்டிலர்; இப்போது ஹேதுவாகவற்றை கொண்டாடுகிறவனாகத் தோன்றினது கண்டிலர்; மேன்புத்தையிட்டால் இப்போது வந்ததிறே; முன்னுண்டாக நினைத்திருக்குமவனன்றே - முன்பே ... காலமிவரைப்பெறவேணுமென்றிருக்கிறவன் இப்போது ... றைச்செய்தானாக நினைத்திராதே;

---

(௧) வராஹசரமம்- (௨) திருவிரு-௨௬- (௩) சாந்தோ-௮-

"இனி ஸர்வஜ்ஞனை வலனாகிலு மிதுக்கொரு போக்குச் சொல்லுமாகில் அவனைக்கேட்போம்" என்றுபார்த்து, "இன்றிப்படி யித்தை ப்ரஸாவஹிக்கிறதேவர் முன்பு அநாதிகால மித்தைத்தை விட்டிருப்பானென், இப்போதித்தை யாதரிப்பானென்" என்றுகேட்டார்; "உம்முடையபக்கல் அத்வேஷமடியாகச்செய்தோம்" என்னமாட்டானே; தானறிய அதுவும் தன்னாலேவந்ததாகையாலும், அது தான் பேற்றுக்கிடான ஸாதநமாகப்போராமையாலும். இனி ரக்ஷகனானவனுக்கு நெடுநாள் ரக்ஷ்யவர்க்கத்தைவிட்டிருந்த விதுக்குச் சொல்லலாவதொன்றில்லையே, பிற்பாடனானதுக்குலஜ்ஜிக்குமதுக்கு மேற்பட; ஆகையாலே சொல்லலாவதொரு மறுமாற்றம் காணாமையாலே கவிழ்ந்துநின்று காலாலே தரையைக்கீறிநின்றான்.

முதலிலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணித் தன்பக்கலிலே யிச்சையைப்பிறப்பிக்கைக்கு வழியிட்டுவைத்தான்; அவ்வழியாலே யிச்சையைப் பிறப்பித்தான்; தன்பக்கலிலே உபாயபாவத்தை யேறட்டுக்கொண்டு * பொய்ந்நின்றஞானந்தொடங்கி யிவ்வளவாகத் தன் பக்கலிலே வாரிழுக்கிறான்; பரபக்திதொடங்கி பரமபக்திபர்யந்தமான தசாவிசேஷங்களைப் பிறப்பித்தான்.

"இதுதன்னை முன்பே செய்யாவிட்டதென்" என்ன; "இதுக்குச்சொல்லலாவதொன்றில்லாமையாலே இருந்தானாய் நிற்கிறானித்தனை" என்றுபார்த்து, இப்படியவன் தம்பக்கல்பண்ணின விஷயீகாரத்தையும் அதுக்கடியானவனுடைய க்ருபாதிகுணங்களையுமநுஸந்தித்து, "இதொரு நிர்ஹேதுக விஷயீகாரமிருக்கும்படியே" என்று அதிலே ஆழங்காற்பட்டு விஸ்மிதராய் ஹ்ருஷ்டராய்க்களிக்கிறார்.

முதற்பாட்டு.

திருமாலிருஞ்சோலை மலையென்றேனென்ன * திருமால்வந்
தென்னெஞ்சு நிறையப்புகுந்தான் * குருமாமணி யுந்துபுனற்பொன்
னித்தென்பால் * திருமால்சென்று சேர்விடந்தென்திருப்பேரே. (௧)

ப:— முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமலையைப்போய்க் கிட்டுங்காட்டில் லக்ஷ்மீஸஹாயனாய்க்கொண்டு என்னெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார்.

(இ-ள்) நாட்டுவார்த்தை மர்யாதையிலே, திருமாலிருஞ்சோலை மலையென்றேனென்ன - திருமாலிருஞ்சோலை யென்று சொன்னவள விலே, திருமால் - ஸ்ரீய:பதியாய் பரிபூர்ணனான தான், வந்து - ஸாபே க்ஷரைப் போலேவந்து, என நெஞ்சம் - உக்திக்குக் கட்டுப்படாதே யிருக்கிற வென்னெஞ்சுக்குள்ளே, “வாக்குக்கு பூர்வபாவியல்லவோ மநஸ்ஸு” என்கிற ஸ்வாபிப்ராயத்தாலே. அவன்று தானுமாக, நிறைய - பரிபூர்ணமாக, புகுந்தான் - புகுந்தான். திருமால் - என்னெஞ்சிலே வருகைக்காக (க) ‘ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி:’ என்றவளோடே யொருதேச விசேஷத்திலேயிருக்கிறவன். சென்றுசேர்விடம் - சென்று கண்வளர்ந்தருளின விடம். குருமாமணி - அதிஸ்லாக்யமான மாணிக்கங்களை, உந்து - உந்துகிற, புனல் - புனலை யுடைய, பொன்னி - பொன்னியின். தென்பால் - தென்பக்கத்தில், தென்திருப்பேர் - தர்ஸநீயமான திருப்பேர். (௧)

ஆறு:— திருமாலிருஞ்சோலை மலையென்று மிச்சொல்லைச் சொன்னேனென்னுமித்துக்கு நேற்படச் சொல்லவை தொருநேற்று வெண்பக்கலிலலை, இச்சொல்லித்தனையும் மெய்யே சொன்னேன் றேறுவாக, குருமாமணியுந்துபுனல் பொன்னித் தென்பாலை திருப்பேரைத் திருநகரியாவுடையாரிருந்த வெள்ளை நான் பெரிய பிராட்டியாரோடேகூட வென்னெஞ்சு நிறையப்புகுந்து இப்படி என் னோடேகலந்து பரிமாறுவதே!, ஒருவனுடைய வஸிதியிருக்கும் படியே! என்கிறார், ( )

ஈடு-அவ —யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுமட் டில் நிரபேக்ஷனான தான் பிராட்டியோடேகூடவந்து என்னுள்ளே புகுந்தருளினு னென்கிறார்.

(திருமாலிருஞ்சோலையித்யாதி) முன்பு வகாதிகலைப்பேராறுக்குத் தம்பக்கல் பேரிட்டுக்கொள்ளாவதென்றிக்கிறபடிக்க இப்பா தவனுக்குப் பேரிட்டுக்கொள்ளுகைக்கு பயமா இல்லை கண்டிருர். ஒரோதேசங்களில் மலைகளைச் சொல்லாநின்றால் நாமங்களை கள யிட்டுச்சொல்லக்கடவதாயிருக்குமிறே; அப்படியே, திருமாலிருஞ்சோலை மலையென்றேன்.

(என்ன) மகஸ்ஸஹகாரமுமில்லையிடே, உக்திமாத்ரமே யென் பக்கலுள்ளது, “ இவன் ஸாபேக்ஷனாயிருந்தானாகில், ஸ்வயமாகவாம்

(க) வராஹபுராணம்.

நம்பக்கலிலே யாயிருந்ததாகில், இவருடையபேறுநம்பேறா யிருந்த தாகில், சேதநனுனவாசிக்கு உக்திமாத்ரமுண்டாய்த்தாகில், இதுக் கவ்வருகுகொண்டுகார்யமென்" என்றிருக்குமவனிறே,

இதுதானொருமலையிறே அவனுக்கு. உக்தியையில்லை யென்ன வொண்ணாதே; இதுக்கடி யாராயுமவனல்லனே. ராவணன் தம்பிக்கு மித்ரபாவமே யமையுமென்னுமவன், இதுக்கவ்வருகொன்று வேணு மென்றிரானிறே, மலைகளினுடையஸாமாந்யம்கிடக்க, இவ்விசேஷத் தைச் சொல்லிற்று - இதிலுண்டான வாத்ஸல்யமன்றோவென்றி ராநின்றானாய்த்தவன். ஆக, இவர்க்கொன்றில்லை யென்னவுமாம். அவ னுக்கொன்றுண்டென்னவுமாம்படி யிருக்கிறதிறே யிதுதானே.

(திருமால்) அஹ்ருதயமாகச் சொன்னதுதன்னை ஸஹ்ருதயமாகக் கொண்டிருப்பாரு மருகேயுண்டென்கிறார், (வந்து) "அவன்வரு வதே!" என்று இவர் விஸ்மயப்படாநிற்க, "பிராணைவர்த்தித்த வன் தன்னையிருந்தவிடத்தே வருமத்தனையின்றோ" யெனாருப்பது. அவன்வார்த்தை க்ருபணராயிருப்பார். ஸ்லோக்யமிருந்த விடத்தே வருமித்தனையன்றோ வென்றிராநின்றான். எல்லார்க்கு மதிகமானு னவனுக்கு நானதிகாரயனேனன்!; (௧) "ஸௌலப்ய ஹ்ருதய ஸவேர்த்- லோப்யகச்சத் - ஸபரிம்" என்னுமாபோலே.

(என்னெஞ்சம்) அந்தவுக்தி ஸஹ்ருதமான வென்னெஞ்சிலே, (நிறையப்புகுந்தான்) விஷயாந்தரங்களுக் கவகாச மில்லாதபடி புகுந் தான்; அத்ரிபுகவா ஸ்ரமத்திலே, "நான் ராமன், இவள்மைதிலி, இவன் லக்ஷ்மணன்" என்று நமஸ்கரித்துநின்றாப்போலே; அக்காட் டில் பாழுடையத்திருமாடி புக்காப்போலே என்னெஞ்சில் பாழ்தீரப் புகுந்தான்.

(தனிவிடப்பாதி) தான் விரும்பிச் சென்று சேரும் தேசமதுவா யிருக்கச்செய்தே என்னெஞ்சிலேவந்து புகுந்த தென்கிறார். எல்லார்க் கும் ப்ராப்யமானவிடம் என்னை ப்ராப்யமாகக் கொள்ளுகிறான். பெருமிலையுப் தர்மரூபமான ரத்நங்களைக்கொண்டுவந்து தள்ளா நின்றுள்ள புனலையுடைய பொன்னித் தென்கரையிலேஸ்லாக்யமான தேசமென்றபடி. (௨) "தேஹாஹ்ருதி நக்ஷத்ராப்திர்ஜநக:" இத்யா

---

(௧) ரா-பா-௧- (௨) ரஹ-ஸ்த-௬-

திவத். (புனல்) ஶ்ரமஹரமான தேசத்தையுடையவன்கிடீர் இங்கேவந்து புகுருகிறான்.

(திருமால்சென்றுசேர்விடம்) பரமரஸிகனானவன், தானும் பிராட்டியுமாய் விரும்பிச்சென்று சேரும் தேசமதுவாயிருக்கச்செய்தே, அதுகிடக்க, திருமாலிருஞ்சோலைமலையென்றேன், இந்த அஹ்ருதயமான வுக்திமாத்ரத்தைக்கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்தான், கீழில் " திருமால் " என்றவிடம், புருஷகாரபாவத்தைச் சொல்லிற்று; மேலில் " திருமால் " என்றவிடம், உத்தரார்த்தத்தில் லக்ஷ்மீஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. (க)

இரண்டாம்பாட்டு.

பேரேயுறைகின்றபிரானின்றுவந்து * பேரேனென்றென்னெஞ்சு நிறையப்புகுந்தான் * காரேழ்கடலேழ் மலையேழுலகுண்டும் * ஆரா வயிற்றானை யடங்கப்பிடித்தேனே. (உ)

ப:—அநந்தரம், முன்புகுறைவாளரைப்போல பின்பொருகாலும் போகேனென்று என்னெஞ்சிலே பூர்ணனாய்ப் புகுந்தானென்கிறார்.

(இ - ள்) பேரே - திருப்பேரிலே, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - ஸர்வேஶ்வரன், இன்றுவந்து - முன்பு குறைவாளரா யிருந்தாப்போலே இன்று நிர்ஹேதுகமாகத்தானே ஸாபேக்ஷனாய்வந்து பேரேனென்று - இனிப்போவென்றால் ஒருகாலும் போகேனென்று, என்னெஞ்சு - என்னெஞ்சிலே நிறைய - பரிபூர்ணமாம்படி, புகுந்தான், புகுந்தான். ஆகையாலே, காரேழ் - புஷ்கலாவர்த்தகாதிகளான மேகங்களேழையும், கடலேழ் - ஸமுத்ரங்களேழையும், மலையேழ் - குலபர்வதங்களேழையுமுடைத்தான, உலகுண்டும்-லோகத்தையெல்லாம் அமுதுசெய்தும், ரக்ஷணத்தில்பாரிப்பாலே, ஆராவயிற்றானை - நிறையாதவயிற்றையுடையானை, அடங்க-என்னுள்ளேபுகுந்து ஸர்வப்ரகார பரிபூர்ணனாம்படியாகக்கொண்டு, பிடித்தேன் - அநுபவிக்கப்பெற்றேன். (உ)

ஆறு;—(பேரேயுறைகின்றபிரான்) அகாரணமாக இன்றுவந்து இனிப்பேரேனென்று நெஞ்சுநிறையப்புகுந்தான்; [illegible] இப்படியென்னெஞ்சில் புகுந்தருளப் பெறுகையாலே ஸர்வஜ்ஞத்வ

வாளாயிருந்துவைத்தும் ஸாபேக்ஷனாயிருந்தவன், இன்றென்னுள்ளே (புகுரப்பெற்று நிரபேக்ஷனானென்கிறார். (௬)

ஈடு-அவ;—தான் ஸர்வேஸ்வரனாய்வைத்து என்னோடே கலக்கப் பெறுமையாலே குறைவாளனானவன், இன்றுவந்து நிர்ஹேதுகமாக என் ஹ்ருதயத்திலேபுகுந்து பூர்ணனானென்கிறார்.

(பேரேயுறைகின்றபிரான்) திருப்பேரிலேவந்து நித்யவாஸம் பண்ணுகிறஸர்வேஸ்வரன் (இன்றுவந்து) இதுண்டாமென்று நெஞ்ஞேற்றறிவது தாமொரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவைத்தாராகிலிறே (பேரேனென்று) "பேரேன், பேரேன்" என்று நின்றாயித்து, "நீபோவுதியோ, இருப்புதியோ" என்று கேட்பாருமின்றிக்கே யிருக்கச்செய்தே; இங்கு, பிராட்டி தன்விஷயத்திலேசொல்லும்வார்த்தையைத்தா னென்விஷயத்திலே சொல்லாநின்றான். "நான்போகேன் போகேன்" என்று சூழ்த்துக் கொடாநின்றாயித்து; தன்னை யுபஸம்ஹரிக்கைபண்ணுவாருமின்றிக்கேயிருக்க; (க) 'இத்தி ஹிமெஷ்ஷ ஜ்ஞா க்ருஹிம்ஸமெடைத்ரிபிஸ்ஸைதர்ப்பாத்ருபிஸ்ஸமே' (என்னெஞ்சு) "இவன்போகிலென், இருக்கிலென்" என்றிருக்கிற வென்னெஞ்சு. (நிறையப்புகுந்தான்) பூர்ணமாம்படி புகுந்தான்.

(காரித்யாதி) புஷ்கலாவர்த்தகாதி மேகங்களோடும், கடலோடும், மலைகளோடுமான ஜகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து, பின்னையும் தன்னைவிஸ்வஸித்து, உடன்கிடந்தவனை படிகடவினவனைப்போலே "நாமென்செய்தோமானோம்" என்றிருக்குமவனை. ஸ்ருஷ்டிதொட்டக்கமாக மோக்ஷபர்யந்தமாக ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ஸர்வவித ரக்ஷணத்தையும்பண்ணி, பின்னையும் "ஒன்றும் செய்யப் பெற்றிலோம்" என்றிருக்குமவனை.

(அடங்கப்பிடித்தேனே) "நாமெல்லாம்செய்தோம்" என்று அவன் தெகுட்டும்படி பண்ணிக்கொண்டேன். ப்ரளயத்திலகப்பட்ட ஜகத்தையெடுக்கையாவது-பின்னையும் ஸம்ஸாரத்தைப் பூண்கட்டுகையிறே; பரமபதத்தளவும்செல்ல நடத்தப்பெறுமையாலே குறைபட்டிறேகிடப்பது; அவனென்னை அவ்வளவும் கொண்டுபோம்படி நான்சமைகையாலே அவனுடைய வயிறுவேசம் தீர்ந்ததாய்த்து.

(க) ரா-ஸு-கக உக-

அவனுடைய பரிபூர்ண விஷயீகாரத்துக்குப் பாத்ரபூதனேனென்கிறபடி. (௨

மூன்றும்பாட்டு.

பிடித்தேன் பிறவிகெடுத்தேன் பிணிசாரேன் * மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர்மாயையை * கொடிக்கோபுரமாடங்கள் சூழ்திருப்பேரான் * அடிச்சேர்வதெனக் கெளிதாயினவாறே.

ப:— அந்தரம், ஆஸ்ரிதஸுலபனான ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளைக்கிட்டுகையெனக் கெளிதானபடி, அதடியாக ஸமஸ்ததுரிதமும் நிவ்ருத்தமாம்படியாய்த்தென்கிறார்.

(இ-ள்) கொடி - கொடிகளையுடைய, கோபுரம்-கோபுரங்களாலும் மாடங்கள் - மாடங்களாலும், சூழ் - சூழப்பட்ட, திருப்பேரான்-திருப்பேரை வாஸஸ்தானமாகவுடைய ஸுலபனானவனுடைய, அடி - திருவடிகளை, சேர்வது-சேருகை, எனக்கெளிதாயினவாறு - எனக்கெளிதானப்ரகாரமிருந்தபடி, பிடித்தேன்-நிர்ஹேதுகமாக அவன் திருவடிகளைப்ரதமத்திலே பிடிக்கப்பெற்றேன், அதடியாக, பிறவி-ஜந்மஸம்பந்தத்தை, கெடுத்தேன்-அறுத்தேன், பிணி - அத்தால்வரும் துக்கங்களை சாரேன் - சேரேன், மனைவாழ்க்கையுள் - ஸம்ஸாரத்தில், நிற்பது - நிற்கையாகிற ஓர்மாயையை - அஜ்ஞானத்தை மடித்தேன்-நிவ்ருத்தமாக்கினேன். (௩

ஆறு:—(பிடித்தேன்) எம்பெருமானை யினியொருநாளும் விப்ரலேஷியாதபடி பற்றினேன், ஸாகாரநிர்யகாதிகாராவிதந்தேறப்பாவே ஸரூபஜந்மத்தையும் ஜந்மநிபந்தந துக்கத்தையும் போக்கினேன்; தத்துக்கஹேதுவாய் அநாதிகாலந்தொடங்கி யின்றளவும் செல்லுகிற விந்தப்ரக்ருதிஸம்பந்தத்தையும் நிவர்த்திப்பித்தேன், இப்படி திருப்பேரானடிசேர்வதெனக்கெளிதாவதே! என்று களிக்கிறார். (௩)

ஈடு-அவ:— அவன் தம்மோடே நிர்ஹேதுகமாகவந்து ஸம்ஶ்லேஷித்தபடியை யநுஸந்தித்து, இவர் திருவடிகளைக்கிட்டுகை யெளிதாவதே யென்கிறார்,

(பிடித்தேன்) "தலைமேலதாளிணைகள்" என்று அவன் திருவடிகளைத் தலைமேலேகொண்டுவந்து வைக்கையாலே அவற்றைப் பற்றக்

கப்பிடித்துக்கொண்டேன், (பிறவிகெடுத்தேன்) ஜந்மத்தை மறுவலிடாதபடி போக்கினேன். (கெடுத்தேன்) (க) [காணேவொருங்கிற்றுங் கண்டிலம்] எங்கேபோய்த்துக்கண்டிலேன். (பிணிசாரேன்) ஜந்மம் புக்கவிடத்தே புகக்கடவ பிணியைக்கிட்டேன்.

(மடித்தேனித்யாதி) ஸம்ஸாரத்தில் நிற்கைக்கடியான மாயையுண்டு - மூலப்ரக்ருதி, அத்தைத்திரியவிடுவித்தேன்; தொடருகிற பாம்பைத் திரிய விடுவிப்பாரைப்போலே. எமபெருமானார், உலாவியருளுகிறவர் முடியப்போகாதே நடுவேமீண்டருள, எம்பார் கதவையொருச்சரித்து, "திருமாலிருஞ்சோலையாகாதே திருவுள்ளத்திலோடுகிறது" என்ன; "ஆம், அப்படியே" என்றருளிச்செய்தார்.

(கோடியித்யாதி) கொடிகளையுடைத்தான கோபுரங்களையும் மாடங்களையுமுடைத்தான திருப்பேரிலே நிற்கிறவனடிசேருகையாகிறது எனக்கெளிதாயினவாறே! "அறுகம்புல்லையிட்டுக் கண்ணைப்புதைத்துக்கொள், சாணகச்சாற்றைக்குடி, தலையைக்கீழே நடு. காலைமேலேயெடு" என்று அருந்தேவைகளை ஶாஸ்த்ரம்சொல்லாநிற்க, எனக்கிங்ஙனே யிருப்பதொரு மூலையடிவழியுண்டாவதே!. (எனக்கெளிதாயினவாறே!) விஷயங்களின் காற்கடையிலே துவண்டுபோந்தவர் அவன்திருவடிகளிலே கிட்டிக்கொடுநிற்கக் கண்டவித்தனை. (௩)

நான்காம்பாட்டு.

எளிதாயினவாறென் றென்கண்கள் களிப்பக் * களிதாகியசிந்தையனாய்க் களிக்கின்றேன் * கிளிதாவியசோலைகள் சூழ்திருப்பேரான் * தெளிதாகிய சேண் விசும்பு தருவானே. (௪)

ப:— அநந்தரம், எனக்குப் பரமபதத்தைத் தருவானுயிராநின்றான், அதனாலே என்கண்ணும் நெஞ்சும் களிக்கும்படி ஆநந்தியாகாநின்றேனென்கிறார்.

(இ-ள்.) எனக்கு ப்ராப்யலாபமெளிதானபடி, காலாந்தரத்திலொருதேசவிசேஷத்திலே போகாதே இக்காலத்திலே, என்கண்கள் - என்விடாய்த்தகண்களானவை, எளிதாயினவாறென்று - துர்லபமான

(க) பெரியதிருவ-௫௪-

ப்ராப்யம் ஸுலபமாவதே ! என்று, களிப்ப-களிக்கும்படியாக களித்தஇய - ஹர்ஷாவிஷ்டமான, சிந்தையனாய் - நெஞ்சை யுடையேனாய்க் கொண்டு களிக்கின்றேன்-ஆநந்தியாநின்றேன், அதுக்கடி, கிளிந்திய-கிளிகள்தாவும்படி செறிந்த, சோலைகள்சூழ் - சோலைகள்சூழ்ந்த திருப்பேரான் - திருப்பேரிலே ஸுலபனாய்க்கொண்டு ஸந்நிஹிதனானவன். தெளிதாகிய - பரமஸத்த்வமயமாகையாலே ப்ரகாசாத்மகமாய் சேண்விசும்பு - ப்ரஹ்மபதாதிகளிலு மவ்வருகான பரமவ்யோமத்தைத் தருவான்-தருவானானான். (ச

ஆறு; —(எளிதாயினவாறு) திருப்பேர்நகரானைப் பெற்று என்னுடைய ஸர்வகரணங்களோடுங்கூட நான் களிக்கின்றேன், இப்படி திருப்பேரிலே காணெழுந்தருளியிருக்கிற விருப்பை யெனக்குக்காட்டித் தந்தருளினவிவன் இனித்திருநாட்டையும் தந்தருளு மென்கின்றார். (ச

ஈடு-அவ; —தமக்குப் பரமபதத்தைத் தருவானா யிருக்கிறவனுடைய சீர்மையை யநுஸந்தித்து, என்கரணங்களும் களிக்க நானும் களியாநின்றே னென்கிறார்.

(எளிதாயினவாறு) (க) [அரியதெளிதாகமிந்யாதி] அரிதாகப்பகவல்லாப்பழ மெளிதாகும். எங்கே கண்டோமென்றால் [அரியதெய்யாதி] அவன்தானே அணைத்துவையத் தந்தருளிய பரிகின்கரையிலே வந்து விழுவன்றோ? அதைப்பெற்றது, (எளிதாயினவாறென்று) ஸுலபமானவிஷய மிங்ஙனே யெளிதாவதே ; என்று, "காணநன்று மென்கண்ணே" என்று விடாய்த்தவர் களிக்கும்படி.

(களித்தசிந்தையனாய்) களித்த மநஸ்ஸையுடையனாய் * [illegible] டியானேயென்று கூட்டு நெஞ்சுடைய களிக்கப்பெற்று [illegible] களிக்கின்றேன்) "கூவியும் காணப் பெறேன்" என்றவர் களிக்கின்றேன், கரணங்களும் தாழ்வாக விடாய்த்தவர், கரணங்களுடன் தாழ்வாக்கக் களிக்கப்பெற்றார்!

(கிளிதாவியவித்யாதி) [illegible] சோலைகள் [illegible] சூழப்பட்ட திருப்பேரான். (தெளிதீத்யாதி) [illegible] போலன்றிக்கே [illegible]

(க) உ-திருவ-உஉ-

தாய், புநராவ்ருத்தியின்றிக்கே யிருக்கிற சேண்விசும்புண்டு - ப்ரஜா பதிகள் குடியிருப்புக்கு மவ்வருகானபரமபதம், அத்தை யெனக்குத் தருகையிலே துணிந்திருந்தான். (௯)

ஐந்தாம்பாட்டு.

வானேதருவானெனக் காயென்னோடொட்டி * ஊனேய்குரம்
பையிதனுட் புகுந்து * இன்று தானேதடுமாற்றவினைகள் தவிர்த்
தான் * தேனேய்பொழில் தென்திருப்பேர்நகரானே. (௫)

ப:—அநந்தரம், இப்படி புருஷார்த்தத்தைத் தருவானாக வெழக்கோலி ஸமஸ்தவிரோதிகளையும் போக்கினானென்கிறார்.

(இ - ள்.) தேனேய் - வண்டுசெறிந்த, பொழில்-பொழிலையுடைத்தாய், தென் - தர்ஶநீயமான, திருப்பேர்நகரான்-திருப்பேராகிற நகரத்திலே வர்த்திக்கிறவன், எனக்கு - எனக்கு, வானேதருவானாய் - பரமபதத்தையேதருவானாகக் கொண்டுஸங்கல்பித்து, என்னோடு - என்னோடே, ஒட்டி-ப்ரதிஜ்ஞைபண்ணி, ஊனேய் - மாம்ஸம்செறிந்த, குரம்பையிதனுள் - கூடாயிருக்கிற இஶ்ஶரீரத்துக்குள்ளே, அபேக்ஷாநிரபேக்ஷமாக, இன்று - இன்று, தானே-தானே, புகுந்து-வந்துபுகுந்து, தடுமாற்றம்-தன்னைப்பிரிந்து தடுமாறுகைக்கடியான, வினைகள் - புண்யபாபங்களை, தவிர்த்தான் - போக்கினான்.

தேன் - மதுவுமாம். (௫)

ஆறு;—(வானேதருவான்) *நமக்கவன் திருநாட்டைத் தந்தருளுகைக்கு நம்பக்கலிலே ப்ரதிபந்தகங்களில்லையோவென்னில்;*

திருப்பேர்நகரான், எனக்குவானேதருவானாய், நானொட்டேனென்னிலுமென்னையென்று ப்ரஜைறியவாகிலும் புகுரக்கடவனாயொட்டிக்கொண்டு, அத்யந்தஹேயமான வென்னுடைய ஶரீரப்ரக்ருதியிலே புகுந்து, தானே அந்த ப்ரதிபந்தகங்களையும் போக்கியருளினானென்கிறார்.

ஈடு-அ௧;—திருப்பேர்நகரான் பரமபதத்தை யெனக்குத்தருவானாக என்னோடே ப்ரதிஜ்ஞைபண்ணித்து, தானே விரோதிகளையும் போக்கினானென்கிறார்.

(வானேதருவானெனக்காய்) எனக்கு வானே தருவானாய். இங்கே வைத்துக் காரியங்கொள்ளுகையும் தவிர்ந்தான்; "பரமபதிகள் குடியிருப்பு இவர்க்குத்தரமல்ல" என்று அத்தையும் தவிர்ந்தான்; ஸம்ஸாரியானவெனக்கு நித்யஸூரிகளிருப்பைத் தருவானாக (என்னோடொட்டி) என்னோடே பூணித்து. நாணிச்சியாதிருக்க (க) 'ஸுராவணோ ராவணோ வா - அராவணமராமம் வா" என்றென்றே ஸமயம்பண்ணி "எட்டாவீட்டுத் திறமும் செப்பம்" என்ற வென்னோடே உடக்கெம்பாவிடே தாக்கவேணுமென்றொட்டி.

(ஊனேயித்யாதி) "இவ்வுடம்போடே யும்மைக்கொடுபோகவேணும்" என்று விளம்பித்தோமாகில், இத்தையொழியக் கொண்டுபோகப்பார்த்தபின்பு இனி யாறியிருப்பமோ வென்றுநின்றான் (ஊனேயித்யாதி) மாம்ஸப்ரசுரமாய் ஆத்மாவுக்கு ஆபதகமாயிருக்கிற இத்தேஹத்திலே, மேலெழக்கலக்கையன்றிக்கே விடாயர் மடுவிலுள்ளே புகுமாபோலே புகுராநின்றான். * எனதாடலே அருமாயத்தெனதுயிரே மனமேவாக்கே கருமமே ஒருமாகொடியுப்பியாதே.

(இன்று) நேற்றுருவினையில்லை. (தானே) அகர்மவஶ்யனை தானே; இவர் அநாதிகாலம் தேஹத்தை விரும்பிவிடமாட்டாதே போந்தார்; இப்போதிவர்க்குத் தன்பக்கலிலே ருசிபிறந்தவாறே இத்தோடு தொற்றில்லாததானே யிதிலேவந்து புகுராநின்றான் (இதனுள்புகுந்து) அவனைப்போலே முன்னடிதோற்றாதொழியிலிட்டு இவரதில் தோஷதர்ஶநம்பண்ணுதொழிவது.

(தானேயித்யாதி) புகுருகிறபோது தானேயாய், பின்னைத்தான் நானு மநுகூலிக்கப்பெற்றதோ, (தடமாற்றமித்யாதி) தன்பக்கலில் நின்று மென்னைப்பிரித்துத் தடுமாறும்படி பண்ணவல்ல பாபங்களைப் போக்கினான். அவையாவன-"பொங்கைம்புலன்" இத்யாதி. (தேனே யித்யாதி) மதுமிக்கப்பொழிலையுடைத்தான திருப்பேர்நகரையுடையவன் கிடீர் என்னுடைய சரீரத்திலேபுகுந்து ஒருகாலமும் விடமாட்டாதொழிகிறான்; என்னகுறையுண்டாயிப்படிப்பட்டான் (தி

(க) ரா-யு உக-

ஆறும்பாட்டு.

திருப்பேர்நகரான் திருமாலிருஞ்சோலை * பொருப்பேயுறை கின்றபிரானின்றுவந்து * இருப்பேனென்றென்னெஞ்சு நிறையப்பு குந்தான் * விருப்பேபெற்றமுதமுண்டு களித்தேனே. (௬)

பஃ—அநந்தரம், அல்லாதவுகந்தருளினதேசங்களிற்காட்டில் என்னெஞ்சிலேயாதரித்துப் புகுந்தநுபவிப்பிக்க வநுபவித்து ஆநந்தியானேனென்கிறார்.

(இ - ள்.) என்னைக்கிட்டுகைக்காக, திருப்பேர்நகரான்-திருப்பேர்நகரிலேயாய், அநந்தரம், ஆஸந்நமாக, திருமாலிருஞ்சோலை-திருமாலிருஞ்சோலையென்று திருநாமமான, பொருப்பேயுறைகின்ற - திருமலையிலே நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - மஹோபகாரகன், இன்று-இன்று, ஒருஹேதுவின்றிக்கேயிருக்க, வந்து-தானேவந்து, இருப்பேனென்று - " இங்கேயிருக்கக்கடவேன் " என்று ஸங்கல்பித்து, என்னெஞ்சுநிறைய-என்னெஞ்சு பூர்ணமாம்படி, புகுந்தான் - புகுந்தான், விருப்பேபெற்று - அவனுடைய ப்ரீதியை பஹுமாநத்தை ஒருபடிப் படப்பெற்று, அமுதுண்டு - குணாநுபவரூபமான அம்ருதபாநத்தைப் பண்ணி, களித்தேன்-ஆநந்தியானேன். (௬)

ஆறு;—(திருப்பேர்) திருப்பேரையும் திருமாலிருஞ்சோலையையும் தனக்குக்கோயிலாக வுடையவன், தனக்கோரிருப்பிடமில்லாதாரைப்போலே யின்றுவந்து " இருப்பேன் " என்றென்னை யிரந்துகொண்டு என்னெஞ்சு நிறையப்புகுந்தான்; பின்னையும் ஒருநாளைக்கொருநாளவனுக்கும் ஸ்ப்ருஹணீயனாய் நானுமவனுடைய குணங்களாகிற வம்ருதத்தைபுஜித்துக் களிக்கப்பெற்றேனென்கிறார். (௬)

ஈடு-அவ;—தனக்கிருப்பிடமான கோயில்களநேகமுண்டாயிருக்க ஓரிடமில்லாதாரைப்போலே என் ஹ்ருதயத்திலே நிர்ஹேதுகமாக ப்ரார்த்தித்துவந்து புகுந்தானென்று ப்ரீதராகிறார்.

(திருப்பேர்நகரான்) திருவயோத்யையைப் போலேயாய்த்து. (திருமாலிருஞ்சோலைப்பொருப்பேயுறைகின்றபிரான்) (௧) " சயிலம் ப்ராப்ய வஸாமி-அதிகாப்ரவாஸாச்ச " என்னுமாபோலே ; (௨) " ஜஹௌ வ்ருக்ஷம் ப்ராப்ய வாஸம் - ஜஹௌசதுக்கம்ப்ரவிப்ர

---

(௧) ரா-அயோ-௯௯-௧௨- (௨) ரா-அயோ-ருஎ-ந-அ-

வாஸாத்" த்ருச்சித்ரகூடத்திற்போலேயாய்த்து. (௧) "க்ஷேமே ஐவநத்ரே-குபேர இவநந்தநே" குறைவற்றவன் உத்யாநத்திலே வர்த்திக்குமாபோலேயாய்த்து. ஸர்வப்ரகாரத்தாலும் குறைவற்றவனுக்கிறே லீலாரஸத்தில் அந்வயமுள்ளது,

(இன்றுவந்து) இவ்வரவுக்கு வேறொரு நினைவின்றியே யிருக்கவந்து கொடுநிற்கக்கண்டதத்தனை. (இருப்பேனென்று) "இருப்பேன், இருப்பேன்" என்னாநின்றானாய்த்து (௨) "ஐஹைவஸ்யா ஜொ நகாலயாவஸாநஸந்நிதே-இஹைவ வஸ்யாமோ ஹோகேசாஸ்த்வய ஸார்த்தமநிந்திதே" (௩) "ஐஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா - இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா" "ஐயர்கோற்கீழ் வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம், நடுவிலாய்ச்சித்து ப்ரியமில்லாமையாலே போந்தோம், இனி மேலுள்ளநாள் இவர்சிறகின்கீழே வர்த்திக்கப்பாராநின்றோம்" என்றானிறே.

(என்னெஞ்சு நிறையப்புகுந்தான்) "இருந்திடுவானுக்கு" என்றிராத என்னெஞ்சிலே நிறையப்புகுந்தான். (விருப்பேபெற்று) ஆஜ்ஞாநுவர்த்தநம்பண்ணுமையாலுண்டான த்வேஷகார்யமாகவன்றிக்கே; (௪) "தாநஹம் த்விஷத: - தாநஹம் த்விஷத:" என்றிருப்பது போலிருப்புண்டிறே, அங்ஙனன்றிக்கே, அவனுடைய விருப்பத்தையுடையேனாய்,

(அமுதமுண்டுகளித்தேனே) விஷபோகத்தைப்பண்ணி நரகத்துக்குப்போகாநிற்க நடுவே நின்று களிக்கையன்றிக்கே (அமுதமுண்டுகளித்தேனே) அவனுடைய கொண்டாட்டமாகிற அம்ருதபாநத்தைப்பண்ணிக் களித்தேனென்னுதல்; அவனுடைய அம்ருதபாநத்தைப்பண்ணிக் களித்தேனென்னுதல் ஸ்வாதந்த்ர்யப்ரியரானவனைப் நரகத்துக்கு க்ருஷியைப்பண்ணிவைத்துக் களிக்கிறதிறே யது. அதாவது - "அணிமென்குழலாரின்பக்கலவி யமுதுண்டார்" என்றபடி. (களித்தேனே) (௫) "நாவலிட்டுழிதருகின்றோம்."

---

(௧) ரா-அயோ-௯௯-௧௨-
(௨) ரா-அயோ-௩௫-௧௫-
(௩) ரா-ஆர-௧௫-௧௯-
(௪) கீதை-௧௬-
(௫) திருமாலை ௩-

என்று செருக்காலே களிக்கிறகளிப்பேயிறேயிது· யமாதிகள் தலை யிலே யடியிட்டுக் களிக்கப்பெற்றேன். (௬)

ஏழாம்பாட்டு.

உண்டுகளித்தேற்கும்பரென்குறை * மேலைத் தொண்டுகளித் தந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன் * வண்டுகளிக்கும் பொழில்சூழ் திருப்பேரான் * கண்டுகளிப்பக்கண்ணுள்நின்றகலானே. (எ)

ப:—அநந்தரம், இங்கு நித்யாநுபவம்பண்ணும்படி ஸந்நிஹிதனா னவனை யநுபவித்துக்களிக்கிற வெனக்கு மேலென்ன குறையுண்டென் கிறார்.

(இ - ள்.) வண்டுகளிக்கும் - வண்டுகளானவை மதுபாநத்தைப்பண் ணிக்களிக்கும், பொழில்சூழ் - பொழில்சூழ்ந்த, திருப்பேரான் - திருப் பேர்நகரான், கண்டுகளிப்ப-தன்னை ஸதாதர்ஶநம்பண்ணிக்களிக்கும்படி, கண்ணுள்நின்று - என் கண்ணுக்கு விஷயமாய்நின்று, அகலான் - போகி றிலன், உண்டுகளித்தேற்கு - இப்படி நித்யாநுபவம்பண்ணிக் களித்த வெனக்கு, உம்பர் - மேலொரு தேச விசேஷத்திலேபோய் பண்ணுமநு பவத்தில் என்குறை - குறையிடந்தேது, மேலைத்தொண்டு-அதிகமான தாஸ்யரஸமானது உகளித்து - உகளித்து, அந்தி முடிவிலே, தொழும் சொல் " (க) " நமஉக்தி வவாதிநஃ-நமஇத்யேவவாதிநஃ " என்கிற படியே தொழுகைக்கு வாசகமான நமஸ்ஸப்தத்தைச்சொல்ல, பெற் றேன்-பெற்றேன்.

உகளித்தல் - மிகுதல். (எ)

ஆறு;—(உண்டு) என்னுளடங்காதே பொங்கிப்புறப்படுகிற பரமபக்தியவஸாநமாய் இவ்வாத்மாவினுடைய பகவச்சேஷத்வ ப்ரதிபாதகமான திருமந்த்ரத்தினுல் ப்ரதிபாத்யமாயிருந்த பகவத் கைங்கர்யைக நிரத்வத்தைப்பெற்றநான் * கண்களாரளவும் நின்று கண்டுகளிக்கும்படியாகத் திருப்பேராநென்கண்ணுள் நின்றகலான், இப்படி அவனைப்புஜித்துக்களிக்கப்பெற்றவெனக்கு இனிமேல் அந வாப்தமாய் அவாப்தவ்யமாயிருப்பதொரு ப்ராப்யமுண்டோவென் கிறார். (எ)

(க) பாரத-மோக்ஷ-

ஈடு-அவ;—அவனுடையவாதரத்தாலே தமக்குண்டான கார்தார்த்யத்தை யருளிச்செய்கிறார்.

(உண்டுகளித்தேற்கும்பரென்குறை) இப்படி யநுபவித்துக் களிக்கப்பெற்ற வெனக்கொருகுறையுண்டோ. அவனுடைய குணங்களை யநுபவித்து * மயர்வறமதிநலமருளப்பெற்றவெனக்கு மேல் வேண்டுவதொன்றுண்டோவென்கிறார்; ஜ்ஞாநலாபமுண்டான பின்பு "அவ்வருகில் ப்ராப்திபெற்றிலோம்" என்று வருவதொரு குறையுண்டோ; உம்பரென்றது - மேலென்றபடி.

(மேலைத்தோண்டித்யாதி) மேலான தாஸ்யரஸமதிசயித்து. (௧) "யேநயேந யாதாஹூதி - யேநயேந தாதாகச்சதி" என்கிற ரஸத்தையநுபவித்து. (உ) "ஸேவா ஶ்வவ்ருத்தி-ஸேவா ஶ்வவ்ருத்தி:" என்றது போலன்றிறே ஸ்வரூபாநுரூபமானது. (தொண்டுகளித்து) தொண்டாலே உகப்புத்தலைமண்டையிட்டு. அதினுடைய சரமதசையிலே (௩) "நஜநேதகௌவவாதிநோ-நம இத்யேவவாதிந:" என்று புத்திபூர்வகமாகச் சொல்லுவதொன்றுண்டு, அப்பாசுரத்தைச் சொல்லப்பெற்றேன். அதாவது-ப்ரீதிவழிந்த சொல்லாலே திருவாய்மொழி பாடி யடிமைசெய்யப்பெறுகை.

(வண்டித்யாதி) வண்டுகள் மதுபானம்பண்ணிக் களிக்கிற பொழிலாலே சூழப்பட்ட திருப்பேரிலே வர்த்திக்கிறவன், ஜ்ஞாநாதிகரோடு திர்யக்குக்களோடு வாசிபறக்களிக்கும் தேசம், (கண்டுகளிப்ப) "மெய்கொள்ளக்காண விரும்புமென்கண்கள்" என்று விடாய்த்த கண்கள் கண்டுகளிக்கும்படியாக. (கண்ணுள்நின்றகலானே) தான போகச்சொல்லிலும் கண்வட்டத்தில்நின்று பெயருகிறிலன்; விதுரப்ரவணர் போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக்கொண்டு போகாதாப்போலே. இப்படியவனை யநுபவித்துக் களிக்கப்பெற்ற வெனக்கு மேலொருகுறையுண்டோ. (௭)

எட்டாம்பாட்டு.

கண்ணுள்நின்றகலான் கருத்தின்கட்பெரியன் * எண்ணினுண் பொருளேழிசையின்சுவைதானே * வண்ணநன்மணி மாடங்கள் சூழ் திருப்பேரான் * திண்ணமென்மனத்துப் புகுந்தான் செறிந்தே. (௮)

(௧) பரமஸம்ஹி. (உ) மநுஸ்ம்ருதி. (௩) பாரதமோக்ஷ.

ப:— அநந்தரம், ஸர்வப்ரகாரத்தாலும் நிரதிசயபோக்யனாய்க்கொண்டென்னெஞ்சிலே த்ருடமாகப்புகுந்தானென்கிறார்.

(இ-ள்.) கண்ணுள்நின்று - பாஹ்யமான கண்ணுக்கு நித்யாநுபவவிஷயமாய், அகலான் - அகலுகிறிலன், இவன் நினைவைப்பார்த்துவிடத்தில், கருத்தின்கண் - இங்குநின்று மொருதேசவிசேஷத்தேறக்கொடுபோ யநுபவிக்கைக்கிடானபாரிப்பில், பெரியன் - பெரியனாயிராநின்றான். எண்ணில் - "தாந்தாமறிய" என்றெண்ணுமளவில், நுண்பொருள் - அதிஸூக்ஷ்மமான ஸ்வபாவங்களையுடையனாய், தானே - தானே அநுபவிக்குமளவில், ஏழிசையின் சுவை - ஸப்தஸ்வரஸாரஸ்யத்தையுடையனாய், வண்ணம் - நாநாவர்ணமாய், நன்மணி - ச்லாக்யமான மாணிக்கங்களாலே சமைந்த, மாடங்கள்சூழ் - மாடங்கள்சூழ்ந்த, திருப்பேரான் - திருப்பேரிலே வர்த்திக்கிறவன், என்மனத்து - தன்னைப்பெறுகைக்கு விடாய்த்த வென்னெஞ்சிலே, திண்ணம் - நிர்ஹேதுகமாக, இன்று - இன்று, செறிந்து - த்ருடமாம்படி, புகுந்தான் - புகுந்தான். (அ)

ஆறு;—(கண்ணுள்நின்றகலான்) வாங்மநஸாகோசர ஸ்வரூபனாய், பரமபோக்யபூதனாயிருக்க திருப்பேரான், கண்ணுள்நின்றகலான், தன்னாலும் விஸ்லேஷிக்கவொண்ணாதொருபடி யென்னெஞ்சிலேபுகுந்துசெறிந்தான், இன்னமிவ்வளவன்றிவனுடைய பாரிப்பென்கிறார். (அ)

ஈடு-அ-ம:— நிரதிசயபோக்யபூதனை திருப்பேர்நகரான் என்பக்கலிலே வ்யாமோஹத்தைப்பண்ணி ஒருநாளும்போகாதபடி யென்னெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார்.

(கண்ணுள்நின்றகலான்) (ஸதாதர்சநத்துக்கு விஷயமாகாநின்றான்) ஸதாதர்சநத்துக்கு வேறொன்றைக்கொண்டு விபூதியுண்டென்றிருக்கிறிலன், (கருத்தின்கட்பெரியன்) உபயவிபூதியோகத்தால்வரும் மேன்மையையுடையத்தேர்ந்து இவரை யவ்வருகே கொண்டுபோகைக்கிறும், அதிமாநுஷசேஷ்டிதங்களை நியமிக்கைக்கிறும், தான் முற்பட்டனாய்க்கொண்டுபோகைக்கிறும் பாரியாநின்றான்; நங்கார்யத்திலவன் த்வரிக்கிறபடி. நம்மாலெண்ணிப் புடியுமளவல்ல - இப்படத்தாரனுதன்; இது தான் (க) "யஸ்யாமதம் தஸ்ய-மதம்" என்கிறபொருளவாலல்ல, நங்கார்யத்தில் விசாரிக்கையிருக்கும்; "என்மனத்துப்புகுந்தான்"

(க) கேனோபநி-

என்கிறதத்தோடு சேரவேணுமிறே (கருத்தின்கண்பெரியன்) என்கிற விதுவும்.

(எண்ணில்நுண்பொருள்) அவன்தானே யிப்படி மேல்விழில் விழுமித்தனை போக்கித் தாந்தாமேயறியப்பார்ப்பார்க்கு அறியப்போகாது. "அறியவரியன்" என்று கைவாங்கியிருக்கலாம் வஸ்து வன்று; (எழிசையின் சுவைதானே) வருந்தியும் மேல்விழவேண்டும் விஷயமாய்த்து. இது ரஸ்யதையிருந்தபடி.

(வண்ணமித்யாதி) இது மேன்மையிருந்தபடி. [என்மனத்துள்-செறிந்து-புகுந்தான்] (க) "அநந்யா ராகவேணாஹம்" என்கிற விஷயத்திற்போலே பிரிக்கவொண்ணாதபடி புகுந்தான்; "எனதாவி புள்கலந்த" என்னுமாப்போலே.

"ஸர்வாதிகனானவ னிப்படி நமக்கு மேல்விழக்கூடுமோ" என்று தாமும் சங்கைபண்ணினார்; அதுக்குவேறு போக்கடி கண்டிலர் (திண்ணம்) நிஸ்சிதம். இதில் கண்ணழிவில்லை. (அ)

ஒன்பதாம்பாட்டு.

இன்றென்னைப்பொருளாக்கித்தன்னை யென்னுள்வைத்தான் * அன்றென்னைப்புறம்போகப் புணர்த்ததென்செய்வான் * குன்றென்னத்திகழ்மாடங்கள் சூழ்திருப்பேரான் * ஒன்றெனக்கருள்செய்ய வுணர்த்தலுற்றேனே. (கூ)

ப:— அநந்தரம், "இன்று நிர்ஹேதுகமாக வுபகரித்தவன் முன்பு உபேக்ஷித்ததுக்கு ஹேதுவென்" என்று கேட்கவேணுமென்றிருக்கிறார்.

(இ-ள்) இன்று - ப்ரதமகடாக்ஷம்பண்ணின விதுக்குப் பின்பான விக்காலம், என்னை-முன்பு (உ) "அஸந்நேவ ஸ பவதி" என்னும்படி கிடந்தவென்னை பொருளாக்கி-"ஸந்தமேநம் ததோ விது:" என்னும்படி வஸ்துவாக்கி; தன்னை-விலக்ஷணபோக்யபூதனான தன்னை. என்னுள் - ஹேயமான வென்னெஞ்சுக்குள்ளே, வைத்தான்-தானே கொண்டுவந்து வைத்தான். அன்று - அந்தக்கடாக்ஷத்துக்கு முன்பானவன்று. என்னை-

---

(க) ரா-ஸு உக-கரு.

(உ) தைத்-ஆந-

தானிட்ட வழக்காம்படியாராநின்றனென்னை, புறம்போக - தன்பக்கலிலே விமுகனாய் விஷயாந்தரங்களிலே கைகழிந்துபோம்படி, புணர்த்து - ஸங்கல்பித்து, என்செய்வான் - ஏது செய்வானாக, குன்றென்னக் குன்றென்று சொல்லலாம்படி, திகழ்மாடங்கள்சூழ் - விளங்குகிற மாடங்கள் சூழ்ந்த, திருப்பேரான் - திருப்பேரான், ஒன்று - இவையிரண்டிலுமொன்றுக்கு ஹேதுவை, எனக்கருள்செய்ய - எனக்கு அருளிச்செய்கைக்காக, உணர்த்தலுற்றேன் - "தன்திருவுள்ளத்திலேபடும்படி யறிவிக்கவேணும்" என்று உத்யோகித்திருந்தேன்.

ஒன்றுசொல்ல மற்றையது தத்வ்யதிரேகஸித்தமென்று கருத்து; நிர்ஹேதுகவிஷயீகாரத்துக்குஹேது ப்ரஶ்நம்பண்ணில் ஸர்வஜ்ஞனுக்கு முத்தரமில்லையிறே. (௬)

ஆறு;—(இன்றென்னை) திருப்பேரநகரான் இன்றென்னை ஸ்வவிஷய திவ்யஜ்ஞாநவானாக்கித் தன்னையென்னுள்ளே வைக்கைக்கு ஹேதுவென், இதற்குமுன்பிப்படி செய்யாதொழிகைக்கு ஹேதுவென் என்று அவனைநான்கேட்கிறேன், இதற்கோருத்தரம் வல்லனாகில் சொல்லுவானென்கிறார். ஒருக்ஷணம்பிரியில் தரிக்கமாட்டாதே யபேதகதாரகனாயிருக்கிறவிவன் இதுக்குமுன்பு அநாதிகாலமெல்லாமென்னைவிட்டெங்ஙனே தரித்திருந்தானென்று கேட்கிறானென்றுமாம். (௬)

ஈடு ஆவ;—"இன்றென்னை விஷயீகரிக்கைக்கும் முன்பென்னையுபேக்ஷிக்கைக்கும் காரணமென்" என்று கேட்கவேண்டியிருந்தேனென்கிறார்.

ஆக, ஸர்வேஶ்வரன் தம்மைப்பரமபதத்திலே கொடுபோவதாகவிரைகிறபடியைக்கண்டு "இன்றென்னைவல்லாதபடி த்வரிக்கிற தேவர் இதுக்குமுன்பு கைவிட்டு ஆறியிருந்தபடியெங்ஙனே" என்று அவன்றன்னைக்கேட்கிறார். இன்றிப்படி விரைகிறமை மெய்யாகில் முன்புவிட்டாறியிருக்கக்கூடாதென்கிறார்,

(௧) "நசாஹம் ஸலோக ஜாநீதே ..... த்வாமிஹஸ்தாம் ஜாநீதே" என்று நடுவேசிலர் சொல்லவேண்டும்படியாய்த்து - எழுந்தருளியிருந்தவிடமறியாமையாலே ஆறியிருந்தாரித்தனைபோக்கி; அறிந்தா

(௧) ரா-ஸு ௨-

வொருக்கணமாறியிருப்பரோ, இதுதானென்வார்த்தைகொண்டறிய வேணுமோ [க்ஷணமௌவிந - கமலலோசநே] உட்புடைபகண்ணழகேயன்றோ இதில் ப்ரமாணம். [ராஜ-ரா?] அவனையறிய தெரியவேணுமோ, (௧) "நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம் - நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்" என்கிற யவிருப்பது. [ராஜ்க்ஷணமௌவிந - ராமஸ்யலோசநே] அவனையறியாமையுமில்லை. உள்ளே நீர் சுன்றுப்புறத்திலுள்கண்டறியாமையுமில்லை. [க்ஷணமௌவிந - கமலலோசநே] அன்றிக்கே, ஆசிரியாகத்தானிக்கண்ணிவப்பும் சிற்றமு மெல்லாமென்னுதல்.

(இன்றென்னைப்பொருளாக்கி) அசைக்கப்பாரா வென்னை இன்றொரு வஸ்துவாம்படி பண்ணி "பொருளல்லாத வென்னை" என்றாரிறே. (தன்னை) ஸத்தைக்கு [illegible] (என்னுள்வைத்தான்) தன்னைப்பிறர்க்கவகாசமில்லாதபடி பூர்ணமாக வென்னுள்ளே கொடுவந்துவைத்தான்.

(அன்று) அவன் விசேஷகடாக்ஷம்பெறுவதற்கு முன்புள்ள நாளை யெல்லாவற்றையும் சொல்லுகிறார். இன்றென்கிற - *பாரமார்த்திகமான[illegible] [illegible] (என்னைப்புறம்போகப் புணர்த்ததென்செய்வான்) (பாசுக்ருத்யன் [illegible] னைப்புறம்போகப் பண்ணிற்றென் செய்கைக்காக; [illegible] றுகையாகிறது - உபேக்ஷிக்கை.) "இருக்கமாயிருந்த [illegible], பெற்றவின்று பெறுநதுமவனே" என்கிறார்; [illegible] செல்லகிற்கவற்றோ, வாகிற்கவற்றோ.

(குன்றித்யாதி) [illegible]

தாய்போலே [illegible]

(ஒன்றெனக்கருள்செய்ய) [illegible]

பாம், இன்றென்னை [illegible]

(உணர்த்தலுற்றேனே) [illegible]

றுமென்று திருவுள்ளக்கிலே [illegible]

யிராநின்றேன்.

"இனைய [illegible]" [illegible];

"* அடியேனை [illegible]

(௧) ரா-ஸு-௬௬-௧௦.

என்றார். "ஆனால், நாமும்முடையநெஞ்சிலே புக்கிருக்கிறவிடத்தில் ஸம்வதித்திருந்தீர்; அத்தாலேகாணும்" என்றான்; "ஓம், அதுதா தானுண்டோ, *யாறெட்டியென்னுளிருத்துவம்" என்றார்: "அதில்லையாகிலும் புகுந்தபின்பு நம்மையாதரித்தீரே" என்றான்; "'மருவித்தொழும் மனமேதந்தாய்' என்று அதுவும் தேவர்செய்தவித்தனை" என்றார்; "ஓங்காணும், அதில்லையாகிலும் நம்மோடொக்க விஷயாந்தரங்களையும் விரும்பாதேயிருந்தீரே" என்றான், "'என்னைத்தீமனங்கெடுத்தாய்' என்று அதுவும் தேவரேயன்றோ" என்றார்; "இவையொன்றுமில்லையாகிலும் நாம்தந்த *மதிநலத்தை வளர்த்துக்கொடுபோந்தீரே" என்றான். "'காதல்கடல்புரைய விளைவித்தகாரமர்மேனி' என்று அதுவும் தேவரீரேயன்றோ" என்றார்; இப்படியிவர் முடியத்தொடர்ந்தவாறே பெருங்கடல் மண்டினாரைப் போலே போக்கற்றான்.

"இதுக்கு ஈஶ்வரன்சொன்னவுத்தரமென்" என்று ஜீயர் பட்டரைக்கேட்க; "இவர்தலையிலே யொருபழியையேறட்டு கெடுநாவிழந்த நாம்சொல்லுவதென்' என்று லஜ்ஜாவிஷ்டனாய் காலாலே தறையைக்கீறிகிறதுமித்தனைபோக்கி வேறுத்தரமுண்டோ" என்றருளிச்செய்தார். அதாவது "முன்புருசியில்லாமையாலே" என்னமாட்டான், "இப்போது ஸாதநாநுஷ்டானம் பண்ணுகையாலே" என்னமாட்டான். ஆனால் பின்னை ஈஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யாதிகள்வருதல் ஸர்வமுக்திப்ரஸங்கம் வருதல் செய்யாதோவென்னில்; அதுசெய்யாது, அடியிலே அத்வேஷமும் இச்சையும் பிறக்கைக்குத்தான் க்ருஷிபண்ணி அது பக்வமானளவும் பார்த்திருக்கிறவனாகையாலே.

அவன்கேட்டதுக்கொரு மறுமாற்றம் சொல்லக்காணாமையாலே "அறிந்தோம், இதுக்குஹேது இங்ஙனேயாகவேணும்" என்று பார்த்தார்—"தன்னுடையஸ்வபாவம் ப்ராதிகூல்யமாகைதவிர்ந்து விலக்காமையும் பார்த்திருந்தானாதல், தன்னையொழிந்தவற்றில் ஸாதநபுத்தி தவிருமளவும் பார்த்திருந்தானாதலாகவேணும்" என்றுபார்த்தார்.

ஆனாலிதுதன்னை அவனுத்தரமாக வருளிச்செய்யாதொழிவானென்னென்னில்; "சைதந்யப்ரயுக்தமாய் வருகிற அத்வேஷத்தை

ஸாதநமென்னமாட்டானே, உபாயபாவம் தன்கலையிலேயாய்த்தே, நெடுநாள் இவர்கலையிலே பழியிட்டிருந்த நாமெத்தைச் சொல்லுவது" என்று பேசாதேயிருந்தான். (க) "ஹ்ரீரேஷா ஹிமஹா தமா-ஹ்ரீரேஷா ஹிமமாதுலா" என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து நிற்குமவனிறே;

இவர் காமெடுத்துவைத்து வார்த்தை சொல்லும்படியாய்த்து அவன் நிலை. கைங்கர்யப்ரயுக்தமான ருசிகாண் ஸ்வரூபநிரூபகமன்றிறே. "உம்முடையப்ராப்யம் பெற்றீராகில் உமக்கிதுவந்தவழி யாராய வேணுமோ, உம்முடைய ப்ராப்யம் பெற்றீராகில் அதுவேயமையாதோ" என்ன, அதுவேயமையுமென்கிறார்; தேங்காய்க்கிளநீர்புக்க வழியாராய்ந்தன்றிறே விடாய்த்தவனிளநீர்குடிப்பது. (கூ)

பத்தாம்பாட்டு.

உற்றேனுகந்து பணி செய்துனபாதம் பெற்றேன் * ஈதேயின்னம் வேண்டுவதெந்தாய் * கற்றார் மறைவாணர்கள் வாழ்திருப்பேராற்கு * அற்றாரடியார் தமக்கல்லல் நில்லாவே. (கo)

ப:—அநந்தரம், கைங்கர்யப்ரதிஸம்பந்தியான வுன்திருவடிகளை யடிமைசெய்துபெற்றேன், யாவதாத்மபாவி யெனக்கிதுவே யமையு மென்கிறார்.

(இ-ள்.) உற்றேன் - நிர்ஹேதுகமாக உன்திருவடிகளைக் கிட்டினேன், அத்தாலே. உகந்து-ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு. பணிசெய்து-வாசிகமானவடிமைசெய்து, உனபாதம்பெற்றேன் - பரமப்ராப்யமான வுன்திருவடிகளைப்பெற்றேன், எந்தாய் - நிருபாதிகபந்துவானவனே. ஈதே - இவ்வடிமையே. இவ்வாத்மாவுக்கு. இன்னம்-இன்னமுள்ள காலமும். வேண்டுவது - அபேக்ஷிதம், இதுண்டாகவே, கற்றார்-ஆசார்யமுகத்தாலே ஜ்ஞாதவ்யங்களை அப்யஸித்தவர்களாய், மறை - ப்ரதிபாத்யமான வேதார்த்தங்களை, வாணர்கள் - நிர்வஹிக்க ஸமர்த்தரானவர்கள் வாழ் - பகவதநுபவத்தோடே வாழுகிற. திருப்பேராற்கு - திருப்பேர்நகரிலே வர்த்திக்கிறவனுக்கு. அற்றார் - அநந்யார்ஹரானவர். அடியார்தமக்கு - அடியார் தமக்கு, அல்லல் - அநுபவப்ரதிபந்தக துக்கங்கள், நில்லாவே - தம்மை யடையே நில்லாதிறே.

அற்றாருக்கடியாரென்றுமாம்.

(க) ரா-ஆர-கo-கசு

ஆறு;—(உற்றேன்) எம்பெருமான், ஒருத்தரம்காணாமை “உம்முடையதிறத்தில் நான்செய்த செயலெல்லாம் நீர்சொன்னபடியே நிர்ஹேதுகமாகவேசெய்தேன், அதுநிற்க, இனிநான் செய்ய வேண்டுவதென்”என்ன;

“உன் திருவடிகளைப்பெற்றேன், பெறுகிறேன், உகந்துபணிசெய்துகொண்டு உன்திருவடிகளைப்பெற்றேன், இன்னமுன் திருவடிகளிலடிமைசெய்யு மிதுவே யெனக்குவேண்டுவதெந்தாய்” என்று ஆழ்வார்சொல்ல; எம்பெருமானும், “அப்படியேசெய்கிறோம்” என்றருளிச்செய்ய; ஆழ்வாரும், திருப்பேர்நகரான் திருவடிகளைப்பற்றினார்க் கொருதுக்கமில்லையாகாதேயென்கிறார். (௧௦)

ஈடு-அவ;—இவர்கேட்ட விதுக்கொரு ஹேதுகாணாமையாலே நிருத்தரனாய், “உமக்குமேல்செய்யவேண்டுவதென்” என்ன, ப்ரீதிபூர்வகமாக வடிமைசெய்யப்பெற்றேன், இதுவே யின்னம்வேண்டுவதென்கிறார்.

“அவன்றானேசெய்தான்” என்னுமன்று அவனுக்கு வைஷம்யமும் நைர்க்ருண்யமும் ஸர்வமுக்தியும் ப்ரஸங்கியாதோவென்னில்; இத்தலையில் ருசியை யபேக்ஷித்துச்செய்கையாலே அவனுக்கவை தட்டாது. அதுஹேதுவென்று ஈஶ்வரனுக்கு உத்தரமானாலோ வென்னில்; அது உபாயமாகமாட்டாது. பலவ்யாப்தமானதிறே உபாயமாவது; இந்தருசி அதிகாரி ஸ்வரூபமாகையாலே தத்விசேஷணமாயித்தனை. உபாயம் ஸஹகாரிநிரபேக்ஷமாகையாலும், இந்த ருசி யுபாயமாகமாட்டாது; இது உபாயமாகாமையாலே இவர்க்கில்லையென்னலாம், ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தமாக வவனுக்குண்டென்னவுமாம்.

(உற்றேன்) கெடுமரக்கலம் கரைசேர்ந்தாப்போலே கிட்டிக்கொடுநின்றேன். (உகந்தித்யாதி) ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு திருவாய்மொழிபாடி உன்திருவடிகளை யநுபவிக்கப்பெற்றேன்: உகந்து பணிசெய்கை - ஸாதநமாய், மேல் ஸாத்யமாகச்சொல்லுகிறதன்று; இரண்டும் ஏககாலத்திலேயுள்ளதாகையாலே.

(ஈதேயின்னம்வேண்டுவது) இதுதானே மாறிமாறி யாவதாத்மபாவியாய்ச்செல்லுகையிறே. புநராவ்ருத்தியின்றிக்கேயொழிகை யாவது - மீளாதொழிகை. அப்ராப்தமா யிருக்கிறதோவென்னில்

(எந்தாய்) இவ்வநுபவம் ஸ்வரூபப்ராப்தமென்கிறது. இத்தலைக் சேஷத்வமும் தேவர்க்கு சேஷித்வமுமிறே ஸ்வரூபம்.

இவரபேக்ஷித்தபோதே அவனும் "செய்கிறோம்" என்ன, ப் தமாயருளிச்செய்கிறார் (கற்றார்) ஓராவரக் கின்றி ப்ரீநந்த போ ஜனவர்கள், (மறைவாணர்கள்வாழ்) வேதத்துக்கு வ்யாஸபத செலுத்தவல்லவர்கள் அநுபவித்து வர்த்திக்கிறதேசம். (திருப்பே ராற்கு) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே முகத்தை மாறி ஸ்வகதமாகச் சொ லுகிறானென்னுதல், திருப்பேரானை வுணக்கென்னுதல்.

(அற்றாரடியார்) திருப்பேர்நகரானுக்கற்றாரான வமயாரெ ன்னுதல், அவனுக் கற்றவர்களுக்கடியாரென்னுதல், (அல்லல்நில்ல வே) ஒருதுக்கங்களு மிவர்கள்பக்கல் நில்லாது. (கo

---

பதினொன்றாம்பாட்டு.

நில்லாவல்லல்நீள்வயல்சூழ் திருப்பேர்மேல் * நல்லார்பல வாழ்குருகூர்ச் சடகோபன் * சொல்லார்தமிழாயிரத்துளிவைபத் தும் வல்லார் * தொண்டராள்வது சூழ்பொன்விசும்பே (கக

ப:— அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக ஸ்வாராஜ்ய ப்ராப் தியை யருளிச்செய்கிறார்.

(இ - ள்) அல்லல்-துக்கத்துக்கு, நில்லா - வாஸஸ்தாநமல்லாத தேசமாய், நீள்வயல்சூழ் - பெரியபரப்பையுடைத்தான வயல்களாலே சூழப்பட்ட, திருப்பேர்மேல் - திருப்பேர் விஷயமாக, நல்லார் - விலக்ஷ ணபுருஷரானோர், பலர் - பலரும், வாழ் - திருவாய்மொழிகேட்டுவாழு கிற, குருகூர்ச்சடகோபன்-திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய, சொல்லார் - சொல்லாய்ச்சேர்ந்திருக்கிற, தமிழ் - தமிழான, ஆயிரத்துள்- ஆயிரத்துள், இவைபத்தும்வல்லார் - இவைபத்தையும் அப்யஸிக்கவல் லரான, தொண்டர் - பாகவதரானவர்கள், ஆள்வது - தாங்கள் நிர்வாஹக ராய் நடத்துவது. சூழ்-அபரிச்சிந்நமாய்க்கொண்டு வ்யாப்தமாய், பொன் - தேஜோமயமாய், விசும்பு - பரமவ்யோம ஸப்தவாச்யமான பரமபதம்,

இது கலித்துறை.

ஆறு;—(நில்லாவல்லல்) "அவன் திருவடிகளை யாஶ்ரயித்தார்க் கல்லல் நில்லாவே, இது நிஶ்சிதம்" என்றுகொண்டு இத்தையே பின்னையு மநுபாஷித்து, திருப்பேரை ப்ரதிபாதித்த வித்திருவாய் மொழி வல்லாரிட்டவழக்காம் திருநாடென்கிறார். (௧௧)

ஈடு - அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்க வல்லாரிட்டவழக்கு பரமபதமென்கிறார்.

(நில்லாவல்லல்) துக்கங்களானவை, "இது நமக்குதேச மன்று" என்று தாமேவிட்டுப்போம்.

(நீள்வயலித்யாதி) பெருத்தவயல்சூழ்ந்திருந்துள்ள திருப்பேர் மேலேயாய்த்துச்சொல்லிற்று. (நல்லாரித்யாதி) விலக்ஷணர்பலரும் தம்மையநுபவித் தினியராயிருக்கும் திருநகரியை யுடையராயிருக்கு மாழ்வாரருளிச்செய்தது.

(௧) [நல்லார்நவில் குருகூர்] (௨) "ஸஹ்ருஷ்டாஸ்ஸமதஸ் ஸ்ருஷ்டா:- ஸர்வ தாபிகதஸ்ஸத்பி:" (சொல்லாரித்யாதி) சொல்சேர்ந்த தமிழான வாயிரமென்னுதல்; (௩) "ஶ்ரோத்ரஸுகம் - பாட்யேகே யேசமதுரம்" என்கிறபடியே; இனிமைக்கும் சொல்லேயமைந்த தமிழானவாயிரமென்னுதல்;

(இப்பத்தும்வல்லார்தொண்டர்) இத்தையப்யஸிக்கவல்லார், "செஞ்சொற்கவிகள்" என்கிறபடியே வாசிகமான வடிமைசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள். (ஆள்வதுசூழ்பொன்விசும்பே) நிரதிசயதேஜோரூபமான பரமபதத்தையாய்த்து ஆளுவது. இத்திருவாய்மொழி யப்யஸித்தவர்கள் சென்றால், "ஆண்மின்கள்வானகம்" என்றாய்த்து அங்குள்ளார் சொல்லுவது, (௧௧)

பத்தாம்பத்து எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

---

(௧) திரு-விரு-௧௦௦- (௨) ரா-பா-௧ ௩-௬- (௩) ரா-பா-௪-அ-

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாந் திருவாய்மொழி

சூழ்விசும்பு - ப்ரவேஶங்கள்

ஆறு:—(சூழ்விசும்பு) இப்படி நிர்ஹேதுகமாக வெம்பெருமா னோடே ஸம்ஶ்லிஷ்டரான ஆழ்வார், தாம் திருநாட்டேற வெழுந்தரு ளும்படியையும், தாமெழுந்தருளும்போது ஸர்வலோகங்களும் தம் மைக்கொண்டாடும்படியையும் திருவுள்ளத்தாலே ப்ரத்யக்ஷீகரித்து, அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

ப:—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிறுதி யாக பகவத்விஷயமாகத் தமக்கநுபவப்ராவண்யரூபமான பரபக்தி நடந்தபடியை யருளிச்செய்து, அநுபவத்திலர்விசரானவிவர்க்கு பரி பூர்ணாநுபவத்தில் ப்ராவண்யாதிஶயம்பிறக்கைக்குறுப்பாக விவரைக் கொண்டுபோ யநுபவிப்பிப்பதாகநினைத்து, அர்ச்சிராதி மார்க்கம்முத லாக ப்ராப்திபர்யந்தமான ப்ரயோஜநாம்ஶத்தை பரஜ்ஞாநவிஷய மாம்படி ப்ரகாஶிப்பிக்கநினைத்த ஸர்வேஶ்வரனுடைய போக்யதாபூர்த் தியையும், நிருபாதிகசேஷித்வத்தையும், அநந்யார்ஹதாபாதகத்வத்தை யும், போக்யத்வபூர்த்தியையும் அதுக்கடியான ஶ்ரிய:பதித்வத்தையும் ஶேஷித்வசிஹ்நத்தையும் ஸமுத்ரஸாயித்வாதிகளால்வந்த ஸர்வாதிக த்வத்தையும், ஆஶ்ரிதஸௌலப்யத்வத்தையும், பரமபதநிலயத்வத்தையும் ஸத்காரத்தையு மநுபவித்து. எவம்பூதனான ஸர்வேஶ்வரன், முக்தராய்ப் போகிற பாகவதர்க்கு கர்தவ்யமான அர்ச்சிராதிமார்க்கத்தையும் அங் குண்டான ஆதிவாஹிக ஸத்காரப்ரகாரங்களையும், தேசவிசேஷப்ராப்தி யையும், நித்யஸூரிபரிஷதந்தர்ப்பாவத்தையு மபரோக்ஷிப்பிக்க, அதி லே அத்யந்தஹ்ருஷ்டராய், தாமபரோக்ஷித்த க்ரமத்திலே முக்தராய்ப் போகிற பாகவதருடைய ஸத்காரப்ரகாரத்தையருளிச்செய்கிறார்.

ஈடு:—பரமயோகிகளுக்குப் பிறக்கக்கடவதான பரபக்தி இவர்க் குப்பிறந்து, தத்ப்ரகாரங்களை பத்துத் திருவாய்மொழியாலுமா யநு பவித்து, இனியிங்கிருந்தநுபவிக்குமது கொண்டல்லாமையாலே "பரம பதத்தேறப்போகவேணும்" என்று மநோரதிக்கிறவளவில், இவரிற் காட்டில் சடக்கெனக் கொடுபோகவேணும்" என்று விரைகிற ஸர்வேஶ் வரன்; அங்குத்தை யநுபவத்துக்கிடாம்படி மிகவும் விடாய்பிறக்கை

க்காக, தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைக் கண்ணாலேகண்டாப்போலே விஶதமாக ப்ரகாசிக்கும்படி பண்ணியருளினான்.

அதாவது-வேதாந்தங்களில் ப்ரஸித்தமான வர்ச்சிராதிமார்க்கத்தையும், ஶரீரவிஶ்லேஷஸமயத்தில்வரும் க்லேசமெல்லாமாறும்படி தான்வந்து முகங்காட்டும்படியையும், மார்க்கஸ்தரான புருஷர்களுடைய ஸத்காரங்களையும், அம்மார்க்கத்தாலேபோய்ப் புகக்கடவ பரமபதத்தையும், நித்யஸூரிகள்வந் தாதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாதனும் எதிரேவந்தாதரிக்கும்படியையும், நித்யஸூரிகள்ஸேவிக்கப்பிராட்டிமாரோடேவீற்றிருந்தருளுகிறபடியையும், பரமப்ராப்யரான நித்யஸூரிகள்நடுவே தாமாநந்தநிர்ப்பரராயிருக்கும்படியையும்காட்டியருளக்கண்டு ப்ரீதராய், அத்தை அந்யாபதேசத்தாலேபேசி யநுபவிக்கிறார்; தமக்கவன்பண்ணிக்கொடுத்தபேற்றை வைஷ்ணவர்களெல்லாரும் பெற்றார்களாகப்பேசினவிது-அந்யாபதேசமாவது: அதுதனக்கு ப்ரயோஜநம்-இங்குள்ளார் "நமக்குமாழ்வார்பேறுதப்பாது" என்றிருக்கைக்காக.

முதற்பாட்டு.

சூழ்விசும்பணிமுகில் தூரியமுழக்கின* ஆழ்கடலலைதிரை கை யெடுத்தாடின * ஏழ்பொழிலும் வளமேந்திய வென்னப்பன்* வாழ் புகழ் நாரணன்றமரைக் கண்டுகந்தே. (௧)

ப:—முதற்பாட்டில், அர்ச்சிராதிமார்க்ககமநத்தி லொருப்பட்டவர்களாய் போக்யகுணபூர்ணனான ஸர்வேஶ்வரனுடைய சேஷபூதரான பாகவதரைக்கண்டு சராசராத்மகமான ஜகத்துக்குண்டான ப்ரீதிவிகாரத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) என்னப்பன் - எனக்கஸாதாரணபந்துவாய், வாழ்புகழ்-ஆநந்தாவஹமான குணப்ரதையையுடைய, நாரணன்தமரை-நாராயணனுக்கஸாதாரணபந்துக்களான சேஷபூதரை, கண்டுகந்து-கண்டுப்ரியப்பட்டு, சூழ்விசும்பு-ஸர்வப்ரதேசத்திலும்சூழ்ந்தவாகாசத்திலே, அணிமுகில்-திரண்டுதோன்றின மேகங்களானவை, தூரியம்முழக்கின - தூர்யகோஷத்தைப்பண்ணிற்றின. ஆழ்கடல்-அகாதமானகடல்களானவை, அலைதிரை-அலைந்துவருகிறதிரையை, கையெடுத்தாடின - கையாகவெடுத்து

ஆடிற்றின, ஏழ்பொழிலும் - ஸப்தத்வீபங்களும், வளம்-உபஹாரரூமான நல்லவஸ்துக்களை, ஏந்திய - ஏந்திற்றின.
வளமென்று - புதுக்கணிப்பாகவுமாம் (௧)

ஆறு;—திருநாட்டுக்குப்போகையிலே ப்ரவ்ருத்தரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டுகந்து, அசேதநமான மேகங்களுங்கூட, இவர்கள் போகக்கடவிய ஆகாசத்தையெல்லாம் பூரித்துக்கொண்டு நின்று தூர்யகோஷத்தைப் பண்ணின, கடல்களானவை திரைகளாகிற கையெடுத்தாடின, இப்படி ஸர்வலோகங்களும் மங்களமான செயல்களைச் செய்தனவென்கிறார், (௨)

ஈடு - அவ;—பரமபதத்துக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்தாவரஜங்கமங்களுக்குண்டான விக்ருதியையருளிச்செய்கிறார்.

(சூழ்விசும்பு) பூமியைச்சூழும்படி யிடமுடைத்தான ஆகாசத்திலே. (அணிமுகில்) ஆபரணமான முகிலென்னுதல், ஆகாசப் பரப்படங்கலு மணியப்பட் டமுகிலென்னுதல், (தூரியமுழக்கின) தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின. (சூழ்விசும்பித்யாதி) காந்தர்வ பரொப்பித்துநின்று பெரியமண்டபங்களிலே திரையுங் கொட்டுமாப்போலே காணும் இவையிருக்கிறது. (௧) [ந்ருஜேஷு ... ஜகர்ஜுர்ஜலதா:] இவன்போக்குக்கடியான வஸுதேவன் வயிற்றிலே பிறந்த விக்ருதியிலேறயிறு; இவன்றன் போகப்புக்கால் சொல்லவேண்டாவிறே அவற்றுக் கபிமாநிகளான இந்த்ரவருணபர்ஜந்யங்களைச் சொல்லிற்றாகவுமாம்.

(ஆழ்கடல்) எல்லாவற்றையும் தன்னுள்ளே யடக்கவற்றான அளவுடையகடல், ஐச்வர்யங்கள் நிறைந்து ... திரையாகிற கையையெடுத்துக் கூத்தாடிற்றின. (ஏழ்பொழிலும் ஏந்திய) ஸப்தத்வீபங்களும் புதுக்கணிக்கை உபஹாரங்களைத் தரித்தனவென்றுமாம். இதெல்லாம் கண்டதெங்கேயென்னில் (என்னப்பன்) எனக்குப்பரமபந்துவானவன்.

இவர்களோடு நிருபாதிகஸம்பந்தமுண்டானால், ... ஸம்பந்தமுள்ளவை யெல்லாவற்றுக்கும் பரதிகர்ஷமாயிருக்குமிறே

(௧) வி-பு-ரு-ந-௭-

குமிறே. ராஜபுத்ரன்போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க்கெல்லா மங்கீகரிக்கவேண்டுமாபோலே. (வாழ்புகழ்நாரணன்) ஆஸ்ரிதர்வா ழும்படி பண்ணவற்றானகல்யாணகுணங்களையுடைய ஸர்வேஸ்வரன் ; அவன்றன்னைக்கண்டோவென்னில் ; (அவன்தமரைக்கண்டு) அவன் கேட்குமென்னும் ப்ரீதியாலேயோவென்னில் (உகந்தே) ப்ரீதிப்ரேரி தராய், (௧)

இரண்டாம்பாட்டு.

நாரணன்தமரைக் கண்டுகந்து நன்னீர்முகில் * பூரணபொற்கு டம் பூரித்தவுயர்விண்ணில் * நீரணிகடல்கள் நின்றார்த்தன* நெடு வரைத் தோரணம்நிரைத்தெங்கும் தொழுதனருலகே. (உ)

ப:—அநந்தரம், நிருபாதிகசேஷியான நாராயணனுக்கு சேஷபூத ரானவர்களைக்கண்டு லோகத்தார் ஸத்கரித்தப்ரகாரத்தை யருளிச்செய் கிறார்

(இ - ள்.) நாரணன்றமரைக்கண்டு - நிருபாதிகசேஷியான நாராய ணனுக்கு சேஷபூதரானவர்களைக்கண்டு, உகந்து - உகப்பை யுடைத் தாய், நல்நீர்முகில் - சுத்தமானஜலத்தாலே பூர்ணமான மேகமானது, உயர் - த்வாரவேதிகைகளிற்போல உயர்ந்த. விண்ணில்-ஆகாசத்திலே பூரணம் - பூர்ணமான. பொற்குடம் - பொற்குடங்களாக, பூரித்தது - நிறைத்தது. நீரணி நீரைவஹிக்கிற, கடல்கள் -கடல்களானவை, நின்று- ஒருபடிப்பட்டுநின்று, ஆர்த்தன - கோஷித்தன, நெடுவரை - நெடுவரை களாகிற தோரணம்நிரைத்து - தோரணங்களைநிரைத்து, உலகு - உலகி லுள்ளார், எங்கும், தொழுதனர் - தொழுதனர்.

முகிலென்கிறவொருமை - ஜாதிபரம். இவ்விரண்டுபாட்டாலும் - அந்தரிக்ஷபர்யந்தமான பூலோகமானது உகந்தாதரித்தபடியை ப்ரதர் ஸிப்பித்தாராய்த்து. உலகமென்று-லோகப்ரதாநரை லக்ஷிக்கிறது.(உ)

ஆறு :—(நாரணன்) நாரணன்றமரைக்கண்டு மேகங்களுகந்தன ; ஆகாசசரரானதேவாதிகள் ஆகாசத்திலே பூர்ணகும்பங்களைப் பூரித் தார்கள், நீரணிகடல்கள் நின்றார்த்தன, நெடுவரைபோலேயிருந்த தோரணம்நிரைத்தெங்கும் தொழுதனருலகர்களென்கிறார். (உ)

ஈடு - அவ;—மேலுண்டான லோகங்கள்பண்ணின ஸத்காரங்களை யருளிச்செய்கிறார்.

(நாரணனித்யாதி) நிருபாதிகஶேஷியானவனுடையாரைக்கண்டு; நல்லநீரையுடைத்தான மேகங்களானவை, உகப்பாலே, உயர்ந்தவாகாசத்திலே பூர்ணகும்பங்களாகச் சமைக்கப்பட்டன, மறபடக்கண்டுகந்தன, பின்பு அவைதாமே பூர்ணகும்பங்களாய்த்தின வென்கை. "ஒருக்கால்தூர்யகோஷம்பண்ணினேனுமிறே" என்றிருக்கிறனவில்லை, ஆகாசசரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம்.

(நீரித்யாதி) நீராலே யணியப்பட்டகடல்கள், "ஒருக்காலடிஞேம்" என்றிராதே, ஹர்ஷத்தாலே நிரந்தரமாகவார்த்துக்கொண்டன. (நெடுவரையித்யாதி) அவ்வோலோகங்களிலுள்ளார், நெடியவரைபோலேயிருந்துள்ள தோரணங்களைநட்டுத் தாங்களும் தொழுதார்கள். * உலகமென்பது உயர்ந்தோரையிறே, அங்குள்ளாரைச்சொன்னபடி. (க) "மதுவாரிவாணிஷு-ச-சத்ரசாமரபாணிஸ்து" என்கிறபடியே ஹர்ஷத்தாலே யெல்லாவடிமைகளும் செய்யாநின்றார்கள். (உ)

மூன்றாம்பாட்டு.

தொழுதனருலகர்கள் தூபநன்மலர்மழை பொழிவனர் * பூமி யன்றளந்தவன் தமர்முன்னே * எழுமினென்றிருமருங் கிசைத்தனர் முனிவர்கள் * வழியிதுவைகுந்தர்க் கென்றுவந்தெதிரே. (ங)

ப:—அநந்தரம், அநந்யார்ஹராகாபாககனை த்ரிவிக்ரமனுக்கு சேஷபூதரானவர்கள் ஸந்நிதியிலே ஆதிவாஹிகலோகத்திலுள்ளார் ஸத்கரித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) அன்று - மஹாபலி "என்னது" என்றபிமாநித்தவன்று, பூமி அளந்தவன் - பூமியை யநந்யார்ஹமாம்படி யளந்தவனுடைய, தமர் - சேஷபூதருடைய, முன்னே - ஸந்நிதியிலே, தூபம் - தூபபூர்வமாக, நல்மலர்மழை - நன்றானபுஷ்பவர்ஷத்தை, பொழிவனர் - பொழிவாராய்க் கொண்டு, உலகர்கள் - அவ்வோலோகங்களிலுள்ளார், தொழுதனர் -

---

(க) ரா-அயோ-கக-நஉ-

தங்கள் ஹர்ஷத்வாநுரூபமாக அஞ்சலிபந்தம்பண்ணினார்கள், முனிவர்கள்-அந்தலோகங்களில் வாங்நியதியுடையரான முனிவரானவர்கள், அந்நியதியை தவிர்ந்து, வைகுந்தர்க்கு-ஸ்ரீவைகுண்டத்துக்குப்போமவர்களுக்கு வழி - வழி. இதுவென்று-இதுவென்றுசொல்லி, எதிரே வந்து-எதிரேவந்து, எழுமின் - "எழுந்தருளலாகாதோ", என்று-என்று, இருமருங்கு - இரண்டுபக்கத்திலும் நின்று, இசைத்தனர் - ஸாதரமாகச் சொன்னார்கள். (௩)

ஆறு;—(தொழுதனருலகர்கள்) பூமியன்றளந்தவன் தமர்முன்னே தூபநல்மலர்மழை பொழிவனர், ஸ்ரீவைகுண்டத்தேறப்போவார்க்கு வழியிதுவென்று எதிரேவந்து இங்ஙனேயெழுந்தருளவொண்ணாதோவென்று இருமருங்கும் முனிவர்கள் நின்றிசைத்தனரென்கிறார்.

ஈடு-அவ;—ஆதிவாஹிகலோகங்களிலுள்ளாரெதிரேவந்து புஷ்பவ்ருஷ்டியைப் பண்ணிக்கொண்டாடுகிறபடியை யருளிச்செய்கிறார்.

(தொழுதனருலகர்கள்) ஆதிவாஹிகலோகங்களிலுள்ளார், "கைபடைத்தப்ரயோஜநம் பெற்றோம்" என்று தொழுதார்கள். தூபத்தையும் நல்லமலர்மழையையும் ப்ரயோகித்துத் தொழாநின்றார்கள். (பூமியன்றளந்தவன்றமர்முன்னே) ஸ்ரீவாமநனுடைய திருவுலகளந்தருளின செயலுக்குத் தோற்றடிமைபுக்கவர்கள் என்றாய்த்து அவர்களாதரிக்கிறது, "மூவடிமண்கொண்டளந்தமன்னன் சரிதைக் கேட்மானேல் பொன்பயந்தேன்" என்னுமவர்போல்வாருண்டோ அவன்திருவுலகளந்தருளின நினைவை ஸப்ரயோஜநமாக்கினவர்களென்றாய்த்து அவர்களாதரிக்கிறது.

(எழுமினென்றிருமருங்கிசைத்தனர்முனிவர்கள்) "இங்கே புகுந்தருளவேணும்" என்று இரண்டருகும் நின்று சொன்னார்கள். முனிவர்களென்றது-வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஹேது; மௌநத்துக்கு விஷயம் புறம்பேயிறே என்றிருந்தார்கள். (வழியிதுவைகுந்தர்க்கென்றுவந்தெதிரே) பரமபதத்துக்குப் போவார்க்கு வழியிதுவென்று எதிரேவந்துசொன்னார்கள், (க) "ஐமதஸ்ராஸ்ரமேதி-ஜகத ப்ரஸாப்ஸவத்தே" என்று - விஸ்ருதிநாதயைப் போகக்கடவதாய்க்கிடக்கிறவழி, இன்றிழுக்கொண்டாகிறதன்றோ. "பாகவதவிஷயத்தில் இருந்தித்

(க) கீதை-அ-

"நீரிட்டவாணை உம்முடையஸ்வரூபத்தோடு விருத்தங்காணு (சேஷபூதரானால் நாம்செய்தபடி கண்டிருக்கவேணும் காணும்" என்ன; அவிருத்தமென்கிறார் மேலித்திருவாய்மொழி தலையால். அதாவது - ஆற்றாமையின் மிகுதியைச்சொல்லிப் பரிஹரிக்கிற "உமக்குப்பாரதந்த்ர்யம் ஸ்வரூபமானால் சேஷிசெய்தபடி கண்டிருக்கு மத்தனைகாணும்)" என்ன; "சேஷபூதனானாப்க் கண்டிருக்கவேணுமோ!" என்று தம்முடைய வில்லாமையை யுபபாதிக்கிற மேலித்திருவாய்மொழியடைய; பாரதந்த்ர்யம் ஸ்வரூபமானால் ப்ருதக்ஸ்தித்தியும் ப்ருதக்ப்ரதிபத்தியு முண்டோவென்கிறார்.

(நேசஞ்செய்து) பெரியபிராட்டியார்பக்கலிலுண்டான ஸ்நேஹத்தை யென்பக்கலிலே பண்ணி, நான் ஸ்நேஹிக்கவிருந்தால் என்விடாய்க்கடி உன்விடாயன்றோ. "அகலகில்லேனிறையும்" என்றவள் செல்லாமைகண்டிறே யவள்பக்கல் ப்ரேமத்தைப் பண்ணிற்று. (உன்னோடென்னை) உன்னையறிந்தபோ, என்னையறிந்தபோ. * விழுமியவமரர் முனிவர்விழுங்கும் கன்னற்கனியை, அத்தேசிக்குத் தலை யறியேன்; "இவனானு ப்ரியதமன், ஹேயமானவன்; [illegible] மகன்" என்று பார்த்தாயோ.

(உயிர்வேறின்றியொன்றாகவே) ஆத்மபேதமின்றிக்கே [illegible] வென்னைப்பரிக்ரஹித்தது. "[illegible] காவியும்" என்னும்படி என்னைப் பிரித்துக்காண வொண்ணாதபடி யன்றோ நீதலையாலேகடந்தது. (உ) "[illegible] கமோரணாப்ராபயதா" என்கிறவிதுவும் அபிமதமாகப் பண்ணிற்று. (கூசஞ்செய்யாது கொண்டாய்) ஸர்வேச்வரனான நீ என்வாசியறிந்து

(க) அயோ-௧௦௦-

(உ) ரா-ஸு-உ௧௧-

திருவாய்மொழி, ௧௦-ப, ௧௦-தி, ௩-பா, கூவி வ்யாக்யானம், உடுள

கலக்கவறிந்திலை. என்பக்கலயோக்யதைபாராதே பரிக்ரஹித்தாய்; முதலிலே என்பூர்வவ்ருத்தம்பாராதே * மயர்வறமதிநலமருளினாய். பின்பு; * வளவேழுலகிலே "நானயோக்யன்" என்றகல, என்னை யென்வழியிலேவிடாதே, உன்செல்லாமையைக்காட்டிச் சேர்த்துக் கொண்டாய். இப்படி அன்று செய்திலையாகில் இன்று க்லேசப்படா தொழியலாய்த்தே.!

(என்னைக்கூவிக்கொள்ளாய்வந்து) ஆனபின்பு, என்னையீண்டெனவந்தணுகப்பாராய்- ஶாஸ்த்ரங்களாலறிவிக்குமளவுபோராது; குணாவிஷ்காரமாத்ரத்தாலே போராது; ஸாக்ஷாத்கரிக்குமளவுபோராது; உன்னைக்கிட்டி யநுபவிக்கும்படி பண்ணவேணும், (அந்தோ!) தன்னையொழியச்செல்லாமையைத்தானேவிளைத்துக்கூப்பிட, வந்து முகங்காட்டாதொழிவதே! (உ)

மூன்றாம்பாட்டு.

கூவிக்கொள்ளாய் வந்தந்தோ வென்போல்லாக் கருமாணிக்கமே * ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்நான் * மேவித்தொழும்பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம் * நாவிக்கமல முதற்கிழங்கே யும்பரந்ததுவே. (௩)

ப:—அநந்தரம், ப்ரஹ்மாதி ஸகலசேதநர்க்கு முத்பாதகமான திருநாபீகமலத்துக்கு மூலகந்தமான நீவந்து விஷயீகரித்தருளவேணுமென்கிறார்.

(இ - ள்.) என்-எனக்கு நிரதிஶயபோக்யமாய். பொல்லா-துளையாத. கருமாணிக்கமே - மாணிக்கம்போலே விலக்ஷணமானவடிவையுடையையாய், மேவித்தொழும் - தந்தாமுடைய பதவித்த்யர்த்தமாகக் கிட்டி ஆஶ்ரயிக்கக்கடவரான, பிரமன் சிவனிந்திரன் - ப்ரஹ்மருத்ரேந்த்ரர்கள், ஆதிக்கெல்லாம் - முதலானார்க்கும், முதல் - முதலான, நாவிக்கமலம் - திருநாபீகமலத்துக்கு, கிழங்கே-கந்தபூதனாய், இப்படிஸ்ருஜ்யரன்றியே, உம்பர்-மேலாய் அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கும். அந்ததுவே-அப்படியே ஸத்தாஸ்த்தித்யாதிகளுக்கு நிர்வாஹகனானவனே, ஆவிக்கு - என்னாத்மாவுக்கு, ஓர் - அபாஶ்ரயமாயிருப்பதொரு. பற்றுக்கொம்பு-உபக்நம், நின்னலால்-உன்னையொழிய, நான் -

நான். அறிகின்றிலேன் - அறிகிறிலேன், ஆனபின்பு, வந்து - நீதா(ன்) வந்து, கூவி-அழைத்து. கொள்ளாய்.கொண்டருளவேணும், அந்தோ ஐயோ!, உன்காரியம் நான்சொல்லவேண்டுவதே!

ஆறு;—(கூவிக்கொள்ளாய்) ப்ரஹ்மாதிகளுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்த்யைச்வர்யாதிகளும் த்வத்ப்ரஸாதாதீனமா(க)லால், என்னுடைய உஜ்ஜீவநத்துக்கு உபாயமும் நீயல்லதுமற்றொ(ன்)றுண்டாகவறிகிலேன், நீயேயுன் திருவடிகளிலே யென்னைவாங்கியருளவேணும் உன் திருவழகைக்காட்டி யருளாயென்கிறார்.

ஈடு - அவ;—பெருமிக்கரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்வஸ்திதியாதிகளுக்கு மெல்லாம் நிர்வாஹகனானநீ, உன்னாலல்லது ஜீவிக்கவிரகின்றியே யிருக்கிறவென்னை ஐயோ?, வந்து விஷயீகரித்தருளா யென்கிறார்.

(கூவிக்கொள்ளாய்) கீழே "கூவிக்கொள்ளாய்" என்று இங்கேயும் "கூவிக்கொள்ளாய்" என்கிறார்களும்; தாஹித்தவன் "தண்ணீர்; தண்ணீர்" என்னுமாபோலே, ஆற்றாமையின்கனத்தாலே சொல்லாநின்றாலும் பாசுரமிதுவல்லதின்றிக்கேயிருக்கிறபடி. கூவிக்கொள்ளுமளவும்போராது, வந்து கூவிக்கொள்ளவேணும். ஆற்றாமையிலும் நான்வந்துகிட்டுகை முறைமையன்று, உனக்குவந்தபடி யென்கிறார்; (க) "ஹ.... -ஹனுமான் குலாம்சருத்வா" * என்றுமென்னுமிதுமிகையானவனுக்குவந்த அனைற்றபடியொன்றுமிடம்சொல்லவேண்டாவிறே. வந்தொருவனுக்கு வ்யவஸ்திதமாயிருக்கிறபடி. (அந்தோ! உனக்கு ..... நான்சொல்லவேண்டுவதே!;

(என்போல்லாக்கருமாணிக்கமே) (அந்தோ ... வடிவைக்காட்டி என்னையிருக்கின்வனே) ... கருக்கலாய்த்திறே; நீயென்னிக்கேயிருக்கையாலே ... நினைத்தாயாகில், அழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கிறே. (என்போல்லாக்கருமாணிக்கமே) துளையாதமாணிக்கம். அநுபய மான ரத்னமென்னுதல்; நாட்டொப்பான வடிவழகையுடைய விளைந்த,

(க) ரா-ஸு-௩௩-௩0-

மாயிருக்கையாலே பொல்லாதென்கிறதென்னுதல்; த்ருஷ்டிதோஷ பரிஹாரமென்னுதல்.

விலக்ஷணவிஷயமானாலும் ஸ்வரூபத்தைப்பார்த் தாறியிருக்க வேண்டாவோவென்னில்; அதுசெய்யுமிடத்தில் நானுன்னையொழிய வுளனாகவேணுமே (ஆவிக்கோர்பற்றுக்கோம்பு நின்னலாலறிகின் றிலேன்நான்) உபக்ரம நியதமாயிருக்கிறபடி. கொடி, கொள்கொம் பையொழிய நிற்கவற்றோ!. வேறையறுத்துப்படரென்றால்படருமோ? என்னாத்மாவுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொ ழியவேறுகாண்கிறிலேன்; (௧) "நசஸீதா த்வயா ஹீநா - நசஸீதா த்வயா ஹீநா" என்கிறபடியே.

ஆனால் பேற்றுக்குடலாகநீரும் சிலசெய்தாலோவென்ன (மேவி யித்யாதி) அல்லாதப்ரஹ்மாதிகளோ தங்கள்கார்யம் தாங்கள் செய் துகொள்ளுகிறார்கள்?, "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" என்றுசொல் லாதவர்களுக்கு முதலுமவனே. ப்ரஹ்மாதிகள், "ஆவிக்கோர்பற்றுக் கொம்பு" என்று சொல்லவறியாமையாலே சொல்லார்கள், நித்ய ஸூரிகள் அபிமாநம்புகுந்துபோகாமையாலும் இன்றுசொல்லவேண் டாமையாலும் சொல்லார்கள். (மேவித்தொழும்) அல்லாதபோது அந் யோந்யம் விருத்தராயிருப்பர்கள்; தங்களுக்கொருகார்யம்வந்தவாறே எல்லாரும்கூடித்தொழுவர்கள். அபிமாநராஹித்யாய்த்தொழும் ப்ரஹ் மாதிகளுக்கெல்லாம் காரணமான திருநாபீகமலத்துக்குக் கிழங்கா னவனே. (முதலானநாபிக்கமலக்கிழங்கே)

(உம்பரந்ததுவே) அவர்களுக்குமேலான நித்யஸூரிகளுக்கும் அப்படிப்பட்ட ப்ராப்யவஸ்துவானவனே. அதுவென்று - ப்ரமாண ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. நித்யஸூரிகளோடு ப்ரஹ்மாதிக ளோடு வாசியற நிர்வாஹகனாயிருக்கிறநீ - என்னை - வந்து - கூவிக் கொள்ளாய். (இப்பாட்டால் - கீழும்மேலும் சொல்லுகிற ஸாமாநாதி கரண்யத்துக்கு நிபந்தநம் கார்யகாரண பாவமென்னுமித்தை யரு ளிச்செய்தாராய்த்து; (௨) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" (௩)

---

(௧) ரா-அயோ-௫௩-௩௧- (௨) சாந்தோ-௩-௧௪-

நான்காம்பாட்டு.

உம்பரந்தண்பாழேயோ வதனுள்மிசைநீயேயோ * அம்பரநற்
சோதி யதனுள்பிரமனரன்நீ* உம்பருமியாதவரும் படைத்தமுனிவ
னவன்நீ * எம்பரஞ்சாதிக்கலுற் றென்னைப்போரவிட்டிட்டாயே.

ப:—அநந்தரம் ஸர்வப்ரகாரவிசிஷ்டனான நீ ப்ராப்யபூதனான வென்னுடையகாரியம் நிர்வஹிப்பதாக வேறிட்டுக்கொண்டிருந்து. என்னை யிந்தவிபூதியிலே போரவிட்டாயித்தனை யன்றோவென்று ஆர்த்தராய்க் கூப்பிடுகிறார்.

(இ - ள்.) உம்பர் - பூதமான மஹதாதிகளுக்கெல்லாம் ப்ரதாநகாரணமாகையாலே மேலாய், அம் - உனக்கு லீலோபகரணமாகையாலே விலக்ஷணமாய், தண் - குணத்ரயஸாம்யாவஸ்த்தமாகையாலே குளிர்ந்திருப்பதாய், பாழேயோ-போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கு அதனுள், மிசை, நீயேயோ, இப்படி ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனாய்க்கொண்டு, அம்பரம் - அண்டகாரணமான ஆகாசம், நல் - விலக்ஷணமான, சோதி-தேஜஸ்ஸு முதலான பூதங்களை, ஸ்ருஷ்டித்து தத்ப்ரகாரியாய், † அதனுள் - பூதாரப்தமான அண்டத்துக்குள்ளே, பிரமனரன் - ப்ரஹ்ம ருத்ராதிகளை உத்பாதித்து தத்தத்ப்ரகாரவிசிஷ்டனானவன். நீ [illegible] உம்பரும்-ப்ராணிஜாதங்களுக்குமேலான தேவர்களையும். யாதவரும்-மநுஷ்யாதி ஸகலசேதனரையும், படைத்த முனிவனவன்-தத்தத்கர்மவிபாக மநநம்பண்ணி ஸ்ருஷ்டித்தவன், நீ - நீ, இப்படியாயிருக்க. எம்ப்ராப்ய பூதனானவென்னுடைய, பரம் - தேஹத்தை, சாதிக்கலுற்று - நிர்வஹிப்பதாக வேறிட்டுக்கொண்டு, ப்ராப்திபர்யந்தமாக [illegible]. என்னை - உன்னை யொழியச்செல்லாதவென்னை, [illegible] போர விட்டிட்டாய் - இங்கேபோரவிட்டிட்டுவைத்தாய்.

இ என்கிறவகை-“ நீ ” என்னுமிடத்தே [illegible] ரக்ஷிக்கவேணுதபோந்திருக்க, அநாதரித்தாயென்று கூப்பிடுகிறவாற்றை ஸூசிப்பிக்கிறது. [illegible])

ஆ.ரு;—(உம்பரந்தண்) ப்ரக்ருதிபுருஷை [illegible] வ்யாதிபூதசதுர்முக ருத்ராதிதேவாதி ஸ்தாவராந்த [illegible] மக ஸமஸ்தவஸ்துக்களினுடைய ஸ்வரூப[illegible] ளுக்கும் நீயே நிர்வாஹகனாயிருந்திருந்து, [illegible] ( ) [illegible]

† பதங்கள் விட்டிருக்கிறது.

மத்தனையும் நானே நிர்வஹிக்கக்கடவேனாகப் பார்த்தருளினாயாகில் என்னைக்கைவிட்டாயென்கிறார். (௪)

ஈடு-அவ;—ஸர்வநிர்வாஹகனான நீ, என்காரியம் நானேபண்ணிக் கொள்வேனாகப்பார்த்தருளினாயாகில், என்னைக்கைவிட்டாயல்லேயோ வென்கிறார்,

(உம்பரந்தண்பாழேயோ) மஹதாதிகார்யங்களுக்கெல்லாம் காரணமாகையாலே மேலாய், தன்னுடைய ஏகதேசத்தாலே கார்யவர்க்கத்தைப் பிறப்பிக்கவற்றான ஶக்தியையுடைத்தாய், விசித்ரபரிணாமியாய், சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம் நிலமாயிருந்துள்ள மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே. (உம்பர்) மேல். (அந்தண்) அழகிதுமாய்க்குளிர்ந்திருக்கை. (ஸ்ருஷ்டிஶக்தியாகிறவழகும் விசித்ரபரிணாமித்வமாகிற தண்மையுமுடைத்தாயிருக்கை.) (பாழ்) க்ருஷிக்குயோக்யமாயிருக்கை. காரணவஸ்துவாய் நின்று ஸ்வகார்யத்தாலே சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைக்கவற்றென்னுமிடத்தைச் சொல்லுகிறது,

(உம்பரந்தண்பாழேயோ) ஸௌக்ல்யமென்றுகொண்டு நிஷ்கர்ஷஸம்பந்தத்தாலே தர்மத்தைப்பிரியச் சொல்லுமாபோலே பிரியச்சொல்லப்போகாது பகவானுக்கு ப்ரகாரமானவற்றை யென்கிறது. (உம்பரந்தண்பாழேயோ) என்கிறவித்தால்-சேதநர்க்கு ப்ரகாரமாய் அவ்வழியாலே ஈஶ்வரனுக்கு ப்ரகாரமாகையன்றிக்கே. (க) "யஸ்யாக்ஷரம்ஶரீரம்- யஸ்யாவ்யக்தம்ஶரீரம்-யஸ்யாத்மஶரீரம்-யஸ்யப்ருதிவீஶரீரம்" என்கிறபடியே சேதநவ்யதிரிக்தமான வஸ்துக்கு மனையொழிய நிர்வாஹகரில்லையென்கை. (பாழேயோ) என்கிறவித்தால் - ஸாங்க்யபேதம்கொள்ளுகிற மீமாம்ஸகரையும், ஸ்வரூபேண தாதாத்ம்யம்கொள்ளுகிற மாயாவாதிகளையுமழிக்கிறது.

(அதனுள்மிசைநீயேயோ) அதிலேபத்தமாய்நிற்கிற விலக்ஷணமான வாத்மதத்வத்துக்கு நிர்வாஹகனானவனே. ஸூக்ஷ்மசிதசித்வஸ்து ஶரீரகாரணமாகையாலே காரணவஸ்துவைச்சொல்லிற்று. இத்தால்-விஶேஷண ப்ராதாந்யம்சொல்லும் ந்யாயவைஶேஷிகபக்ஷமும், விஶேஷணத்துக்கு அபாரமார்த்யம்சொல்லும் மாயாவாதிபக்ஷமும்

(க) ப்ருஹ ரு-எ-

ஆழ்வார்க்கு பக்ஷமல்லவென்றதாய்த்து (நீயேயோ) என்கிறவித்தால்- சேதநனையொழிய அசேதநத்துக்கு ஸ்திதி யில்லாதாப்போலே, ஈஶ்வரனையொழிய வாத்மாவுக்கு ஸ்திதியில்லையென்கிறது.

(அம்பரநற்சோதி) அம்பரம்-ஆகாஶம். நற்சோதி-விலக்ஷண தேஜஸ்ஸு) அல்லாதபூதங்களுக்கு முபலக்ஷணமிரண்டும்; (௧) "யதேதத்ஸௌவர்ணம் கோஶ: - யதேபுவைஷ்ணவ: கோஶ:" என்று ஜலத்தைச்சொல்ல அல்லாதபூதங்களுக்கு முபலக்ஷணமானாப்போலே (அதனுள் பிரமனரன் நீ) பஞ்சீகரித்தபூதங்களாலே ஸ்ருஷ்டமான அண்டாந்தர்வர்த்திகளான ப்ரஹ்மருத்ராதிகளும் நீயிட்ட வழக்கென்கிறது.

(உம்பரும்யாதவரும் படைத்தமுனிவனவன்நீ) தேவர்களையும் மற்றுள்ளாரையும் படைத்தமுனியாக ப்ரஸித்தனானவன்நீ. "பிரமனரன்நீ" என்ற ஸாமாநாதிகரண்யம் கார்யகாரண பாவநிபந்தநம்; (௨) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி - ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி" என்னுமாபோலே, ஸகலபதார்த்தங்களையும் கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டிக்கைக்காக பூர்வகர்மங்களை யநுஸந்திக்குமவனிறே-முனியாகிறான்; (௩) "தேஷாம் தேவஸ்து ஸந்தாநம் ... - ததஸ்தேவஸர்மகோகுருதஸ்யாமிதி" இத்தால்-ஸ்தூலசித் சித்வஸ்துஶரீரத்வத்தாலே கார்யத்வம் சொல்லிற்றாய்த்து.

(எம்பரம்சாதிக்கலுற்றேன்னைப் போரவிட்டிட்டாயே) என் கார்யம் நீயேசெய்வதாக ஏறிட்டுக்கொண்டு, அத்தையுபேக்ஷித்து, அசேதநத்தைப்பொகடுமாபோலே பொகட்டாயென்னுதல்; ஸகலத்தையும் நிர்வஹிக்கிறநீ என்னையொருவனையும் நானென்கார்யம் செய்ய வேணுமெனப்பார்த்து, உன்பக்கலிலேநின்றும் போரவிட்டு உபேக்ஷித்தா யென்னுதல். (என்னை) உன்னாலல்லது செல்லாதவென்னை, (போர விட்டிட்டாயே) அவன்பக்கலினின்றும் பிரிகதிர்ப்பட்டுப் போந்தாராயிருக்கிறபடி. குணம்நடையாடாத தேசத்திலே தள்ளிவைக்கிறார். ஜ்ஞாநவைஶத்யத்தைப்பண்ணி ப்ராப்யமாயும் ப்ராவர்த்தியமா யிருக்கிறவித்து, ஏன்தமயந்திக்கு வழிகாட்டிவிட்டாப்போலேயிருக்கிறதுகாணும், (௪)

---

(௧) விபு-௨-௧௨- (௨) சாந்தோ-௩-௧௪- யஜு-௨-அஷ்-௨-௯௦-

ஐந்தாம்பாட்டு.

போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால் * பின்னை யானாரைக்கொண்டெத்தை யந்தோவெனதென்பதென் யானென்பதென் * தீரவிரும்புண்டநீரதுபோல வென்னாருயிரை யாரப்பருக * எனக்காராவமுதானாயே. (ரு)

ப:— அநந்தரம் எனக்கு நிரவதிகபோக்யபூதனாய்வைத்து நீயென்னை யுபேக்ஷிக்கப்பார்த்தால் என்க்கொரு உஜ்ஜீவநமுண்டோவென்கிறார்.

(இ-ள்.) தீர - தன்காய்ச்சல்தீரும்படி, இரும்பு - இரும்பானது, உண்ட - உண்ட, நீரதுபோல் - நீர்போலே, என்னாருயிரை - என்னாத்மாவின், ஆர - விடாயெல்லாம்தீர, பரிபூர்ணமாக, பருக - பருகுகைக்காக, எனக்கு - எனக்கு, ஆரா - த்ருஷ்ணைதொடாத, அமுதானாயே - அம்ருதமானாயே, இப்படியிருக்க, நீ - உன்வாசியறிந்து புஜிக்கும்படிபண்ணி ப்ராப்திபர்யந்தமாக ப்ரகாசிப்பித்தநீ, போரவிட்டு - அத்தைக்கொலைத்துப்போரவிட்டு இட்டு - அசேதநவதநாதரித்து, என்னை - அநந்யகதியானவென்னை, புறம் - உனக்குப்புறம்பானவிஷயாந்தரத்திலே, போக்கலுற்றால் - போக்கநினைத்தால், பின்னை - ஸர்வஶக்தியானநீ அநாதரித்தபின்பு, யான் - அஶக்தனானநான், ஆரைக்கொண்டு - புருஷார்த்தஸாதகராயிருப்பார் மற்றாரைக்கொண்டு, எத்தை - எந்தபுருஷார்த்தத்தை, அந்தோ! - ஐயோ!, சாதிப்பேன்; எனதென்பதென் - என்னதென்கைக்கொருகாரணாதிகளில்லை, யானென்பதென் - நானென்கைக்கொரு ஸ்வதந்த்ரனான கர்த்தாவில்லை.

இனி வேறுண்டோவென்றுகருத்து. ஆரைக்கொண்டெத்தை என்கிற ‡ வ்ருத்தோக்தியிலே விஷண்ணராகிறார். இரும்புண்டநீர்போலென்னாத்மாவை "முற்றப்பருகினேன்" என்கிறபடியே நிபூர்ணமாகபாநம் பண்ணுகைக்குறுப்பாக உன்போக்யதையை யெனக்குப்ரகாசிப்பித்தா யென்னவுமாம். (ரு)

ஆறு;—(போரவிட்டிட்டு) உம்முடையபாரத்தை நான் நிர்வஹிக்கத்தவிர்ந்தால் அந்தபாரத்தை நீரே நிர்வஹித்துக்கொள்ளலாகாதோவென்னில்; நீ என்னைக்கைவிட்டு உபேக்ஷித்தால் பின்னையாரைக் கொண்டெத்தைச் செய்வது, நானென்றொன்றுண்டோ, என்று

‡ (பா) அர்த்தோக்தியிலே.

டையதென் றென்றாண்டோ, அடையமுடிந்ததிறே; ஆனபின்
அக்நிஸந்தப்தமானவிரும்பு தாபந்திரும்படி நீரைப்பருகுமாப்போலே
உன்னைப்பிரிந்த வென்னுடையஸந்தாபமெல்லாந்தீரும்படி யுன்னை
பருக எனக்காராவமுதானாய், இனிக்குறையும் நீபேசெய்தருள
வென்கிறார். (௫

ஈடு:—அவ;—ஸர்வரக்ஷகனை நீ யுபேக்ஷித்தால், என்காரிய
நான்செய்யவோ, பிறர்செய்யவோ. முடிந்தேனிறே யென்கிறார்.

(போரவிட்டிட்டு) உன்பக்கலினின்றும் பிரித்துபேக்ஷித்து
(என்னை) அசக்யகதியானவென்னை. (நீ) ஸ்ருஷ்டியே தொடங்கி இ
வளவும் வரப்புகுரநிறுத்தின நீயென்னுதல், ஸர்வரக்ஷகனான நீயென்
னுதல். (என்னை) அஜ்ஞாநாஸக்திகளுக் கெல்லையானவென்னை, (நீ
ஜ்ஞாநஸக்திகளால் பரிபூர்ணனான நீ. அக்கரையேறமாட்டாதா
ருவனை யமுக்கிறாப்போலேயிருக்கிறதுகாணும் (என்னை நீ) கண்ணும்
காலுமின்றிக்கே யிருப்பதொருத்தன், கண்ணுங்காலு முடையனாயி
ருப்பதொருத்தன். ஆருக்கார்வழிகாட்டுவாரென்கிறது; (௧) "ஜெ
வக்கிஞ்சித் குர்வாணஸ்ய ஸ்ரோதஸேவ நிமஜ்ஜதே – அந்நவ
ஸ்த்ஸ்ரோதஸ்தே ப்ரத்யபேக்ஷாஸிதஸ்யஸித்" என்னும்படியே. (நீ,
(௨) * ஆட்பார்த்துழி தரும்நீ. * எதிர்சூழல்புக்குத்திரியும் நீ, (புறம்
போக்கலுற்றால்) புறம்பேபோக்குகையிலே யத்யவஸித்தால். என்
காரியம் நான்செய்வேனாகப்பார்த்து என்னை யுபேக்ஷித்தால்.

(பின்னையாரைக்கொண்டெத்தை) ஸர்வஸக்தியான நீ அநாத
ரித்தபின்பு, அஸக்தனானநான் எந்தவுபாயத்தைக்கொண்டு என்ன
புருஷார்த்தத்தைஸாதிப்பது. ஆரைக்கொண்டென்கிறது புருஷார்த்
தம் பெறுவதொருசேதநனாலே, அசேதநக்ரியாகலாபாதிகளாலன்
றென்னுமிடம் தோற்றுகைக்காக. (அந்தோ) (௩) "ஸர்வதர்மான்பரித்ய
ஜ்ய - மாமேகம் ஸரணம்வ்ரஜ" என்றவனுக்கு காலாந்தரித்த
வேண்டுவதே!. (எனதென்பதென் யானென்பதென்) முடிந்தேனிறே
என்கிறார். (நானே முடிந்தேன், இனி காணங்களுடைப்போய்த்ததேயென்
கிறார்,)

(௧) ஜிதந்தா-
(௨) ௪-திரு ௯-௩-
(௩) கீதை-௧௮-௬௬-

(த்ரவித்பரதி) அக்நிஸந்தப்தமான விரும்பு காய்த்தல்தீர நீரை நிஶ்ஶேஷமாக புஜிக்குமாபோலே. என்னாத்மவஸ்துவைச் சமைய புஜிக்கைக்காக. எனக்கு உன்னுடைய நிரதிஶயபோக்யதையைக்காட்டி யென்னை யகப்படுத்தினாய். (என்னாருயிரையாரப்பருக) என்விடாய்தீரக்கலந்தாயென்றிருந்தேன். உன்விடாய்தீரவாயிருந்ததிறே. உனக்காகவாகாதே யுன்னைக்காட்டிற்று. அன்றிக்கே. விபக்திவ்யத்யயம்; என்னாருயிரானது உன்னை யாரப்பருகவென்னவுமாம்; அப்போது, காய்ந்தவிரும்பு அக்காய்த்தல்தீரும்படி நீரைப்பருகுமாபோலே, என்னாருயிரானது என்ஸந்தாபமெல்லாம்தீரும்படி உன்னைபுஜிக்க எனக்குப்பண்டு நிரதிஶயபோக்யனானவனை யென்றுமாம்.

வ்யாக்யாநாந்தரம்—(எனதென்ப தென் யானென்பதென்) பேறு உம்மதானால் ஸாதநமும் உம்முடையதலையிலே யாகவேண்டாவோ வென்ன; எனக்குப் பரிகரமாயிருப்பதொன்றுண்டென்பதோ ரர்த்தமுண்டோ, ப்ருதக்ஸ்திதி யோக்யமாயிருப்பதொருநானுண்டோ, ஶரீரரக்ஷணம் ஶரீரியையொழியச்செய்வாருண்டோ. (௫)

ஆறும்பாட்டு.

எனக்காராவமுதா யெனதாவியையின்னுயிரை * மனக்காரா
மைமன்னி யுண்டிட்டாயினி யுண்டொழியாய் * புனக்காயாநிறத்த
புண்டரீகக்கண் செங்கனிவாய் * உனக்கேற்குங் கோலமலர்ப்பா
வைக்கன்பா வென்னன்பேயோ, (௬)

ப:—அநந்தரம், பிராட்டிபக்கல் ப்ரணயியானாப்போலே யென்பக்கலிலும் நிரதிஶய ப்ரணயத்தையுடையநீ உன்போக்யதையை ப்ரகாஶிப்பித்து புஜிப்பித்தாய், இனி முழுக்க நிர்வஹித்து விடவேணுமென்கிறார்.

(இ - ள்.) புனக்காயா - தன்னிலத்திலலர்ந்த காயாம்பூப்போன்ற, நிறத்த - நிறத்தையுடையையாய், புண்டரீகம்-புண்டரீகம்போலேயிருக்கிற, கண் - திருக்கண்ணையும், செங்கனிவாய் - சிவந்ததிருப்பவளத்தையுமுடைய, உனக்கேற்கும் - உனக்கநுரூபமான, கோலம் வடிவையுடையளாய், மலர்-பூவில்பிறப்பாலே நிரதிஶயபோக்யபூதையாய், பாவைக்கு-ஸ்த்ரீத்வாநுரூபமான வாத்மகுணத்தையுடைய லக்ஷ்மிக்கு, அன்பா - அன்பையுடையையாய், என்னன்பேயோ - என்னன்புதானொருவடிவா

யிருக்கிறவனே. எனக்கு - எனக்கு. ஆராவமுதாய் - நிரதிசயபோக்ய னாய். எனதாவியை - ஹேயமான வென்னுடைய ப்ரக்ருதியையும் இன் னுயிரை - விலக்ஷணமான வாத்மாவையும் மனக்க - ஹ்ருதயத்துக்கு, ஆராமை - த்ருப்தி பிறவாதபடி விரும்பி. மன்னி நிரந்தரமாக, உண்டிட் டாய் - புஜித்தாய். இனி-இனித்தொடங்கி, உண்டொழியாய் - நீகுறை யும் புஜிப்பித்தேவிடவேணும்.

ஈஶ்வரனுக்கு நிருபாதிகபோக்த்ருத்வமும் சேதநனுக்கு போக்யத் வமுமிறே ஸ்வாபாவிகம்; அதினுடைய வுபஜீவிதப்ரீதியாலே வருதி றபர்யவஸாநமிறே சேதந போக்த்ருத்வமும், ஈஶ்வர போக்யத்வமும், ஆகையிறே; (க) "அஹமந்நம்-அஹமந்நம்" என்று-ஸ்வரூபத்தை நிர்த் தேசித்து, "அஹமந்நாதோ-அந்நமதந்தம்" என்று-இவனுடைய போக் யத்வத்தையும் ஈஶ்வரனுடைய போக்த்ருத்வத்தையும் சொல்லி, "அத்மி - அத்மி" என்று-சைதந்யப்ரயுக்தமான பர்யவஸாநத்தாலே சேதநபோக் த்ருத்வத்தையும் சொல்லிமுடித்தது. (சு)

ஆறு:—(எனக்காராவமுதாய்) ஸௌந்தர்யாதி ஸர்வகுணங்களி னாலும் உனக்கேற்ற கோலமலர்ப்பாவைக்கு போக்யனாயிருக்கிற நீ யெனக்குபோக்யனாயிருந்துவைத்து, அத்தனையேயன்றிக்கே என்னு டைய ப்ரக்ருதியையும் என்னுடைய வாத்மாவையும் நிரவதிகமான வபிநிவேசத்தோடே புஜித்தருளினாய், பிரானே, என்னைப் போக விடாதே கொள்ளாயென்கிறார். (கூ)

ஈடு அவ;—பெரியபிராட்டியார் பக்கல்போலே என்பக்கல் வ்யாமோ ஹாபிநிவிஷ்டனாய், என்ப்ரக்ருதியிலும் மாத்மாவிலும் மத்யாதரத்தைப் பண்ணி புஜிக்கிற நீ என்னையுபேக்ஷியாதே என்னுடைய விஷயீகரித்தரு ளாயென்கிறார்.

(எனக்காராவமுதாய்) தேவஜாதியினுடைய உப்புச்சாறுபோல ன்றிக்கே, ஸதாஸேவ்யமாய் நித்யஸூரிகளெல்லாருங்கூட வந்து பனிக்குமுன்னை ஸர்வாதிபானவெனக்குத்தந்தாய்.

(எனதாவியை) என்னை தன்னுடைய தேஹமாக, அபிமத விஷயத்தில் வழக்குகக்கும் காமுகனைப்போலே என்னுடம்பையிருந்

பிறாய், (இன்னுயிரை) பகவதபிப்ராயத்தாலே தவதவநாறுகிறபடி, அன்றிகே, செவ்வாய்க்கிழமையை மங்களவாரமென்னுமாபோலே. ப்ரக்ருதியோடே ஸம்பந்திக்கையாலே தண்ணிதென்றுசொல்லுகிறு ராகவுமாம்.

(மனக்காரமையித்யாதி) (மனக்கு) மநஸ்ஸுக்கு. (ஆரமை) அமையாமை (மன்னியுண்டிட்டாய்) நிரந்தரமாக புஜித்தாய். (இனியுண்டொழியாய்) நீ தொடங்கினகார்யத்தையும். நடுவேகுறை கிடக்கவிடாதே, விஷயீகரித்துவிடாய். (நீ ஆரம்பித்தகாரியத்தில் குறைகிடப்பதுண்டோ) நீயிவ்வளவுபுகுர நிறுத்துகைக்கு நான் ஸஹகரித்ததுண்டோ. உன்காரியத்துக்கு உன்னைவேண்டிக்கொள்ள வேணுமோ. இவருடைய வம்ருதத்துக்கு போக்த்ருத்வமுண்டு காணும்!.

(புனக்காயாவித்யாதி) இவ்வாத்மாவையும் இதினுடையசரீரத்தையும் விநர்புகை உனக்குச்சேருமோ, நீயுகந்தார்க்குச்சேருமோ; (புனக்காயாநிறத்த) தன்னிலத்திலலர்ந்த காயாப்போலேயாய்த்து வடிவிருப்பது. (புண்டரீகக்கண்) வாத்ஸல்யாம்ருதவர்ஷியாயாய்த்து கண்களிருப்பது. (செங்கனிவாய்) சிவந்துகனிந்தாய்த்து முறுவலிருப்பது. பிராட்டியிருப்பும துறைகளிறேயிவை. (புனக்காயாவித்யாதி) அக்காயாதாமரைபூத்துக் ‡ கனியப்பழுத்தாப்போலேயாய்த்து திருமேனியும் திருக்கண்ணும் திருப்பவளமுமிருப்பது.

(உனக்கேற்கும்) இவரேபாதி வாசா (வா) விட்டுத்திக்கைக்கும் பொருந்த ஸௌகுமார்யத்தையுடையவள். இப்படிப் பட்டவனுக்கு ஸத்ருபமான வழகையுடையளாய், புஷ்பத்தில் பரிமளத்தைவடித்து வகுத்தாப்போலே யிருக்கிறபிராட்டிக்கு ஸ்நிக்தனானவனே. உனக்கேற்கும் கோலமென்று-அவ்வழகையிங்கே யதிதேசிக்கிறார். ந்யாயாதிதேசம் பண்ணுகிறார். (கோலமலர்ப்பாவைக் கன்பாவென்னன்பேயோ) அவள்பக்கலன்பனென்று தோற்றாநின்றது. தம்முடையபக்கலன்பென்றும் அதுடையனென்றும் தெரிக்கப்போகிற தில்லை: ஜ்ஞாதாவை ஜ்ஞாநமென்னுமாபோலே. (௧) "தத்³கு³ணஸாரத்வாத்து தத்³வ்யபதே³ஶ: - தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஸ:. (௬)

---

(௧) ப்ரஹ்மஸூ-   ‡ (பா) கனிபழுத்தாப்போலே.

ஏழாம்பாட்டு.

கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பேயோ * நீலவரையிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப * கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்டவெந்தாய் * நீலக்கடல்கடைந்தாயுன்னைப் பெற்றினிப்போக்குவனோ. (எ

ப:— ஆச்ரித ஸம்ரக்ஷகனான உன்னைப்பெற்றுவைத்து இனி விடுவேனோ வென்கிறார்.

(இ-ன்.) கோலம்-அழகையும், மலர் - போக்யதையையு முடையளான, பாவைக்கு - பிராட்டிக்கு, அன்பாகிய - உகப்பானவனைத்தாலே என் - என்பக்கலிலும், அன்பேயோ - அபிநிவேசத்தை யுடையையாய், (கு [illegible] "மெய் [illegible] காதல் [illegible] முகத்திலே தாகே இவாசலேலாமொரு" என்கிறபடியே, நீலவரை - நீலரத்ந கிரியானது இரண்டுபிறை - இரண்டு பிறையை, கவ்வி - கவ்வி, நிமிர்ந்ததொப்ப - எழுந்திருந்தாப்போலே, கோலம் - விலக்ஷணமான வடிவழகையுடைத்தாய், ஒன்று - அத்விதீயமாயிருப்பதொரு, வராகமாய் - மஹாவராஹமாய், நிலம் - பூமியை, ப்ரளயத்திலேபுக்கு முழுகியெடுத்து [illegible] டைக்கொண்ட - திருவெயிற்றிலேவைத்த வபதானத்தாலே எந்தாய் - என்னை ஸம்ஸாரத்தினின்று மெடுக்குமாகாரத்தை ப்ரகாசிப்பிக்கிற ஸ்வாமியாய் நீலம்-உன்வடிவின் நிழலீட்டாலே [illegible] கடைந்தாய் கடைந்து அமுதளித்த [illegible] ஆச்ரிதர்களை [illegible] உன்னை - இப்படி புருஷகாரபூர்வகமாக எனக்கு [illegible] ரக்ஷிக்குமவனான வுன்னை, பெற்று - லபித்துவைத்து இனி - [illegible] பின்பு, போக்குவனோ - நழுவவிடுவேனோ.

நீலக்கடலென்று - நீலரத்நத்தையுடைய கடலென்னுமாம் (எ)

ஆறு;—(கோலமலர்ப்பாவைக்கு) [illegible] ஸ்ரீபூமிப்பிராட்டியாக்கவிழ் [illegible] விலே பண்ணிக்கொண்டவன்னை [illegible] இனிவிடுவேனோ வென்கிறார். (அ)

ஈடு-அவ;—தான் பெரியபிராட்டியார் [illegible] ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியை [illegible]

டே ஸம்ச்லேஷித்தருளினாப்போலவும், கடலைக்கடைந்து பெரிய பிராட்டியாரோடே ஸம்ச்லேஷித்தருளினாப்போலவும், ஸம்ஸாரார்ணவமக்நனான வென்னையெடுத்தென்னோடே ஸம்ச்லேஷித்தருளி என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின வுன்னைப்பெற்று வைத்து இனித்தப்பவிடுவேனோ வென்கிறார்.

(கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ) பிராட்டி பக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே அந்த ஸ்நேஹமேஹேதுவாக அவள் பரிக்ரஹமான வென்பக்கலிலே அதிப்ரவணனானவனே) பட்டர் சரமதசையிலே யருளிச்செய்தவார்த்தை -- ரஹஸ்யத்தின்படியா யிருந்தபடி கண்டதே; இப்பாட்டை நம்முடையார் த்வயத்தோடே யநுஸந்திப்பது - "பெரியபிராட்டியார்க்கு ஸ்நேஹியாகையாலே அவள் பரிக்ரஹமானமக்கு அன்பனும் என்றநுஸந்திப்பது" என்று ஜீயரைக் குறித்தருளிச் செய்கிறார் "திருமாலென்னை யாளுமால்" என்னுமபடியே தம்முடையவன்புக்கடி சொல்லுகிறார்· அந்தஃபுர பரிகரமன்றோ, என்னன்புக்கடியில்லையோ.

(நீலவரையிச்யாதி) ஓரஞ்ஜநகிரி யிரண்டுபிறையைக்கவ்வி நிமிர்ந்தாப்போலே. பிறையில் மறுவோபாதியாய்த்து திருவெயிற்றிற் கிடந்தபூமி, (கோலவராகம்) * மாகடம்பின் நீர்வாரநின்றதில்லையிறே இவர்க்கவத்திலழிக்க விஷயமாய்த்து. (௧) "பாசிதூர்த்துக்கிடந்த பார்மகள்" என்கிறபடியே பூமிப்பிராட்டி அழுக்கோடேயிருக்கத்தானே பழுதிலவதாரரகிப்பாசியிந்தக்கு கண்காணாமதித்தனையிறே. அவளழுக்கிட்டவழுக்கிறே யிவனாலத்தவிழ்க்கிறது. (ஒன்றாய்) வராஹஜாதியமாத்ரமென்னுதல்; த்ரைலோக்யத்தையுங்கண்டுசெறி யிட்டாப்போலே விலக்ஷணாகாரமாகையாலே அத்விதீய மென்னுதல். (நிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்) ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியிலேயுக்குத் திருவெயிற்றிலேகொண்டு உத்தரித்தாப் போலே, ஸம்ஸாரார்ணவமக்நனான வென்னையெடுத்தவனே.

(நீலக்கடல்கடைந்தாய்) பிராட்டியை லபிக்கைக்காகக் கடலைக் கடைந்தவனே. (நீலக்கடல்) கடைகிறவனுடைய நிழலீட்டாலேயா தல்; ஸ்வாபாவிகத்திலேயும் போகமிகையால்வந்தநிற வேறுபாடா

---

(௧) நாய்ச்சி-௧௧-

தல்; நிறத்தாலே- நீலரத்நத்தைச் சொல்லிற்றாய், தத்ப்ரசுரமான ரத்நாகரமென்னுதல்.

(உன்னைப்பெற்றினிப் போக்குவனோ) ஸ்ரீபூமிப்பிராட்டியை லபிக்கைக்குப் பண்ணின வ்யாபாரத்தையும், பிராட்டியை லபிக்கைக்குப் பண்ணின வ்யாபாரத்தையும், என்னைப் பெறுகைக்காகப் பண்ணி என்னைக்கிட்டப்பெற்ற பின்பு உன்னைப் போகவிடுவேனோ நீ க்ருஷி பண்ணின பலத்திலே யக்ஞாதிக்கன் கைப்பட்ட ஸம்பத்தைவிட க்ஷமனோ. (எ)

எட்டாம்பாட்டு.

பெற்றினிப் போக்குவனோ வுன்னை யென்தனிப் பேருயிரை * உற்றவிருவினையா யுயிராய்ப் பயனாயவையாய் * முற்றவிம் மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றிற்புக்கு * முற்றக்கரந்தொளித்தா யென் முதல் தனிவித்தேயோ. (அ)

ப:—அநந்தரம், தூவகைபனும்படி ஸர்வாந்தராத்மாவாய் எனக்கு தாரகனான வுன்னைப்பெற்றுவைத்துக் கைவிடுவேனோவென்கிறார்.

(இ-ள்.) உற்ற- இருவினையாய் - இரண்டுவகைப்பட்ட புண்யபாப ரூபகர்மங்களுக்கு நிர்வாஹகனாய். உயிராய்-கர்மவஸ்யரான ஆத்மாக்களுக்கு நியந்தாவாய். அவையாய்ப்பயனாய் - அந்தக்கர்மங்களாலுண்டான ஸுக துக்கங்களுக்கு ப்ரகாரதாவாய்க்கொண்டு இம்மூவுலகும்-இந்த ஜகத்தாம், முற்ற-எல்லாமாகிற. பெருந்தூறாய்-பெரிய தூற்றை ப்ரகாரமாக வுடையையாய், தூற்றிற்புக்கு-கர்மநிபந்தமாக ப்ரவேசித்தார்க்குப் புறப்பட வழியில்லாத பெருந்தூற்றிலே ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்வதந்த்ரனாய் ப்ரவேசித்து, முற்றக்கரந்து-ஒருப்ரகாரத்தாலுமறிய வொண்ணாதபடி, ஒளித்தாய்-ஸம்ஸாரிகளைக்கொண்டு மறைந்து நின்றவனே, என்னைத்தவிர்த்து உன்னைக்கிட்டுகைக்கு, முதல்தனிவித்தேயோ - ப்ரதமஸஹகாரிகளான அத்விதீயகாரணமானவனே, உன்னை-எனக்கு நிருபமமாய் அபரிச்சிந்நமான ப்ராணபூதனாயிருக்கிறவுன்னை, பெற்று-கைபுகுரப்பெற்றுவைத்து இனி-உன்னைவிடில் முடியும்படியான தசையைப் பிறந்தபின்பு, போக்குவனோ - விடவிரகுண்டோ.

"ஓ" என்கிறவை-விடில்செய்வதென் என்கிற விஷாதத்தைக் காட்டுகிறது. (அ)

ஆறு:—(பெற்றினி) புண்யபாபரூபகர்ம தத்பலபோக்த்ருசேதந கர்மபலபோகோபகரணப்ரக்ருதி ஸர்வஜகதந்தராத்மபூதனாய், ஸர்வ ஜகத்காரணமாய், ஸர்வைரத்ருஶ்யனாயிருக்கிற இருப்பையுங்கூட வெனக்குக்காட்டித் தந்தருளி எனக்குதாரகனாயிருந்த வுன்னைப்பெற்று இனிவிடுவேனோவென்கிறார். (ஆ)

ஈடு-அவ;—அத்யந்த துர்ஜ்ஞேயனான வுன்னைப்பெற்றுவைத்து இனிவிட வுபாயமில்லையென்கிறார்.

(பெற்றினிப் போக்குவனோவுன்னை) ஓரச்சில்லாக்காசாய்ப் போய்த்தாகில் போகிறதென்றிருக்கிறேனோ. அத்யந்தவிஜாதீயனாயிருந்த வெனக்கு மிகவும் தாரகனான வுன்னைப்பெற்றுவைத்து இனி விடுவேனோ. (உன்னை) உன்னை நீயறியாயோ. (என்தனிப்பேருயிரை) (உபமாநரஹிதனாய், விபுவாய், எனக்குதாரனாயிருக்கிறவனை) "ஊரில் பொகடேன், கெடில்தேடேன்" என்றிருக்கிற வாத்மாவினளவோ. "உன்னை" என்கிறதை உபபாதிக்கிறதுமேல். "உலகங்கட்கெல்லாமோருயிரேயோ" என்கிறபடியே-ஸர்வாத்மாவானவுன்னை. பெற்றினிப்போக்குவனோவென்கிறது - இதரலாபங்களில் வ்யாவ்ருத்தி; என்தனிப்பேருயிரையென்கிறது - தம்மில்வ்யாவ்ருத்தி.

(உற்றவிருவினையாய்) உன்னையொழிய வேறு சிலகர்மங்களை ஸ்வதந்த்ரமாக நினைத்திருந்தேனாகிலன்றோ உன்னைவிடலாவது. ஆத்மாவைப்பற்றிவிடாதே கிடக்கிற புண்யபாபரூபகர்மங்களுக்கு நிர்வாஹகனாய். (உயிராய்) அநுஷ்டாதாதான் உன்னையன்றாகிலன்றோ உன்னைவிடலாவது. அநுஷ்டாதாவான வாத்மாவுக்கு நிர்வாஹகனாய், (பயனாயவையாய்) கர்மபல முன்னையொழிய ஸித்திக்குமென்றிருந்தேனாகிலன்றோ விடலாவது, அக்கர்மபலத்துக்கு நிர்வாஹகனாய்.

(முற்றவிம்முவுலகும் பெருந்தூறாய்) (இவையெல்லாமாகிற த்ரைலோக்யமாகிற தூற்றையுண்டாக்கி) த்யாஜ்யமான ஸம்ஸாரந்தான் உன்னையொழிய வேறொன்று நினைத்திருந்தேனாகிலன்றோ விடலாவது. பெருந்தூறென்கிறது-ஸம்ஸாரம். புக்கவிடமும் போந்தவிடமும் தெரியப்போகாதேயிருக்குமென்று, (அதாவது - துர்ஜ்ஞேய

ஸ்வபாவமாயிருக்கை (தூறாய்) ஸம்ஸாரத்தையுண்டாக்கி, (தூற்றிற் புக்கு) இதினுள்ளேபுக்கு.

(முற்றக்கரந்து) நீ வ்யாபியாதேயிருக்கிற இடமுண்டாகிலன்றோ விடலாவது, (ஒளித்தாய்) (௧) "யம் தா நவேத யமாத்மா நவேத" என்கிறபடியே வ்யாப்யங்களறியாதபடி நின்றாய், கண்ணுக்கு விஷயமாகாயாகில் பிழைப்போமே, (என்முதல்தனிவித்தேயோ) அல்லாதார்க்கு வெளியிடாதேயிருந்து எனக்கு வெளியிட்டவனே, (முதற்றனிவித்தேயோ) காரணாவஸ்தையிலே நின்றேனாகில் லாபமிருக்கலாய்த்திறே, எனக்கு ப்ரதம ஸுக்ருதமானவனே, (அ)

ஒன்பதாம்பாட்டு.

முதற்றனிவித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம் * முதற்றனியுன்னையுன்னை யெனைநாள்வந்துகூடுவன்நான் * முதற்றனியங்குமிங்கு முழுமுற்றுறுவாழ்பாழாய் * முதற்றனி சூழ்ந்தகன்றாழ்ந் துயர்ந்தமுடிவிலீயோ. (௯)

ப:— அநந்தரம், காரணகார்யோபயாவஸ்தமான ஸகலசேதநாசேதநங்களுக்கும் ப்ரகாசிக்கவாதிகளாலே ப்ரதாநனாய், ஸத்பாவிருத்தமான விலக்ஷணஸ்வரூபகுணாதிகளையுடைய வுன்னையென்றுவந்து கிட்டக்கடவேனென்கிறார்.

(இ-ள்.) முழுமூவுலகு - அகிலபூர்ணமான ஜகத்த்ரயம், ஆதிக்கெல்லாம் - முதலான ஸமஸ்தவஸ்துக்களுக்கும், முதல் - ப்ரதாநமான நிமித்தகாரணமாய், தனிவித்தேயோ ஸஹகாரிநிரபேக்ஷமாய் அத்விதீய காரணமான உபாதாநமாய், அங்குமிங்கும் - காரியபூதமான ஜகத்தில் அண்டாத்பஹிர்ப்பூதமாயும் அந்தர்கதமாயுமிருக்கிற, முழுமுற்றுறு - பூர்ணமான ஸமஸ்தபதார்த்தங்களையும் வ்யாபித்து முதல்தனி அத்விதீயகாரணமாய், வாழ் - போகமோக்ஷங்களாகிற வாழ்ச்சிக்கு, பாழாய் - விளைநிலமான மூலப்ரக்ருதிக்கு நியாமகனாய், முதல் ப்ரக்ருதிப்ராக்ருத நியந்த்ருத்வத்தாலே ப்ரதாநமாய், தனி - அசித்ஸ்வபாவ வ்யாவ்ருத்தியாலே நிருபமமாய், சூழ்ந்தகன்று - தர்மபூதஜ்ஞாநத்தாலே வ்யாப்த

(க) ப்ருஹ-ரு-ந.

மாய்க்கொண்டு, ஆழ்ந்துயர்ந்த - பத்துத்திக்கிலுமுண்டாய், முடிவிலீயோ - நித்யமான ஆத்மவர்க்கத்துக்குநியந்தாவானவனே, முதல்-இப்படி ஸர்வப்ரதாநனாகக்கொண்டு, தனி - நிருபமமான, உன்னை உன்னை, உன்னை - அந்தஜகதாகாரத்திலன்றியே அத்யந்தவ்யாவ்ருத்தமான விலக்ஷண ஸ்வரூப குண விசிஷ்டனாய்க்கொண்டிருக்கிறவுன்னை, நான் - ப்ராபித்து அநுபவிக்கப்பெறாமையாலே பெருவிடாய்ப் பட்டிருக்கிறநான், எனை நாள் - எந்நாள், வந்துகூடுவன் - வந்துகூடக்கடவேன். (௯)

ஆறு;—(முதல்தனி) நான் ஜகதாகாரனாயிருக்கிற இருப்பைக் கண்டோமாகில் இனி மற்றபேக்ஷிதமென்னென்னில்; எனக்கதுவேயமையாது, நீ ஜகதாகாரனாயிருக்கிற இருப்பன்றியே, இவற்றோடொரு கலப்பின்றியே திருநாட்டிலே நீயாயிருக்குமிருப்பைக் காணவேணுமென்கிறார். (௯)

ஈடு-அவ:—(௧) "தாநிஸர்வாணி தத்வபு:-தாநிஸர்வாணி தத்வபு:" (௨) "யஸ்யாத்மா ஶரீரம் - யஸ்யப்ருதிவீ ஶரீரம்- யஸ்யாக்ஷரம் ஶரீரம் யஸ்யப்ருதிவீ ஶரீரம்" (௩) "தத்ஸர்வம் வை ஹ[illegible]-தத்ஸர்வம்வை ஹரேஸ்தநு:" என்னும்படியே-எங்கும் வந்து முகங்காட்டலாம்படி ஜகச்சரீரனாயிருக்கிற இருப்பைக்காட்டித்தந்தோமிறே" என்ன; அது உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொதுவாயிருக்கும், ஆகாராந்தரமில்லையாகிலன்றோ "அதுவேயமையும்" என்றிருக்கலாவது, திருநாட்டிலே வ்யாவ்ருத்தமாக பரிபூர்ணமாயிருக்கிற இருப்பைக்காணவேணுமென்கிறார்.

(முதல்தனிவித்தேயாம் முழுமூவுலகாதிக்கெல்லாம்) ரக்ஷிக்க [illegible] முன்னுலகு தொடக்கமான [illegible] த்ரிவிதகாரணமுமானவனே-(முதல்) நிமித்தகாரணம். (தனி) ஸஹகாரிகாரணம். (வித்து) உபாதாநகாரணம்.

(முதல்தனியித்யாதி) ப்ரதாநனாய், ஒப்பின்றிக்கே - குணவிபூத்யாதிகளாலே பரிபூர்ணனாயிருந்த நீயானவுன்னை, என்றுவந்து கூடுவன். (எனைநாள்வந்துகூடுவன்) அவன்கொடுத்த ஜ்ஞாநத்தாலே ஸ்வரூபத்தையுணர்ந்தார்க்கு, தன்னைப்பிராட்டிமாரைப்போலே பரியாகப் பேசலாயிருக்கிறபடி, (நான்) பரமபதத்தில் சுவடறிந்தநான்; அஸாதாரணவிக்ரஹமாசைப்பட்டநான்.

---

(௧) வி-பு-௧-௨௨-௮௬ (௨) ப்ருஹ-௫-௩- (௩) வி-பு-௧-௨௨

(முதல்தனியுங்கு அங்கு முழுமுற்றுறுவாழ்பாழாய்) ப்ரதாநமாய், உபாதாநமாய் அந்தர்கதமான மஹதாதிகளின் முழுவும். (முற்று) எங்கும். (உறு) உற்ற. எங்கும் வ்யாபித்து (வாழ்பாழாய்) சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைக்குமதாகை.

(ஒன்பதாம்பாட்டு) இன்னார் (௧) "'காதிலைய ... தாகிலர்வாணித்தவ்வு" (௨) "யஸ்யாத்மா ஶரீரம் - யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" (௩) "க... வடிவெ ... ததேதத் ஸர்வம் வை ஹரேஸ் தநு:" என்னும்படியே - எங்கும் வந்து புகுந்தபடி. ஆகச் சரீரமாயிருக்கிற விருப்பைக்காட்டித்தந்தாயிறே" என்ன; அது உள்ளார்க்கும் புறத்தார்க்கும் பொதுவாயிருக்கிறது, ஆகாரங்களிலெல்லாமில்லை "அதுவேயுமாம்" என்றிருக்கலாவது. இதுதானும் ... வ்ருத்தமாக பரிபூர்ணமாகவிருக்கிற விருப்பையும் காணவேணுமென்கிறார்.

(முதல்தனிவித்தேயோ) முதல்-நிமித்தகாரணம். தனி-ஸஹகாரிகாரணம். வித்து-உபாதாநகாரணம். (முழுமூவுலகாதிக்கெல்லாம்) மூவுலகென்கையாலே - "க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம்" என்று மூன்றுவகைப்பட்ட அண்டத்தைச் சொல்லுகிறது. முழுவென்கையாலே - (௨) "அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச । ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடிகோடிஶதாநி ச" என்று சொல்லப்பட்ட-அஸங்க்யாதமான அண்டங்களைச் சொல்லுகிறது. * ஆதிசப்தத்தாலே-இவ்வண்டங்களுக்குக் காரணமான ஆவரணங்களைச் சொல்லுகிறது. ஆக, மூவுலகு தொடக்கமான [illegible] எல்லாவற்றுக்கும் த்ரிவிதகாரணமுமானவனே யென்கிறது.

(முதலித்யாதி) ப்ரதாநரை, ஸங்கல்பிக்கை - ஜ்ஞாநவிபூத்யாதிகளால் பரிபூர்ணனை, ஜகச்சரீரியாயிருக்கிறவனை. ஆக, இவ்வளவும் - லீலாவிபூதியோடே இருக்கிற விருப்பைச் சொல்லிற்று; மேல் நித்யவிபூதியிலே ஸூரிபோக்யமாயிருக்கும் வடிவழகைக் காணவிக்கவேணுமென்கிறார் (உன்னை) நித்யவிபூதியோகத்தைச் சொல்லுகிறது, "உன்னை" என்று நித்யவிபூதியோகத்தைக் காட்டுகிறது

(௧) வி-பு-௧-௨௨-௮௬. (௨) ப்ருஹ-௫-௭. (௩) வி-பு-௨-௭-௨௮.

வென்னில்; காட்டீர்; "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்ப। கண்டசதிர்" என்கிறபடியே - அவனையு மவளையும்சொல்லவே த்ரிபாத்விபூதியுமடங்கிற்றிறே.

(உன்னை) "முடிச்சோதியாயுனது முகச்சோதிமலர்ந்ததுவோ" என்று விகல்பிக்கலாம்படியிருக்கிற திருவபிஷேகமும், "மாயன் குழல்" என்னும்படியான திருக்குழலும், "கோளிழைத்தாமரையும் கொடியும் பவளமும் வில்லும்॥கோளிழைத்தண்முத்தமும் தளிரும் குளிர்வான்பிறையும்। கோளிழையாவுடையகொழுஞ்சோதி வட்டங்கொல்" என்னும்படியான அழகிய திருமுகமும், நாய்ச்சிமாருடைய ஹஸ்தாபரணங்களாலே முத்ரிதமாய் * க்ரமுக தருணக்ரீவா கம்பு ப்ரதிமமான திருக்கழுத்தும், * கற்பகக்காவன நற்பலதோள்களும், பெரியபிராட்டியார்க்குக் கோயிற்கட்டணமாய் நித்யாநுபவம்பண்ணச்செய்தேயும் "அகலகில்லேன்" என்னும்படி அவளைப்பிச்சேற்றும்படி (௧) * குருமாமணிப்பூண்குலாவித்திகழும் திருமார்வும், (௨) "உள்ளத்துள் நின்றுலாகின்றதே" என்கிறபடியே - நித்யமுக்தர் ஹ்ருதயங்களிலே அழகு செண்டேறுகிற * திருவுதரபந்தமும், ஸௌந்தர்யஸாகர மிட்டளப்பட்டுச்சுழித்தாற் போலேயிருக்கிற திருவுந்தியும், ஒரு விசேஷணமிடவொண்ணாதே "அல்குலும்" என்னும்படியிருக்கிற அல்குலும் சிற்றிடையும், ஸந்த்யாராகரஞ்சிதமான ஆகாசம்போலேயிருக்கத் திருவரைபூத்தாப்போலேயிருக்கிற * அந்திபோல்நிறத்தாடையும், (௩) *ரம்பாஸ்தம்பாதிகப்ரியமான திருத்தொடைகளும், தாமரைநாளம்போலே கண்டகிதங்களான திருக்கணைக்கால்களும், (௪) * சங்கரதாங்ககல்பகத்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநமாய் நாய்ச்சிமாருங்கூடக் கூசித்தொடவேண்டும்படி மெல்லடியாய் "தேனேமலரும்" என்கிறபடியே நிரதிசயபோக்யங்களான திருவடிகளையுமுடையையாய், * ஏழுலகும் தனிக்கோல் செல்லவீற்றிருந்தருளுகிறவுன்னை,

(எனைநாள்வந்து கூடுவன்) என்றுவந்து கிட்டக்கடவேன், * மயர்வறமதிநலமருளப்பெற்றவராகையாலே பிராட்டிமாரோபாதியாகப்பேசலாயிருக்கிறபடி, (நான்) அவ்வடிவைக்காணவாசைப்பட்ட நான்,

---

(௧) பெரியா-தி-௧-௨-௧௦- (௨) அமலனா-௪-

(௩) வாத-ஸ்த- (௪) ஸ்தோ-ரு-

(முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்) ப்ரதானமாய், உபாதானபூதமாய், அங்குமிங்குமான பதார்த்தங்கள் முழுதிலும், (முற்று) முற்றும், எங்குமென்றபடி, (உறு) உற்று, வ்யாபித்து (வாழ்பாழாய்) சேதனர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கிடமாகக் கருநிலமாயுள்ள ப்ரக்ருதிதத்வத்துக்காத்மாவாய்,

(முதலீத்யாதி) ப்ரக்ருதியைப்பற்றச்சொல்லி ப்ரதானமாய் வ்யாபகமாய், (தனி) உபாதானபூதமாய், (சூழ்ந்து) ப்ரக்ருதி ப்ராக்ருதங்களையவ்யாபித்து. வ்யாபிக்குமிடத்தில் (அகன்றாழ்ந்துயர்ந்த) ஜ்ஞானத்தாலே பத்துத்திக்கும் வ்யாபித்து. (முடிவிலீபோ) அபரிச்சேத்யமான ஆத்மதத்வத்துக்கு நிர்வாஹகனானவனே (முடிவிலீ) முடிவென்று - நாசமாய், ப்ரக்ருதிபோலே ஸம்ஹாரமின்றிக்கே நித்யமான ஆத்மதத்வமென்றுமாம்.

முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய் - முழுவுலகாதிக்கெல்லாம் - முதல்தனிவித்தாய் - முதல்சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவிலீயாயிருக்கிற - முதல்தனியுன்னைக் கண்டேன்; தேசவிசேஷத்திலே ஸூரிபோக்யனாயிருக்கிறவுன்னை நானணைத்துக்கூடுவன்நான், காரணகார்யாவஸ்தமான சிதசித்துக்களுக்கு நிர்வாஹகனாயிருக்கிற நிலையைக்காட்டி யநுபவிப்பிக்க [illegible], அஸாதாரணவிக்ரஹயுக்தனாய் ஒருதேசவிசேஷத்திலிருக்குமிருப்பைக்கண்டநுபவிக்கவேணுமென்றதாய்த்து.

பத்தாம்பாட்டு.

சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில் பெரும்பாழேயோ * சூழ்ந்த தனிற்பெரிய பரநன்மலர்ச்சோதியோ * சூழ்ந்ததனிற்பெரிய சுடர் ஞானவின்பமேயோ * சூழ்ந்ததனிற்பெரிய வென்னவாவறச்சூழ்ந்தாயே, (௰)

ப:—அநந்தரம், தத்த்வத்ரயத்துக்கு மவ்வருகாம்படியான வென்னபிநிவேசமானது கெடும்படியாக ஸர்வப்ரகாரபரிபூர்ணனாய்க்கொண்டு ஸம்ச்லேஷித்தாயென்று, தமக்கு ஸாயுஜ்யஸித்தமான பரிபூர்ணபோக ப்ரதானம்பண்ணினபடியை யருளிச்செய்கிறார்.

(இ - ள்) சூழ்ந்து - கார்யவர்க்கத்தை யடங்கச்சூழ்ந்து, அகன்று - வ்யாபித்து விஸ்தீர்ணமாய், ஆழ்ந்துயர்ந்த - கீழும்மேலு முண்டாகை யாலே பத்துதிக்கிலும் ஸந்நிஹிதமாய், முடிவில் - உத்பத்தி விநாஶ ரஹிதமாகையாலே நித்யமாய், பெரு - ஸமஸ்தகார்யங்களுக்கு மவ்வரு காகையாலே அபரிச்சிந்நமாய், பாழே-போகமோக்ஷங்களை விளைக்க நல் தறையான ப்ரக்ருதியை ப்ரகாரமாகவுடையையாய், அந்தப்ரக்ருதிதத்த்வத்தை, சூழ்ந்து - ஸ்வஜ்ஞாநத்தாலே வ்யாபித்துக்கொண்டு, அதனில் - அதிற்காட்டில். பெரிய-பெருத்து, பரம்-ஏகரூபத்வாதிகளாலேமேலாய் நல் - ஸ்வயம்ப்ரகாஶத்வாதி வைலக்ஷண்யத்தை யுடைத்தாய், மலர் - விகாஸஸ்வபாவமான, சோதி - ஜ்ஞாநப்ரபையையுடைய ஆத்மாவை ப்ரகாரமாகவுடையையாய், சூழ்ந்து-இந்தப்ரக்ருதிபுருஷர்க ளிருவரை யும்வ்யாபித்து, அதனிற்பெரிய - அதுக்கவ்வருகாய், சுடர் - கல்யாண குணங்களாலுஜ்ஜ்வலமான, ஞானவின்பமே - ஜ்ஞாநாநந்த லக்ஷணஸ்வரூபத்தையுடைய நியந்தாவானவனே, சூழ்ந்து-அந்ததத்த்வத்ரயத்தை யும் வளைத்துக்கொண்டு, அதனிற்பெரிய - அதுக்கவ் வருகாம்படியா யிருக்கிற, என் அவா - என்னபிநிவேசமானது, அற-ஶமிக்கும்படியாக, சூழ்ந்தாயே - ஸ்வரூபகுணவிக்ரஹபூஷணாயுத மஹிஷீ பரிஜநஸ்தாந விஶிஷ்டனாய்க்கொண்டு பரிபூர்ணனானவுனக்குள்ளேயாம்படி ஸாயுஜ்ய போகத்தைத்தந்தாயிறே; ஓ! - ஓ! ஓரதிசயமே! என்று அடிதோறும் ஏற்றுகிறார். (௧௦)

ஆறு:— (சூழ்ந்தகன்று) இப்படி எம்பெருமானுக்கும் மறுத்த நானவளன்றெக்கொருபடி. பிராட்டி திருவாணையையும் தன் திருவாணையையுமிட்டு நிர்ப்பந்தித்துக்கொண்டு ஆர்த்தஸ்வரத்தாலே கூப் பிடுமளவில், காம்மநோரதித்தபடியே எம்பெருமானுமெழுந்தருள, அவனைக்கண்டு; மஹதஹங்காராதிகளெல்லாவற்றையும் வ்யாபித்து அவற்றிற்காட்டிலும் பெரிதான மூலப்ரக்ருதிக்கும், அத்தையும் வ்யாபித்து அதிலும் பெரிதான முக்தாத்மாவுக்கும், அதிலும்பெரி தான வுன்னுடைய ஸங்கல்பஜ்ஞாநத்துக்கு மாத்மாவாயிருந்த நீ, அந்தஸங்கல்ப ஜ்ஞாநத்திற்காட்டிலும் பெரிதாயிருந்த வென்னு டைய விடாயெல்லாந்தீரும்படி, அந்தஜகதாகாரனானபடியன்றியே நீ யானபடியே வந்துசூழ்ந்தாய்; என்னுடையமநோரதமு மொருபடியே முடிந்ததென்கிறார். (௧௦)

௯-அவ; — எம்பெருமானுக்கிவர் போலிகைச் செய்கல்லது நிற்கவொண்ணாதபடி பெரியபிராட்டியாரையிட்டுத் தடுக்கப் பெரிய வார்த்தியோடே கூப்பிட்டு, இவர் ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க்கொண்டு வந்து ஸம்ச்லேஷித்தருளக்கண்டு அபரிச்சேத்யமான ப்ரக்ருதிதத்வத்திலும் ஆத்மதத்வத்திலும் உன்னுடைய ஸங்கல்பரூபஜ்ஞாநத்திலும் பெரிதான என்னுடைய விடாயெல்லாந்தீரவந்தென்னோடே கலந்தாய், என்னுடைய மநோரதமும் பொருந்தப்படிமுடியப் பெற்றேனென்கிறார்,

இனி இல்லையென்னும்படி என்னை விடாய்ப்பித்து அதுக்கவ்வருகான விடாயையுடையையாய்க்கொண்டு என்னோடே கலந்த வுன்னுடைய விடாயுமொருபடி கெட்டதேயென்கிறாராகவுமாம்; (௧) "அஹ்ஞாஹாதகேரோவா கீலீதகர்வெப்ஷலேஜ அங்கேபாதாநரோம்யமுஷித்ரபரிஷஸ்வஜே" என்னும்படியே,

(சூழ்ந்தித்யாதி) இப்போது ப்ரக்ருதிபுருஷர்களைச் சொல்லுகிறது, தம்முடைய வபிநிவேசம் பெரியவற்றிலும் பெரியதென்கைக்காக; அவற்றுக்கு மீஸ்வரனையொழிய ப்ருதக்ஸ்திதியில்லாமையாலே அவ்வளவுஞ் சொல்லுகிறது, ஸ்வகார்யமான மஹதாதிகளைப் பற்றத் திக்கிலும் புக்கெங்கும் வ்யாபித்து. நித்யமாய் அபரிச்சேத்யமாய் சேதநர்க்கு புருஷார்த்தத்தை விளைத்துக்கொள்ளலாம்படியான ப்ரக்ருதிதத்வத்துக் காத்மாவானவனே,

(சூழ்ந்தித்யாதி) அத்தையும் வ்யாபித்து, அதிற்காட்டில் பெரிதாய், அதுக்குநியந்தாவாகையாலே மேலாய், விகாராதிகளில்லாமையாலே விலக்ஷணமாய், விகஸ்வரதேஜோரூபமான ஆத்மவஸ்துவுக்கு மாத்மாவானவனே,

(சூழ்ந்தித்யாதி) அவையிரண்டையும் வ்யாபித்து, அவற்றுக்கு நிர்வாஹகமாய் ஸங்கல்பரூபமாய் ஸுகரூபமான ஜ்ஞாநத்தையுடையவனேயென்று ஸங்கல்பரூபஜ்ஞாநத்தைச் சொல்லுதல்; "சுடர் ஞானவின்பமே" என்று ப்ரகாசரூபஜ்ஞாநமாய் ஸுகரூபஜ்ஞாநமானவனேயென்று எம்பெருமானைச் சொல்லுதல்,

(சூழ்ந்தித்யாதி) தத்த்வத்ரயத்தையும் விளாக்குலைகொண்டு அவைதுளப்படியாயபடி பெரிதான என்னுடைய வபிநிவேசத்தை,

---

(௧) ரா-யு-௧௩௦-௪௧-

அதிலும்பெரிய வுன்னபிநிவேசத்தைக்காட்டி வந்து ஸம்ச்லேஷித்தாயே!. என்னுடையகுப்பீடு மொருபடி போவும்படி பண்ணிற்றே! (௧) "ஸந்ஜ்ஞாஸ தசோர்ஸ்ஸாஷ்ய ஸிம்ஹோ வஹிஷ்கரிஷ்யஸி - அங்கேபரத்காரோப்ய முதித: பரிஷஸ்வஜே" என்று-மீண்டுபுகுந்து ஸ்ரீபரதாழ்வானை மடியிலேவைத்து உச்சியை மோந்துகந்தணைத்தாப்போலே யாய்த்து இவருடைய விடாய்கெடும்படி கலந்தது. (௧௦)

பதினொன்றாம்பாட்டு.

அவாவறச்சூழரியையயனை யரனையலற்றி * அவாவற்றுவீடு பெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன* அவாவிலந்தாதிகளாலிவை யாயிரமும் * முடிந்த வவாவிலந்தாதி யிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே. (௧௧)

ப:—அநந்தரம், பலாவாப்திப்ரகாரத்தை ப்ரதிபாதித்துக்கொண்டு, இத்திருவாய்மொழிக்குப்பலமாக, இதில் ஜ்ஞாநமுடையவர்களுடைய ஜந்மோத்கர்ஷத்தை யருளிச்செய்கிறார்,

(இ-ள்.) அவா-ஆஸ்ரிதருடைய வபிநிவேசம், அற-தீரும்படி. சூழ் - நிரவதிகஸம்ச்லேஷம் பண்ணுகையாலே, அரியை - விச்லேஷதுக்கநிரஸநஸ்வபாவனாய், அயனை - (௧) "காரணம் து த்யேய:-கார்யம்பிரஹ்ம" என்கிறமர்யாதையாலே முக்தப்ராப்யதயா, பூர்வபக்ஷதயாஸ்ரஜ்ஞனை ஹிரண்யகர்ப்பனுக்கும் அந்தராத்மாவாய், அரனை - அப்படி பசுபதிமதப்ராப்யனான ருத்ரனுக்கும் அந்தராத்மாவான பரமப்ராப்யபூதனை, அலற்றி-ப்ராப்திக்கையிலுண்டான த்வரையாலேகூப்பிட்டு ப்ராப்தபலஸித்தியாலே, † அவாவற்றுவீடுபெற்ற, குருகூர்ச்சடகோபன் சொன்ன, அவாவில், அந்தாதிகளால், இவையாயிரமும் - இவை ஆயிரமும். முடிந்த-அபிப்ராயக்ரமமாகமுடிந்த, அவாவில்-அவாவிலே, அந்தாதி அந்தாதிகளான, இப்பத்து - இப்பத்தையும், அறிந்தார்-அநுஸந்தித்து † பிறந்தாருயர்ந்தே. †

† வைஸ்யபுத்தியண்ணும்படியான அவா அறும்படியாகத் தன்குணங்களாலே சூழ்ந்து ஹரித்துக்கொள்ளுமவனென்றுமாம்.

இது கலிவிருத்தம். (௧௧)

---

(௧) நாயு க௫-௪௧- (௨) ப்ரஹ்மஸூ-

† பங்க்திகள் விட்டுப்போயிருக்கிறன.

இப்படி ப்ரபந்தத்திலே ஸ்ரீயப்பதியான நாராயணனுக்கு ப்ராப்தனான சேதநனுக்கு உபாயத்தை ப்ரதிபாதித்து அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணுவிக்கிற மந்த்ரார்த்தத்திலுடைய வாக்யார்த்தரூபமான ப்ராப்யப்ராபகாதிகளாயுள்ள அர்த்தபஞ்சகத்தையும் ஸப்ரகாரமாக விசிஷ்டமாக அருளிச்செய்து தலைக்கட்டினாராய்த்து

இதில், முதற்பத்திலும் இரண்டாம்பத்திலும் சாஸ்த்ரப்ரதிபாத்ய விசிஷ்டமான சேஷித்வஸ்வரூபத்தைச் சொல்லுகையாலும், மூன்றாம்பத்திலும் நாலாம்பத்திலும் - ததேகாநுபவத்தை தத்ஸம்பந்தியானவனான சேஷத்வஸ்வரூபத்தைச் சொல்லுகையாலும் இத்தாலும் அநுஸந்தாந சேஷித்வ சேஷத்வங்களிலுடைய ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலும், ப்ரதமாக்ஷரத்திலே சேஷித்வத்தைச்சொல்லி, த்ருதீயாக்ஷரத்திலே சேஷத்வாஸ்ரயத்தைச்சொல்லி, அவதாரணார்த்தமான உ.காரத்திலே உபயோஸம்பந்த தாஸ்யத்தைச்சொல்லுகிற ப்ரணவார்த்தத்தை ப்ரதிபாதிக்கதாய்; அநந்தரம், அஞ்சாம்பத்திலே - உபாய ஸ்வரூபத்தையும், ஆறாம்பத்திலே-உபாய வரணத்தையும் ஏழாம்பத்திலே - விரோதிஸ்வரூபத்தையும், எட்டாம்பத்திலே - தந்நிவ்ருத்திப்ரகாரத்தையும் சொல்லுகையாலே - ஸாப்தமாகவும் ஆர்த்தமாகவும் ஸித்தமான ஸநாதநனான ஸர்வேஸ்வரனுடைய உபாயபாவத்தையும், ஸமஸ்தரூபமான ஸ்வரூபத்தையும், ஆத்மாத்மீயவிஷயமான அஹங்கார மமகாரரூப விரோதி ஸ்வரூபத்தையும், தந்நிவ்ருத்தத்தையும் சொல்லுகிற நமஸ்ஸப்தார்த்தத்தை ப்ரதிபாதிக்கதாய்: ஒன்பதாம்பத்திலும் பத்தாம்பத்திலும் - நாராயண பதத்திலே கைங்கர்யப்ரதிஸம்பந்தியான விசிஷ்டமான பரமாத்மாவைச் சொல்லுகிற சதுர்த்யர்த்தத்தை ப்ரதிபாதிக்கதாய்: ப்ரபந்த ஸங்க்ஷேபமான முதற்பாட்டில அருளிச்செய்த க்ரமத்திலே ஸர்வஸாரதமமான மூலமந்த்ரார்த்தத்தை இப்ரபந்தத்திலே விஸ்தரேண ப்ரதிபாதித்தாராய்த்து.

இன்னமும், ப்ரதமத்திலே - ஸம்ஸித்தமான நாராயணத்வத்தை ப்ரதிபாதித்து, நாராயணனுடைய திவ்யமங்கள விக்ரஹாதிகளாயும் ஸ்வரூபாதிகளாயுமுள்ள குணங்களை பரக்க ப்ரதிபாதித்து, உத்தமமான க்ரியாபதத்தாலே ‡ பரமாகப்பண்ணுகையாலும், விசேஷணமான புருஷார்த்தரூப பகவத்கைங்கர்யாவாப்தியை ப்ரகாசிக்கையாலும், வாக்யத்வயாத்மகமான ‡ ஸர்வ ஸ்வரூபத்தையும் ப்ரகாசிக்கருளினாராய்த்து.

---

‡ இங்கே பங்க்தி விட்டிருக்கிறது.

இவ்வுபாயவரணம் ததிதர ஸகலநிவ்ருத்தியுக்தமாயிருக்குமென்றும், உபாயபூதகுணவிஶிஷ்டனாய் அத்விதீயனாயிருக்குமென்றும் ப்ரதிபாதித்து, உபாயகார்யமான ஸமஸ்தவிரோதி நிவ்ருத்தியையும், பலஸித்திநிபந்தந தாதர்த்யத்தையும் ப்ரதிபாதிக்கையாலே - சரமஶ்லோகார்த்தத்தையும் விஶதீகரித்தருளினாராய்த்து.

ஆக, ஸர்வப்ரகார பகவச்சேஷபூதனாய், அநந்யப்ரயோஜநனாய் அநந்யஸாதநனான இவ்வதிகாரிக்கு ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யத்ரயத்தையும் ஸப்ரகாரமாக ப்ரகாஶிப்பிக்கையாலே, இப்ப்ரபந்தமானது விலக்ஷணரான ஸாத்விகாக்ரேஸரர்க்கு நித்யாநுஸந்தேயமாகக்கடவது. (கக)

ஆறு:—(அவாவறச்சூழ்) ப்ரஹ்மருத்ராதி ஸர்வாத்மாக்களுக்கும் அந்தராத்மபூதனாய், ஸமஸ்தஹேய ப்ரத்யநீகனாய், அநவதிகாதிஶய அஸங்க்யேய கல்யாணகுணநிதியாய், அப்ராக்ருத ஸ்வாஸாதாரண திவ்யரூப பூஷணாயுதமஹிஷீ பரிஜநஸ்தாந விஶிஷ்டனாயிருந்த எம்பெருமானையலற்றி அவாவற்று நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராய் அவனைப்பெற்ற குருகூர்ச்சடகோபன் சொன்ன அவாவிலந்தாதிகளாலிவையாயிரமும் அவற்றிலே தம்முடைய வபேக்ஷிதம்பெற்று விடாய் தீர்ந்தபடிக்கு, இவற்றையறிந்தார், பிறந்துவைத்தே * அயர்வறுமமரர்களுக்கும் மேற்பட்டாரென்கிறார். (கக)

ஈடு:—அவா;—நிகமத்தில், * அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், * உயர்வறவுயர்நலமுடையனாய், ஸௌந்தர்யாதிவிஶிஷ்டமான நித்யமங்கள விக்ரஹயுக்தனாய், அபரிமித திவ்யபூஷணபூஷிதனாய், ஸர்வாயுதோபேதனாய், ஸ்ரீபூமிநீளாநாயகனாய், அஸ்தாநேபயஶங்கிகளான அநந்தவைநதேயாதிகளாலே அநவரத பரிசர்யமாண சரணநளினனாய், ஸ்ரீவைகுண்ட நிலயனாய், ஸர்வேஶ்வரனாய், ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கு அந்தராத்மாவாய், தன்னைக்காணவேணுமென்று விடாய்த்தாஶ்ரயிக்குமவர்களுடைய விடாய்தீர ஸம்ஶ்லேஷிக்குமவனுமான எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு அவனைப்பெற்று நிர்த்துக்கராய் நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகரான ஆழ்வாருடைய பக்திபலாத்கார பூர்வகமாகப்பிறந்தது ஆயிரந்திருவாய்மொழியும்; அவற்றில் வைத்துக்கொண்டு, கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியான பரமபக்தியாலே பிறந்தவந்தாதி

யான இத்திருவாய்மொழிவல்லார், ஸம்ஸாரத்திலே பிறந்தவை, * அயர்வறுமமரர்களோடொப்பரென்கிறார்,

(அவாவறச்சூழரியை) ஸர்வாபேக்ஷிதப்ரதனான ஸர்வேஶ்வரனை தம்முடைய அபிநிவேசம்கெட வந்துகலந்தபடியாலே வேறொரு விசேஷணமிடாதே அதுதன்னையே சொல்லுகிறார், (அயனையரனை) ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ரர்களுக்கு ஆத்மாவானவனை; அவாறச்சூழ்கையாவது - தன்னைக்காண வேணுமென்று விடாய் வாஶ்ரிதருடைய விடாய்தீர ஸம்ஶ்லேஷிக்கை, (அயனை, அரனை) கிற இஸ்ஸாமாநாதிகரண்யத்தால் - ப்ரஹ்மருத்ரர்கள்பக்கல் ஈ ரத்வஶங்கையை யறுக்கிறார்,

அவர்களுடைய ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஈஶ்வராதீநமாகையாலே அவர்களுக்குப் பாரதந்த்ர்யமேஸ்வரூ நிர்வாஹகத்வம் கர்மாதீநமாய் வந்ததித்தனை, இஸ்ஸாமாநாதிகரண்யத்தில் ஜ்ஞாநமின்றியே எளியராயிருப்பார்க்கு நிர்வஹிப்பதும் புடைகளுண்டு - "அயனையரனை - அவாவற்று - அரியை - அலற்றி வீடுபெற்ற" என்னுதல்; "அயனை யரனை - அவாவறச்சூழரி அலற்றி, அவாவற்றுவீடுபெற்ற" என்னுதல்.

(அலற்றியவாவற்றுவீடுபெற்ற) கூப்பிட்டு அவனைப்பெ நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராகையாலே நிர்த்துஃகரான ஆழ்வா ளிச்செய்த, (அவாவிலந்தாதிகளாலிவையாயிரமும்) பக்திபரா ரத்தாலேபிறந்த ஆயிரந்திருவாய்மொழியிலும், இவருடைய மைத்ரேயபகவான் அவா; அவா உபாத்யாயராக நடத்த நடந்த ரம், ஆழ்வார்க்குப்பின்பு நூறாயிரம் கவிகள் போருமுண்டாய்த்து அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசியற்று அவற்றைநவி இவற்றைப்பற்றித்துவளுகைக்கடி - இவருடைய பக்த்யதிஶே வழிந்து புறப்பட்டசொல்லாகையிறே,

(முடிந்தவவாவிலந்தாதியிப்பத்து) தரிக்கவொண்ணாதபடிய பரமபக்தியாலேபிறந்ததாய்த்து இத்திருவாய்மொழி. இவ்வவாவு உதவிற்றிலனாகில் ஈஶ்வரனுக்கும் சைதந்யமின்றிக்கேயொழி * சூழ்விசும்பணிமுகிலுக்குக்கீழ். பரபக்தியாலேசென்றது; * சூ சூழ்விசும்பணிமுகில், பரஜ்ஞாநத்தாலே; இத்திருவாய்மொழி, பரமப யாலே; பகவத்ப்ரஸாதம்பாதியும் தாங்கள் பாதியுமாகச்சொல்

மவர்களுக்கு, ஶரீராவஸாநத்திலே இப்பரபக்த்யாதிகளுண்டாம்; இவர் அடியிலே * மயர்வறமதிநலமருளப்பெறுகையாலே எழுந்தருளியிருக்கச்செய்தேயுண்டாய்த்தின, கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியினுடைய ஸ்தாநத்திலே ஸர்வேஶ்வரனுடைய வருள்நின்று அடியாகப்பிறந்த பரபக்த்யாதிகளிறேயிவரது,

(அறிந்தார் பிறந்தாருயர்ந்தே) இத்தையறிந்தவர்கள், ஸம்ஸாரத்திலேபிறந்துவைத்தே நித்யஸூரிகளோடொப்பர். (பிறந்தே யுயர்ந்தார்) ஸர்வேஶ்வரனுடைய அவதாரத்தோபாதி இவர்களுடைய பிறப்பும். (௧௧)

பத்தாம்பத்து பத்தாந் திருவாய்மொழி

முற்றுப்பெற்றன.